# சுத்தசன்மார்க்க விளக்கம்

தமிழ் வளர்ச்சி இயக்ககம்
எழும்பூர்
31 மே 2011
சென்னை—600 008
தமிழ் வளர்ச்சி வளாகம்

ஆசிரியர் :

டாக்டர் கு. சீநிவாசன், M. Sc., Ph. D., F. B. B. S. (Lond.)
துணைப் பேராசிரியர், தாவரயியல்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

வெளியிடுவோர் :

**இலக்கிய நிலையம்**

**30, ஆண்டார் தெரு, : : திருச்சிராப்பள்ளி-2.**

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

முதற் பதிப்பு : 1966.
விசுவாவசு தைப்பூச நன்னாள்.

என் அன்னை
அரங்கநாயகி அம்மாளுக்கு
இந்நூலைக் காணிக்கையாக்குகின்றேன்.

உரிமை பதிவு
விலை: ரூ. 4—00

ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி-2.

# பதிப்புரை

அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்கப் பெருமான் மன்பதையெல்லாம் உயிர்நீங்கி உடலம் ஓயும் உலகியல் பொதுநெறியில் செல்லாவண்ணம் காக்க மரணமிலாப் பெருவாழ்வாகிய சிறப்புநெறி நிற்றற்பொருட்டு ஆக்கித்தந்த அருட்பாவென்னும் மூலபண்டாரச் செம்பொருள் உலகவர்க்குத் தக்காங்கு எடுத்து வழங்கப்பெருது ஆண்டு ஒரு நூறு கடந்தது.

இன்று டாக்டர் கு. சீநிவாசன் அவர்கள், அருள்நெறித் தலைப்பட்டு அருட்பாவெனும் அருள முதத்தை மாந்திமாந்தித் திளைத்த அருளாளர் பலரோடு பலகால் பயின்றுத் தாமும் அவ்வருள் அமுதமாம் அருட்பாவமுதருந்தி அதனை அறிவியற் கண்ணோட்டத்தில் அனைவரும் மாந்தும்வண்ணம் அள்ளி அள்ளி வழங்குகின்றார்கள்.

வள்ளற்பெருமான் யாவர் என்பதை யாவரும் அறிவர். ஆனால், அவர்தம் தத்துவமும், தத்துவத்தின் வளர்ச்சியும், படிமுறைகளும், முடிநிலையும் அறிந்துகொண்டவர் சிலர் உண்டேயன்றி அவற்றைப் புறங்கவியப் புலப்படுத்தியோர் இல்லை என்று தெளிவாகக் கூறலாம். இன்று வள்ளற் பெருமானின் நோக்கமும் குறிக்கோளும் அறிய சுத்தசன்மார்க்க விளக்கம் என்ற இந்த நூல் ஓர் அரிய வாய்ப்பளிக்கின்றது.

தக்க ஆராய்ச்சி நூலே வெளியிடும் எங்கள் நிலையம், "சுத்தசன்மார்க்க விளக்கம்" என்ற இந்நூலை வெளியிடுவதில் பெருமை கொள்கின்றது.

**இலக்கிய நிலையத்தார்.**

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை.

## முன்னுரை

இராமலிங்கப் பெருமானைப்பற்றியும் அவர்தம் திருவருட்பா திருமுறைகளைப்பற்றியும் இதுகாறும் எழுந்த ஒருசில நூல்கள் சுவாமிகளது வரலாற்றையே விதந்து கூறுகின்றன. அடிகளார் விளக்கியும், வாழ்ந்தும் காட்டியருளிய சுத்தசன்மார்க்கத்தின் கோட்பாடுகளில் ஒரு சிலவற்றை மட்டும் ஓரிரு நூல்கள் எடுத்துரைக்கும். அன்றி, சுத்தசன்மார்க்க நெறியைச் சிக்கலறத் தெரிவிக்கும் நூல் எதுவும் எழவில்லை.

கடந்த நூறாண்டுகளில் சுவாமிகளுடன் வாழ்ந்த சன்மார்க்க அன்பர்களுடன் நெருங்கிப் பழகிய சில பெரியவர்கள் ஆண்டவனருளால் எனக்கு அறிமுகம் ஆயினர். அதன் பயனாகச் சென்ற ஆண்டில், இராமலிங்க சுவாமிகளின் மெய்ப்பொருள் (The Philosophy of Saint Ramalinga Swamigal) என்ற ஆங்கில நூல் எழுதி முடிந்தது. இதனைக் கண்ட அன்பர்கள் இத்தகைய நூல் ஒன்றைத் தமிழில் எழுதும்படி விழைந்தனர். அதனால் இந்த நூலை முதலில் வெளியிடுகின்றேன். உலகில் பல நாடுகளில் வாழும் சன்மார்க்க அன்பர்களுக்கும், அடிகள் பால் அன்புகொண்ட நந்தமிழ் நாட்டு மக்கள் எல்லார்க்கும் இந்நூல் அடிகளின் தத்துவத்தை உணர்வதற்குப் பெருந்துணை செய்யும் என்று நம்புகின்றேன்.

அடிகளார் விளக்கியருளிய சன்மார்க்க நெறியை முறை சிறிதும் பிறழாமல், திருவருட்பாவின் பலவிடங்களில் பரந்து காணப்படும் சான்றுகள் கொண்டு, சுத்தசன்மார்க்க மெய்ப்பொருளை விளக்கியுள்ளேன். இதனுள் தெளிவிக்கப்படும் சன்மார்க்கக் கொள்கைகள் அனைத்தும் வள்ளற் பெருமான் வாக்கில் முகிழ்ந்தவை. திருவருட்பா முழுதும்

அடிகளின் முற்ற முடிந்த அனுபவமாகும். மரணமிலாப் பெருவாழ்வுதான் சுத்தசன்மார்க்கம். இந்த ஒளிநெறி உயிரனுபவம், அருளனுபவம், சிவானுபவம் எனுமிவற்றை அங்கமாகக் கொண்டது. பல முகங்களால் இவ்வனுபவங்களை விளக்கியருளும் அடிகளின் அருட்பாவைக்கொண்டு இயன்றமட்டும் தெளிவாக, ஆறு தலைப்புகளில் விளக்கியுள்ளேன். அகச்சான்று கொண்டு எழுதப்பட்ட அடிகளின் வரலாறும் இதன்கண் அமைந்துள்ளது.

இதனைப் படிக்கச்சொல்லிப் பல மணிநேரங் கண்ணீர் மல்கி, நெக்குருகக் கேட்டுப் பேருவகைபூத்து ஆசியருளிய திருத்துறையூர் ஆதீன பண்டாரசந்நிதிகள் அவர்களுக்கும் மன்னார்குடிக்கடுத்த மருதூர் சிவக்கொழுந்தாகிய அருட்பிரகாச சுவாமிகள் அவர்களுக்கும் எனது பணிவுள்ள வணக்கங்கள் பலவாகும்.

என்னை இந்நெறியில் ஆற்றுப்படுத்திப் பல நுண்பொருள்களைப் பலகால் அறிவித்த சிவத்திருவாளர்கள் நாகை — கு. அருணாசலம் பிள்ளையவர்கட்கும், பிறையாறு — சிதம்பரசுவாமிகள் அவர்கட்கும் யான் என்றுங் கடப்பாடுடையேன்.

இந்நூல் அச்சாவதற்குத் துணைபுரிந்த சிதம்பரம் டாக்டர் திரு. சுந்தரராவ், திரு. துரைசாமி ரெட்டியார், உறந்தை திரு. அ. அரங்கராசன், வித்துவான் திரு. மு. வைத்தியநாதன் முதலான பேரன்பர்களுக்கு எனது நன்றியும் வணக்கமும் உரியதாகும். இதனை வெளியிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இலக்கிய நிலையத்தார்க்கும், மிகக் குறைந்த கால அளவில் இதனை நன்கு அச்சிட்டு உதவிய ஜோதி அச்சகத்தார்க்கும் எனது மனமுவந்த நன்றி.

என்னையும் பணிகொண்டு எனக்குத் தோன்றாத் துணையாக நின்றருளும் வள்ளற்பெருமானை வழுத்துவன்.

அண்ணாமலைநகர்,
5—2—1966

கு. சீநிவாசன்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

## திருக்கைலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்
## திருத்துறையூராதீனம்

ஸ்ரீ குமாரதேவர் மடாலயம்

# ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்ரமண்ய சிவப்ரகாச பண்டாரசந்நிதிகள்

உவந்தருளிய

## ஆசியுரை

சிவப்பிரகாசச் செல்வராகிய நம் கண்மணியாம் கு. சீநிவாசன் அவர்கள் எழுதியுள்ள சுத்தசன்மார்க்க விளக்கம் என்ற திருவருள்நெறிநூலைப் பார்த்து மகிழ்கின்றோம். சிவானுபவத்தை அருட்பிரகாச வள்ளற் பெருமான் நுகர்ந்த செம்மையைத் தெளிவாக எடுத்துக் கூறும் பெருமையுடையது இந்நூல். உயிரனுபவம், அருளனுபவம், சிவானுபவம் என்னும் பேரனுபவங்களும், சிவசாக்கிர முதலான மேல்நிலை அனுபவநிலைகளும் மிக அழகாக விளக்கப்பட்டுள்ளன. இவற்றைப்பற்றி எழுதுவது என்பது அந்நிலை நின்றார்க்கே இயலுமாதலின் இவற்றை ஆய்ந்தெழுதிய இந்நூலாசிரியரின் பெருமை தெள்ளிதின் புலனாகும். சுத்தசன்மார்க்கப் பெருநெறி நிற்கும் புண்ணியர்களுக்கு இந்நூல் நல்விருந்தாகும். அருள்நெறிச் செம்மல் டாக்டர் கு. சீநிவாசன் அவர்கள் இத்தகைய தொண்டுகள் செய்து திருவருட்பேறு பெறவேண்டுமாய் எல்லாம் வல்ல சிவபரம்பொருளை வழுத்துவோமாக.

விருத்தாசலம்,<br>22—1—1966.

ஸ்ரீ சுப்ரமண்ய சிவப்ரகாச<br>பண்டாரசந்நிதிகள்.

திருச்சிற்றம்பலம்.

# உள்ளுறை

## சுத்தசன்மார்க்க விளக்கம்



| | | பக்கம் |
|---|---|---|
| | தோற்றுவாய் ... ... | 1 |
| 1. | சுத்தசன்மார்க்கம் ... .. | 5 |
| | ஆன்மலாபம் – உண்மைநெறி – சன்மார்க்க சாதனம் – ஆன்மநேயம். | |
| 2. | பெரும் பேரனுபவங்கள் ... ... | 44 |
| | உயிரனுபவம் – அருளனுபவம – சிவானுபவம் – தத்துவமசி – துவிதம் – விசிட்டாத்துவிதம் – அத்துவிதம் – சிவாத்துவிதம் – சுத்த சித்தாந்தம். | |
| 3. | ஊனவடிவும் ஞானவடிவும் ... ... | 75 |
| | அன்புருவெனப்படும் சுத்ததேகம் – அருளுருவெனப்படும் பிரணவதேகம் – இன்புருவம் எனப்படும் ஞானதேகம். | |
| 4. | அனுபவநிலைகள் ... ... | 117 |
| | சீவசாக்கிரம் – சுத்தசாக்கிரம் – பரசாக்கிரம் – சிவசாக்கிரம் – சிவதுரியம். | |
| 5. | வெளிநிலையனுபவம் ... ... | 138 |
| | சிவதுரியம் – சிவதுரியாதீதம் – சுத்த சிவசாக்கிரம் – சுத்த சிவதுரியாதீதம். | |

6. சன்மார்க்கத் தெய்வம் ... ... 165


சுத்த சிவம் – பிரமன் முதல் பரம்பரம் – அருட்ஜோதி – சுத்த சிவநிலை – அருட் பெருஞ்ஜோதி.

7. வள்ளற்பெருமான் வரலாறு ... ... 181

ஓதாமல் உணர்ந்தார் – பெரியபுராண விரிவுரை – தொழுவூர் வேலாயுத முதலியார் – திருவொற்றியூர் – திருமணம் – தமிழாசிரியரானது – சிதம்பரத்திற்குச் சென்றது – தண்ணீர் விளக்கு எரிந்தது – சமரச சுத்தசன்மார்க்க சத்திய தருமச் சாலை – சமரச சுத்தசன்மார்க்க சத்திய சங்கம் – கல்பட்டுஐயா – நிழற்படம் – திருவருட்பா வெளியீடு – திருவருட்பா வாதம் – ஞானசபை – அருட்பெருஞ்ஜோதி – ஞான சபை விளக்கப் பத்திரிகை – திருக்காப் பிட்டுக் கொண்டது – பின்னைய செய்தி.



சிதம்பரம்
இராமலிங்கம்



**சித்திவளாகத் திருமாளிகை**

குறியிட்டயிடத்தில் சுவாமிகள் மறைந்தனர்.

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

# சுத்தசன்மார்க்க விளக்கம்

## தோற்றுவாய்

திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா திருமுறைகளைத் திருவாய்மலர்ந்தருளினார்கள். திருவருட்பா என்ற நூல் ஆறு திருமுறைகளையும் வசனப்பகுதிகளையும் உடையது. **சமரச சுத்த சன்மார்க்கம்** என்ற அருள்நெறி இதில் விளக்கப் பட்டுள்ளது. இதனை இயற்கைத் தொன்மை நெறி என்று சுவாமிகள் கூறுகின்றனர். திருமூலர் திருமந்திரத்தில் சன்மார்க்கம் என்ற தலைப்பில் பத்துப் பாடல்கள் உள்ளன. முதற் பாடலில் சன்மார்க்க நெறியின் மூலக்கருத்து கூற்றத்தை வெல்லுதல் எனக் குறிப்பிடப்படுகின்றது.

சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவத்
தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு
சீற்ற மொழிந்து சிவயோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே.

—திருமந்திரம்.

இராமலிங்க சுவாமிகள் "சாகாதவனே சன் மார்க்கி" என்று அதனைப்பறைசாற்றுகின்றார். "சன் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந் தானே" என்று கூறுகின்றார். "சன்மார்க்கப்

பெருநெறி மாண்புகொண்டு வாழியவே" என வாழ்த்துகின்றார்.

> ஆன்றசன் மார்க்கம் அணிபெற எனைத்தான்
> ஈன்றமு தளித்த இனியநற் றாயே

என்று போற்றுகின்றார். உலகர் அனைவரையும் சன்மார்க்க சங்கத்துள் அடைவித்திட இந்த யுகத்தில் தாம் வரவழைக்கப்பட்டதாகக் கூறு கின்றார். தாம் பெற்ற இன்பத்தை எல்லா உயிர் களும் பெறவேண்டும் என்று வேண்டுவார். "ஏனுரைத்தேன்" என்ற கேள்வி கேட்டு "இரக் கத்தால் உரைத்தேன்" என்று பதில் சொல்லுவார்.

மாய்ந்தவர் மீட்டும் வருநெறியாகிய சன் மார்க்கப் பெருநெறியைத் தமக்கு ஆண்டவன் தந்து அதை ஆய்ந்திடப் பணித்தான் என்பார். "பார் உய்ய புரிக" எனப் பணித்தான் என்பார். "சாவா நிலையிது உனக்கே தந்தனம்" என்று ஆண்டவன் கூறியதைக் கூறுவார். ஈறில்லாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமாக நிறைந்த இறைவன் ஈறில்லாப் பதங்கள் யாவையுங் கடந்தபேறளித்துத் தம்மை ஆண்டவாறு விளக்கு வார். தனித்தலைமைத் தெய்வமாகிய அருட்பெருஞ் சோதி ஆண்டவன் தமக்குள் தனித்தமர்ந்து இருப்பதால், "நானே சன்மார்க்கம் நடத்து கின்றேன்" என்று அறிவிக்கின்றார். முழுமுதல் தெய்வமாகிய சிவபரம்பொருள் தம்மைச் சிவமாக்கிக் கொண்டது பாரீர் என்று பறைசாற்று கின்றார். "அருட்பெருஞ்சோதியைப் பெறுதலே

ஏவைக்கும் அரிய பேறு" என்று சத்தியமிடு கின்றார். "அருட்சோதி ஆனேன் என்று அறை யப்பா முரசு, அருளாட்சி பெற்றேனென்று அறை யப்பா முரசு" என்று முரசொலி எழுப்புகின்றார்.

தானே அருளாளன் தானே பொருளாளன்
தானேயெல் லாம்வல்ல தானானன்—தானேதான்
நான்ஆன னென்னுடைய நாயக னானன்

என்று வித்தகம் பேசுகின்றார். இதற்குச் சிவபரம்பொருளின் திருவருட்பேறு வேண்டி நிற்கின்றார். வேட்டு நிற்பதற்கு வேண்டிய திருவருளைப் பெற்று அருளமுதம் தந்து அருள் புரிவாய் என்று அரற்றுகின்றார்; ஆண்டவன்பால் ஆராத காதல் பூண்டு அழுகின்றார். "அருளா ளொழியான்" என்று ஆடுகின்றார்; அருட்ஜோதி அளிக்கவேண்டுமென்று கதறுகின்றார். நம் பெருமான் புகழ்பாடிப் பரவுகின்றார். நெஞ்சுருகத் துதிக்கின்றார். என்புருக ஏத்துகின்றார். நைந்து உருகத் துதிக்கின்றார். அன்புருவாம் பரசிவத்தைத் திருவருள் தந்தருள வேண்டுகின்றார்; கசிந்துருகிப் பாடுகின்றார்; நினைந்து நினைந்து ஏங்குகின்றார். பற்று நினைத்தெழுகின்ற தமது மனத்தீமையுன்னிக் கூசுகின்றார். உற்றவரும் மற்றவரும் மாள்வது கண்டு அஞ்சுகின்றார். பசி, பிணி, பகையால் மக்கள் வருந்துவது கண்டு துடிக்கின்றார். வாடிய பயிரைக்கண்டு வாடுகின்றார். தூக்கமும்,சோம்பும், துக்கமும், அச்சமும், ஏக்கமும் நீக்கவேண்டும் என்று ஏங்குகின்றார். எல்லாம் வல்ல இறைவன் தன்னையே தமக்குத் தந்து தம்மை வேதித்தான்

என்று மகிழ்கின்றார். உலகுயிர்த்திரளெலாம் ஒளி நெறி பெற்றிடத் தமக்கு ஐந்தொழிலீந்தான் என்கின்றார். சிருட்டி முதலைந்தையும் தம் திருக் கடைக் கணிப்பாற் செயவல்ல சுத்தசன்மார்க்க சத்திய ஞானியாகத் தம்மை ஆக்கினான் என்பார். "வகுக்குந்தொழிலே முதலைந்தும் நானே புரிகின் றேன் புரிதல் நீயோ நானோ நானறியேன்" என்று கூறி மயங்குகின்றார்.

"சிற்சபையும் பொற்சபையும் சொந்தமென லாச்சு
தேவர்களும் மூவர்களும் பேசுவதுஎன் பேச்சு"

"சிற்பொதுவும் பொற்பொதுவும் நானறிய லாச்சு
சித்தர்களும் முத்தர்களும் பேசுவதென் பேச்சு"

என்று மகிழ்கின்றார். "தேவரும் மூவரும் சித்தரும் முத்தரும் யாவரும் பெற்றிடா இயல்பு எனக்கு அளித்தனை" என்று போற்றுவார். துஞ்சும் தம் முடல் துஞ்சாது பொன்னுடம்பாகிப் பொலிந்தது என்பார். அருளுருவாயிற்று என்று அதிசயிப்பார். இன்ப உருவானேன் என்று இன்புறுவார். அருட் பெருஞ் சோதியைக் கண்டனமென்று களிப்பார். அது தன்னுட் கலந்தது என்று பூரிப்பார். தாம் அதுவான திறம் பேசிச் செம்மாப்பார்.

இவ்வாறெல்லாம் பாடிய பாக்களும், விண் ணப்பங்களும், விளக்கமும், உபதேசமும் சமரச சுத்த சன்மார்க்கப் பெருநெறியைச் சுற்றிச் சுற் றிப் பிணைத்துக்கொண்டு திருவருட்பாவாக விளங்குகின்றன. ஆண்டவனது புகழ் பாடிய தோத்திரங்களும் பல அன்பர்களுக்கு விளக்கிய

விவகாரங்களும் சேர்ந்து திருவருட்பாவாக வெளிப் பட்டன என்று சுவாமிகளே கூறுகின்றார். எனினும் ஏறக்குறைய ஆறாயிரம் பாடல்களில் சன்மார்க்கப் பெருநெறி ஓரிடத்தில் ஒன்றன்பின் ஒன்றாக விளக் கப்படவில்லை. ஆனால், ஆங்காங்கு கூறப்பெற் றுள்ள இச்சன்மார்க்கப் பெருநெறியை இணைத்துப் பார்க்கும்போது அணுத்துணையும் முரணுமல் அழ கொழுகப் பிணைத்து நிற்கும் அமைப்பு நெஞ்சை அள்ளுகிறது.

## 1. சுத்தசன்மார்க்கம்

இராமலிங்க சுவாமிகளின் தலைமாணக்கர் தொழுவூர் வேலாயுத முதலியார் ஆவார். இவர் திருவருட்பா வரலாறு பாடியுள்ளார். இதில் காப் புச் செய்யுளுடன் அறுபத்துநான்கு செய்யுள்கள் உள்ளன. இவர் திருவருட்பா என்பதற்குத் தான் கொண்ட உரையை ஒரு செய்யுளில் தெரிவிக்கின் றார். **திருவருட்பாவைத் தொட்டவனை அது சிவமாக்கும் உளவு கொண்டது** என்பதே அவர் கொண்ட பொருள். இதுநிற்க, மணிவாசகப் பெருமான் சிவப் பேறு பெற்ற செய்தியைத் திருவாசகத்துள் காண லாம். "சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனக் கருளியவாறு யார் பெறுவார் அச்சோவே" என்று திருவாசகம் செய்தருளுகின்றார். ஆகவே, சிவமாகு தல்தான் பிறவிப்பயன் என்பதாயிற்று. இராமலிங்க சுவாமிகள் இதனைக் **கடவுள் நிலையறிந்து அம்மய மாதல்** என்றும், ஆன்மலாபம் என்றும் கூறி, அதனைத் தாம் பெறுதற்கு மேற்கொண்ட சுத்த

சன்மார்க்கமாகிய அருள்ஒளி நெறியை விரித்துரைக்கின்றார். சுத்தசன்மார்க்கமானது ஆறந்தங்களுக்கு அப்பாற்பட்டது. ஆறந்தங்களாவன: வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், கலாந்தம், நாதாந்தம், யோகாந்தம் எனப்படும்.

நாதாந்த போதாந்த யோகாந்த வேதாந்த
நண்ணுறு கலாந்த முடனே
நவில்கின்ற சித்தாந்த மென்னுமா றந்தத்தின்...
—திரு. 6: 100: 17

இவ்வந்தங்கள் ஆண்டவனை அடைவதற்கு நம் முன்னோர்கள் வகுத்த பாதைகள் ஆகும். ஆறந்தம் என்ற தலைப்பில் இவற்றைத் திருமூலர் வகுத்துரைக்கின்றார். இந்த ஆறந்தங்களில் நுகர்தற்குரிய பேறுகளையெல்லாம் சுத்த சன்மார்க்கம் தன்னுள் அடக்கி நிற்றலின் இதனை ஆறந்த சன்மார்க்கம் என்பர்.

தவறாத வேதாந்த சித்தாந்த முதலாச்
சாற்றுகின்ற அந்தமெலாந் தனித்துரைக்கும் பொருளை
இவறாத சுத்தசிவ சன்மார்க்க நிலையில்
இருந்தருளாம் பெருஞ்ஜோதி கொண்டறிதல் கூடும்
—திரு. 6: 38: 90

என்பது காண்க.

அன்றியும், வேதாந்தம் விரித்துரைக்கும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நிலை அனுபவங்களைத் தாம் பெற்றதாகக் கூறுவர். வேதங்கள் நாதம் வரை சொல்லும். நாதம் என்பது இங்கே அனுபவத்தானம். ஆகமங்கள் பரநாதம்

வரையிலும் உபநிடதங்கள் அதற்குமேலும் பேசும். உபசாந்த நிலையாகிய சிவதுரியம் வரை உபநிடதங்கள் சொல்லுமென்ப. இந்நிலை குருதுரியம் எனவும்படும்.

தாயுமான அடிகள் முதலான மத சன்மார்க்கிகள் விதந்து கூறுவதும் மணிவாசகப் பெருமான் முதலிய சமய சன்மார்க்கிகள் அனுபவித்ததும் குருதுரியப் பெருநிலையே ஆகும். திருமூலர் மூன்று துரியங்களை வகுத்து உரைப்பர். இவை சீவ துரியம், பரதுரியம், சிவதுரியம் எனப்படும். இவற்றின் அனுபவம் முறையே சிவயோகம், சிவஞானம், சிவபோகம் என்பர். "துரியத்தலம் மூன்றின் மேலே சுத்தசிவதுரியப்பதியில் தெரிவது சிற்றம்பலத்தே திருநடஜோதி" என்று சுவாமிகள் கூறுகின்றார். ஆகவே, சிவதுரிய அதீத அனுபவந்தான் முற்ற முடிந்த சிவானுபவம் என்பது இதுகாறும் எழுந்த ஆறந்தமுடிபாகும். இராமலிங்க சுவாமிகள் சிவதுரியத்திற்கு மேலே உள்ள அனுபவ நிலைகளைச் சிறப்பித்துக் கூறுவாராயினர். இந்நிலைகளை எந்த அந்தமும் இதுகாறும் கண்டதில்லை, விண்டதுமில்லை. இவற்றைச் சுத்தப் பிரணவ ஞான தேகங்கொண்டுதான் அனுபவிக்க முடியும். இவற்றில் தாம் கண்டு நுகர்ந்த சிவானந்த அனுபவங்களையெல்லாம் வள்ளற் பெருமான் வாரி இறைக்கின்றார். அது சுத்த சிவதுரிய அதீத இன்ப நிலை எனப்படும். தாம் இவற்றையெல்லாம் பெற்றவாறு யார் பெறுவார் என்று வியக்கின்றார்.

நோவாது நோன்புளனைப்போல் நோற்றவரும்
எஞ்ஞான்றும்
சாவா வரமெனைப்போற் சார்ந்தவரும்—தேவாநின்
பேரருளை என்போலப் பெற்றவரு மெவ்வுலகில்
யாருளர்நீ சற்றே யறை —திரு. 6: 74:11.

என்று கேட்கின்றார். எல்லாம் சிவமயமே அன்றி வேறில்லை என்பார். மத சன்மார்க்கமும் சமய சன்மார்க்கமும் சிவ நிலையைப் புறங்கவியச் சொல்லவில்லை என்பார். இதனால் இதற்குச் சுத்த சன்மார்க்கம் என்று பெயராயிற்று. சுத்த சன்மார்க்கத்தின் குறிக்கோள் ஆன்மலாபம். இந்த ஆன்மலாபம் சுத்தசிவ துரியஅதீத நிலையில் பூரணப் படும். கடவுளின் பூரண இயற்கை இன்பம் இதுவே. மனித தேகத்தைப் பெற்றுக்கொண்ட ஜீவர்கள் இவ்வுலகில் அடையக்கடவதாகிய தனித்த பேரின்பம் இதுவே. ஒப்பற்ற இந்த இன்பத்தைத்தான் நமது சுவாமிகள் பெற்றார்கள்; பெற்றவாறு விளக்குகின்றார்கள். இவ் விளக்கத்திற்குச் சுத்த சன்மார்க்க சத்திய விளக்கம் என்று பெயர். எதற்கும் சிவமயம் என்று தொடங்கும் நற்றமிழ்ப் பண்பை என்னென்பது!

சன்மார்க்கம் என்பது நான்காவது மார்க்கம் என்பர். தாசமார்க்கம், புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனும் இந் நான்கு மார்க்கங்களைக் கொண்டு ஆண்டவனை அடையலாம் என்றும், "நாலுபேர் போன பாதையில் போ" என்பது முறையே அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வர் கைக்கொண்ட வழிகள் என்றும் கூறுவர். சன்மார்க்கம் என்பதற்கு

சத் என்கின்ற உண்மைப் பொருளை அறிவிக்கின்ற மார்க்கம் என்று சுவாமிகள் விளக்கியுள்ளார். ஆண்டவனை இயற்கையுண்மை என்கின்ற சத்தியத் திருவுருவினன் என்றும், "என் மார்க்கம் இறப்பொழிக்குஞ் சன்மார்க்கந்தானே" என்றுங் கூறியுள்ளார்.

ஆண்டவனது திருவருளைப் பெறுவதற்குச் சன்மார்க்கமே தக்க நெறி என்று தாயுமான அடிகளும் குறிப்பிடுகின்றார்கள்.

அந்தோவீ ததிசயமிச் சமயம் போலின்
றறிஞரெல்லா நடுவறிய வணிமா வாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கு மற்று மற்றும்
இந்திராதி போகநலம் பெற்ற பேர்க்கும்
இதுவன்றித் தாயகம்வே றில்லை யில்லை
சந்தான கற்பகம்போ லருளைக் காட்டத்
தக்கநெறி இந்நெறியே தான்சன் மார்க்கம்

—ஆகாரபுவனம்-சிதம்பர இரகசியம் 11

## ஆன்மலாபம்

உலகத்தில் உயர்பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க தலைப்பட்ட ஆன்ம இன்ப சுகத்தைக் காலமுள்ளபொழுதே விரைந்து அறிந்து அடையவேண்டும். இந்த ஆன்ம இன்ப வாழ்வு மூன்றுவகைப்படும். அவை இம்மையின்ப வாழ்வு, மறுமையின்ப வாழ்வு, பேரின்ப வாழ்வு எனப்படும். இம்மையின்ப வாழ்வு சிறிய தேக கரணங்களைப்

பெற்றுச் சிறிய முயற்சியால் சிறிய விடயங்களைச் சிலநாள் அனுபவிப்பதாகும். மனிதப் பிறப்பில் குறைவின்றி நல்ல அறிவுடையவர்களாய் பசி, பிணி, கொலை முதலிய தடைகளில்லாமல் உற வினர், நண்பர், அயலார் முதலியோர் தழுவ அன்பு, அடக்கம், ஒழுக்கம், வாய்மை முதலிய குணங்களையும் பெற்று மங்கல மணமாட்சியும் அதன் நன்கலனும் சிறப்பச் சிலநாள் தேக, போக, புவன இன்பத்தை வருந்தி நுகர்வது இம்மையின்ப லாபமாகும். மறுமையின்ப வாழ்வா வது பெரிய தேக கரணங்களைப் பெற்றுப் பெரிய முயற்சியால் பெரிய விடயங்களைப் பலநாள் அனு பவிப்பதாகும். நற்குணங்கள் எல்லாம் பொருந்த சுத்த விடய இன்பங்களைப் பலநாள் எண்ணியபடி தடைபடாமல் அனுபவிக்கின்ற இன்பம் மறுமை யின்ப லாபம் எனப்படும். பேரின்ப வாழ்வாவது எல்லாத் தேகங்களையும் எல்லாக் கரணங்களையும், எல்லாப் புவனங்களையும் எல்லாப் போகங்களையும் அருட்சத்தியின் சந்நிதி விசேடத்தால் தோன்றி விளங்க, விளக்கஞ் செய்விக்கின்ற கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப் பெற்று, எக்காலத் தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் தடைபடாமல் அனுபவிப்பதாகும். இந்தப் பேரின்ப லாபம் எல்லாம் தாமாய் விளங்குவதாகும். இந்த லாபத்தை அடைந்தவர்கள் சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம் பெற்றவர்களாய் இருப்பார் கள். இவர்களுடைய தேகம் ஐம்பூதங்களாலும் தடைபடுவதில்லை. அவரது கண்கள் அண்ட பிண் டங்களில் அகம் புறமுள்ள எவ்விடத்துமுள்ள

எல்லாவற்றையும் இருந்தவிடத்தில் இருந்தே கண்டறியும். இதைப்போல் பிற பொறிகளிலும் எல்லா வல்லபங்களேயும் பெற்றிருக்கும். அவருடைய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய கரணங்கள் எந்த விடயத்தையும் பற்றுவனவல்ல. தயவிஞல் பற்றத் தொடங்கிஞல் எல்லா உயிர்களேயும், எல்லாப் பண்புகளேயும், எல்லா அனுபவங்களேயும், எல்லாப் பயன்களேயும் ஒருங்கே ஒரு கணத்தில் சுட்டியறியும். அவர்கள் தேகத்திற்குச் சாயை, வியர்வை, அழுக்கு, நரை, திரை, மூப்பு, இறப்பு முதலிய குற்றங்கள் உண்டாகமாட்டா. ஆகாரம், நித்திரை, காமம், பயம், பிணி முதலியவற்றிஞல் தடைப்படமாட்டார்கள்.

காற்ருலே புவியாலே ககன மதனுலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்ருலே பிணியாலே கொலேக்கருவி யாலே
கோளாலே பிறவியற்றுங் கொடுஞ்செயல்க ளாலே

வேற்ருலெ யெஞ்ஞான்று மழியாதே விளங்கும்
மெய்யளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தா
னெனக்கே
ஏற்ருலே இழிவெனநீர் நிஃனயாதீ ருலகீர்
எந்தையருட் பெருஞ்ஜோதி யிறைவஃனச்சார் வீரே
—திரு. 6: 132: 59

என்பதனுல் சுவாமிகள் ஐம்பூதங்களாலும், பிறவற்ருலும் அழியாத உடம்பைப் பெற்றவாறு காண்க.

அவர்கள் அறிவு கடவுளறிவாகவும், செய்கை கடவுள் செய்கையாகவும், அனுபவம் கடவுள்

அனுபவமாகவும் இருக்கும். அவர்கள் எக்காலத்தும் அழிவில்லாதவர்களாய்ப் பேரருள் வண்ணமுடையவர்களாய் விளங்குவார்கள். ஒரு துரும்பும் அவரது திருநோக்கால் உயிர்பெற்று பஞ்ச கிருத்தியங்களும் செய்யும். அவரது பெருமை வேதாந்த, சித்தாந்த, கலாந்த, போதாந்த, நாதாந்த, யோகாந்தம் என்ற ஆறந்தத்திலும், அவற்றைக் கடந்தும் விளங்கும். இவையனைத்தும் சுத்தமாதி தேகங்களின் இலக்கணங்களாகும்.

இவற்றுள் இம்மையின்ப லாபம் மறுமையின்ப லாபம் என்ற இரண்டையும் அருளின் ஏகதேசத்தைக்கொண்டு அடையலாம். பேரின்ப லாபத்தை மாத்திரம் அருளின் பூரணத்தைக்கொண்டுதான் பெறமுடியும். எனவே, சுவாமிகள் பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழவேண்டி அதிதீவிர விருப்பமுயற்சியில் ஈடுபட்டார்கள். இதை எதனால் பெறுதல் கூடுமென்பதையும் குறிப்பிடுகின்றார்கள். "எல்லாமுடைய கடவுளது திருவருட் சுதந்திரம் எதனாலே பெறுதல் கூடும் என்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி அறிந்தேன்." திருவருட்சுதந்திரம் எவ்வாறு கிடைக்கும்? எனது யான் என்னும் தேக சுதந்திரம், போக சுதந்திரம், ஜீவ சுதந்திரம் என்னும் மூவகைச் சுதந்திரங்களும் நீங்கியவிடத்துக் கிடைக்கும் என்று அறிந்து தமது சுதந்திரமாகக் கொண்டிருந்த எல்லாச் சுதந்திரங்களையும் திருவருட்கே சர்வ சுதந்திரமாகக் கொடுத்துவிட்டுத் திருவருட் சுதந்திரத்தைப் பெற அரும்பாடுபட்டார். "அழியு

மின்வுடம்பு அழியாப் பொன்வடிவமாயிற்று" என்று சுவாமிகள் தாம் பொன்வடிவுற்ற செய்தியைக் கூறுகின்றார். இது சுத்த உடம்பு, சுத்த தேகம், அன்புருவம், சுவர்ண தேகம் என்றெல்லாம் கூறப்படும்.

அடிகளார் முதலில் சைவசித்தாந்தச் செந்நெறியில் அழுந்திய பற்றுடையவராக இருந்தார்கள். சைவ சமய குரவர்களாகிய ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், சுந்தரர் ஆகிய நால்வரையும் போற்றிப் பாடியுள்ளார். அத்திருப் பாடல்கள் நான்காம் திருமுறையில் உள்ளன. அவற்றுள் மணிவாசகப் பெருமானையும் அவர்தம் திருவாசகத்தையும் போற்றுவதை ஆளுடைய அடிகள் அருள்மாலையில் காணலாம். இவையன்றி மணிவாசகப் பெருமானைப் பாடிய பல பாக்கள் முதல் ஐந்து திருமுறைகளிலும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. மணிவாசகர் பெருமான் திருவருளால் சிறப்பாகப் பெற்ற பேறு ஒரு திருப்பாடலில் காணப்படுகின்றது. எடுத்த எடுப்பில், "வான் கலந்த மாணிக்கவாசக" என்று விளிக்கின்றார். மணிவாசகர் மண்ணிற் கலவாமல் வானிற்கலந்த செய்தி ஈண்டு விளக்கப்படுகின்றது. திருவாசகத்தை உண்மையாகக் கலந்து பாடி அனுபவித்தவர்களில் தலைசிறந்தவர் இராமலிங்க அடிகள். அவர் அதிற் கலந்து பாடுங்கால் அவரது ஊனும் உயிரும் உணர்வும் ஒன்றிநின்றன. திருவாசகமெனுந் தேனைப் பருகி அனுபவித்த உண்மையை,

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ்
சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே
—திரு. 6: 12: 7

என்று கூறியருளி இறைவன் திருவருளை முழுக்க முழுக்கப் பெற்றுத் தாமும் வான்கலந்து நிற்கின்றார். வான் என்பது ஆகாயம். மணிவாசகப் பெருமான் எங்ஙனம் வான்கலந்தார் என்பதையும் அடிகள் கூறுகின்றார்.

மன்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வா ரெல்லாரும் ஏமாப்ப
அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவ மடைந்துபின்னர்
இன்புருவ மாயினை நீ எழில்வாத வூரிறையே
—திரு. 4: 12:3

இத்திருப்பாடலில் வாதவூர்ப்பெருமான் இறைவனாகிய செய்தி கூறப்படுகின்றது. தெனினுமாம். மணிவாசகர் அன்புருவம், அருளுருவம், இன்புருவம் ஆகிய முத்திறல் வடிவமும் ஒன்றன்பின் ஒன்றாகப் பெற்றனர். இவை முறையே சுத்த தேகம், பிரணவ தேகம், ஞானதேகம் எனப்படும். இவை மூன்றும் சுத்ததேகங்களே. மற்று இவை சுவர்ணதேகம் நித்தியதேகமெனவும்படும்.

சுத்ததேகம் பெற்றவரெல்லாம் இறவாமையுற்றார் என்று கூறுவதற்கில்லை. சுவர்ணதேகம் பெற்ற பிரமன் முதலிய பஞ்சகருத்தர்களில் காலத்தால் தடைபடுபவர்களுமுண்டு என்று அடிகள்

விளக்கியுள்ளார்கள். ஆகவே, சுத்ததேகமாகிய அன்புருவ நிலையினின்றும் மேல்நிலை பெறவேண்டு மென்பதாயிற்று. அருளுருவம் இன்புருவமாகிய பெறலரும் பேறுபெற்று ஆன்ம இன்பத்தை நுகர்தல் வேண்டும். இதனைப் பலமுகத்தானும் திருவருட்பா திருமுறைகள் விளக்குகின்றன. தன்னைத் தொட்டவனைச் சிவமாக்கும் உளவு இப் பனுவலுக்கு உண்டு. இதற்கு முதற்படிதான் அன் புருவம் பெறுதல். மணிவாசகப் பெருமான் அன் புருவம் பெற்று, அன்புருவாம் பரசிவத்தை ஒன்றிச் சிவமானார். "மெய்யுணர்ந்த வாதவூர் மலையைச் சுத்த வெளியாக்கிக் கலந்துகொண்ட வெளியே" (திரு. 2 : 5 : 52) என்று வடலூரர் அடிகள் இறை வனைப் போற்றுகின்றார்கள். மேலும், முழுமுதற் தெய்வத்தை "ஞானதேகா" என்றே அடிகள் விளிக்கின்றார்கள். ஆகவே, மணிவாசகர் கண் ணிற்குப் புலனாகாது ஆகாயம்போல் தோன்று கின்ற ஞானதேகத்தை, இறைவடிவத்தைப் பெற்றுக்கொண்ட செய்தி காணக்கிடக்கின்றது. "சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனக் கருளியவாறு ஆர்பெறுவார்" என்று வாதவூர் அடிகள் வியக்கின்றார்கள்.

> ஜோதியுட் ஜோதியுட் ஜோதி என்னைச்
> சிவவெளிக் கேறுஞ் சிகரத்தி லேற்றி
> சிவமாக்கிக் கொண்டது பாரீர் !
>
> —திரு. 6: 146: 1

என்று வடலூரர்ப் பெருமான் வாய்ப்பறை ஆர்க் கின்றார்.

சிவபரம்பொருள் மணிவாசகப் பெருமானைச் சுத்த வெளியாக்கிக் கலந்தவாறுபோல இராமலிங்கப் பெருமானையும் கலந்துகொண்டது. இதை அவர் வாயிலாகவே அறியலாம்.

நானானேன் தானானேன் நானும்தா னுமானேன்
வானானேன் ஞான மணிமன்றி லாடுகின்றான்
கோனானேன் என்னுட் குலாவுகின்ற கோமானே

—திரு. 6 : 124:1

மேலும் அன்புருவம், அருளுருவம், இன்புருவமாகிய முத்திறல் வடிவங்களையும் மணிவாசகர் பெற்றவாறு இராமலிங்க சுவாமிகளும் பெற்றனர். இதனை,

மன்னுகின்ற பொன்வடிவு மந்திரமாம் வடிவும்
வான்வடிவும் கொடுத்தெனக்கு...........

—திரு. 6 : 38: 61

என்பதனால் அறியலாம். ஆகவே, வான் கலந்த ஒருவரை வான்கலந்த ஒருவரால்தான் உணர்ந்து அறிந்து காணமுடிந்தது.

தம்மைச் சிவங்கலந்த செய்தியை விளக்க வந்த அடிகள் நாம் பெறும் புருடார்த்தங்கள் நான்கு என்று கூறுவர். அவை (1) ஏமசித்தி, (2) சாகாக் கல்வி, (3) தத்துவ நிக்கிரகஞ் செய்தல், (4) கடவுள் நிலையறிந்து அம்மயமாதல் என்பன. இதைச் சுவாமிகள் உபதேசித்தருளிய உண்மை நெறியிற் காணலாம்.

## உண்மைநெறி

நாம் பெறும் புருஷார்த்தம் நான்கு:

(1) ஏமசித்தி, (2) சாகாக் கல்வி, (3) தத்துவ நிக்கிரகஞ் செய்தல், (4) கடவுள் நிலையறிந்து அம்மயமாதல். இவைகளைப் பெறுவதற்கு ஒழுக்கம் நான்கு வகைப்படும். (1) இந்திரிய ஒழுக்கம், (2) கரண ஒழுக்கம், (3) ஜீவ ஒழுக்கம், (4) ஆன்ம ஒழுக்கம்.

**I. இந்திரிய ஒழுக்கமாவது :—**

1. கொடிய சொல் செவிபுகாது நாதம் முதலிய தோத்திரங்களைக் கேட்டல்.
2. அசுத்த பரிசமில்லாது தயாவண்ணமாகப் பரிசித்தல்.
3. குரூரமாகப் பாராதிருத்தல்.
4. உருசி விரும்பாதிருத்தல்.
5. சுகந்தம் விரும்பாதிருத்தல்.
6. இன்சொல்லாடல்.
7. பொய் சொல்லாதிருத்தல்.
8. ஜீவஹிம்சை நேரிடுங்காலத்தில் எவ்வித தந்திரத்தினாலாவது தடைசெய்தல்.
9. பெரியோர்கள் எழுந்தருளியிருக்கும் இடங் களுக்குச் செல்லுதல்.

10. ஜீவ உபகார நிமித்தமாய் சாதுக்கள் வாசஸ்தானங்களிலும் திவ்ய திருப்பதிகளிலும் சஞ்சரித்தல்.

11. நன்முயற்சியில் கொடுத்தல் எடுத்தலாதி செய்தல்.

12. மித ஆகாரஞ் செய்தல்.

13. மித போகஞ் செய்தல்.

14. மலஜல உபாதிகளைக் கிரமமாய் ஒழித்தல்.

15. காலபேதத்தாலும் உஷ்ண ஆபாசத்தாலும் தடைநேர்ந்தால் ஔஷதி வகைகளாலும், பௌதிகமூலங்களாலும், சரபேத அஸ்தபரிச தந்திரத்தாலும், மூலாங்கப் பிரணவ தியான சங்கற்பத்தாலும் தடை தவிர்த்துக்கொள்ளல்.

16. (மந்ததரனுக்கு) சுக்கிலத்தை அக்கிரமாதிக்கிரமத்தில் விடாது நிற்றல்.

17. (தீவிரதரனுக்கு) எவ்வகையிலும் சுக்கிலம் வெளிப்படாமை நிறுத்தல்.

18. இடைவிடாது கோசத்தைக் கவசத்தால் மறைத்தல்.

19. இதுபோல் உச்சி, மார்பு முதலிய அங்கங்களையும் மறைத்தல்.

20. சஞ்சரிக்குங் காலத்தில் காலில் கவசம் தரித்தல்.

21. அழுக்காடை உடுத்தாதிருத்தல்.

II. **கரண ஒழுக்கமாவது:—**

1. மனதைச் சிற்சபையின்கண்ணே நிறுத்தல்.

2. துர்விஷயத்தைப் பற்ருதிருக்கச் செய்தல்.

3. ஜீவதோஷம் விசாரியாதிருத்தல்.

4. தன்னை மதியாதிருத்தல்.

5. செயற்கைக் குணங்களால் ஏற்படும் கெடுதிகளை (இராகாதி) நீக்கி இயற்கையாகிய சத்துவமயமாதல்.

6. பிறர்மீது கோபியாதிருத்தல்.

7. தனது சத்துருக்களாகிய தத்துவங்களை அக்கிரமத்திற் செல்லாது கண்டித்தல்.

III. **ஜீவ ஒழுக்கமாவது:—**

ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய யாவர்களிடத்திலும் ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பேதம் நீங்கி எல்லவரும் தம்மவர்களாய்ச் சமத்திற் கொள்ளுதல்.

## IV. ஆன்ம ஒழுக்கமாவது :—

யானைமுதல் எறும்பு ஈருகத் தோன்றிய சரீரங் களிலுள்ள ஜீவான்மாவே திருச்சபையாகவும், அதனுள் பரமான்மாவே பதியாகவுங் கொண்டு யாதும் நீக்கமற எவ்விடத்தும் பேதமற்று எல்லாந் தாஞக நிற்றல்.

இத்துடன் இடந் தனித்திருத்தல், இச்சை யின்றி நுகர்தல், ஜெபதபஞ் செய்தல், தெய்வம் பராவல், பிற உயிர்க்கு இரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப் பணிதல், பத்திசெய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில் பலகால் முயன்று முயன்று பழகிப்பழகி நிற்றல் வேண்டும்.

இவ்வண்ணம் நின்ருல் மேற்குறித்த அரும் புருடார்த்தம் கைகூடும்.

ஆகவே, இந்திரிய ஒழுக்கம் முதலாக ஆன்ம ஒழுக்கம் ஈருக உள்ள நான்கு ஒழுக்கங்களும் கைவரப்பெற்ற ஒருவன் கடவுள் நிலையறிந்து அம் மயமாகின்ருன். இதற்குள் அவன் அன்புருவம், அருளுருவம் பெற்று இன்புருவம் ஆகிய கடவுள் உருவத்தையும் அடைகின்ருன்.

### சன்மார்க்க சாதனம்

அன்புருவாகிய சுத்த தேகத்தைப் பெறுதற் குரிய ஞாஞசாரத்தையும் அடிகள் விளக்கியுள் ளார்கள். இதற்குச் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞாஞசாரம் என்று பெயர். “சர்வ சித்தி

ளையும் உடைய கடவுள் ஒருவர் உண்டென்றும், அவர் ஒருவரே என்றும் உணர்ந்து அவரை உண்மையன்பால் வழிபடவேண்டும். அப்படிப்பட்ட கடவுளை வழிபாடு செய்வதற்குச் சாதனம் இருவகை: ஒன்று பர உபகாரம், மற்றொன்று சத்விசாரம். பர உபகாரமென்பது தேகத்தாலும், வாக்காலும், திரவியத்தாலும் உபகாரஞ்செய்வது. சத்விசாரமென்பது ஆன்மநேய சம்பந்தமான தயா விசாரத்தோடு இருப்பது; கடவுளது புகழை விசாரித்தல்; ஆன்மாவின் உண்மையை விசாரித்தல்; தன் சிறுமையைக் கடவுளிடத்தில் விண்ணப்பித்தல். இந்த மார்க்கத்தால்தான் சுத்த தேகம் பெறவேண்டும்."

இவ்விரு வகையான சன்மார்க்க சாதனங்களில் பரோபகாரம் என்பது புறத்திலும், சத்விசாரம் என்பது அகத்திலும் நிகழும். மக்கள் ஏனைய உயிர்கட்கு எல்லாம் அன்பினாலும் கருணையினாலும், எல்லா வகையாலும் உதவுதலைப் பரோபகாரம் என்பர். உலகத்து உயிர்ப்பொருள்களைச் ஞானிகள் தாவர உயிர்வர்க்கம், சீவ உயிர்வர்க்கம் ஆன்ம உயிர்வர்க்கம் என மூவகையாகப் பிரிப்பர். ஆன்ம உயிர்வர்க்கமாவது மனித தேகத்தைப் பெற்றுக்கொண்ட சீவர்கள். இவர்களே ஆன்ம ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதற்குரிய தகுதியை உடையவர்கள் ஆவர். மனித தேகத்தைப் பெற்றுக் கொண்ட சீவர்களுக்கு இயற்கையில் அமைந்துள்ள விளக்கம் கருணை எனப்படும். இது ஜீவ காருண்யம் என்றும், ஜீவர்கள் தயவு என்றும் அன்பு என்றும் பெயர்பெறும். யானை முதல்

எறும்பு ஈருகத் தோன்றிய சரீரங்களிலுள்ள ஜீவான்மாவே திருச்சபையாகவும், அவற்றுள் இருக்கும் பரமான்மாவே பதியாகவும் கொள்ள வேண்டும்.

*உயிரெலாம் ஒருநீ திருநடம் புரியும்*
*ஒருதிருப் பொதுவென அறிந்தேன்*
—திரு. 6: 132: 75

*உயிருள்யாம் எம்முள் உயிர்இவை யுணர்ந்தே*
*உயிர்நலம் பரவுக............*
—திரு. 6 : 1 : 973

என்றமையால் உயிர்களைப்பற்றி ஆன்ம உருக்கம் உண்டாக உண்டாக ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுள் விளக்கமாகிய ஏகதேச அருள் வெளிப்பட்டுப் பூரணமாக விளங்கும்.

இதனை வெளிப்படுத்த எழுந்த கட்டுரைகள் ஜீவகாருண்யஒழுக்கம் எனும் மூன்றுபகுதிகளாகக் கிடைக்கின்றன. இவற்றுள் சுவாமிகள் இவ்வுண்மையை வினவிடையாக வைத்து மிக எளிதாகக் கூறுகின்றார்.

*எங்கே கருணை யியற்கையில் உள்ளன*
*அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே*
—திரு. 6: 1: 961

ஆன்ம இயற்கை விளக்கமாகிய சீவ தயவு சீவகாருண்யமாகும். இது பூரணப்பட்டபோது கடவுள் இயற்கை விளக்கமாகிய கடவுள் தயவு, அஃதாவது திருவருள், ஆன்மாக்களில் ஏகதேசமாக இருப்பது வளர்ந்து உருவாகும். இத் திருவருள் பூரணப்பட்டால் ஆன்மாக்களில் கடவுள் இயற்கை விளக்கம் நிறைகின்றது. அப்போது

ஆன்மா கடவுட்தன்மையைப் பெற்றுக் கடவுள் உடம்பெனத்தகும் சுத்ததேகமாகின்றது. ஆகவே, சிறிய விளக்கத்தைக்கொண்டு பெரிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளுதல் போலச் சீவதயவைக் கொண்டு சிவதயவைப் பெறக்கூடும். இயற்கை உண்மை ஏகதேசமாகிய ஆன்மா, தனது இயற்கை விளக்கமாகிய சீவதயவைக் கொண்டு, ஆன்ம உருக்கத்துடன் பரோபகாரஞ் செய்யுங்கால் ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுளின் இயற்கை விளக்கமாகிய திருவருள் வெளிப்படும். ஆன்ம உருக்கம் உண்டாக உண்டாக திருவருள் நிறைந்து வரும். அருள் பெருகப்பெருக இயற்கைஉண்மைஏகதேசமாகிய ஆன்மா ஆன்ம சிற்சத்தியாக மாறும். அருள் தயவு மேன்மேலும் ஓங்கி வளரும்போது ஆன்ம சிற்சத்தி இயற்கைவிளக்கப் பூரணமாகிய அருட் சத்தியாக மாறி ஒளிரும். எவ்வாறெனில் இயற்கை உண்மை ஏகதேசமாகிய ஆன்மாவில் அருள் ஒளியின் ஏகதேசமாகிய உயிரொளி உள்ளது.

ஆன்மாவின் இயற்கை விளக்கமாகிய சீவதயவு (சீவகாருண்யம்) நிறையும்போது உயிரொளியில் ஏகதேசமாக உள்ள திருவருள் பெருகும். திருவருள் நிறைந்து அருளொளியாக ஆன்மாவில் காரியப் பட்டால் ஆன்மசிற்சத்தி அருட்சத்தியாகும். இயற்கை விளக்கப் பூரணமான திருவருள் சிவதயவாகவும் ஆன்மாவில் காரியப்பட்டு நிறையுங்கால் அருட் சத்தியாகவும் உள்ளது. ஆகவே, சீவதயவைக்கொண்டு சிவதயவைப் பெறலாம் என்பதாயிற்று. மேலும் இதைக் கீழ்க்கண்ட சமன்பாடுகள் விளக்குகின்றன.

இயற்கை உண்மை ஏகதேசம் = ஆன்மா
இயற்கை உண்மைப்பூரணம் = கடவுள்
கடவுள் இயற்கை விளக்கம் = அருள் (சிவதயவு)
அருள் ஒளியின் ஏகதேசம் = உயிரொளி
ஆன்ம இயற்கை விளக்கம் = சீவகாருண்யம் (சீவதயவு)

**ஆன்மநேயம்**

*அருளலா தணுவும் அசைந்திடா ததனல்*
*அருள்நலம் பரவுகஎன் றறைந்தமெய்ச் சிவமே*
—திரு. 6 : 1 : 977

*அருளுறின் எல்லா மாகுமீ துண்மை*
*அருளுற முயலுகஎன் றருளிய சிவமே*
—திரு. 6: 1: 979

*அருளுறின் துரும்புமோர் ஐந்தொழில் புரியும்*
*தெருளிது எனவே செப்பிய சிவமே*
—திரு. 6 : 1 : 983

என்றெல்லாங் கூறியவதனல் அருளைப் பெறுதற்கும், அருள் நலம் அடைதற்கும், அருட் சுகத்தை நுகர்தற்கும் ஆன்மநேய ஒருமை உணர்ச்சியும், சீவகாருண்ய ஒழுக்கமும் வளர வேண்டும். இதுவே சன்மார்க்க நெறி; இதுவே அருள் நெறி; இதுவே அன்பு நெறி.

உயிரெலாம் பொதுவி னுளம்பட நோக்குக
—திரு. 6: 1:969

உயிருள்யாம் எம்முள் உயிர்இவை யுணர்ந்தே
உயிர்நலம் பரவுக
இயலருள் ஒளிஓர் ஏகதே சத்தினும்
உயிரொளி காண்க —திரு. 6: 1:973–975

என்பாராதலின் உயிர்களிடத்து இரக்கமும்,

கடவுளிடத்து அன்பும் வளரவேண்டும். "என்னை ஏறு நிலைமிசை ஏற்றிவிட்டது யாதெனில் தயவு; தயவு என்னும் கருணைதான் என்னைத் தூக்கி விட்டது" என்று சுவாமிகள் உபதேசத்தில் கூறுகின்றார்கள். மேலும், "நம்முடைய தலைவராகிய கடவுளை நாம் அடைவதற்கு அவர் எழுந்தருளியிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். இவ்வருளை அன்பினாலல்லது வேறு வகையால் அடைவது அரிது" எனவும், "அன்பொன்றே குறித்து அருளுகின்றார்" எனவுங் கூறிய சுவாமிகள் தமது அன்பு நெறிக்குத் தடையாக உள்ள எதையும் புறக்கணிக்கின்றார்கள். இத்தடைகளால் ஆன்மநேயம் தடைபட்டுப் போகும். சாதியும், மதமும், சமயமும் பொய்யென்று அறிவு கொளுத்துகின்றார்.

"எல்லாமுடைய அருட்பெருஞ் ஜோதி அற்புதக் கடவுளே! இதுதொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனதில் பற்றாவண்ணம் அருள் செய்தல் வேண்டும்" என்று விண்ணப்பிக்கின்றார்.

இந்த சன்மார்க்க விண்ணப்பம் பலருக்கு இடையூறாக இருந்தது; இன்னும் இருக்கின்றது. சமயத்தின் பேராலும், மதத்தின் பேராலும் பிழைப்புக்கு வழிவகுத்துக்கொண்டவர்களை இந்த

சன்மார்க்க விண்ணப்பம் பெரிதும் பாதிக்கின்றது. அதனுல் சன்மார்க்கத்தையே வெறுக்கத் தலைப் பட்டனர். சுவாமிகளைப் பழிகூறும் கூட்டமும் வலுத்தது. இதனைத் தொழுவூர் வேலாயுத முதலியார் ·பிரமஞான சங்கத்துக்கு எழுதிய உண்மைகளில் காணலாம். "இவர் சாதி வேற்றுமை பாராட்டலாகாது என்று போதித்ததால் ஜனங்கள் அதில் பிரியப்பட்டார்களிலர்" என்று குறிப்பிடுகின்ருர். ஆனல், சுவாமிகள் மக்களை யெல்லாம் ஒன்றுபடுத்த முயன்ருர்கள். மன்பதை உலகுக்குள்ள சகோதர ஒற்றுமையைப்பற்றிப் பேசினுர்கள். ஆன்ம உயிர்வருக்கத்திற்குள்ள ஆன்மநேய ஒருமைப்பாட்டை எடுத்துக் காட்டினுர்கள். அந்த ஒருமைப்பாட்டு உரிமையால் உலகர் அனைவரும் தாம் பெற்ற பேறு பெற விழைந்தார்கள். நினைப்பதற்கும் எட்டாத நிலைக்கு நம்மை அழைத்தார்கள்.

"உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப் பெற்ற நண்பர்களே! அறிவு வந்த காலமுதல் அறிந்தறியாத அற்புத அறிவுகளையும், அடைந்தறியாத அற்புதக் குணங்களையும், கேட்டறியாத அற்புதக் கேள்விகளையும், செய்தறியாத அற்புதச் செயல்களையும், கண்டறியாத அற்புதக் காட்சிகளையும், அனுபவித்தறியாத அற்புத அனுபவங்களையும் இதுதருணந் தொடங்கிக் கிடைக்கப்பெறுகின்றே னென்று உணருகின்ற ஓர் சத்திய உணர்ச்சியால் பெருங் களிப்புடையேனுகி இருக்கின்றேன். நீவிர்களும்

அவ்வாறு பெற்றுப் பெருங்களிப்பு அடைதல் வேண்டுமென்று எனக்குள்ளே நின்று நிறைந்து எழுந்து வெளிப்பட்ட எனது சுத்த சன்மார்க்க லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைப் பேராசைபற்றியே இதனைத் தெரிவிக்கின்றேன். இயற்கையிற்றானே விளங்குகின்றவராய் உள்ளவரென்றும், இயற்கையிற்றானே உள்ளவராய் விளங்குகின்றவரென்றும் இரண்டுபடாத பூரண இன்பமானவரென்றும் ... ... ... எல்லாம் உடையராய்த் தானாகி ஒப்புயர்வில்லாத் தனிப்பெருந் தலைவரா அருட்பெருஞ்சோதியரென்றும் சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே அகம்புற முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்த மெய்யறிவென்னும் பூரணப் பொதுவெளியில் அறிவார் அறியும் வண்ணங்கள் எல்லாமாகி விளங்குகின்றார். அவ்வாறு விளங்குகின்ற ஒருவரேயாகிய கடவுளை இவ்வுலகினிடத்தே ஜீவர்கள் அறிந்து அன்புசெய்து அருளையடைந்து அழிவில்லாத சத்திய சுக பூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழவேண்டும்'' என்று மக்களைக் கூவியழைக்கின்றார்.

ஆகவே, சுத்த சன்மார்க்க லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாடு வளர்ந்தால் உலகியல் துன்பங்கள் பலவும் குறையும்; கொலையும், புலையுந் தனிரும். அன்பெனும் ஆறு கரையது புரள, துஞ்சுதலில்லுடல் துஞ்சாத அன்புருவாகும். உயிர்களிடத்து இரக்கமும், கருணையும் ஆன்மநேயத்தால்தான் வளரமுடியும். எவ்வுயிரும் தம்முயிர்

போல் எண்ணுவார் இதயம் ஆண்டவன் குடி கொள்ளும் கோயில். உயிர்களுக்கு அன்பு காட்டுவதுதான் கடவுளுக்குச் செய்யும் உண்மையான வழிபாடு. இவ்வழிபாட்டிற்குத்தான் அன்பு வழிபாடு என்று பெயர். இதற்குச் சீவதயவு வளர வேண்டும். ஆன்மநேய ஒருமை வரவேண்டும். ஆன்மநேய ஒருமைப்பாட்டின் உண்மை விளங்க வேண்டும். ஆதலால் அடிகள் ஆன்மநேய உரிமை கொண்டு மக்களையெல்லாம் அன்புநெறியில் நிற்க வேண்டுகின்றார். இந்நெறிக்குச் சாதியில்லை; சமயமில்லை; மதமில்லை; குலமில்லை; கோத்திரமில்லை; மனித உடல் பெற்ற மக்கள் எல்லாம் ஒருமையுடையவராய் உலகியல் நடத்த வேண்டும். சமூக வாழ்வில் உயர்ந்தாரும், ஒத்தாரும், தாழ்ந்தாரும் ஆன்மநேய ஒருமை உணர்ந்து அன்புகொண்டு வாழவேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றார்.

ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரு மெவரும்
ஒருமையுள ராகியுல கியல்நடத்தல் வேண்டும்

—திரு. 6: 22:4

அப்பாநான் வேண்டுதல்கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாநா னன்புசெயல் வேண்டும்

— திரு. 6: 22:1

உண்ணுடி உயிர்களுறுந் துயர்தவிர்த்தல் வேண்டும்

— திரு. 6: 22:3

இருளாமை யுறல்வேண்டும் எனையடுத்தார் சுகம்வாய்ந்
திடல்வேண்டும் எவ்வுயிரு மின்படைதல் வேண்டும்

--திரு. 6: 22:10

தெருள் நயந்த நல்லோர் நினைத்த நலம்பெறுக
நன்று நினைத்
தெல்லோரும் வாழ்க விசைந்து
—திரு. 6: 74:5

என்றதனால் சீவகாருண்யம் பெருகி மலரும். அன்பு வாழ்வு அமையும். உயிர்கள் எல்லாம் ஆண்டவன் வாழும் கோயில் என்ற எண்ணம் இடையறாது மிளிரும்.

உயிரெலா மொருநீ திருநடம் புரியும்
ஒருதிருப் பொதுவென அறிந்தேன்
—திரு. 6: 132:75

என்னும் இந்த எண்ணம் எல்லா உயிர்களும் பொதுவெனக் காணுங் காட்சிக்கு வித்தாகும். இக் காட்சி இரக்க உணர்வை எழுப்பும். இந்த உணர்வு உயிர்களுக்கு உதவத் தலைப்படும். இங்ஙனம் உயிர்களுக்கு உதவப் பரிந்து மேற்கொள்ளும் உதவி ஆண்டவனுக்குச் செய்யும் பணியாகின்றது.

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயி னம்பர்க்கங் காகா
நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயிற் பகவற்க தாமே
—திருமந்திரம்

என்பதும் இதனால்தான். ஆகவே, இஃது அருட்செயலாகித் தெய்வவழிபாடாக நிற்கும். இங்ஙனம் அன்பு நெறிநின்று அருட்செயல் புரியும் செவ்வியர், உயிர் எல்லாம் பொதுவெனக் கண்டு, பற்பலகால் கண்டுகண்டு சற்று மேல்நிலை அடைவர். உயிர்ப் பொதுமையும் ஆன்மநேய ஒருமையும் மக்களை

எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணும் உயர் நிலைக்கு ஏற்றும். பிற உயிரைத் தம்முயிர்போல் எண்ணும் நிலையில் உயிர்களிடையே வேறுபாடு தோன்றுவதில்லை. உண்மையில் ஆன்மநேய உரிமை இங்குதான் தோன்றும். சுத்த சன்மார்க் கத்தின் முக்கிய லட்சியம் ஆன்மநேய ஒருமைப் பாட்டு உரிமை ஆகும். ஆன்மநேய ஒருமையும், ஆன்மநேய உரிமையும் ஒன்றல்ல. ஆன்ம நேய ஒருமை வேறு, ஆன்மநேய உரிமை வேறு. ஆன்மாக்களின் ஒருமை விளங் கினால் அவற்றின் உரிமை தோன்றும். இந்த உரிமை தோன்றினால் ஆன்ம ஒப்புமை பிறக்கும். ஆன்ம உரிமையும், ஆன்ம ஒப்புமையும் ஆன்ம உவப்புக்கு வழிகாட்டிகள். ஆன்ம உரிமையால் உயிர்க்குதவி செய்து உவக்கும் உள்ளத்தில் ஆண்டவன் நடஞ்செய்கின்றான். இவ்வாறு ஆன்ம உவகையை வருவித்துக்கொள்ளும் வித்த கர்கள் இன்னும் மேற்படிக்கு ஏறுகின்றனர். இவர்கள் கருணையே வடிவாக, அன்பே உருவாக இருப்பவர்கள். ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை மலர்ந்து, காய்த்துப் பழுத்து நெகிழ்ந்து ஓங்குமிப்புண்ணியர் சன்மார்க்கப் பெருநீதி செலுத் துவர். சுத்ததேகமாகிய அன்புருவம் பெற்றவர்கள் இவர்களே. இப்புண்ணியர்கள்தாம் சன்மார்க்கப் பெருநெறிக்கு உரியவர்கள் ஆகின்றனர். இக் கருத்தைச் சுவாமிகள் பராபரன் உண்மை நிலையம் என்ற தலைப்பில் அருளியுள்ளார்கள். இவ்வனு பவம் சுவாமிகளுக்குத்தான் முதலில் முற்றும் பொருந்தும்.

எவ்வுயிரும் பொதுவெனக்கண் டிரங்கியுப
கரிக்கின்றார் யாவ ரந்தச்
செவ்வியர்தஞ் செயலனைத்துந் திருவருளின்
செயலெனவே தெரிந்தே னிங்கே
கவ்வையிலாத் திருநெறியத் திருவாளர்
தமக்கேவல் களிப்பாற் செய்ய
ஒவ்வியதென் கருத்தவர்சீ ரோதிடவென்
வாய்மிகவு மூர்வ தாலோ

—திரு. 6 : 121:1

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந்
தம்முயிர்போ லெண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவரா யுவக்கின்றார்
யாவர்அவ ருளந்தான் சுத்த
சித்துருவா யெம்பெருமா னடம்புரியு
மிடமெனநான் தெரிந்தே னந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடவென்
சிந்தைமிக விழைந்த தாலோ

—திரு. 6 : 121:2

கருணையொன்றே வடிவாகி யெவ்வுயிருந்
தம்முயிர்போற் கண்டு ஞானத்
தெருணெறியிற் சுத்தசிவ சன்மார்க்கப்
பெருநீதி செலுத்தா நின்ற
பொருணெறிசற் குணசாந்தப் புண்ணியர்தம்
திருவாயாற் புகன்ற வார்த்தை
அருணெறிவே தாகமத்தி னடிமுடிசொல்
வார்த்தைகளென் றறைவ ராலோ

—திரு. 6 : 121:3

இதுகாறும் பரோபகாரம் எங்ஙனம் அன்பு ருவம் பெறுதற்குக் கருவியாகின்றது என்று

அறிந்தோம். இனி, சத்விசாரத்தைப்பற்றிச் சற்று நோக்குவோம். சத்விசாரம் இருவகைப்படும். எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளின் பெருமையை நினைந்தும் உணர்ந்தும் நெகிழ்வது ஒன்று; நமது சிறுமையை எண்ணி வருந்தி இறைவனிடம் விண்ணப்பித்தல் மற்றொன்று. இவ்விரண்டு தலைப்பில் திருவருட்பா திருமுறைகள் ஆறும் அடங்கி விடுகின்றன. நமது சிறுமை என்றபோது ஆண்டவனுக்குமுன் நாம் எம்மாத்திரம் என்ற எண்ணம் மாறலாகாது.

சுவாமிகளின் எண்ணமெலாம் தமது அநித்திய தேகத்தைச் சுத்த தேகமாக மாற்றுவதிலேயே முனைந்திருந்தது. யாக்கை நிலையாமையை எண்ணித் துன்புறுவார். "புன்புலால் உடம்பின் அசுத்தமும் இதனுள் புகுந்து நானிருக்கின்ற புணர்ப்பும் என்னால் எண்ணிச் சகிக்க முடியவில்லையே" என்று ஏங்குவார். "குருதியால் குழைத்த புலால் கொண்டு கட்டிய சிறுகுடில்; அதில் பெருந்துளைகளாக ஒன்பது வாயில்; நுண்துளைகள் எண்ணற்றவை; உள்ளே பேரிருள்; இதில் ஐம்பொறிகளாகிய பேய் ஒருபுறம்; ஐம்புல வேடர் இன்னொருபுறம்; அந்தக்கரணம் நான்கும் பற்று நினைத்தெழும் மற்றொருபுறத்தில்; பசிக்கனல் சூழ்ந்து நிற்கும்; காமாதி அரட்டர் மடிபிடித்து வருத்துவர்; இதனுள் ஏதுமறியாச் சிறியேனைச் சிறைப்படுத்தி விளையாடும் நின் திருவிளையாடலை என்னென்பேன்" என்று உயிர்களின் சிறுமையெண்ணி வருந்துகின்றார்.

எம்பெருமான் நின்விளையாட்டு என்சொல் கேனுன்
ஏதுமறி யாச்சிறியே னெனைத்தா னிங்கே
செம்புனலாற் குழைத்த புலாற் சுவர்சூழ் பொத்தைச்
சிறுவீட்டி லிருட்டறையிற் சிறைசெய் தந்தோ
—திரு. 1 : 5 : 87.

பம்பரத்தி னுடியலைப் படுத்து மிந்தப்
பாவிமனம் எனக்குவயப் படுவ தில்லை
கொம்பரற்ற இளங்கொடிபோற் றளர்ந்தே னென்னைக்
குறிக்கொள்ளக் கருதுதியோ குறித்தி டாயோ
—திரு. 1 : 5:88

உலகுயிர்த்துயரால் பட்டதெல்லாம் போதும்; இனிப் படமுடியாது; ஆதலால் என் உடல், உயிர் ஆதிய எல்லாம் நீயே எடுத்துக்கொண்டு உன் உடல் உயிர் ஆதிய எல்லாம் உவந்து எனக் கருள்வாய் என்று ஏத்துகின்றார். நமது தேகம் அநித்தியமானதென்றும் நமதென எண்ணிக் கொண்டிருக்கும் தேக, போக, சீவ சுதந்திரங்கள் நித்தியமானவை அல்ல என்றும், உலகில் துன்பமே மல்கியுள்ளதென்றும் நினைப்பதற்கு நமக்கு நேரமில்லை. நாமெல்லாம் சாமாறே விரைகின்றோம். தேக போகங்களிலுள்ள பற்றினை விடுவதற்குப் பற்றற்ற பரம்பொருளைப் பற்றவேண்டும். "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்பார் பிறரும். போகமெல்லாம் பொய்யென்னும் அநித்திய விவேகம் வந்தாலன்றிப் பற்று அறுதல் இல்லை. யான், எனது என்னும் அகங்கார மமாகாரங்கள் ஒழிவதற்கு அநித்திய விவேகம் வரவேண்டும். யானே பொய், என்னெஞ்சும் பொய், என் அன்பும் பொய் என்று உணர்ந்தால் இறைவன் ஒருவனே மெய்யானவன் என்ற எண்ணம் உதிக்கும். இவ்வெண்ணம் நலம் பயக்கும்.

சத்தியஞ் செய்கின்றேன் சகத்தீ ரறிமின்கள்
சித்தியெலாம் வல்ல சிவமொன்றே-நித்தியமென்
றெண்ணுமெண்ணத் தாலேநம் மெண்ணமெலாங் கைகூடும்
நண்ணுமின்பத் தேனென்று நான்.

—திரு.6: 109 : 26.

கண்டதெலா மநித்தியமே கேட்டதெலாம் பழுதே
கற்றதெலாம் பொய்யேநீர் களித்ததெலாம் வீணே
உண்டதெலாம் மலமேயுட் கொண்டதெலாங் குறையே

—திரு. 6: 110 : 4.

என்ற விவேகம் வரும். இது வருவதற்கு 'ஈன மந்தோ இவ்வுலகம்' என்று அருளை நாடுகின்ற ஞானம் பிறக்கவேண்டும். "அருளலா தணுவும் அசைந்திடா ததனுல் அருள் நலம் பரவுக; அருளுறின் எல்லாமாகும்; ஈதுண்மை; அருளுற முயல்க" என்றவாறு அருளையே பொருளாக நாடவேண்டும். இந்த ஞானம் பிறப்பதற்குச் சகப்பழக்க வாதனை நீங்கவேண்டும். சகப்பழக்கம் கெடுவதற்கு, உயிரையும் உயிரைப்பற்றி உறுத்தும் பாசங்களையும்பற்றிச் சற்று ஊன்றி விசாரிக்கும் எண்ணம் வரவேண்டும். நமக்கு இந்த எண்ணம் எப்பொழுது வரும்? நான் யார்? ஞானம் என்றுல் என்ன? என்னை யார் அறிவார்? என்று உசாவி எண்ணினுல் சகப்பழக்கம் நீங்கும். இங்ஙனம் எண்ணுதல் சாதுக்கள் சங்கம் அடைந்தால்தான் கைகூடும்.

பற்றற்றுன் பற்றினையே பற்றிடல் வேண்டுமது
பற்றற்று லன்றிப் பலியாதால்—பற்றற்றல்
வேதனையா லீங்கு விரியுஞ் சகப்பழக்க
வாதனைபோய் நீங்கிலன்றி வாராதால்—வாதனையும்

ஊனமந்தோ இவ்வுலக மென்றருளை நாடுகின்ற
ஞானம்வந்தா லன்றி விளங்காதால்—ஆகவஃ(து)
உண்ணவந்தாற் போலுமிவண் உற்றுவிசா ரித்திடுமோர்
எண்ணம்வந்தா லன்றி இசையாதால்—எண்ணமது
பங்கமடைந் தாரவையைப் பாராது சாதுக்கள்
சங்கமடைந் தாலன்றிச் சாராதால்

என்பது காண்க. திரு. 1 : 3 : 624-629.

ஆகவே, ''தம்மை மறந்து அருளமுதம் உண்டு தேக்கும் தகையுடையார் திருக்கூட்டம் சார்ந்து'' சத்விசாரம் செய்தல் வேண்டும் என்பதாயிற்று. அன்றி உண்மை நெறியில் கூறியாங்கு தன்னை மதியாதிருத்தல் என்னும் தாழுங்குணம் தானாக வரவேண்டும். இப்பணிவு தனது சிறுமையை எண்ணி விசாரவயத்தனாக இருப்பதற்குத் துணை புரியும். தமது சிறுமையை ஆண்டவனிடத்தில் விண்ணப்பிக்க வந்த இராமலிங்க அடிகள் தம்மை நாயினுங்கடையேன்; ஈயினுமிழிந்தேன்; புழுவினுஞ்சிறியேன் என்றெல்லாங் கூறித் தாழ்த்தி உரைக்கின்றார்கள்.

'மலத்திடையே புழுத்தசிறு புழுக்களினுங் கடையேன்'
—திரு.6 : 7 : 1.

என்றும்,

'புண்ணிற் புழுத்த புழுவனையேன்'

என்றும்,

'புல்வழங்கு புழுவதனிற் சிறியேனை'

என்றும்,

'புழுவிற் புழுத்த புழுவனையேன்'

என்றும் கூறுவர். இவற்றுள் மலத்திற் புழுத்த

புழு பெரிதும் துயர் தருவதில்லை. புழுவிற் புழுத்த புழு ஏனைய புழுக்களையுண்டு வளருமாயினும் தோன்றியவிடத்திற்குத் தொல்லை தருவதில்லை. புண்ணிற் புழுத்த புழு, தான் தோன்றிய புண்ணில் தங்கிக் குடைந்து பெருந்துயர் விளைக்கும். இதுபோல அடிகள் மனித சமுதாயத்திற்குப் பணி செய்வதற்குப் பதில் தமக்கும் பிறர்க்கும் பயன் படாது பெருஞ்சுமையாக இருந்து துயர்விளைத்து வருவதாகக் கருதினர்கள்.

எப்பொழுதும் சுவாமிகளின் முகத்தில் ஒரு வித துயரக்குறி காணப்படும் என்று கூறுப. அவர் கள் வருந்தியழுதமை இருவகைப்படும். ஒன்று தமக்காகவும் மற்றது பிறருக்காகவுமாம்.

பயத்தொடு துயரு மறைப்புமா மாயைப்
 பற்ருெடு வினையுமா ணவமும்
கயத்தவன் மயக்கு மருட்சியு மெனது
 கருத்திலே யினியொரு கணமும்
வியத்திடத் தரியே னிவையெலாந் தவிர்த்துன்
 மெய்யரு ளளித்திடல் வேண்டும்
உயத்தரு வாயே லிருக்கின்றே னிலையேல்
 உயிர்விடு கின்றன னின்றே

திரு.6 : 21 : 125.

என்னள விலையே யென்னினும் பிறர்பால்
 எய்திய கருணையால் எந்தாய்
உன்னுறு பயமு மிடருமென் றன்னை
 உயிரொடுந் தின்கின்ற தந்தோ

இன்னுமென் றனக்கிவ் விடரொடு பயமும்
இருந்திடில் என்னுயிர் தரியா
அன்னையுங் குருவு மப்பனு மான
அமுதனே அளித்தருள் எனையே

—திரு.6 : 21 : 124

தமது சிறுமையை எண்ணும்பொழுதெல்லாம் தம் பொறிகளும் புலன்களும் தம்வயமாக இல்லையே என்ற ஏக்கம் ஒருபால்; ஆண்டவனை நினைந்து அழுவதற்குத் தம் கருவி கரணங்கள் தம்பால் சார்ந்தில என்ற துன்பம் ஒருபால்; கருணைக்கடலாகிய இறைவனை எண்ணி அகங் குழைய, மெய்விதிர்த்து ஆடிப்பாடி, நைந்து உருகிப் பதையாமல் தடித்துப் பருத்த தம் உடலைக் கண்டு அஞ்சுவது ஒருபால்; நெகிழ்ச்சியில் லாதவராய் முரட்டுக் கட்டையேயன்ன கருங்கல் கரணத்தைக் கொண்டு எல்லாம் வல்ல பெருமானுடைய பெருமையை எங்ஙனம் சிந்திப்பேன் என்று ஒடுங்குவது ஒருபால் என்றெல்லாம் புலம்புகின்றார்.

" பற்றுநினைத் தெழுமிப் பாவிமனத் தீமையெல்லாம்
உற்று நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா"

—திரு. 6: 135 : 1.

என்பதால் அறியலாம்.

தூக்கமும், சோம்பலும், துக்கமும், அச்சமும், மயக்கமும் தம்மைத் துன்புறுத்துவதாகக் கூறுகின்றார். உலகில் பிறந்த மக்கள் இறவாதிருக்க ஒரு வழியுண்டு. அந்த மரணமிலாப் பெருவாழ்வை

அடிகளுக்கு ஆண்டவன் காட்டியருளினுன். அப்பேரின்பப் பெருவாழ்வு வாழ அடிகள் விரும்பி ஆண்டவனை வேண்டினுர். அந்த வாழ்விற்கு வேண்டடக்கடவ திருவருளை வேட்டுநின்ருர்.

சீரிடம் பெறுமோர் திருச்சிற்றம் பலத்தே
திகழ்தனித் தந்தையே நின்பால்
சேரிட மறிந்தே சேர்ந்தனன் கருணை
செய்தருள் செய்திடத் தாழ்க்கில்
யாரிடம் புகுவேன் யார்துணை யென்பேன்
யார்க்கெடுத் தென்குறை யிசைப்பேன்
போரிட முடியா தினித்துய ரொடுநான்
பொறுக்கலே னருள்கவிப் போதே.

—திரு.6 : 16 : 1

திருவருள் எப்பொழுது கிடைக்கும்? கிடைக்குமோ கிடைக்காதோ? கிடைக்காவிடில் என்செய்வது? என்றெல்லாம் அலம் வருகின்ருர். ஓடுகின்றனன் கதிரவன், அவன்பின் ஓடுகின்றன ஒவ்வொரு நாளும். வெய்ய கூற்றுவன் வெகுண்டால் என் செய்வேன் என்று ஏங்குகின்ருர். காலமுள்ள போதே கருணை செய்து வாழ்வோமென்ருல் கல்லாக் குறையும், இல்லாக் குறையும் தடையா யுள்ளன. எனினும் பசி, பிணி, பகை முதலிய வற்ருல் துன்புற்றுத் தம்மை அண்டியவர்கட்கும் ஏனையோர்க்கும் அடிகள் தம்மால் இயன்றனவெல் லாம் செய்தனர். இயலாதபோது ஆண்டவனிடம் விண்ணப்பித்துக்கொண்டு அரற்றினுர். உயிர்க் கொலையும் புலைப்புசிப்பும் கண்டு அழுதார். வன்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு

என்பெலாம் கருக இளைத்தனன் என்றார். வலியவர் எளியவரைத் துன்புறுத்துவதை எண்ணி நொந்து கொண்டார். வாடிய பயிரைக் கண்டுளம் வாடினார். உறவினர், நண்பர், அயலார் யாவராயினும் ஒவ்வொருவராய் இறப்பது கேட்டுப் புழுங்கினார். "அருள் தந்து இருக்குங் கொலோ" என்றழுதார்.

திருநிலைத்தநல் லருளொடு மன்பொடும் சிறப்பொடுஞ்
செழித் தோங்க
உருநிலைத்திவண் மகிழ்வொடு வாழ்வுற உவந்துநின்
னருள் செய்வாய்
இருநிலத்தவ ரின்புறத் திருவரு ளியல்வடி வொடுமன்றில்
குருநிலைத்தசற் குருவெனு மிறைவநின் குறைகழற்
பதம்போற்றி
—திரு.6: 132: 79

புண்படா வுடம்பும் புரைபடா மனமும்
பொய்படா ஒழுக்கமும் பொருந்திக்
கண்படா திரவும் பகலுநின் றனையே
கருத்தில்வைத் தேத்துதற் கிசைந்தேன்
உண்பனே யெனினு முடுப்பனே யெனினும்
உலகரை நம்பிலே னெனது
நண்பனே நலஞ்சார் பண்பனே உனையே
நம்பினேன் கைவிடே லெனையே. —திரு.6: 29 : 4

துனியால் உளந்தளர்ந்து அந்தோ துரும்பிற்
சுழலுகின்றேன்
இனியா யினுமிரங் காதோநின் சித்தமெந் தாய்இதென்ன
அனியாய மோவென் அளவல்நின் பால்தண்
அருளிலையோ
சனியாமென் வல்வினைப் போதனை யோவென்கொல்
சாற்றுவதே -திரு.1: 6: 2

தாய்கொண்ட திருப்பொதுவி லெங்கள்குரு நாதன்
சந்நிதிபோய் வரவிடுத்த தனிக்கரணப் பூவை
காய்கொண்டு வந்திடுமோ பழங்கொண்டு வருமோ
கனிந்தபழங் கொண்டுவருங் கால்அதனை மதமாம்
பேய்கொண்டு போய்விடுமோ பிலத்திடை வீழ்ந்திடுமோ
பின்படுமோ முன்படுமோ பிணங்கியொளித் திடுமோ
வாய்கொண்டு வென்றிடுமோ தோற்றிடுமோ வென்னை
மறந்திடுமோ திருவுளத்தின் வண்ணமறிந் திலனே
—திரு.6: 18: 8

இங்ஙனமாகத் திருவருள் வேட்டுப் பாடிய பாக்கள் பலப்பல. நெஞ்சறிவுறுத்தல், பிள்ளைச்சிறு விண்ணப்பம், பிள்ளைப் பெருவிண்ணப்பம், ஆற்ருமை, சத்தியப்பெருவிண்ணப்பம் முதலியன எல்லாம் நமது சிறுமையை விரித்துரைத்து அருள் வேட்பனவேயாகும்.

இனி, இறைவனது பெருமையை எண்ணித் துதிக்கும் பாடல்களும் விண்ணப்பங்களும் மலிய உள்ளன. இவற்றுள் சத்திய ஞானவிண்ணப்பம் மட்டும் நெஞ்சையள்ளும் பான்மையது. இதில் முழுமுதற்கடவுளின் திருவருட் சமூகத்தை அடைந்த உண்மை ஞானிகளின் சித்திவல்லப தரம் முதலில் பேசப்படும். இவர்கள் எழுவகைப் படுவர் என்றும் இவர்களது சித்திவல்லப தரத்தை வேதாகமங்களும், சத்திசத்தர்களும், ஐந்தொழில் செய் நாதரும் உணர்ந்து உணர்ந்தும், உணர்ச்சி செல்லாமையின் மயங்குகின்றனர் என்றுங்கூறும். ஆயினும் அது அவர்கள்தம் பெருமையெல்லாம் ஒருவாறு குறிப்பிட்டு விளக்கும். அவர்களைச்

சுத்த வேதாந்தர், சுத்த சித்தாந்தர், சுத்த யோகாந்தர், சுத்த நாதாந்தர், சுத்த போதாந்தர், சுத்த கலாந்தர் ஆகிய சுத்த சன்மார்க்க ஞானிகள் என்பர். இவர்கள் ஆண்டவனது திருவருள் வலத்தால் பொறி, புலன், கரணம் முதலிய தத்துவங்கள் அனைத்தையும் வென்று, நின்மலராகித் தத்துவாந்தத்தில் நின்று தம்முண்மை உணர்ந்து இயற்கை உணர்ச்சியைப் பெற்று, இயற்கை உண்மைக்கண் இயற்கை இன்பானுபவஞ் செய்கின்றவர்கள் ஆவர். மற்றும் இவர்களை அற்புதப் பெருஞ்செயல் புரிகின்ற ஐயர்கள் என்று அடிகள் குறிப்பிடுகின்றார். ஏழாவதாக ஷடாந்த சுத்த சன்மார்க்க ஞானிகளைக் கூறுவார். இவர்கள் சர்வசுதந்தரராகிய சத்தியர்கள் என்று விளிக்கப்படுகின்றனர். இவர்கள் எல்லாத் தத்துவங்களையும், எல்லாத் தத்துவிகளையும் ஐந்தொழில் செய்யும் வல்லபத்தை எளிதிற் கொடுத்தற்குரிய பூரண சுதந்தரம் படைத்தவர்கள். இயற்கைச் சத்திய ஞான சுகானுபவ பூரண சொரூப சாத்தியர்கள். எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் தடைபடாத நித்திய, சுத்த சத்த ஞானதேகம் பெற்றவர்கள்* பூதசித்தி முதல் சிவசித்தி ஈறாகவுள்ள பதினைந்து பிண்டசித்திகளையும், அண்டசித்தி பகிரண்டசித்தி, அண்டாண்டசித்தி என்கின்ற அந்தரங்க, பகிரங்க, தத்துவ, தாத்துவிக

---

* (1) பூதசித்தி (2) கரணசித்தி (3) இந்திரியசித்தி (4) குணசித்தி (5) பிரகிருதிசித்தி (6) புருடசித்தி (7) விந்துசித்தி (8) பரசித்தி (9) சத்தசித்தி (10) காலசித்தி (11) கலாசித்தி (12) விசுவசித்தி (13) வியோமசித்தி (14) பிரமசித்தி (15) சிவசித்தி

சித்திகள் எல்லாவற்றையும் திருக்கடைக் கணிப் பாற் செய்யவல்லவர்கள். இந்த எழுவகையான நித்தியர்கள் எல்லாம் திருவருட் சமூகத்தை அடைந்த உண்மை ஞானிகள். இவர்களது சித்தி வல்லப தரத்தை வகுத்தறிந்து வாழ்த்த முயன்று முடியாமல் வேதாகமங்களும், பஞ்சகருத்தர்களும், சத்திசத்தர்களும் அதிசயித்து மயங்குகின்றனர் என்பார்.

இந்த உண்மை ஞானிகளுக்கு சித்தவல்லப தரத்தைக் கொடுத்தருளிய திருவருட்சமூகத்தின் இயற்கையுண்மை விளக்கத்தரத்தையும் அடுத்த படியாக அறிவிக்கின்றுர். "எல்லாச் சத்தி களுக்கும் எல்லாச்சத்தர்களுக்கும், எல்லா மூர்த்தி களுக்கும், எல்லா மூர்த்தர்களுக்கும், எல்லாத் தேவிகளுக்கும், எல்லாத்தேவர்களுக்கும், எல்லாச் சாதனர்களுக்கும், எல்லாச் சாத்தியர்களுக்கும், எல்லா உயிர்களுக்கும், எல்லாத் தத்துவங்களுக் கும், எல்லாப் பொருள்களுக்கும், எல்லாக் குணங் களுக்கும், எல்லாச் செயல்களுக்கும், எல்லா அனுபவங்களுக்கும், மற்றெல்லாவற்றிற்கும் முதற் காரணமாயும், நிமித்த காரணமாயும், துணைக் காரணமாயும்,இவையல்லவாயும் விளங்குகின்றது திருவருட் சமூகம்." இதற்கும் மேலாக அருட் பெருஞ்ஜோதித் தனிப்பெரும் பதியாகிய இறை வனது திருவண்ணமும் இதில் விளக்கப்பட் டுள்ளது. இதனை வேறு தலைப்பில் காணலாம்.

ஆகவே, ஆண்டவனது திருவருட் சமூகத்தை அடைந்த உண்மை ஞானிகளது பெருமையையும்,

திருவருட் சமூகத்தின் பெருமையையும், ஆண்டவனது பெருமையையும் ஊன்றி விசாரித்து நமது சிறுமையை விண்ணப்பித்துச் சத்விசாரம் செய்ய வேண்டும். இதுகாறும் எழுந்த வேதம், ஆகமம், உபநிடதம், தேவாரம் முதலிய பன்னிரு திருமுறைகள், வேதாந்த சித்தாந்த மெய்கண்ட நூல்கள், திருவாய்மொழி, திருப்புகழ், திருவருட்பா முதலியனவும் ஏனைய தெய்வத் திருநெறி நூல்கள் அனைத்தும் சத்விசாரத்திற்கே எழுந்தவையாகும்.

---

# 2. பெரும் பேரனுபவங்கள்

## உயிரனுபவம்

இராமலிங்க சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய உண்மை நெறியினைக் கடைப்பிடித்துவந்தால் சாகாக்கலை அனுபவங்கள் கைகூடும். இவை உயிரனுபவம், அருளனுபவம், சிவானுபவம் எனப் படும். இவ்வுண்மையினை ஆளுடைய பிள்ளையார் அருள்மாலையில் அடிகள் விளக்கியுள்ளனர்.

பொத்திய மூல மலப்பிணி தவிர்க்கும்
　　பொருளருள் அநுபவ மதற்குப்
பத்திய முயிரின் அநுபவ மிதனைப்
　　பற்றறப் பற்றுதி யிதுவே
சத்திய மெனவென் றனக்கருள் புரிந்த
　　தனிப்பெருங் கருணையென் புகல்வேன்
முத்தியற் சிவிகை யிவர்ந்தருள் நெறியின்
　　முதலர சியற்றிய துரையே

—திரு.4: 9: 6

திருஞானசம்பந்தப் பெருமானை அடிகள் "முத்தியற் சிவிகை யிவர்ந்து அருள்நெறியில் முதலரசியற்றிய துரை" எனத் துதிக்கின்றார். காழிப் பெருமான் பற்பல அதிசயங்களைச் செய்தனர். எனினும், சன் மார்க்க அனுபவங்களைக் குறிக்கும் இப்பாடலில் அவர் முத்துச் சிவிகையில் இவர்ந்தருளிய செய்தியை விதந்து எடுத்துரைத்தது சிந்திக்கற் பாலது. ஆயிரக்கணக்கான தேவாரப் பதிகங்களில்

காழியர்கோன் முத்துச்சிவிகை பெற்றுப் பாடிய பதிகம் சிறப்புடையது. இந்நிகழ்ச்சி திருநெல் வாயில்அறத்துறை என்ற ஊரில் நடந்ததாக அறி கின்ரேம். இத் தேவாரப் பதிகத்தில் ஆண்டவன் திருவருள் குறிப்பிடப்படுகின்றது. அருள் என்ற சொல் இப்பதிகப் பாடல்கள் ஒவ்வொன்றிலும் ஆளப்பட்டுள்ளது. "எந்தை ஈசன் எம்பெருமான்" எனத் தொடங்கும் முதற்பாடல் "அடிகள் தம் மருளே" என்று முடிகின்றது. எந்தையே, ஈசனே, எம்பெருமானே என்று ஏத்தித் துதிப்பவர்க் கல்லால் ஏனையோர்க்கு இறையருள் கிடைப்பதரிது என்று ஞானசம்பந்தர் அறிவுறுத்துகின்ருர். இப் பதியில்தான் அவருக்கு ஆண்டவன் முத்துச் சிவிகை கொடுத்தருளினுன். இவரது வரலாற்றைப் பெரியபுராணத்தில் விரிவாகக் காணலாம்.

பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய சேக்கிழார் என்னும் தெய்வப் புலவர்க்கு ஆண்டவன் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தருளினுன். இச்சொற்ருெடரைக்கொண்டு தொடங்கிய சேக்கிழார் தமது பெரியபுராணத்தை 'உலகெலாம்' என்றே முடிக்கின்ருர். அன்றியும் இச்சொற்ருெடர் பெரியபுராணத்தின் நடுவிலும் ஆளப்படுகின்றது அஃதாவது ஞானசம்பந்தர் முத்துச்சிவிகையில் 'உலகெலாம்' உய்ய இவர்ந் தருளினுர் என்பர்.

உலகெலாம் என்ற இச்சொற்ருெடரைப் பரசிவ மெய்ம்மொழி என்று இராமலிங்க அடிகள் விளக்கி யுள்ளார். இதற்குப் பொருள் கூறவந்த அடிகள்

2208 உலகங்களைக் கூறி, விரிக்கிற் பெருகு மென்றனர். ஆகவே, சேக்கிழார் இந்த மெய்ம் மொழியைச் சிறப்பாக இவ்விடத்தில் எடுத் தாண்டதும், ஆண்டவன் அருளால் பெற்ற சிவிகை யில் இவர்ந்த ஞானசம்பந்தர் திருவருளைச் சிறப் பித்து ஓதியதும், இந்நிகழ்ச்சியை இராமலிங்க அடிகள் சன்மார்க்க விளக்கங் கூறவந்த இப் பாடலில் விதந்துரைத்ததும் ஏதோ ஒரு தொடர் புடைய அற்புதமாகத் தோன்றுகின்றது.

இனி, இத்திருப்பாடலில் மூலமலப்பிணி தவிர்க்கும் மருந்து ஒன்று கூறப்படுகின்றது. அதற்குத்தான் அருளனுபவம் என்று பெயர். செம்பிற் களிம்புபோல ஆன்மாக்களுக்கு உண் டான மூலமலமாகிய ஆணவம் தவிர்த்தற்கு ஒரே வழி அருளனுபவம் பெறுதல். அருளமுதமுண்டு அருளை அனுபவிக்கும்போது மூலமலம் போகும் என்றதனுல் ஏனைய கன்ம, மாயா மலங்களும் ஒழியு மென்பதாயிற்று. "பொறியுறும் ஆன்ம தற் போதமும் போயிட" எனப் பிறண்டும் கூறுவர். இனி அருளனுபவம் பெறுவதற்குப் பத்தியமாக உயிரனுபவங் கூறப்படுகின்றது. "உயிரனுபவ மாகிய பத்தியத்துடன் அருளனுபவமாகிய மருந்தை உட்கொண்டால் மூலமலப்பிணி தவிரும். இதனைப் பற்றறப் பற்றுவாயாக. இதுவே சத்தியம்" என்று திருஞானசம்பந்தப் பெருமான் தமக்குக் கருணையால் அறிவித்தருளினுர் என்று கூறுகின்றுர். மேலும், ஞானசம்பந்தர் அருள்நெறியில் முதலரசு இயற்றினுர் என்பார். உயிரனுபவமாகிய பத்தி

யத்தின் இலக்கணமும் அடுத்தாற்போல் அருள் அனுபவத்தின் பெரும்பேறாகிய சிவானுபவமும் அறிவிக்கப்படுகின்றன.

உயிரநு பவமுற் றிடில்அத னிடத்தே
 ஓங்கருள் அநுபவ முறும்அச்
செயிரின லநுப வத்திலே சுத்த
 சிவவநு பவமுறும் என்றாய்

—திரு.4 : 9:2

தத்துவ நிலைகள் தனித்தனி ஏறித்
 தனிப்பர நாதமாந் தலத்தே
ஒத்துஅதன் மயமாய் நின்னைநீ யின்றி
 உற்றிடல் உயிரநு பவம்

—திரு.4 : 9:3

உயிரனுபவம் மூன்று கூறுகளை யுடையது.

அவை (1) தத்துவ ~~மனைத்தும்~~ தனித்தனி ஏறுதல்,

(2) தனிப்பர நாதமாந் தலத்தே ஒத்தல்,

(3) அதன் மயமாய்த் தன்னைத் தானின்றி உற்றிடல் ஆகும்.

இவைமூன்றும் ஆற்றொழுக்குப்போல ஒன்றை யொன்று தொடர்ந்து நிற்கும். முதலில் தத்துவ மனைத்தும் தனித்தனியேறுதல் ஆகிய அனுபவம் வரவேண்டும். தத்துவங்கள் யாவை? சுத்த சன் மார்க்கத்தில் மலரோன் தத்துவம், மாலோன் தத்துவம், சுத்த தத்துவம் என மூவகையான தத்துவங்கள் கூறப்படுகின்றன.

—ஊரியங்கத்
தஞ்சந் தருமலரோன் தத்துவமாம் பூதங்கள்
அஞ்சும் பொறியஞ்சும் அஞ்சறிவும்-அஞ்செனுமோர்
வாக்குமுத லஞ்சுமற்று மாலோன்றன் தத்துவமாம்
ஊக்குங் கலைமுதலா மோரேழும்—நீக்கியப்பால்
மேவி விளங்குசுத்த வித்தைமுதல் நாதமட்டும்
தாவி வயங்குசுத்த தத்துவத்தின்—மேவியகன்று
அப்பால் அருள்கண் டருளால் தமைத்தாம் கண்டு
—திரு 1: 3: 679—683

**மலரோன் தத்துவங்கள் பிரமதத்துவம்** எனவும் படும். அவையாவன :—

மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பூதங்கள் ஐந்து :

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பொறிகள் ஐந்து :

உறுதல், உண்ணுதல், காணுதல், உயிர்த்தல், கேட்டல் ஆகிய புலன்கள் ஐந்து :

வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் ஆகிய கன்மேந்திரியங்கள் ஐந்து :

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய கரணங்கள் நான்கு :

ஆக பிரமதத்துவம் இருபத்துநான்காம்.

அடுத்தாற்போல் **மாலோன் தத்துவங்கள்**. அவையாவன :—

கலை, வித்தை, அராகம், நியதி, காலம், மோகினி, புருடன் என ஏழு தத்துவங்கள் ஆகும்.

அதற்கடுத்து சுத்த தத்துவங்கள். அவையாவன:—

சுத்தவித்தை, ஈசுரம், சதாக்கியம், விந்து, நாதம் ஆகிய ஐந்து. ஆக 20+4+7+5=36.

—திரு. 6: 100: 20

தத்துவங்கள் அனைத்தையும் அவற்றின் நிலைகளினின்று கடத்தல் வேண்டும். அப்போதுதான் அவை ஒழியும். அதற்கு வழி ஒன்றுண்டு. அஃதாவது தத்துவங்களைத் தன்வசமாகச் செலுத்த அறிதலாம்.

" தத்துவமென் வசமாகத் தான்செலுத்த வறியேன் "

—திரு.6 : 9 : 3.

என்பது காண்க.

இதனை ஆண்டவன் தமக்குத் தந்தருளினான் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"தன் சுதந்தரத்தால் தத்துவங்கள் எல்லாவற்றையும் நடத்துகின்ற தனிப்பெரு வல்லபமும்...... அருளி"

—சத்தியப் பெருவிண்ணப்பம்.

தத்துவங்கள் அனைத்தையும் தன்வசமாகச் செய்தல் ஆண்டவனாதலின் அந்த வல்லபத்தைத் தருமாறு வேண்டிக்கொள்ளலாம்.

நினைக்கும் பொழுதெலாம் நின்னையே நினைத்தேன்
நினைப்பற நின்றபோது என்னைத் தனியாக்கி
நின்கணே நின்றேன்

என்றவாறு பற்றற்ருன் பற்றினைப் பற்றிக்கொண்டு இமைப்பொழுதும் நெஞ்சில் அவன் தாள் நீங்கா வண்ணம் நிலைத்து நின்ருல் தத்துவமனைத்தும் தவிரும்.

தத்துவ மனைத்தும் தவிர்த்துநான் தனித்த
தருணத்திற் கிடைத்ததொன் றென்கோ
சத்துவ நிரம்புஞ் சுத்தசன் மார்க்கந்
தனிலுறு மனுபவ மென்கோ
ஒத்துவந் தெனைத்தான் கலந்துகொண்
டெனக்குள் ஓங்கிய ஒருமையே என்கோ

—திரு. 6 : 51 : 8

தத்துவமனைத்தையும் ஆண்டவன் தன்வச மாக்கிக்கொண்டு அருளுதலையுங் குறிப்பிடுகின்ருர் அடிகள். நமது சுதந்தரங்களனைத்தையும் சர்வ சுதந்தரராகிய கடவுளிடம் ஒப்படைத்தபோது நம்மைச் சூழ்ந்துள்ள தத்துவங்களனைத்தையும் தன்வசமாக்கியருள்வான் போலும்.

தத்துவ மெல்லாமெந் தன்வச மாக்கிச்
சாகாவ ரத்தையுந் தந்தெனைத் தேற்றி
ஒத்துவந் துள்ளே கலந்துகொண் டெல்லா
உலகமும் போற்ற உயர்நிலை யேற்றி

—திரு. 6 : 33 : 5

அன்றி, தத்துவமெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருச விடுபட்டுத் தனித்தபோது ஆண்டவன் அருள் வெளிப்படும்.

தத்துவ மனைத்துந் தாம்ஒருங் கொழிந்திடச்
சத்துவ மொன்றே தனித்துநின் ரேங்கிட
உலகெலாம் விடய முளவெலா மறைந்திட

அலகிலா வருளி னுசைமேற் பொங்கிட
என்னுளத் தெழுந்துயி ரெல்லா மலந்திட
என்னுளத் தோங்கிய என்றனி அன்பே

—திரு. 6 : 1 : 1471

மேலும், சத்திய ஞான விண்ணப்பத்தில் சுத்த சன்மார்க்க ஞானிகளைக் குறிப்பிடுங்கால், "தேவரீர் திருவருள் வலத்தால் பொறி புலன் கரண முதலிய தத்துவங்கள் அனைத்தையும் வென்று, நின்மல ராகித் தத்துவாந்தத்தில் நின்று தம்முண்மை யுணர்ந்து இயற்கை உணர்ச்சியைப் பெற்று இயற்கையுண்மைக்கண் இயற்கை யின்பானு பவஞ் செய்கின்றவர்கள்" என்பார். ஆகவே, ஆண்டவன் அருளினுல்தான் தத்துவங்களனைத் தையும் தனித்தனி கடந்து தத்துவாதீத மேல்நிலை யில் சித்திகள் முழுவதும் தெரிந்துகொள்ளலாம். அதன்மேல் சிவநிலை தெரிந்திடச் செல்லலாம். "ஒத்த அந் நிலைக்கண் யாமும் எம் உணர்வும் ஒருங்குறக் கரைந்துபோயினம்" என்றெல்லாம் அடிகள் கூறுவார்.

தத்துவ மனைத்தும் தனித்தனி கடந்தேம்
தத்துவா தீதமேல் நிலையில்
சித்தியல் முழுதுந் தெரிந்தனம் அவைமேற்
சிவநிலை தெரிந்திடச் சென்றேம்
ஒத்தவந் நிலைக்கண் யாமுமெம் முணர்வும்
ஒருங்குறக் கரைந்துபோ யினமென்று
அத்தகை உணர்ந்தோர் வழுத்தநின் றேங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே

—திரு. 6 : 4 : 7

மேலும், தத்துவங்களைக் கடப்பதற்குத் தத்துவ

நிலைகளை மறைத்துநிற்கும் திரைகள் நீங்க வேண்டும்.

தத்துவ நிலைகளைத் தனித்தனித் திரையால்
அத்திற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
—திரு. 6 : 1 : 829

திரைமறைப்பைத் தீர்த்து அருள்பாலித்தலும் தத்துவங்களால் வருந் துன்பங்களைக் களைதலும் ஆண்டவனுல்தான் கூடும்.

தத்துவச் சேட்டையும் தத்துவத் துரிசும்
அத்தகை யடக்கும் அருட்பெருஞ் ஜோதி
—திரு. 6 : 1 : 810

துன்புறு தத்துவத் துரிசெலாம் நீக்கிநல்
இன்புற என்னுளத் தேற்றிய விளக்கே.
—திரு. 6 : 1 : 1497

பொறிகரண முதல்பலவாந் தத்துவமும் அவற்றைப்
புரிந்தியக்கி நடத்துகின்ற பூரணரும் அவர்க்குச்
செறியுமுப காரிகளாஞ் சத்திகளு மவரைச்
செலுத்துகின்ற சத்தர்களுந் தன்னொளியால் விளங்க
—திரு 6: 38 : 82

அல்லாமலும், "எவ்வகைத் தத்துவங்களையும் காரண காரியத் திறத்தால் நடத்துகின்ற சத்தி சத்தர்கள்" எல்லாம் ஆண்டவனது அருளொளி யால் விளங்குகின்றமையால், தத்துவ நிலைகளை அருட்டுணையால்தான் தனித்தனி ஏறமுடியும்.

அடுத்தபடி தனிப்பரநாதமாந் தலத்தே ஒத்தல். இது தத்துவாதீதத்தில் நிகழ்வது. இவ்

விடத்திற்குப் பரநாதம் என்று பெயர். "அருளுறு மோர் பரநாதவெளி" (திரு. 6 : 82 : 78) ஆகமங்கள் இந்நிலைக்கு எட்டிப் போயின என்பர். இங்குதான் பாசங்கள் எரிந்தொழியும். ஆண்டவன் திருவருள் விளங்குவதும் இவ்விடத்திலேதான். இதன்மேலே விளங்குவது திருவடி நிலை. இதனைப் பொது மைமையிருந்த நிலை என்றுங் கூறுவர். (திரு. 6: 84: 12). ஒருசிலர் பரநாதமாந்தலத்தே ஒத்த+தன்மய மாய் என்று பிரிப்பர். இது பொருந்தாது. "ஒத்து வந் தெனைத்தான் கலந்து கொண்டு" எனவும், "ஒத்துவந் துள்ளே கலந்துகொண்" டெனவும், "நினது தன்மயம் தன்மயமாக்கி" எனவும் கூறுவா ராதலின் என்க. அப்படியானால் பரநாதத் தலத்தே எதனுடன் ஒத்தல் என்ற வினா எழும். ஆன்மா அருளின் ஏகதேசமாக ஒத்தல். அருள் நிறைய நிறைய ஆன்ம சிற்சத்தி அருட்சத்தியாக வளர்ந்து ஒக்கும். அதற்கடுத்தபடியாக அதன்மயமாய் நின்னை நீயின்றி உற்றிடல். அஃதாவது ஆன்மா அருள்மயமாகி தானறப்பெறுதல். இதனை,

> "தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
> மன்னுயி ரெல்லாந் தொழும்"

என்னும் குறட்பாவானும் அறிக.

மேலும், நாதம் வரையிலுள்ள சுத்த தத்துவங் களையெல்லாம் விட்டகன்றபின் அருளைக் காணு தலும், அருளால் தம்மைத் தாம் காணுதலும் நிகழும் என்பர். இந்த அனுபவத்திற்குத்தான் உயிரனுபவம் என்று பெயர்.

இத் திருப்பாட்டில், "என்னை என்னிடத்தே இருந்தவா றளித்தனை" என்று உயிரனுபவத்தின் மூலக்கருத்தையும் விளக்கிய திறன் அருமையாக உள்ளது. 'என்னை எனக்களித்தருள்' என்று சுவாமிகள் திருவருள் முறையிட்டுள்ளும் வேண்டுகின்றார்கள்.

மருப்பா வனத்துற்ற மாணிக்கு மன்னன்
மனமறிந்தோர்
திருப்பா சுரஞ்செய்து பொற்கிழி யீந்தநின்
சீர்நினைந்தே
விருப்பா நினையடுத் தேனெனக் கீந்திட
வேயின்றென்னை
கருப்பா நின்சித்தந் திருப்பாயென் மீது
கறைக்கண்டனே
—திரு. 1 : 6 : 55

## அருளனுபவம்

உயிரனுபவமாகிய பத்தியங்கொண்டு உண்ணவேண்டிய மருந்து அருளனுபவம். 'மருந்தறியேன், மணியறியேன் மந்திரமொன்றறியேன்' என்று அழுது முறையிட்ட அடிகளுக்கு ஆண்டவன் மருந்தும், மணியும், மந்திரமும் அருளியதோடு துறையிது, வழியிது, துணிவிது, நீசெயும் முறையிது என்றருளினன் என்பர்.

மருந்திது மணியிது மந்திர மிதுசெய்
வகையிது துறையிது வழியிது வெனவே
இருந்தெனுள் அறிவித்துத் தெள்ளமுது அளித்தே
என்னையுந் தன்னையும் ஏகம தாக்கி
—திரு. 6 : 33 :

அதுபோலவே ஆண்டவன் மூலமலப்பிணிக்கு மருந்தாகிய அருளனுபவத்தையும் ஞானசம்பந்தர் வாயிலாக தெரிவித்தருளினுன். அதன் இலக்கணம் பின்வருமாறு :

தனிப்பர நாத வெளியின்மேல் நினது
    தன்மயம் தன்மய மாக்கிப்
பனிப்பிலா தென்று முள்ளதாய் விளங்கிப்
    பரம்பரத்து உட்புற மாகி
இனிப்புற வொன்றும் இயம்புரு வியல்பாய்
    இருந்ததே அருளனு பவம்

—திரு. 4 : 9 : 4

இந்த அனுபவம் நான்கு கூறுகளை உடையது. தனிப்பரநாத வெளியின்மேல் நிகழ்வது.

1. தன்னைத் தானின்றி உற்ற ஆன்மா அதன் மயமாகுதல்.

2. பனிப்பிலாது என்றுமுள்ளதாய் விளங்குதல்.

3. பரம்பரத்து உட்புறமாகுதல்.

4. இனிப்புற ஒன்றும் இயம்புரு இயல்பாய் இருத்தல் என நான்கு.

நினது தன்மயம் தன்மயமாகுதல் என்றுல் என்ன ? தன்னைத்தான் அறப்பெற்ற ஆன்மா அருள்மயமாகுதல். அதற்கு ஆண்டவன் அருளைப் பூரணமாகப் பெறவேண்டும். அன்புருவம் பெற்ற ஆன்மா அருளை நாடி அருள் உருவம் பெறுதற்கு

முனையும். ஆண்டவன்பால் வைத்த அயரா அன்பு முதிரும். அதில் அருள் விளையும். இன்பம் பெருகும். ஆன்ம சிற்சத்தி நிலையிலிருந்து அருட்சத்தியாக மாறும். ஆண்டவனைக் கலந்து அதன்மயமாகும். இதனை விளக்கும் பாடல்கள் :

அருளளித்தான் அன்பளித்தான் அம்பலத்தான் உண்மைப்
பொருளளித்தான் என்னுட் புணர்ந்தான்

—திரு. 6: 86: 1

இறைவன் வருவிக்க வுற்றே னருளைப் பெற்றேனே

-திரு. 6: 93: 9

அன்பையும் விளைவித்து அருட்பே ரொளியால்
இன்பையும் நிறைவித்து என்னையும் நின்னையும்
ஓருருவாக்கி

—திரு. 6 : 1 : 1569

அருள்நிலை பெற்றனை அருள்வடி வுற்றனை
அருள்அர சியற்றுகஎன் றருளிய சிவமே

—திரு. 6 : 1 : 1018

நினைப்பதற்கும் எட்டாத இந்த அனுபவத் தானத்திற்குப் பரநாதமென்று பெயர். இது பரநாதத்தலம் என்றுங் கூறப்படும்; பரம்பர வெளியில் அனுபவமாகும். இவ்விடத்தில்தான் பரநாத ஒலி கேட்கும். மிக அருமையான ஜோதி மலையொன்று தோன்றும்; அதனுள் ஒரு பேரொளி வீசும். அருட்சத்தியாக மாறியுள்ள ஆன்மா அருள் உருவம் பெறும்; அருள்மயமாகும்.

என்புருப்பொன் னுருவாக்க எண்ணிவரு கின்றூர்
என்றுதிரு நாதஒலி இசைக்கின்ற தம்மா

—திரு. 6 : 82 : 48

அடுத்து பனிப்பிலாது என்றும் உள்ளதாய் விளங்குதல் நிகழும். இதனைக் காற்றறியாத் தீபம்போல் இருந்திடும் அத்தருணத்திற் கண்ட பரிசு என்பர். ஆண்டவனாகிய அருட்பெருவிளக்கு நித்தியமானது அசையாத மிகு பெருங் காற்றடித்தாலும் சற்றும் ஆடாமல், அசையாமல், பனிக்காமல் நிலைத்து விளங்கும். இங்ஙனம் வயங்குகின்ற ஜோதி மணி விளக்கம் தானாகி ஆன்மா என்றும் உள்ளதாய் விளங்கும். ஆன்மாவை எக்காலத்தும் உள்ளதாய் விளங்கப்பட்டதென்பாராதலின் இங்கேயும் உள்ளதாய் விளங்குவதைக் கூறுகின்றார். மற்று, ஆண்டவனைக் குறிப்பிடும்பொழுது இயற்கையில், தானே விளங்குகின்றவராய் உள்ளவரென்றும் இயற்கையில், தானே உள்ளவராய் விளங்குகின்றவரென்றும் கூறுவார். இங்கு என்றும் உள்ள பொருளாகிய ஆன்மா விளக்கம் பெற்று ஓங்கவேண்டுமாதலின் உள்ளதாய் விளங்குதல் கூறப்பட்டதுபோலும். அஃதாவது, என்றும் உள்ளதாய் விளங்கும் ஆன்மா இயற்கையில் தானே விளங்குவதாய் உள்ள திருவருள் மயமாகும்போது அருளின் இயல்பையும் பெறும். இது அருள் அனுபவமாதலின் இங்ஙனம் ஒன்றுதல் வேண்டும். மேலும், இதற்கடுத்துச் சிவானுபவம் உள்ளதாய் விளங்கும் ஒரு பெரு வெளிமேல் உள்ளதாய் நிகழும் என்று கூறுவதும் கருதற்பாலது.

பரம்பரத்து உட்புறமாகி என்பது பரநாத வெளியிலிருந்து பரம்பர வெளியுட் புகுந்து அதன்

உட்புறம் ஆகுதல் ஆம். இங்கு ஆண்டவன் திருவடிகள் பரம்பரமாய் விளங்கித் திருநடஞ் செய்யாது செய்யும் (திரு. 6 : 83 : 9). திருவடிகள் பரநாதத் தலங் கடந்து அப்பாற் சித்துருவு கடந்து விளங்கும் (திரு. 6 : 83 : 7). மறை, ஆகமங்கள் "பரநாதபோதவரை போந்து தேடிப் புணர்ப்பறியா திருந்தன" என்றும் அவை "பரநாத எல்லை மட்டுஞ் சென்றேம், இனிச் செல்ல வழி காணேம்" என்றும் " உயங்கி மயங்கித் திரும்பின" என்றபடியால் அதற்குமேலுள்ள பரம்பரம் கூறியவாருயிற்று. "பரநாதமுடி நடக்கும் பாதமலர்" என்றும் " வாங்குபர வெளிமுழுதும் நீண்டு நீண்டு மறைந்து மறைந்து ஒளிக்கின்ற மணியே" என்றும் (திரு. 1 : 5: 58) "மீதானத்து அருளொளியாய் விளங்கிய நின்னடிகள்" (திரு 4 : 2 : 31) என்றும் "பரம்பரத்தே விழித்தேன்" என்றும் கூறியவதனுல் "அருள் விளங்கும் சுத்தசிவாதீத வெளி நடுவில்" நின்று அருளை (திருவடி) அனுபவித்தல் வேண்டும்.

இறுதியாக இனிப்புற ஒன்றும் இயம்புருவியல்பாய் இருப்பது கூறப்படும். இதை "என்றும் செம்மையெலாம் தரும் மௌன அணை மேற்கொண்டு சுத்த இன்ப நிலை" பெறுதல் என்பர்.

தம்மைமறந்து அருளமுதம் உண்டு தேக்கும்
தகையுடையார் திருக்கூட்டம் சார்ந்து நாயேன்
வெம்மையெலாந் தவிர்ந்துமனங் குளிரக் கேள்வி
விருந்தருந்தி மெய்யறிவாம் வீட்டில் என்றும்

செம்மையெலாந் தரும்மௌன அணைமேற் கொண்டு
செறியிரவு பகலொன்றுந் தெரியா வண்ணம்
இம்மையிலே எம்மையினுங் காணுச் சுத்த
இன்பநிலை அடைவேனே ஏழை யேனே
—திரு. 1 : 5 : 93

என்பதனாலும்,

வலங்கொளும் அம் மேனிலையின் உண்மையெது வென்றால்
மவுனஞ்சா திப்பதன்றி வாய்திறப்ப திலையே
—திரு. 6 : 84 : 12

என்பதனாலுங் காண்க. அன்றியும், இதனைச் செயிரில் நல் அருளனுபவம் என்றதுங் காண்க.

ஆகவே, அருட்டுணையால் ஆன்மவருட் சத்தி அருளுருவாகி அருள் மயமாய் அருளை அனுபவிக்கும்போது இன்புற்று இருக்கும். இதைத் தான் திருநட இன்பம் என்ப. அருளாலே அருளிறை அருள்கின்றபோது அனுபவமாகும்.
—திரு. 6 : 132 : 47

### சிவானுபவம்

இஃது அருளனுபவத்தில் விளைவது. இதன் இலக்கணம் யாது? உள்ளதாய் விளங்கும் ஒரு பெருவெளிமேல் அனுபவம் ஆவது சிவானுபவம். இதற்குச் சிவவெளி யென்றும், வெறுவெளி யென்றும், பெருஞ்சுகவெளி யென்றும், சுகப்பெருவெளி யென்றும் பெயர். இது முற்றுமுள்ளது; எங்குமாய் விளங்குவது; "இதுவதுஎன உரைப்பரிதாய்" தங்கும் ஓர் இயற்கைத் தனி அனுபவம்; நெருங்கு

மியல்பினதாய் அண்ணித்து இனிப்பது ; எனதாய் நானதாய்த் தானதாய், நவிற்றருந் தானதாய் இருப்பது ; சொல்லுதற் கரிய படிகள் கடந்துள்ள இந்த வெறுவெளிதான் சிவானுபவம் என்று அடிகள் ஆனந்தத் தேன் சொரியக் கூறுகின்றார். இங்ஙனமாக ஞானசம்பந்தப் பெருமான் தமக்கு உள்ளூற உரைத்தார் என்பர்.

உள்ளதாய் விளங்கும் ஒருபெரு வெளிமேல்
உள்ளதாய் முற்றுமுள் ளதுவாய்
நள்ளதாய் எனதாய் நானதாய்த் தனதாய்
நவிற்றருந் தானதாய் இன்ன
விள்ளொணா அப்பால் அப்படிக்கு அப்பால்
வெறுவெளி சிவானு பவமென்று
உள்ளூற அளித்த ஞானசம் பந்த
உத்தம சுத்தசற் குருவே

—திரு. 4 : 9 : 5

சத்திய ஞான விண்ணப்பத்தில் அடிகள் ஆண்டவனை விளிக்கும் அழகையுங் காண்க. "அடி நிலைக் கருமஞானசித்தி யனுபவங்களினும், முடி நிலைக் கருமஞானசித்தி யனுபவங்களினும், அடி நிலை யோகஞானசித்தி யனுபவங்களினும், முடி நிலை யோகஞானசித்தி யனுபவங்களினும், அடி நிலைத் தத்துவஞானசித்தி யனுபவங்களினும், முடி நிலைத் தத்துவஞானசித்தி யனுபவங்களினும், அடி நிலை ஆன்மஞானசித்தி யனுபவங்களினும், முடி நிலை ஆன்மஞானசித்தி யனுபவங்களினும், சுத்தஞானசித்தி யனுபவங்களினும், சமரச சுத்த ஞானசித்தி யனுபவங்களினும் அது வது வாகி

நிறைந்தும், அதுவதுவாகி விளங்கியும், அது வதுவாகி யினித்துப், ஆங்காங்கு அதீதமாகிக் கலந்தும், இவையனைத்துமாகி ஒருமித்தும் அதீதா தீதமாகித் தனித்தும் வயங்குகின்ற பெருங் கருணைப் பெரும்பதியாய கடவுளே" என்பார். இதனை மேலும் விரிக்கும் பாடல்கள் பலவுள.

அருட்பெரு வெளியில் அருட்பெரு வுலகத்து
அருட்பெருந் தலத்துமேல் நிலையில்
அருட்பெரும் பீடத்து அருட்பெரு வடிவில்
அருட்பெருந் திருவிலே அமர்ந்த
அருட்பெரும் பதியே

—திரு. 6 : 4 : 1

சுத்த அருளாகி அருள் வெளியிலே
அருள்நெறி விளங்கவே அருள்நடஞ் செய்தருள்
அருட்பெருஞ் சோதியாகி

—திரு. 6 : 100 : 16

அண்டமுறுஞ்சிற் பரவெளியாய்த் தற்பரமாம் வெளியாய்
அமர்ந்தபெரு வெளியாகி யருளின்ப வெளியாய்த்
திண்ணமுறுந் தனியியற்கை யுண்மைவெளி யான
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர்

—திரு. 6 : 3 : 2

வெளியே எவ்வெளியு மடங்குகின்ற வெறுவெளியே

—திரு. 6 : 56 : 11

பரைதரு சுத்த நிலைமுதல் அதீதப் பதிவரை
நிறுவியாங்கு அதன்மேல்
உரைதர வொண்ணா வெறுவெளி வெட்ட வெறுவெளி
யெனவுலகு உணர்ந்த

புரையறும் இன்ப அனுபவந் தரற்கோர் திருவுருக்
கொண்டுபொற் பொதுவில்
திரையறும் இன்ப நடம்புரி கின்ற என்பரால்
திருவடி நிலேயே

—திரு. 6 : 46 : 10

திருநிலேத் தனிவெளி சிவவெளி யெனுமோர்
அருள்வெளிப் பதிவளர் அருட்பெருஞ் ஜோதி

—திரு, 6 : 1 : 27

பராபர வெளியைப் பகர்பெரு வெளியில்
அராவற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
பெருவெளி யதனைப் பெருஞ்சுக வெளியில்
அருளுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

—திரு. 6: 1: 567-570

வெளிக்குள் வெளிகடந்து சும்மா இருக்குஞ் சுகம்
(நான்முகம்)
தான்நான் எனும்பேதந் தன்னைத் தவிர்த்தான் நான்
ஆனன்சிற் றம்பலவன்

—திரு. 6 : 109 : 16

நானனன் தானனன் நானுந்தா னும்ஆனன்

—திரு. 6 : 124 : 1

தானே யருளானன் தானே பொருளானன்
தானேயெல் லாம்வல்ல தானனன் — தானேதான்
நானனன் என்னுடைய நாயகன் ஆனன்ஞான
வானனன் அம்பலத்தெம் மான்

—திரு. 6 : 86:5

விட்டவெறுவெளி என்பதும் முற்ற முடிந்த முடிபன்று எனவும், இங்ஙன முரைத்தல் ஒருவாறு எனவும், அதற்குமேல் அளப்பரிது எனவுங் கூறுகின்றார்.

வாய்திறவா மவுனமதே யாகுமெனில் தோழி
மவுனாதீத வெளியேழும் பரத்தபரத் தொழியும்
ஆயபரா பரமதுவே யென்றாலங் கதுதான்
துலங்குநடு வெளிதனிலே கலந்துகரை வதுகாண்
போயநடு வெளியென்றால் தற்பரமாம் வெளியில்
விரவியிடும் தற்பரமாம் வெளியென்றால் அதுவும்
ஆயவொரு வெளிதனிலே பாங்குறுமிது மட்டே
அளப்பதொரு வாறுஅதன்மேல் அளப்பரி தரிதே

—திரு. 6 : 84 : 13

எப்பொருளும் எவ்வுயிரும் எவ்வுலகும் விளங்கவிளக் கிடுவான் றன்னைச்
செப்பரிய பெரியவொரு சிவபதியைச் சிவகதியைச் சிவபோ கத்தைத்
துப்புரவு பெறவெனக்கே அருளமுதந் துணிந்தளித்த துணையை யென்றன்
அப்பனைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ் ஜோதியைப்பெற்றேன் அச்சோ அச்சோ

—திரு. 6 : 47 : 3

என்றெல்லாங் கூறியவதனால் அருள் விளங்குஞ் சுத்த சிவாதீத வெளியில் எல்லாம் வல்ல முழுமுதற்றெய்வமாகிய சிவபரம்பொருள் அருட்பெருஞ் ஜோதியாய் விளங்குகின்றது. அருளனுபவத்தில் இளிப்புற்றிருந்த அருளுருவாகிய ஆன்மா சிவத்

துடன் கலந்து சிவ உருவடைந்து சிவமேயாகிச் சிவமயமாய்ச் சிவம் விளங்குமிடமெல்லாம் சிவ வெளியாய் நிறைந்து விளங்குவதுதான் சிவானு பவமாகும். இயற்கையுண்மைத் தனிப்பெரும் பொருளாயும், இயற்கை விளக்கத் தனிப்பெரும் பதமாயும், இயற்கையின்பத் தனிப்பெருஞ் சுக மாயும் விளங்கும் சுத்தசிவத்துடன் பிரிவின்றிச் சிவமயமாய் இயற்கையின்பானுபவஞ் செய்கின்ற சத்தியநிலையனுபவம் என்றுங் கூறலாம். சிவானு பவம் பெற்றவர்களின் அறிவு கடவுளறிவாகவும், செய்கை கடவுள் செய்கையாகவும், அனுபவம் கடவுள் அனுபவமாகவும் இருக்கும். தாம் பெற்ற சிவானுபவத்தைச் சுவாமிகள் பலவாறு விளக்கி யுள்ளனர்.

பொன்னுருத் தந்தான்என்று ஊதூது சங்கே
சிவமாக்கிக் கொண்டான்என்று ஊதூது சங்கே
—திரு. 6 : 166 : 5, 6

தன்னுரு என்னுரு தன்னுரை என்னுரை
என்ன வியற்றிய என்றனித் தந்தையே
—திரு. 6: 1. 1150

தன்னையும் தன்னருட் சத்தியின் வடிவையும்
என்னையும் ஒன்றென வியற்றிய தந்தையே
—திரு. 6 : 1 : 1145

இரண்டுருவும் ஒன்றானோம் ஆங்கே
உறைந்தஅனு பவந்தோழி நிறைந்தபெரு வெளியே
—திரு. 6 : 132 : 97

சிவானுபவத்தில் அருள் அமுதம் உண்டு மகிழ்ந்தவராகிய ஓர் அனுபவம் கைகூடும். இதனை வேறு ஒரு தலைப்பில் விரித்துரைப்பாம்.

"சிந்தை செல்லா சேண்நெடுந் தூரத்து
அந்தமில் இன்பத்து அரசாள் வேந்து"

என்னும் சேரமுனிவன் சீரடிகளைக் காண்க.

சிந்தையும் மொழியுஞ் செல்லா இந்நிலையனுபவத்தில் அருட்சத்தியாகிவிட்ட ஆன்மா அருட்பெருஞ்சோதியப்பனைப் புறத்திலும் அகத்திலும் புணர்ந்து இன்புறும். புறப்புணர்ச்சியனுபவத்தைத் திருமாலாகிய பெருமானும், மணிவாசகப் பெருந்தகையும் நுகர்ந்திருக்கின்றனர் என்பர். புறப்புணர்ச்சித் தருணம் "தூயஒளி பெற்று ஓங்குவடிவானேன்" என்றும், அத்தருணம், "தான் பதித்த பொன்வடிவந் தனையணைந்து களித்தேன்" எனவும், "புத்தமுதம் நானுண்டு பூரித்த தருணம்" எனவும், "புறப்புணர்ச்சி எனை அழியாதோங்க அருளியது" என்றுங் கூறுவர். அகப்புணர்ச்சிச் சுகத்தைச் சொல்லுவது எப்படியோ என்று கூறிக்கொண்டே அதனையும் அருளிச்செய்கின்றார்.

புறப்புணர்ச்சி விடயமிலை சுத்தசிவா னந்தப்
பெரும்போகப் பெருஞ்சுகந்தான் பெருகிஎங்கு நிறைந்தே
மறப்புணர்ச்சி யில்லாதே நானதுவாய் அதுவென்
மயமாய்ச்சின் மயமாய்த்தன் மயமான நிலையே

—திரு. 6 : 82 : 98

என்று உடல் குளிர உளம் இனிப்பக் கூறுவது

காண்க. இச்சிவானுபவம் சுத்த சிவதுரியாதீத மேல்நிலையில் விளைவதாகும். இதனைச் சுத்தந் தோய்ந்த சமரச சாத்துவிதம் என்று ஒருவாறு கூறலாம். சிவமயமாய் நிறைதலே சுத்தசன் மார்க்கத்தின் முடிபு.

இத்தருணத்தில் வேதாந்தம், சித்தாந்தம் முதலிய அந்தங்களில் குறிப்பிடப்படும் துவிதம், அத்துவிதம், விசிட்டாத்துவிதம் என்னும் நிலை யனுபவக் கோட்பாடுகளைச் சற்று எண்ணுதல் இன்றியமையாததாகின்றது.

## தத்துவமசி

சாந்தோக்கிய உபநிடதம் முதன்முதலாக இந்த மகாவாக்கியத்தை வெளியிட்டது. இதற்கு மூன்றுவகையாகப் பொருள்கொள்கின்றனர். இம் மூன்றும் தனித்தனிக் கொள்கையாக விரிந் துள்ளன. ஒப்பற்ற ஒருபெருந் தெய்வத்தை யடைந்த ஆன்மா எவ்வாறு அத்தெய்வத்துடன் இன்புறும்? இதை விளக்கும் இக்கொள்கைகள் அவ்வப் பெரியோர்களின் அனுபவ வல்லபத்திற்கு ஏற்பச் சிறந்து பெருகியிருக்கின்றன.

## துவிதம்

துவைதம் என்பதைத் துவிதம் என்று உரைப் பர். இதற்கு இரண்டானது என்று பொருள். இக் கொள்கையினர் தத்துவமசி என்னுஞ் சொற்றொடரை,

தத் + இவா + துவம் + அசி என்று பிரிப்பர்.

தத் = பரம்;
இவா = போல;
துவம் = நீ;
அசி = ஆனாய்.

பரத்தைப்போல நீ ஆனாய் என்று பொருள் கூறுவர். பரம் என்பது பரம்பொருளாகிய இறைவன். மதிமுகம் என்பதுபோல நின்றது இச்சொற்றொடர். பரத்தைப்போல நீ என்றபோது பரம் வேறு நீ வேறு என்றாகி ஆண்டான் அடிமையாக நிற்கும். அதனால் ஆண்டவன் ஒரு பொருள், ஆண்டவன் அருளைப் பெற்று ஆண்டவனைப் போலாகிய ஆன்மா மற்றுமொரு பொருளாகி இரு பொருள்கள் இலங்கும். அரசனது கருணையால் அரசினைப் பரிசுபெற்றவன் அரசனாகாதவாறு போல இருமை பயந்து துவிதம் ஆகும். மேலும், துவித அனுபவத்தில் ஆன்மா பரத்தைப்போல ஆகும் என்றபோது பரம் வேறாயும் ஆன்மா வேறாயுமிருக்கும். ஒன்றையொன்று ஒத்த நிலையிலும் இவை வேறாயிருத்தலின் துவிதக் கொள்கை விளங்கும்.

## விசிட்டாத்துவிதம்

இச்சொற்றொடருக்குக் கூடியிருக்கின்ற அத்துவிதம் என்று பொருள். இக்கொள்கையினர் தத்துவமசி மகாவாக்கியத்தை தத் + துவம் + அசி என்று பிரிப்பர்.

தஸ்யபாவா = தத்வம் + அசி என்று கொள்ள வேண்டும். அப்போது,

தத் = பரத்தின்;

துவம் = தர்மமாக;

அசி = ஆனுய். அதாவது பரத்தின் தர்மமாக ஆனுய் என்பது கருத்து.

**அத்துவிதம்**

இந்தக் கொள்கையினர் தத்துவமசி என்னும் சொற்றொடரை,

தத் + துவம் + அசி என்று பிரிப்பர். ஆயினும் பொருள் கொள்ளுதல் வேருயிருக்கும்.

தத் = அது;

துவம் = நீ;

அசி = ஆனுய்.

அதாவது அதுவே நீ; நீயே அது என்று பொருள் கொள்ளுவர். 'அகம்பிர்ம்மாசி' என்னும் மகாவாக்கியம் நான் பிர்ம்மமானேன் என்னும் பொருள் படும். சிவோகம் என்பதும் நான் சிவமாக இருக்கிறேன் என்று பொருள்படும். அது நீயானுய் என்றபோது ஆன்மா பரம்பொருளுடன் ஒன்ருகி அதுவாக இருத்தலின் இருபொருளன்றி ஒன்ருக விளங்கும். ஆதலின், இருபொருளும் இரண்டற்று ஒன்றேயாகி அத்துவிதப் பொருள் பயக்கும்.

**சிவாத்துவிதம்**

இது சிவத்தொடு ஒன்ருகி நிற்றல் எனப்படும். சைவசித்தாந்தம் இந்த முடிபினை உடையது.

இது சுத்தாத்துவிதம் எனவும் கூறப்படும். இதில் சீவன் சிவத்துடன் அத்துவிதமாகும்; அதாவது ஆன்மா அயரா அன்பினால் அரன்கழல் செலும். அப்பினைச் சேர்ந்த உப்பு தன் கடின குணம் நீங்கி ஒன்றுதல் போல ஆன்மா மலம் நசித்து முதல்வனைச் சேர்ந்து ஒன்றுபடும். ஆயினும், சிவனும் சீவனும் அநந்நியமாயிருக்கும். சீவன் சிவானுபவம் ஒன்றிற்கே உரியது; சிவகுணங்களைப் பெறாது. அன்றி, "சிவன் சீவனாகிய சித்துக்களுக்கும் அந்தரங்க வேற்றுமை பெரிதும் உண்மையான் அவ்விரு பொருள்களும் தம்முட் கூடிய வழியும் அத்துவிதமாய் நிற்றலே யன்றி ஒன்றாய்ப் போமாறு இல்லை" என்பர்.

இனி திருமூல நாயனார் தத்துவமசி மகாவாக்கியத்தைக் கையாண்டவாறுங் காண்டும். தத்துவமசி என்னுஞ் சொற்றொடரை தற்பதம்(தத்+பதம்), துவம் பதம்—தொம்பதம் (துவம்+பதம்), அசிபதம் (அசி+பதம்) என மூன்று பதமாகப் பிரித்துச் சித்தாந்தஞ் செய்கின்றார்.

சீவ துரியத்துத் தொம்பதஞ் சீவனார்
தாவு பரதுரி யத்தினில் தற்பதம்
மேவு சிவதுரி யத்தசி மெய்ப்பத
மோவி விடுந்தத் துவமசி உண்மையே – திருமந். 2568

தொம்பதந் தற்பதஞ் சொல்லும் அசிபதம்
நம்பிய முத்துரி யத்துமே னாடவே
யும்பத முப்பத மாகும் உயிர்பரன்
செம்பொரு ளான சிவமென லாமே —திருமந். 2573

எனத் திருமூலர் மந்திரமோதலின் சீவதுரிய

அனுபவத்தில் தத்துவமசி மகாவாக்கியத்திலுள்ள துவம் பதமும், பரதுரிய அனுபவத்தில் தற்பதமும், சிவதுரிய அனுபவத்தில் அசிபதமும் கைகூடும்.

அதனால் சிவதுரியத்தில் தத்துவமசி மகாவாக்கியத்தின் சிவாத்துவிதப் பொருளுக்கேற்பச் சீவன் பரமசிவனுமே என்பர்.

சீவன் கெட்டு சிவத்துடன் ஒன்றுமெனில்,
1 சீவன் கெட்டுப்போனபடியால் சிவக்கலப்பில்லை
என்றும், சீவன் கெடாது ஒன்றுமெனில் கெடாத
வழி, சீவன் சிவன் என இரு பொருளாய் நிற்றலின்
2 ஒன்றுதல் இல்லை என்றும், கூடியபின் கெட்ட
தெனின் சீவன் கெட்டவழி முத்திபெறுவதொன்று
3 இல்லையாகுமென்றும், சீவன் கெட்டுப்போதலே
முத்தி எனின் சீவன் நித்தியப் பொருளாதல்
4 செல்லாது என்றும், சீவன் தனது ஏகதேச அறிவு
கெட்டுச் சிவத்தோடு கூடுமெனில், கெட்டவழி
வியாபகப் பொருள் விளங்குதல் இன்மையால்
5 கூடுமாறில்லை என்றும், ஏகதேச அறிவைச் செய்
யும் மலங்கள் மட்டும் கெட்டுச் சீவன் சிவத்
தொடுங் கூடுமென்றும் கூறுவர். மற்று, சீவன் சிவானுபவம் ஒன்றினுக்கு மட்டும் உரியதன்றி சிவகுணங்களைப் பெறுமாறில்லை என்றும், பரமுத்தியில் தூலங்கெட்டு உயிர் முத்தியிலகுமென்றும் தத்தம் மதங்கட்கேற்பக் கூறுவர். முத்தியிலும் உருவச்சித்தி, அருவச்சித்தி, அருவுருவச்சித்தி முதலிய சித்திகளைப் பெற்ற ஞானிகளும் உண்டென்பர்.

## சுத்த சித்தாந்தம்

வீரசைவ சித்தாந்தத்தை வலியுறுத்தும் குமாரதேவர் தத்துவமசி மகாவாக்கியத்தைத் தொம்பதம், தற்பதம், அசிபதம் எனப் பிரித்துச் சிவாத்துவித சுத்த சித்தாந்தஞ் செய்கின்ருர். தொம்பத அர்த்தமான கூடத்தம் விளங்கிஞல் யான், எனது அற்று ஆகாமியமலமும், ஆணவகர்மமும் அகலும். தற்பத அர்த்தமான அருள் விளங்கிஞல் சஞ்சிதம், மாயை அகலும். அசிபத அர்த்தமான—அருளாகிய அங்கமும் சிவமாகிய லிங்கமும் விளங்கிஞல் பிராரத்தம் போய்விடும். அப்போது ஆன்மா திருவருளே வடிவாய், சிவத்திற்கு அங்கமாய் நின்று சிவானுபவம் பெறும் என்பர். வீரசைவ சித்தாந்தத்தில் தூலதேகம் அருள் தேகமாகுமன்றி விழுதல் இல்லை. ஆன்மா வேருெரு தேகத்தை எடுத்தால்மாத்திரந்தான் தான் அடைந்திருந்த தேகம் இவ்வுலகில் உயிரிழந்து கிடக்கும். அன்றி ஆன்மா வேருெரு தேகத்தை எடுக்காமலிருப்பது உண்மையாஞல் தான் அடைந்திருந்த இத்தேகமானது உயிரற்று இங்கே விழாது. இவ்வாருக சீவன் சிவத்தைப் போயடைந்தது உண்மையாஞல், தான் அடைந்திருந்த இத்தேகத்துடன் இவ்வுலகிற்ருனே சிவாங்கமான திருவருளாய்க் கரைந்து வான்கலந்து நிற்கும். இதனைச் சிவத்திற்கு அங்கமாதல் என்பர்.

வெளியாய் அருளில் விரவுமன் பர்தேக
மொளியாய்ப் பிறங்கிய துமுண்டோ பராபரமே
உலகவர்போற் சடல மோய உயிர்முத்தி
இலகுமெனல் பந்த வியல்பே பராபரமே —தாயுமாஞர்

மலர்தலை யுலகத்து உயிர்போகு பொதுநெறி
புலவரை யிறந்தோய் போகுதல் பொறேன்
—இளங்கோவடிகள்

மண்மேல் யாக்கை விழுமாறும் வந்துன்
கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ அடிமை
சால அழகுடைத்தே
—திருவாசகம்

சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவத்
தோற்றங்க ளான சுருதிச் சுடர்க்கண்டு
சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே
—திருமந்திரம் 1477

தங்கிய சாரூபந் தானெட்டாம் யோகமாந்
தங்குஞ் சன்மார்க்கந் தனிலன்றிக் கைகூடா
அங்கத் துடல்சித்தி சாதன ராகுவர்
இங்கிவ ராக வழிவற்ற யோகமே
—திருமந்திரம் 1510

என்பவாகலின் உயிர் உடம்பில் உள்ளபோதே ஆண்டவன் அருளினால் கருவிகரணங்களைக் கொண்டு மலங்களைக் கழுவித் தன்னை அறிந்து அருளை அனுபவித்தல் வேண்டும். மேலும், அருளைப் பூரணமாகப் பெற்று அவ்வருளால் தூல தேகத்தைச் சுத்ததேகமாக்கிக்கொண்டு அதனுள் சிவபரம்பொருளாகிய இறைவனைக்கண்டு சிவமாகி நிறைதல் வேண்டும். இதுவே உண்மையில் சிவானுபவமாகும். இங்ஙனம் பெரும்பேறு

பெற்றுக் கடவுளானவர்களே நம்மையெல்லாம் ஆட்கொண்டு அருள வந்த நமது சமயகுரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் ஆகியோரும், ஆண்டாள் திருமங்கையாழ்வார் முதலான வைணவப் பெரியோர்களும், இராமலிங்க அடிகளும், இன்ன பிறரும். இப்பெரியோரெல்லாம் எல்லா மக்களையும் போலத் தாய் வயிற்றுதித்து, மக்களுடன் வாழ்ந்து வந்தவர்கள்; ஆண்டவனது அருளை ஆராதுண்டவர்கள்; மண்ணிற்கலவாமல் வானிற் கலந்தவர்கள்.

இதனை **உண்மை முத்திநிலை** என்ற உயர்ந்த செம்பொருள் நூலும் வலியுறுத்தும். நமது உடலுக்குத் தமிழில் மெய் என்று பெயர். இதனைப் பொய்யாக்கிவிடாமல் மெய்யாக நிலைக்கச் செய்தல்தான் பிறவியின் நோக்கம். நமது உடம்பு உயிருடன் கூடி மெய்யான தெய்வத்தின் மெய்யருள் பெற்று மெய்யாகி நிலைபெற வேண்டுமெனப் பலப்பல ஏதுகாட்டி விளக்கும் இச்சிறு நன்னூல் உள்ளங்கவரும் பான்மையது.

இனி, சுத்தந் தோய்ந்த சமரச அத்துவிதம் என்று கூறுவதற்குரிய சுத்த சன்மார்க்கத்தில், ஆன்மா குடிகொண்டுள்ள தூல தேகம் சுத்த தேகமாகிப் பின்னர் பிரணவ தேகமாக மாறி, அதன்பின் கடவுள் தேகமாகிய ஞானதேகமும் பெற்றுக் கடவுள்மயமாகி நிலைக்கும். இம்மாற்றத்தின்கண் ஆன்மா தன் அசுத்த தேகத்தைச் சுத்த தேகமெனப்படும் அன்புருவாக மாற்றிக்

கொள்ளும் அருளைப் பெறும். ஆன்மா அருளை நுகருங்கால் ஆன்ம சிற்சத்தியாகி, பரையாகி, அருட்சத்தியாகி அருளுருவில் அருளை அனுபவிக்கும். பின்னர் வான்வடிவில் நின்று சிவானுபவம் பெற்றுச் சிவமாகிச் சிவானுபவச் செல்வமாகி நிற்கும். இவையனைத்தும் இவ்வுலகில் இம்மல உடம்பின் மாற்றத்தால் உண்டாகும். ஆன்மா கெடுவதில்லை; சுத்த தேகத்தில் சுத்தான்மாவாகவும், பிரணவ தேகத்தில் அருளாகவும், ஞான தேகத்தில் சிவமாகவும் நிலவும். தத்துவங்களும் மலங்களும் தவிர்ந்துபோய், ஆன்ம தற்போதமும் போய் சத்துவம் ஒன்றே தனித்துநின்று ஓங்கும். சுத்த அறிவனைத்தும் ஆனந்தமாகி அருளில் திளைக்கும். அருளைச் சார்ந்த ஆன்மா அருட்செயலையும், சிவத்தைச் சார்ந்து சிவச் செயலையும் செய்யவல்லது.

உலகுயிர்த் திரள்எலாம் ஒளிநெறி பெற்றிட
இலகும்ஐந் தொழிலையும் யான்செயத் தந்தனை
—திரு. 6: 1:1577

என்று சுவாமிகள் வித்தகம் பேசுகின்றனர்.

# 3. ஊனவடிவும் ஞானவடிவும்

சுத்த சன்மார்க்கத்தில் ஊன உடலாகிய நமது உடம்பு ஞானவடிவாகிய கடவுள் உடம்பாக மாறுவதைத்தான் இராமலிங்க அடிகள் விரித்துரைக்கின்றார்கள். மனித தேகம் அசுத்த பூத காரிய தேகம். இது சுத்ததேகம், பிரணவதேகம், ஞான தேகம் என மாறவேண்டும். இவை முறையே அன்புருவம், அருளுருவம், இன்புருவம் எனவும் கூறப்படும். சுத்ததேகத்தைப் பொன்னுருவம் என்றும் சுவர்ணதேகமென்றுங் கூறுவர். ஐம்பூதங்களால் ஆகிய நமதுடல் சுத்தமாவது எங்ஙனம்? அசுத்தபூதகாரிய அணுக்களும், அவற்றின் காரணங்களாகிய அசுத்த பிரகிருதி அணுக்களும் ஆகிய அசுத்த தேகத்தைச் சுத்த பூதகாரிய அணுக்களால் ஆகிய சுத்த தேகமாக மாற்றிக்கொள்ளவேண்டும். சுத்த தேகம் பிரணவ தேகமாக மாறும். பிரணவ தேகம் ஞானதேகமாக மாறிநிற்கும். இந்த மூன்று வடிவங்களையும், மணிவாசகப்பெருமான் பெற்றனர் என்று வடலூர் அடிகள் விளக்குவதைக் கூறினோம். அசுத்த தேகமாகிய நமதுடல் சுத்ததேகமாக மாறுவதை இனி விளக்குவாம்.

நமது உடல் ஐம்பூதச் சேர்க்கையானது. இதனைத்திருமங்கையாழ்வார்,

"மண்ணாய் நீர்எரிகால் மஞ்சுலாவும் ஆகாசமுமாம்
புண்ணார் ஆக்கைதன்னுள் புலம்பித் தளர்ந்து"

என்று கூறுவதாலும் அறியலாம். நமது உடம்பின் ஒவ்வொரு பகுதியும் கோடிக்கணக்கான நுண்ணிய உயிரணுக்களால் (CELLS) ஆனது. ஒவ்வோர் உயிரணுவும் பொதுவாக ·01 மில்லி மீட்டர் குறுக்களவுடையது. சாதாரணமான ஒவ்வோர் உயிரணுவிலும் உயிர்த்தாதுவும் (CYTOPLASM) உட்கரு (NUCLEUS) ஒன்றும் காணப்படும். இவை மிகச் சிக்கலான புரொட்டீன் வகைகளால் ஆனவை. அவை அமினோ அமிலங்களாகவும் (AMINO ACIDS) என்சைம்களாகவும் (ENZYMES) ஊக்கிகளாகவும் (CATALYSTS) உட்கரு அமிலங்களாகவும் (NUCLEIC ACIDS) இருந்து பலவாறு செயல்படுகின்றன. உயிரணுவிலுள்ள இப்பொருள்கள் எல்லாம் வேதிப்பொருள்களின் கூட்டமே. நமது உடலில் இந்த வேதிப் பொருள்களின் அமைப்பு,

உயிர்வளி (OXYGEN) 65 பாகம்,
கரி (CARBON) 18 பாகம்,
நீர்வளி (HYDROGEN) 10 பாகம்,
உப்புவளி (NITROGEN) 3 பாகம்,
கால்சியம் (CALCIUM) 2 பாகம்,
பாஸ்பரஸ் (PHOSPHORUS) 1·1 பாகம்

என்றும், இன்னும் பல பொருள்கள் மிகக்குறைந்த அளவில் உள்ளன என்றுங் கூறுப. சாதாரணமாக நம் உடலில் பத்து காலன் பிடிக்கிற ஒரு தவலை நீரும், பத்து சதுர அடி சுவருக்கு வெள்ளையடிப்பதற்கு வேண்டிய சுண்ணும்பும், 9000 பென்சில் செய்வதற்கு வேண்டிய கரியும், 2200

நெருப்புக்குச்சிகளுக்கு வேண்டிய பாஸ்பரசும், ஏழு பார் சோப்புக்கட்டிக்கு வேண்டிய கொழுப்பும், ஒருவேளை பேதிமருந்திற்குரிய மக்னீசியமும், நூறு கந்தக மாத்திரைகளுக்கு வேண்டிய கந்தகமும், இரண்டு அங்குல ஆணிக்குரிய இரும்புந்தான் உள்ளன என்று வேடிக்கையாகவும் சொல்வார்கள். இத்துணை வேதிப்பொருள்களுக்கிடையில் உயிரும் இருக்கின்றது. இவையெல்லாம் உயிரணுவில் செயல்படுவதால் உண்டாகும் சக்தியைக்கொண்டு உடலின் பலவேறு தொழில்களும் காரியப்படுகின்றன. விஞ்ஞானவளர்ச்சி மிக்குற்ற இந்நாளில் ஓர் உயிரணுவில் (CELL) அமைந்துள்ள வேதிப்பொருள்கள் அனைத்தையும் அவ்வவ்வளவில் சேர்த்து ஒன்றுக்கிப் பார்க்கிறுர்கள். ஆனுல், உயிர் அணுவிற்கு உயிர் மட்டும் வருவதில்லை. அதனுல் சுவாமிகள் கூறியவண்ணம் அசுத்த பூத காரிய அணுக்களை மட்டும் ஒன்றுசேர்த்துப் பார்க்க முடிகிறதேயன்றி, அவற்றின் காரணங்களாகிய அசுத்த பிரகிருதி அணுக்களைத் தயாரித்து ஒன்று சேர்க்க இயலவில்லை. இவற்றை மூலப்பொருள் (PRIMORDIAL MATTER) என்று கூறுப. இவை சேராதபடியால் உயிரணுவிற்கு உயிர்கொடுக்க முடியவில்லைபோலும். இது நிற்க.

அசுத்த பூதகாரிய அணுக்களையும் அவற்றின் காரணங்களாகிய அசுத்த பிரகிருதி அணுக்களையும் யாதானுமொரு தெய்வத் தூண்டுதலால் சுத்த பூதகாரிய அணுக்களாக மாற்றிவிட்டால் நமதுடல் தூய உடலாக, சுத்த தேகமாக மாறும் என்ப

தாயிற்று. இத் தெய்வத்தூண்டுதல் திருவருளாகவும், அருள் ஒளியாகவும் உள்ளது. சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம் ஆகிய பொன்னுருவங்களைத் திருவருளின் பூரணத்தைக் கொண்டுதான் பெறவேண்டும் என்று அடிகள் கூறுகின்றனர். அருட் பூரணத்தைப் பெறுமாறு யாங்ஙனம்? பூதவுடலில் உள்ள உயிருக்குச் சிற்றறிவும், கரணங்களும் சுதந்தரமாக உள்ளன. இவற்றைக் கொண்டு கடவுள் சுதந்தரமாகிய அருளைப்பெறுதல் வேண்டுமென்பார். நமது உடம்பில் உள்ள உயிரில் இறைவன் இருக்கின்றான் என்றும், நம்முயிரை இறைவன் அருள் ஒளியின் ஒரு சிறு கூறு (ஏகதேசம்) என்றும், அந்த அருள் ஒளியின் ஏகதேசத்தைப் பூரணமாக்கிக்கொள்ள வேண்டுமென்றும், அப்போது நம்முடம்பு அன்புருவமாகி அருளுருவமாகும் என்றும், "அருள் வடிவு ஒன்றே அழியாத் தனிவடிவு" என்றும், அதனால் அவ்வருளைப் பெறமுயலுக என்றும் சுவாமிகள் அறிவுறுத்துகின்றனர். ஆகவே, அருளைப் பெறுவதற்கு நமது சிற்றறிவையும் கரணங்களையும் பயன்படுத்த வேண்டும் என்பதாயிற்று. மிகச்சிறு அளவில் நம்மிடம் தரப்பட்டுள்ள திருவருளை மிகப்பெரு அளவில் அருளின் நிறைவாக மாற்றியமைத்துக் கொள்ளுவதற்கே நமக்கு உடற்கருவிகளும், கரணங்களும் பயன்படவேண்டும். அந்த அருளை நமது அன்பினால்தான் பெறமுடியும். அன்பு பெற்றெடுத்த குழவியே அருள் என்று வள்ளுவருங் கூறுவார். ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்வதன் மூலமாக அருளைப் பெறலாம். நமது

சிறுமையை ஆண்டவனிடம் விண்ணப்பித்து வேண்டுவதன் மூலமாயும், நம்மைச் சூழ்ந்து நின்று வினைபெருக்கி நலியும் கருவி கரணங்களின் வரம்பு கடந்த மிகுதியைத் தனித்திருந்து கண்டு அவற்றை அடக்கி, மனத்தை ஆண்டவன்பால் செலுத்துவதன் மூலமாயும் திருவருளைப் பெற இயலும். இவற்றைப் பரோபகாரம், சத்விசாரம் என்றும் இவை நமது தேகத்தைச் சுத்ததேகமாக மாற்றுவதற்கு எவ்வாறு வழிகோலுகின்றன என்றும் முன்னர்க் கூறினோம்.

உயிர்கள் அன்பினால் ஆண்டவனை ஒன்றும் போதும், ஆண்டவனது அருட்டுளிகளாகச் சிதறியுள்ள எல்லா உலகத்து எல்லா உயிர்களிடத்திலும் அன்புகாட்டித் தமது அன்பினை வளர்த்துக்கொள்ளும்போதும் அன்பே சிவமாகிய இறைவன் உயிர்களிடத்துள்ள அன்பினால் உயிர்களைக் கலந்துநின்று அருளுவான். அப்போது அசுத்த தேகம் சுத்ததேகமாகிய பொன்னுருவமாகிப் பொலியும்.

உலகநிலை முழுதாகி ஆங்காங் குள்ள
உயிராகி உயிர்க்குயிராம் ஒளிதானாகி
—திரு. 1 : 5 : 1

பொன்னுடம் பெனக்குப் பொருந்திடும் பொருட்டாய்
என்னுளங் கலந்த என்தனி அன்பே
—திரு. 6 : 1 : 1490

தன்னையே எனக்குத் தந்துஅருள் ஒளியால்
என்னை வேதித்த என்தனி யன்பே
—திரு. 6 : 1 : 1480

என்றமையால், அன்பாய் உள்ள ஆண்டவனது அருள் ஒளி தமது உடம்பை வேதித்துப் பொன்னுக்கிற்று என்று சுவாமிகள் கூறுவர். ஆதலின் ஆண்டவனை நினைந்து அருள்வேண்டி இரங்குதல்வேண்டும். "அருள்தரவேண்டும் போற்றி" என்று இடையருது அழுதும் அலறியும் பரவியும் பாடியும் திருவருட்பா என்ற தனிமறையை இதன் பொருட்டே சுவாமிகள் நமக்குத் தந்தனர். அழியும் இவ்வுடம்பு சுத்த சன்மார்க்கத்தின் சேர்ப்பினுல் நித்தியமாகி நிகழும் என்று சுவாமிகள் சத்தியஞ் செய்கின்றனர். இதில் சேரவிரும்பாதவர்களை விட்டுவிடவும் சொல்கின்ருர், தமது நெஞ்சைப் பார்த்து.

பொத்திய மலப்பிணிப் புழுக்கு ரம்பைதான்
சித்தியற் சுத்தசன் மார்க்கச் சேர்ப்பினுல்
நித்திய மாகியே நிகழு மென்பது
சத்தியஞ் சத்தியஞ் சகத்து ளீர்களே

—திரு. 6 : 132 : 59

ஓவுருத் துயர்செயு முடம்புதா னென்றுஞ்
சாவுரு தின்பமே சார்ந்து வாழலாம்
மாவுருச் சுத்தசன் மார்க்க நன்னிலை
மேவுருர் தங்களை விடுக நெஞ்சமே

—திரு 6 : 132 : 60

தாம் பொன்னுருவம் பெற்ற செய்தியை அடிகள் பல பாக்களில் கூறுகின்றனர்.

தூக்கங் கெடுத்துச் சுகங்கொடுத்தான் என்தனக்கே
ஆக்கமென வோங்கும்பொன் அம்பலத்தான்—

ஏக்கமெலா

நீங்கினேன் எண்ணம் நிரம்பினேன் பொன்வடிவம்
தாங்கினேன் சத்தியமாத் தான்.

—திரு. 6 : 99 : 15

பார்த்தேன் பணிந்தேன் பழிச்சினேன் மெய்ப்புளகம்
போர்த்தேன்என் னுள்ளமெலாம் பூரித்தேன்—
ஆர்த்தேநின்று
ஆடுகின்றேன் பாடுகின்றேன் அன்புருவா னேன்அருளை
நாடுகின்றேன் சிற்சபையை நான்

—திரு. 6 : 71 : 6

கூ ாவென் றெனைக்கூடி யெடுக்காதே என்றும்
குலையாத வடிவெனக்கே கொடுத்ததனி யமுதே

—திரு. 6 : 38 : 56

திரைந்துநெகிழ்ந்த தோலுடம்புஞ்
செழும்பொன் னுடம்பாய்த் திகழ்ந்தேனே

—திரு. 6 : 93 : 6

இத்தகைய பொன்னுருவம் பெறுதற்குச் சுவாமிகள் ஆண்டவன்பால் நெக்கு நெக்கு ஏங்கியும் எவ்விதத்தும் சாகாத வரம் தரவேண்டுமென்றும், மரணம் வருவதற்குமுன் அருள் தரவேண்டுமென்றும், தாம் அருளமுதம் உண்டு வாழ்வு நிலைக்கவேண்டுமென்றும், அருளைத் தருவதற்குக் காலந்தாழ்க்கில் "யாரிடம் புகுவேன், யார்க்கெடுத்து என்குறை இசைப்பேன், யார் துணை யென்பேன், என்ன செய்வேன்" என்று விளவி அழுதும், அருள்கிடைப்பின் அல்லால் "அவிழ்ந்து விழுந்துணியைக்கூட எடுத்து உடுக்கவும் மாட்டேன்" என்று முறையிட்டும், சூள்

உரைத்தும் வேண்டிநிற்பாராயினர். ஆண்டவன் கருணை செய்து மரணந்தவிர்ப்பான் என்று நெஞ்சையள்ளும் பாட்டொன்று பாடுகின்றார்.

நினைந்துநினைந்து உணர்ந்துணர்ந்து
நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண் ணீர்அதனு லுடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே யென்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்துதுநாம் வம்மினுல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல்
கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருண மிதுவே

—திரு. 6 : 110 : 1

என்று கூறியவண்ணம் இறைவனை வழிபாடு செய்து ஏத்தித் துதிக்கவேண்டும் என்பதாயிற்று. நினைந்து நினைந்து என்று அடுக்கிக்கூறிய அதனால் நினைந்து, நினைந்து, நினைந்து, நினைந்து, நினைந்து, பற்பலகால் நினைப்பற நினைந்து என்று பொருள் படும். பற்று நினைந்து எழுவது நமது மனத்தின் பண்பாதலின் இறைவனை நினைக்கும்போது மற்றொன்று பற்றித்திரியாமல் இடையறாது நினைத்தல் வேண்டும் என்பார் நினைந்து நினைந்து என்றார். மற்று, நீடுநினைப்பதால் உணர்வு உண்டாகும் ஆதலின் உணர்வு வருந்துணையும் நினைந்திருக்க வேண்டும் என்பதும் ஒன்று. உணர்வு என்பது இங்கே பேருணர்ச்சி.

ஓடினேன்ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதந் தெரிந்து
—திருமங்கையாழ்வார்

என்புழிப்போல உணர்வு என்பது பெரும் அனுபவ பதமாகும். அடுத்து, உணர்ந்து உணர்ந்து என்றார். முன்போலவே உணர்ந்து, உணர்ந்து, உணர்ந்து, உணர்ந்து என்று பொருள் கொள்ளவேண்டும். "உணர்ந்து உணர்ந்து உணரா உணர்ச்சியால் உணர்ந்து" என்று அடிகள் கூறியது காண்க. உணர்ந்து என்றுமட்டும் சொன்னால் உணர்வு நின்றுபோய் வேறொன்று வரும். அவ்வாறு வராத படி உணர்வு தொடர்ந்து நிகழவேண்டும் என்பதற்காகவும் ஓரளவு உணர்ந்து மேம்பட்ட நிலை தாழாமல் மேன்மேலும் உணர்வு ஓங்கவேண்டும் என்பதற்காகவும் உணர்ந்து உணர்ந்து என்றார். இந்த உணர்வின் விளைவு நெகிழ்ச்சி. நெகிழ்ச்சி வருந்துணையும் உணர்தல் வேண்டும் என்றுங் கூறலாம். நினைத்தலும், உணர்தலும் கரணங்களின் காரியங்கள்; நெகிழ்ச்சி ஆன்ம காரியம். இந்த நெகிழ்ச்சி வராதபோது அடிகள் அஞ்சினார்கள்.

நிருத்தனே நின்னைத் துதித்தபோ தெல்லாம்
நெகிழ்ச்சியில் லாமையால் நடுங்கிப்
பருத்தவென் னுடம்பைப் பார்த்திடா தஞ்சிப்
படுத்தது மையநீ யறிவாய்

—திரு. 6 : 21 : 36

இந்த ஆன்ம நெகிழ்ச்சியை வருவித்துக்கொண்டால்தான் திருவருள் கைகூடும். சீவர்களுக்கு ஏனைய சீவர்களைப்பற்றி உண்டாகும் ஆன்ம

உருக்கத்தைக் காட்டிலும், ஆண்டவனைப்பற்றி ஆன்ம உருக்கம் உண்டாகுதல் அத்துணை எளிய தன்று. ஆதலின், உணர்வற உணர்வதாகிய தெய்வ உணர்வினைப் பலகால் தொடர்ந்து வருவித்துக்கொண்டு ஆன்ம நெகிழ்ச்சியைப் பெறவேண்டும். நெகிழ்ச்சி தொடர்ந்து நிகழும் போது அன்பு நிறையும். நெகிழ்ந்து நெகிழ்ந்து என்பதற்கும் முன்போலவே பொருள் கொள்ள வேண்டும். நெகிழ்ச்சியில் விளையும் அன்பு பெருக வேண்டும். அன்பே நிறைந்து என்றபடியால் அன்பே தனித்து நிறைதல் பெறப்படும். இங்ஙன மாக அன்பு பெருகிப் பெருகி நிறையவேண்டும். " அன்பெனும் ஆறு கரையது புரள ", அடைக்கும் தாழ்ப்பாளற்று மீதூரும் பேரன்பு காரணமாகக் கண்ணீர் கலுழும். இதனையே, " காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்றார், அப்பனை இப் பனையாக்கிய பிள்ளையார்.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்

என்று ஆளுடைய அரசர் கூறுவார்.

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலைப்
பாடுகின்றிலைப் பதைப்பதுஞ் செய்கிலை

என்று ஆளுடைய அடிகள் நெஞ்சை விளித்து நொந்துகொள்வதும் இதுபற்றியேயாம். மணி வாசகரை அழுது அடி அடைந்த அடிகள் என்றும் அறிவாற் சிவனே என்றும் கூறுவர். அவர் முழு முதற் கடவுளாகிய சிவபரம்பொருள் எங்ஙனம்

தம்மைச் சிவமாக்கி ஆண்டுகொண்டது என்பதைத் தமது தெய்வத்திருமறையில் விளக்கி அருளுகின்றார். "அருள் தந்து இருக்குங் கொலோ" என்றும், "அழுமதுவேயன்றி மற்று என் செய்கேன்" என்றும் அழுது அரற்றினார்.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே

—திருவாசகம்

என்றமையால் மணிவாசகர் தமது யாக்கை கனியும்படி உருகிநின்றபோது ஆண்டவன் அவருள் புகுந்து அவரது தேகத்தை மேலும் உருக்கி அருள்செய்தான் என்பர். இவ்வளவுக்கும் அவர் ஆண்டவன்பால் ஆராத காதல் கொண்டு அன்பினால் பாடியதே காரணமாகும்.

அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பர மல்லா இன்னருள் தந்தாய்

—திருவாசகம்

என்று ஆண்டவன் அருள்புரிவதற்குத் தமது அன்பு வித்துஆவதைக் கூறி விளக்குகின்றார். அன்றியும், ஆண்டவனிடம் அன்புகொண்டு வழிபடுவதற்கும் அவனருள் வேண்டுமென்று கூறுவதுங் காண்க. இவ்வாறு மணிவாசகப் பெருமான் இமைப்பொழுதும் ஆண்டவனைத் தமது நெஞ்சைவிட்டு நீங்காதவனாக ஆக்கிக்கொண்ட

தும், தமது ஊனினை உருக்கி **உள்ளொளியைப்** பெருகச்செய்ததும், தமது பூத உடலை அள்ளூருக் கையாக மாற்றியதும், அற்புதமான அமுததாரை கள் தமது எற்புத்துளைதொறும் தேங்கிடச் செய்த தும் அப்பெருமான் ஆண்டவன்பால் வைத்த அன்பினுல்தான். ஆகவே, அவர் அன்பினுல் ஆண்டவன் அருள்பெற்று அன்புருவமாகிய சுத்ததேகம் பெற்றனர்.

ஆண்டவனை நினைந்து எழும் நெகிழ்ச்சியை உருகும் நிலை (Melting mood) என்றும், அவனது அருளுக்காக அழுது நிற்கும்போது உண்டாகும் கண்ணீரைக் கடவுட்பரிசு (The gift of God) என்றும் செயின்ட் தெரசா போன்ருர் கூறுப.

வேற்று விகாரப்படாத அந்த அன்பு மீதூர அவன்பால் வைத்த பேராசைப் பெருவெள்ளம் அணைகடந்து செல்லும்போது கண்ணின் நீர் பெருகிக் கால்வழிந்து ஓடும். இக்கண்ணீரால் உடம்பு நனைந்து நனைந்து தொடர்ந்து நனைந்து நனைந்து, "அருளமுதே! நல்ல நிதியே! ஞான நடத்து அரசே! என்னுரிமை நாயகனே! என்று வனைந்து வனைந்து, அண்முதல் தடித்திட ஏத்தி வணங்கினுல், அண்ணல் அதுகண்டு அருள் புரியும்; மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திட லாம்; எல்லோரும் வாருங்கள்; உலுத்துப்போன வரும் இந்த மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந் திடலாம்; இது பொய்யுரையன்று; புனைந்துரையு மன்று; முற்றிலும் உண்மையான நிலைத்த உரை யாகும்; பொற்சபை சிற்சபை ஆகிய அனுபவ

நிலைகளிற் புகுந்தருணம் இதுதான்'' என்று வாய்ப் பறை ஆர்க்கின்றார் அடிகள்.

ஆண்டவன் ஆன்மாக்களை ஆட்கொண்டு அருளுவது நான்கு நிலைகளாகவும், பாதை களாகவும் இருக்கின்றது. அவற்றைத் தாச மார்க்கம், புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன் மார்க்கம் என்பர். இராமலிங்க சுவாமிகள் தம்மை இறைவன் இந்நிலைகளிலெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக ஆண்டுகொண்டான் என்பர்.

அடியனாக்கிப் பிள்ளை யாக்கி நேய னாக்கியே
அடிக ளாக்கிக் கொண்டா யென்னை
அவல நீக்கியே
—திரு. 6: 139:72

அன்றே யென்னை அடிய னாக்கி ஆண்ட ஜோதியே
அதன்பின் பிள்ளை யாக்கி அருளிங் களித்த
ஜோதியே
நன்றே மீட்டு நேய னாக்கி நயந்த ஜோதியே
நானும் நீயு மொன்றென் றுரைத்து நல்கு
ஜோதியே
—திரு. 6: 139:96

இவற்றுள் தாசமார்க்கத்தில் திருநாவுக் கரசரும், புத்திரமார்க்கத்தில் திருஞானசம்பந் தரும், சகமார்க்கத்தில் சுந்தரமூர்த்திகளும், சன் மார்க்கத்தில் மாணிக்கவாசகரும் ஆண்டவனை அடைந்தனர் என்பர்.

இத்திருப்பாட்டில் வடலூர் அடிகள் அருளமுதே, நன்னிதியே, ஞானநடத்தரசே, என்னுரிமை

நாயகனே என ஆண்டவனை ஏத்துவோம் வாரீர் என்று நம்மையெல்லாம் அழைக்கின்றார்கள். ஏத்தும் இம்மொழிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாதையில் (மார்க்கத்தில்) கிடைக்கும் அனுபவத்தைக் குறிப்பதாக உள்ளது. அஃதாவது, 'அருளமுதே' என்னுஞ் சொற்றொடர், புத்திர மார்க்கத்தில் ஞானசம்பந்தருக்குப் போதையார் பொற்கிண்ணத்தில் அருளம்மையார் அருளமுதத்தைக் குழைத்து ஊட்டியருளிய செய்தியைக் குறிக்கும். அடுத்த 'நன்னிதியே' என்பது சக மார்க்கத்தில் சுந்தரர், எல்லா நிதிகட்கும் நிலைக் களனாகிய பொன்னார்மேனியனைப் பாடிப் பொன்னும் பொருளும் வேண்டிநின்று பொருளும் அருளும் பெற்றதைக் குறிப்பதாக உள்ளது. அதற்கடுத்த 'ஞானநடத்தரசே' என்னுஞ் சொற்றொடர் தாசமார்க்கத்தில் நாவுக்கரசர்,

இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

என்று கூறி ஆண்டவன் அருள்பெற்றதைக் குறிக்கும். கடைசியாக 'என்னுரிமை நாயகனே' என்பது சன்மார்க்கத்தில் மாணிக்கவாசகர் சிவன் திரள்தோள் கூடுவேன் என்று கூறியும், நாத என்றரற்றியும் அவனது நாயகியாக நின்று பேசி ஆண்டவனது மெய்யருளைப் பெற்றதைக் குறிக்கும்.

இவ்வாறெல்லாம் அறிவுறுத்தி ஆண்டவன் அருளைப் பெறுவதற்கு மக்களையெல்லாம் கூவி

அழைக்கின்றார் அடிகள். "மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமின்" என்றவாறுபோல "திருவருளைப் பெறுவதற்கு ஏற்ற தருணம் இதுவே; வம்மின் உலகியலீர்" என்று அழைக்கின்றனர்.

இறைவன் திருவருள் சுவாமிகளின் உடம்பில் எவ்வாறு காரியப்பட்டது? அடிகளின் பூதவுடல் எவ்வாறு பொன்வடிவாக மாறிற்று? மாறிய அவ்வுரு என்னவாயிற்று? எங்கே போயிற்று? என்ற வினாக்களுக்கெல்லாம் அடிகள் விடை தந்துள்ளனர். அடிகளின் விடையை ஒருவாறு விளக்குவாம்.

எல்லாம்வல்ல முழுமுதல் தெய்வத்தைப் பாடியும், பரவியும், ஆடியும், அரற்றியும் நெஞ்சுருக, நைந்துருக, கசிந்துருக, கரைந்துருக, கனிந்துருக அருட்பெருஞ்சோதி ஆண்டவன் அவர் கருத்தினூடே ஒளிகாட்டி அருளுகின்றான். மெய்யுணர்ச்சி ஓங்கும்; உடம்பு, உயிர், உளம் எல்லாம் ஒளிமயமாகும்.

> கையுறைந்து வளர்நெல்லிக் கனியே உள்ளம்
> கரைந்துகரைந் துருகஅவர் கருத்தி னூடே
> உய்யுநெறி ஒளிகாட்டி வெளியு முள்ளும்
> ஓங்குகின்ற சுயஞ்சுடரே உண்மைத் தேவே.
>
> —திரு. 1: 5: 52

இம்மெய்யுணர்ச்சியின் இயல்பையும், இதனை வேட்டுநின்ற நிலையையும் அடிகள் விளக்குகின்றனர்.

திருக்கதவந் திறவாயோ திரைகளெலாம் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்ஜோதித் திருவுருக்காட் டாயோ
உருக்கியமு தூற்றெடுத்தென் உடம்புயிரோடு உளமும்
ஒளிமயமே ஆக்குறமெய் உணர்ச்சியரு ளாயோ
—திரு. 6: 19: 1

என்றவதனுல் உடம்பு, உயிர், உளம் எல்லாம் திருவருளாம் பெருஞ்சோதியினுல் ஒளிமயமாகு மென்றது வலியுறும். ஆண்டவனது அருள் ஒளியின் ஒரு சிறுகூறு, ஒவ்வோர் உயிரிலும் இருக்கின்றது. இந்தச் சிறிய ஒளி பெரிய ஒளியாக வேண்டுமென்பதை முன்னர்க் கூறினும். இவ்வொளி உயிரின்கண் உயிராயும், உணர்வாயும் இருக்கின்றது. மற்று, இவ்வொளியினுல் உயிர்வளர்கின்றது என்றும், உயிருள் உயிராக இவ்வொளி வளர்கின்றதென்றும் கூறலாம். ஒளியான உயிரின் கண் உணர்வு உண்டாகும். இவ்வுணர்வுள் உணர்வாகி, இவ்வுள்ளுணர்விற் பற்றி வயங்கும் ஒளியாக ஆண்டவன் திருவருள் காரியப்படும். இவ்வொளியின் ஒளியாகவும், ஒளியுள் ஒளியாகவும் அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங் கருணையே ஆகிய உள்ளத்தில் நிறைந்துவரும்.

இப்பேருண்மையினை நம்பெருமானுகிய இராமலிங்க அடிகள்,

உயிராய் உயிர்க்குளுறு முயிராகி உணர்வாகி
உணர்வுளுணர் வாகி உணர்வுட்
பற்றிஇயலு மொளியாகி ஒளியின்ஒளி யாகி
—திரு. 6: 100: 15

என்றும்,

ஒளிவளர் உயிரே உயிர்வளர் ஒளியே
ஒளியுயிர் வளர்தரு முணர்வே —திரு. 6: 5: 2

என்றும்,

சிறுநெறி செல்லாத் திறனளித் தழியா
துறுநெறி உணர்ச்சிதந் தொளியுறப் புரிந்து
—திரு. 6. 1: 1565

என்றும் கூறியருளுவாராயினர்.

ஆண்டவனது திருவருள், இரந்து இரந்து உருகும் உள்ளத்தின்கண் ஒளியாகத் தோன்றிக் காரியப்படும் என்று மணிவாசகப் பெருமானுங் கூறுநிற்பர்.

ஊனு யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனு யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
—திருவாசகம்

எனவும்,

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே —திருவாசகம்

எனவும் கூறியுள்ளார்.

ஆகவே, இறைவன் திருவருள் கருணையே வடிவாக உள்ள பெரியோர்களது உணர்வில் ஒளியாக வெளிப்படும். இங்ஙனம் உண்டாகும் அருள்ஒளி அறிவில் புலனாகும். மேலும், உடம்பில் அருள் காரியப்படும் இடங்களும் கூறப்படுகின்றன. கதிர் ரொளியாகக் கண்ணிலும், பரையொளியாக மனத்

திலும், அருள் ஒளியாக அறிவிலும் விரித்தருளப் படும் என்பர்.

கதிர்நல மென்னிரு கண்களிற் கொடுத்தே
அதிசய மியற்றெனு மருட்பெருஞ் ஜோதி
அருளொளி என்றனி அறிவினில் விரித்தே
அருள்நெறி விளக்கெனு மருட்பெருஞ் ஜோதி
பரையொளி என்மனப் பதியினில் விரித்தே
அரசது இயற்றெனு மருட்பெருஞ் ஜோதி

—திரு. 6 : 273-78

கண்ணிற் கலந்தான் கருத்திற் கலந்தான்என்
எண்ணிற் கலந்தே யிருக்கின்ருன்-பண்ணிற்
கலந்தான்என் பாட்டிற் கலந்தா னுயிரிற்
கலந்தான் கருணை கலந்து

—திரு. 6: 109: 1

இந்த அருள் ஒளியைப் பெற்றுக்கொள்வதற்கு, "நமது புருவ மத்தியில் வெண்டாமரை மலர் மலர்ந்திருப்பதாக, அதன் மத்தியில் ஓங்கார வடிவமாய் ஒரு பீடம் இருப்பதாக, அதன் மத்தியில் அசையாது விளங்குகின்ற ஒரு கற்பூரதீபம் இருப்பதாக, அந்தத் தீப நடுவில் கடவுள் இருப்பதாகப் பாவித்துக்கொண்டு 'சிவாய நம' என்று நாவசையாமல் நிலைக்கவேண்டும். சுத்த சன்மார்க்க சித்திகள் எல்லாம் கிடைக்கும். இதை நம்ப வேண்டும்" என்று உபதேசம் செய்தருளியிருக்கின்ருர். இங்ஙனம் நிலைப்பதற்குத் தொடங்கும்போது புறத்தில் திருவிளக்கு வைத்துக் கொள்ளுதல் துணைசெய்யும். ஒருசில நாட்களில்

அவரவர் வல்லபத்திற்கேற்ப ஆண்டவன் ஒளி யளித்து உதவுகின்ருன்.

அடிக்கடிஎன் னகத்தினிலும் புறத்தினிலும் ஜோதி
அருளுருவாய்த் திரிந்துதிரிந் தருள்கின்ற பொருளே
—திரு. 6: 38: 24

என்று கூறிய அனுபவம் கைகூடும். இந்த அனுபவம் சன்மார்க்கசீலர்களின் வல்லபத்தைப் பொறுத்து ஏறியும், இறங்கியும், நிலைத்தும், சிறிது வேறுபட்டும் உள்ளதென்பர். சுவாமிகள் கையற விலாத நடுக்கண்புருவப்பூட்டைத் திறந்து, "கண் களிக்கப் புகைசிறிதும் காட்டாதே புருவக் கலை நடுவே விளங்குகின்ற கற்பூர விளக்"கைக் கண்டு களிக்கச் சொல்கின்ருர் (திரு. 6: 38: 19).

ஈசனரு ளாற்கடலில் ஏற்றதொரு வோடம்
ஏறிக்கரை யேறினேன் இருந்ததொரு மாடம்
தேசுறுமம் மாடநடுத் தெய்வமணிப் பீடம்
தீபஒளி கண்டவுடன் சேர்ந்ததுசந் தோடம்
— திரு. 6. 168: 4

என்று அடிகள் இந்த அனுபவத்தைக் குறிப் பிடுவதுகொண்டு நெற்றிக்கு நேரே நிறைந்த ஒளி கண்டனர் என்று அறியலாம். இதனைக் காணப் பெறும் சாதகனுடைய உடலில் உள்ள அசுத்த பூதகாரிய அணுக்கள் சுத்தபூதகாரிய அணுக் களாக மாறும். அப்போது அசுத்த தேகமெனப் படும் அழியுமிவ்வுடல் அழியாப் பொன்னுருவாகிப் பொலியும். அப்போதுதான் மரணத்தைத் தவிர்க்க

முடியும். ஆன்மலாபம் பெற இயலும். இதைக் கூறி வாய்ப்பறை ஆர்க்கின்றனர் அடிகள்.

வையகத்தீர் வானகத்தீர் மற்றகத்தீர் நுமது
வாழ்க்கையெலாம் வாழ்க்கையென மதித்துமயங் காதீர்
மையகத்தே யுறுமரண வாதனையைத் தவிர்த்த
வாழ்க்கையதே வாழ்க்கையென மதித்ததனைப் பெறவே
மெய்யகத்தே விரும்பியிங்கே வந்திடுமின்

—திரு. 6: 108: 9

இந்த அருளொளியைக் கண்ட ஞானியர்களும், காண விழைந்தவர்களும் இந்நிலையைப் போற்றிச் சிறப்பித்துக் கூறுகின்றனர்.

நெற்றிக்கு நேரே நிறைந்த ஒளிகாணில்
முற்று மழியா துடம்பு
புருவத் திடையிருந்து புண்ணியனைக் காணில்
உருவற்று நிற்கு முடம்பு
கண்டத் தளவில் கடிய வொளிகாணில்
அண்டத்த ராகு முடம்பு

—ஔவைக்குறள்

விளக்கினை யேற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே

—திருமந்திரம் 1818

பற்றி னுள்ளே பரமாய் பரஞ்சுடர்
முற்றினு முற்றி முளைக்கின்ற மூன்றொளி
நெற்றியி னுள்ளே நினைவாய் நிலைதரு
மற்றவ னுய்நின்ற மாதவன் தானே

—திருமந்திரம் 3031

இந்த ஒளிக்கு அருளொளி என்றும், அருட்ஜோதி என்றும், அருளாம் பெருஞ்ஜோதி என்றும், திருவருள் என்றும், திருவடி என்றும், திருநடம் என்றும் பெயர். அடிகள் ஆண்டவனிடம் திருவருள் தரவேண்டிக் குறையிரக்கும்போது "அருட்ஜோதி அளித்தனையேல் நின்னைக் கண்டு கொள்வேன்" என்பார். அருட்ஜோதியாகிய திருவருள்,

உள்ளுருகுந் தருணத்தே ஒளிகாட்டி விளங்கும்
உயர்மலர்ச்சே வடிவருந்த உவந்துநடந் தருளி
—திரு. 4: 2:50

என்றபடி அடிகளின் கண்ணினுங் கருத்தினுங் கலந்தது (திரு. 6: 161:10). இந்நிலையில் மாமாயை நீங்கும் என்றும், அப்போதுதான் பொன் வடிவங் கிட்டுமென்றும், மரணமென்பது இல்லை என்றும் கூறுவர்.

மாமாயை நீங்கினள்பொன் வண்ணவடி வுற்றதென்றும்
சாமா றிலைஎனக்குத் தான்
—திரு. 6: 109:11

பெருமாயை யென்னுமொரு பெண்பிள்ளை நீதான்
பெற்றவுடம் பிதுசாகாச் சுத்தவுடம் பாக்கி
ஒருஞானத் திருவமுதுண் டோங்குகின்றே னினிநின்
உபகரிப்போ ரணுத்துணையு முளத்திடைநான்
விரும்பேன்
அருளாய ஜோதியெனக் குபகரிக்கின் றதுநீ
அறியாயோ வென்னளவி லமைகஅய லமர்க
—திரு. 6: 102:14

என்பன காண்க.

புருவநடுவில் மனம்புதைத்து நெடுங்காலம் தவங்கிடப்பினும் அருள் ஒளியோ அருட் பதமோ கிடைக்கப்பெருது எத்தனையோ பெரியோர்கள் ஏமாந்தனர் என்று சுவாமிகளே கூறுகின்றனரே,

மன்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாக்க
—திரு. 4: 12:3

அங்ஙனமாக அருள் ஒளி நேர்படுதல் எவ்வாறு இயலும் என்ற ஐயம் எழுகின்றது.

அடிகள் இதற்கு விடையாகவும் ஒரு செய்யுள் செய்தனர்.

மட்டகன்ற நெடுங்காலம் மனத்தால் வாக்கால்
மதித்திடினும் புலம்பிடினும் வாராது என்றே
கட்டகன்ற மெய்யறிவோர் கரணம் நீக்கிக்
கலையகற்றிக் கருவியெலாங் கழற்றி மாயை
விட்டகன்று கருமமல போதம் யாவும்
விடுத்தொழித்துச் சகசமல வீக்கம் நீக்கிச்
சுட்டகன்று நிற்கஅவர் தம்மை முற்றுஞ்
சூழ்ந்துகலந் திடுஞ்சிவமே துரியத் தேவே
—திரு. 1: 5:56

என்பதால் அறியலாம்.

உபதேசத்தில் அடிகள் சுத்த உஷ்ணம் பற்றிக் கூறியுள்ளனர். இச்சூடு நமது உடம்பில் உண்டாகும். இதனை இந்நாளைய மருத்துவக் கலை ஏற்காது. மருத்துவரின் வெப்பமானிக்குள் இச்சூடு அகப்படுவதில்லை. ஆனல் நாட்டு மருத்துவருள் கைதேர்ந்தவர் நாடிபார்த்து உடம்பில் சூடேறிவிட்டது என்பர்.

உலக வழக்கில் "நல்ல சூடு, சுரணை இல்லையா" என வெகுண்டு உரைப்பார்கள். இந்த நல்ல சூட்டை எப்படிப் பெறலாம் என்றும் அதன் அருமை எத்தகையது என்றும் அடிகள் விளக்கியுள்ளனர். இறைவனைப்பற்றிப் பேசுந்தோறும், இறைவனைப்பற்றி இடையறுது எண்ணித் துதிக்குந்தோறும் இறைவனது புகழைக் கேட்குந்தோறும் உடம்பில் ஒரு சூடு உண்டாகும். இதற்குத்தான் சுத்த உஷ்ணம் என்று பெயர். இதனைப் பெறுவதற்காக நமது முன்னேர் பலர் காடும் மலையுந் திரிந்து, பலப்பல ஆண்டுகள் தவங்கிடந்து வருந்தி நின்றனர். இந்த சுத்த உஷ்ணத்தை இத்துணை எளிதாகப் பெறலாம் என்று அப்பெரியோர்களுக்கெல்லாம் தெரியாதுபோயிற்று. திபேத்துநாட்டு யோகம் (Tibetian Yoga) என்ற நூலில் சுத்த உஷ்ணம் பற்றிப் பேசப்படுகிறது. அங்குள்ள தவமுதியோர் நீரில் நனைந்த கம்பளத்தைத் தம்மேல் சிறிது நேரம் போர்த்தி வைத்திருந்து உலர்த்திக் கொடுப்பார்களாம். அக்குளிர்நாட்டில் பலநாள் உலர்த்தியும் ஈரங்காயாத கம்பளம் சிறிது போர்த்தி வைத்திருந்த துணையானே காய்ந்துவிடுமென்ருல் அவரது சுத்த உஷ்ணம் வியக்கற்பாலதே. அடிகள் கூறும் இந்தச் சுத்த உஷ்ணத்தை அவர்கள் கூறுவதுபோல வருவித்துக்கொண்ட தேகத்தில், மெய்யுணர்ச்சியால் திருவருள் ஒளி காரியப்படும் போது சீவகாருண்யம், பரஉபகாரம் ஆகிய சன்மார்க்க சாதனங்களின்மூலம் திருவருளின் ஏகதேசமாகிய உயிரொளி சிறந்து, அருளொளி

யுடன் நிறைந்து மேம்பட்டு விளங்கும்போது உடல் ஒளிமயமாகிப் பொன்னுருவாகும். இதுவே **அன்புருவம்** எனப்படும் **சுத்ததேகம்.** சித்தர்கள் உடல் மாற்றமாகிய இவ்வனுபவத்தை **உருவச்சித்தி** என்பர். "சித்தியென்பது நிலைசேர்ந்த அனுபவம்" என்று அடிகள் கூறுவதும் கருதற்பாலது. இந்நிலையில் உடலின் அசுத்த பூதகாரிய அணுக்களும் அவற்றின் காரணங்களாகிய அசுத்த பிரகிருதி அணுக்களும் மாறிச் சுத்தபூதகாரிய அணுக்களாகி விடும். உடலில் உள்ள எல்லா உயிரணுக்களும் ஒளிமயமே ஆகிவிடுவதால் ஒளியுடல் உண்டாகும்.

இம்மாற்றத்திற்கு ஓர் உவமை காட்டுவாம். தாவரநூலில் ஒளிச்சேர்க்கை (PHOTO-SYNTHESIS) என்ற உண்மை காணப்படுகின்றது. பச்சை நிறமுள்ள தாவரங்களிலெல்லாம் பச்சை நிறமிகள் என்றும் பச்சையம் என்றும் கூறப்படும் நுண்ணிய பச்சைநிறமான அணுக்கள் உள்ளன. இவைகளே தாவரங்களின் பச்சை நிறத்திற்கு மூல காரணம். இவை சூரியனது வெளிச்சம் வெப்பம் முதலிய ஆற்றலைப் பயன்படுத்திக்கொள்ளும் இயல்புடையன. தாவரங்கள் வேர்களின்மூலம் உட்கொள்ளும் தண்ணீரையும், வான்வெளியில் உள்ள கரிவளியையும் கொண்டு இலைகளிலும் வேறிடங்களிலுமுள்ள பச்சையம் சூரியனது ஆற்றலை உட்படுத்திச் சர்க்கரைப்பொருளை உண்டாக்கும். இச்சேர்க்கையின்போது மிஞ்சுகின்ற உயிர்வளி பிரிந்து வெளிப்படும். இவ்வுண்மையை வேதிச் சமன்பாடுகொண்டு எளிதாக விளக்குவர்.

$$6H_2O + 6CO_2 + \text{SUN'S ENERGY} \rightarrow$$
நீர் + கரிவளி + சூரிய ஆற்றல் →

$$C_6H_{12}O_6 + 6O_2 \uparrow$$
சர்க்கரை + உயிர்வளி ↑

இச்சமன்பாடுகொண்டு ஒளிச்சேர்க்கையின் உண்மையை அறியலாம். இவ்வொளிச்சேர்க்கை பகற்பொழுதில் பச்சை நிறமுள்ள தாவரங்கள் அனைத்திலும் நிகழ்ந்துவருகின்றது. இதைப்போல அன்பே தன்னுயிராக உள்ள பெரியோர் உடம்பில், சிவமே பொருளென உணர்ந்து அழுதுநிற்குந் தருணத்தில், சுத்தசூடு நிறைவுபெற்றபோது, ஆண்டவன் அருள் கதிர்நலமாகக் கண்ணிலும் "ஆதித்தர் பன்னிருவர் ஒளிமாற்றும் பரவொளி" யாக மனத்திலும், அருளொளியாக அறிவிலும் காரியப்படும். அப்போது அவரது உடம்புயிரோடு உளமும் ஒளிமயமேயாகிப் பொன்னுருவெனப்படும் அன்புருவமாக மாறி ஒளிரும்.

இந்த உடல்மாற்றத்தை அடிகள் பலவாறுக விளக்கியுள்ளனர்.

என்னையும் பொருளென எண்ணியென் னுளத்தே
அன்னையு மப்பனு மாகிவீற் றிருந்து
உலகியல் சிறிது முளம்பிடி யாவகை
அலகில்பே ரருளால் அறிவது விளக்கிச்
சிறுநெறி செல்லாத் திறனளித் தழியா
துறுநெறி உணர்ச்சிதந் தொளியுறப் புரிந்து
சாகாக் கல்வியின் தரமெலா முணர்த்திச்
சாகா வரத்தையுந் தந்துமேன் மேலும்

அன்லையும் விளைவித் தருட்பே ரொளியால்
இன்மையும் நிறைவித் தென்னையு நின்னையும்
ஓருரு வாக்கியா னுன்னிய படியெலாஞ்
சீருறச் செய்துயிர்த் திரம்பெற அழியா
அருளமு தளித்தனை அருள்நிலை ஏற்றனை
அருளறி வளித்தனை அருட்பெருஞ் ஜோதி

—திரு. 6: 1: 1561–1574

என்று விளக்கியுள்ளார்.

மேலும், இந்நிலையனுபவத்தைத் தம்முடலிற் கண்டவண்ணம் அடிகள் அருளிச்செய்கின்றனர். சன்மார்க்கத்தில் கூறப்படும் அனுபவங்கள் அந்நெறிநிற்கும் சாதகனுடைய உடம்பில் தெரிய வேண்டும். எத்துணைப்பெரிய ஆராய்ச்சியாயினும், எத்துணைப்பெரிய வாச்சிய விளக்கமாயினும், கேட்டார்ப் பிணிக்கும் எத்துணைப் பெரிய சொற்பொழிவாயினும், தினைத்துளி அனுபவம் இல்லாவிடில் எல்லாம் நாடக நிகழ்ச்சியான ஆரவாரமாக முடியும்.

ஓர்நாள் சுவாமிகளிடம் ஓரன்பர் சென்று திருவருட்பாவிலுள்ள பாட்டு ஒன்றை இசையுடன் பாடினார். இசை நுணுக்கஞ்செறிந்த அப்பாட்டைக் கேட்ட அடிகள், "பாடினால் போதாது; பொருள் தெரியவேண்டும்" என்றனர். பின்னர் ஒருகால் திருவருட்பாவில் உள்ள மகாதேவமாலைச் செய்யுள் ஒன்றுக்கு அடிகள் கூறும் விளக்கத்தை நன்கறிந்திருந்த அன்பர் ஒருவர் சுவாமிகளிடம் அப்பாட்டிற்கு விரிவுரை செய்தனர். கேட்டு மகிழ்ந்த

அடிகள், "பொருள் தெரிந்தால் போதாது; அனுபவம் வரவேண்டும்" என்று அன்புடன் அறிவுறுத்தினர். இந் நிகழ்ச்சிகளுக்கு அகச் சான்று எதுவுமில்லை. இது செவிவழிச்செய்தியே யாயினும், உலகவர் அனைவரையும் சன்மார்க்கத் தில் அடைவித்திடத் தோன்றிய வள்ளற்பெருமான் வந்த அந்த அன்பர் சன்மார்க்க அனுபவம் பெற வேண்டும் என்று விழைந்த உண்மை புலப்படு கின்றது.

சாவாத உடம்பு பெற்ற அடிகள் எப்படி அதனைப் பெற்றார் என்றும் அவரது பூத உடம்பு பொன்னுடம்பாவதற்கு உண்டான அனுபவங்கள் யாவை என்றும் காண்போம்.

சுவாமிகளின் பூதவுடல் பொன்னுடலாக, அன்புருவமாக மாறும்போது உண்டான அனுபவங்களை அடிகள் அழகாக விரித்துரைக் கின்றார். வன்தோல், மென்தோல், புடைத்தோல் முதலிய தோலெல்லாம் குழையும்; நரம்புகள் அனைத்தும் கட்டுவிட்டு இயங்கும்; இருவகையான எலும்புகளும் உருகி நெகிழ்ந்திடும்; தசைகள் எல்லாம் தளர்ந்துபோம்; உடலிலுள்ள இரத்தம் அனைத்தும் உள்ளே இறுகிவிடும்; சுக்கிலம் உரத்து பந்தித்து ஒருதிரளாகிவிடும்; மூவகை மூளைகளும் மலர்ந்திடும்; உடம்பு முழுதும் அமுதம் ஊற் றெடுத்து ஓடி நிரம்பிடும்; நெற்றி வியர்க்கும்; முகத் தில் ஒளிமலரும்; மூச்சுக்காற்று குளிர்ச்சி பொருந்தி யிருக்கும்; சாந்தம் ததும்பிடும்; உள்ளத்தில் நகை

யுண்டாகும்; உரோமம் பொடிக்கும்; கண்களில் நீர்பெருகிக் கால்வழிந்து ஓடும்; வாய் துடித்து அலறும்; இரு செவிகளிலும் கும்மெனும் ஓசை கேட்கும்; மெய்முழுதுங் குளிர்ந்திடும்; இதயம் துடித்து அசையும்; கையிரண்டுங் குவியும்; காலிரண்டுஞ் சுலவிடும்; மனங்கனிந்து உருகும்; அறிவு நிறைந்து ஒளிரும்; சித்தம் மன அறிவுகளுடன் ஒன்றாகிக் களிக்கும்; அகங்காரத்தின் அதிகரிப்பு அடங்கும்; சகத்தைக் காண உள்ளம் தழைத்து மலரும்; உடம்பு அறிவுமயமாகி ஆனந்திக்கும்; ஆன்ம தற்போதம் போயகலும்; தத்துவமனைத்தும் ஒருங்கே ஒழியும்; சத்துவம் மட்டும் தனித்து நின்று ஓங்கும்; உலக விடயங்கள் எல்லாம் மறைந்திடும்; அலகிலா அருளின்மேல் ஆசை பொங்கும்; உள்ளத்தில் எழுகின்ற தனியன்பு உயிரெல்லாம் மலர திருவருளாக ஓங்கும்; அன்புருவம் ஆகும். இங்ஙனமாக, அன்புருவான ஆண்டவன் அடிகளின் பேரன்பினால் அவர் உளங்கலந்து, உயிர்கலந்து, உடல்கலந்து, மற்றெல்லாங்கலந்து, அருளொளியால் அவரை வேதித்து அவரது பூத உருவை அன்புருவம் ஆக்கினான்.

தோலெலாங் குழைந்திடச் சூழ்நரம் பனைத்தும்
மேலெலாங் கட்டவை விட்டுவிட் டியங்கிட
என்பெலா நெக்குநெக் கியலிடை நெகிழ்ந்திட
மென்புடைத் தசையெலா மெய்யுறத் தளர்ந்திட
இரத்த மனைத்துமுள் ளிறுகிடச் சுக்கிலம்
உரத்திடை பந்தித் தொருதிர ளாயிட
மடலெலா மூளை மலர்ந்திட அமுதம்
உடலெலா மூற்றெடுத் தோடி நிரம்பிட

ஒண்ணுதல் வியர்த்திட வொளிமுக மலர்ந்திடத்
தண்ணிய வுயிர்ப்பினிற் சாந்தந் ததும்பிட
உண்ணகை தோற்றிட வுரோமம் பொடித்திடக்
கண்ணினீர் பெருகிக் கால்வழிந் தோடிட
வாய்துடித் தலறிட வளர்செவித் துணைகளிற்
கூயிசைப் பொறியெலாங் கும்மெனக் கொட்டிட
மெய்யெலாங் குளிர்ந்திட மென்மார் பசைந்திடக்
கையெலாங் குவிந்திடக் காலெலாஞ் சுலவிட
மனங்கனிந் துருகிட மதிநிறைந் தொளிர்ந்திட
இனம்பெறு சித்த மியைந்து களித்திட
அகங்கார மாங்காங் கதிகரிப் பமைந்திடச்
சகங்காண வுள்ளந் தழைத்து மலர்ந்திட
அறிவுரு வனைத்து மானந்த மாயிடப்
பொறியுறு மான்மதப் போதமும் போயிடத்
தத்துவ மனைத்துந் தாமொருங் கொழிந்திடச்
சத்துவ மொன்றே தனித்துநின் றோங்கிட
உலகெலாம் விடய முளவெலா மறைந்திட
அலகிலா வருளி னுசைமேற் பொங்கிட
என்னுளத் தெழுந்துயி ரெல்லா மலர்ந்திட
என்னுளத் தோங்கிய என்றனி அன்பே

—திரு. 6: 1: 1449–1476

இவ்வாறு அன்புருவம் பெற்ற அடிகள் “மரணந் தவிர்ந்தேன்; எனக்கு என்றுஞ் சாமா றில்லை; பொன்வடிவுற்றது” என்று பற்பல பாடல் களில் அறிவிக்கின்றார்கள்.

எமன்எனும் அவன்இனி இலையிலை மகனே
எய்ப்பற வாழ்கஎன் றியம்பிய அரசே

—திரு. 6: 101: 18

விரைந்து விரைந்து படிகடந்தேன்
　　மேற்பா லமுதம் வியந்துண்டேன்
கரைந்து கரைந்து மனமுருகக்
　　கண்ணீர் பெருகக் கருத்தலர்ந்தே
வரைந்து ஞான மணம்பொங்க
　　மணிமன் றரசைக் கண்டுகொண்டேன்
திரைந்து நெகிழ்ந்த தோலுடம்புஞ்
　　செழும்பொன் உடம்பாய்த் திகழ்ந்தேனே

—திரு. 6: 93: 6

தன்னையே எனக்குத் தந்தரு ளொளியால்
என்னை வேதித்த என்தனி யன்பே

—திரு: 6: 1: 1480

பொன்னுடம் பெனக்குப் பொருந்திடும் பொருட்டாய்
என்னுளங் கலந்த என்தனி அன்பே

—திரு. 6: 1: 1489

அருட்ஜோதிகொண்டு அன்புருவான அடிகள் உயிரனுபவம் பெற்று அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனது பெருமையை உண்மையில் உணர்ந்து அருளுருவம் பெறுவதற்காக மீண்டும் பாடி வணங்கத் தலைப்படுகின்றார்.

பார்த்தேன் பணிந்தேன் பழிச்சினேன் மெய்ப்புளகம்
போர்த்தேன்என் உள்ளமெலாம் பூரித்தேன்—
　　　　　　　　　　ஆர்த்தே நின்(று)
ஆடுகின்றேன் பாடுகின்றேன் அன்புருவா னேன்அருளை
நாடுகின்றேன் சிற்சபையை நான்

—திரு. 6: 71: 6

என்றும்,

ஏர்பூத்த மணிமன்றி லின்பநடம் புரியும்
என்னருமைத் துரையேநின் னின்னருளை நினைந்து
கார்பூத்த கனைமழைபோற் கண்களினீர் சொரிந்து
கனிந்துமிகப் பாடுகின்ற களிப்பையடைந் தனனே
—திரு. 4: 4: 8

என்றும் கூறுவன காண்க.

இனி, மணிவாசகப் பெருமான் அன்புருவான அனுபவங்களையுஞ் சிறிது காண்பாம். பால் நினைந்து ஊட்டும் தாயினுஞ் சிறந்த ஆண்டவன், அன்பர்க்கே அருளுவான் என்றும் அவன்பால் ஆராத காதல்கொண்டு ஒழுக அவனிடமிருந்தே அன்பைப் பெறவேண்டுமென்றும் மணிவாசகப் பெருமான் கூறுகின்றார்.

யாவராயினும் அன்பரன்றி அறியொணு
மலர்ச்சோதியான்

என்றும்,

ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்று உருகத் தந்தருள்எம் உடையானே

என்றும் கூறுவன காண்க.

மேலும், அந்த இடையறா அன்பினால்தான் ஆவியும் ஆக்கையும் ஆனந்தமாய்க் கசிந்து உருகுமென்றும், அங்ஙனம் இரந்து இரந்து உருகி நின்றால் ஆண்டவன் சோதியாய் மனத்துள்ளே எழுவான் என்றும், சாயா அன்புகொண்டு நாள் தோறும் தழைப்பவரைத் தாயே ஆகி வளர்ப்பான் என்றும் அப்போது அவர்தம் என்பு நைந்து

உருகுமென்றும், புலன்கள் ஒன்றுமென்றும், வாய் நாதா என்று அரற்றி உரைதடுமாறுமென்றும், உரோமம் சிலிர்க்குமென்றும், கரங்குவியுமென்றும் இதயம் மலருமென்றும், கண் களிகூரக் கண்ணீர்த் துளி அரும்புமென்றும், அந்நிலையில் அவர்க்கு சுவைதரு கோல்தேன் கொண்டு அவயவமும் அளிதரு அள்ளூராக்கையும் அமைப்பானென்றும், அதில் அற்புதமான அமுத தாரைகள் ஊற்றெடுத் தோடி எற்புத் துளைதொறும் தேங்குமென்றும் கூறியருளுகின்றார்.

இரந்திரந்துருக என்மனத்துள்ளே
எழுகின்ற சோதியே

என்றும்,

அரைசனே அன்பர்க் கடியனே னுடைய அப்பனே
ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கி

என்றும்,

நினைத்தொறுங் காண்தொறும் பேசுந்தொறும்
எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பி

என்றும்,

இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரு மாக்கை ஒழியச்செய்த ஒண்பொருள்
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி

என்றும்,

என்புநைந் துருகி நெக்குநெக்கு ஏங்கி
அன்பெனு மாறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி

என்றும்,

அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறு மேற்றினன் உருகுவது
உள்ளங்கொண் டோர்உருச் செய்தாங்கு எனக்கு
அள்ளூ றாக்கை அமைத்தனன்

என்றும் வரும் திருவாசகங் காண்க. மணிவாசகப் பெருமான் பெற்ற அன்புருவத்தை உருகுவதே தொழிலாகக் கொண்ட உள்ளமுடைய ஓர் உருவம் என்று கூறலாம்.

அன்புருவத்தைப்பற்றிப் பேசுங்கால் அன்பின் திருவுருவாக நின்ற கண்ணப்பரைப்பற்றி ஒன்று சொல்லவேண்டும். நாள்தோறும் வழிபாடு செய்துவந்த அந்தணர் காளத்திநாதனுக்கு முன்னே இறைச்சி எலும்புடன் இலையும், செருப்படியும், நாயடியும் கண்டு பொருது அவற்றை நீக்கித் தமது முறைப்படி மீண்டும் மீண்டும் அருச்சித்து வந்தார். கண்ணப்பரது ஆரா அன்பை அறியாத அந்தணர் அவரை ஒழித்தருள வேண்டுமென்று ஆண்டவனை

வேண்டினார். அதற்கு ஆண்டவன் கண்ணப்ப ருடைய அன்பின் பெருமையை அவர்க்கு அறிவிக்கின்றான்.

அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும்
அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினியே
வாமென்றும்
அவனுடைய நிலைஇவ்வா றறிநீயென் றருள் செய்தார்
—பெரியபுராணம்

ஆண்டவனது வடிவு கண்டமாத்திரத்தில் அன்பே வடிவாகிநின்ற கண்ணப்பர் தமது இரண்டாவது கண்ணையிடந்து நிற்கும்போது ஆண்டவன் தனது உண்மை ஞான உருவிற் றோன்றி, " நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என் அன்புடைத்தோன்றல் நில்லு கண்ணப்ப!" என்று கூறி அவரை ஆட்கொண்டருளினான். அன்பே உருவமாகி நின்றதற்குக் கண்ணப்பர் நல்லதொரு சான்றாவர்.

எனவே, அன்புருவம் பெற்ற அடிகள் அடுத்து அருளுருவம் பெற்ற அனுபவங்களையும் அவ்வருள் உருவத்தின் இயல்புகளையும் அவர் வாய்மொழி கொண்டு விளக்கப் புகுவாம்.

## அருளுருவெனப்படும் பிரணவ தேகம்

அருளுருவத்தை மந்திரவடிவென்றும் ஓமயத் திருவுரு என்றும் ஒளிவடிவமென்றுங் கூறுவர்.

விளங்கு கின்றசிற் றம்பலத் தருணடம் விளக்கின்ற
பெருவாழ்வே
களங்க மில்லதோ ருளநடு விளங்கிய கருத்தனே
யடியேனன்
விளம்பி நின்றதோர் விண்ணப்பந் திருச்செவி வியந்தருள்
புரிந்தாயே
உளங்கொ ளிவ்வடி விம்மையே மந்திர வொளிவடி
வாமாறே —திரு. 6: 97 : 2

ஓமயத் திருவுரு உவபபுடன் அளித்தெனக்
காமயத் தடைதவிர் அருட்பெருஞ் ஜோதி
—திரு. 6:1 :189

மன்னுகின்ற பொன்வடிவு மந்திரமாம் வடிவும்
வான்வடிவும் கொடுத்தெனக்கு மணிமுடியுஞ் சூட்டி
—திரு. 6 : 38 : 61

மருள்வடிவே யெஞ்ஞான்று மெவ்விடத்தும்
எதனுலு மாய்வி லாத
அருள்வடிவா யிம்மையிலே யடைத்திடப்பெற் ருடுகின்றேன்
அந்தோ வந்தோ—திரு. 6: 73: 10

சுத்த வடிவுஞ் சுகவடிவாம் ஓங்கார
நித்த வடிவு நிறைந்தோங்கு—சித்தெனுமோர்
ஞான வடிவுமிங்கே நான்பெற்றே னெங்கெங்கும்
தானவிளை யாட்டியற்றத் தான் —திரு. 6 : 109 : 17

ஊன வுடம்பே யொளியுடம்பா யோங்கிநிற்க
ஞான வமுதெனக்கு நல்கியதே —திரு. 6 : 99 : 6

ஒளியுருவாகத் தோன்றும் இவ்வருள் உருவம் நம் கண்ணிற்குப் புலனுவதன்றிப் பிடிபடாதது.

ஐந்துமுதல் எட்டுவயதுள்ள பாலனுகத் தோன்றும் இந்த நூற்றெட்டு மாற்றுள்ள பொன்வடிவம் சித்திகளெல்லாம் ஏவல்செய்யும் அருள்வல்லபம் உடையது. ஆயினும், சித்திகளை அவாவியிடேல் என்று ஆண்டவன் தமக்கு அறிவுறுத்தியதாகக் கூறுகின்றனர். அமுதவகைகளிற் சிறந்த அருளமுதம் உண்ணுவதும் இந்நிலையில்தான். அருளனுபவம் கைகூடுதலும் இங்கேதான். இதற்கு அருள்வெளி என்று பெயர். அருள்வெளி நான்காக விரியும். அவை பரவெளி, பரம்பரவெளி, பராபரவெளி, அருட்பெருவெளி எனப்படும். இவ்விடத்திற்குச் சிற்றம்பலம் என்றுபெயர். பரம்பரவெளிக்குமேல் அருளனுபவம் மீதூரப்படும். அருள் உருவத்தின் அனுபவ நிலையைக் குருதுரியம் என்பர். இதற்கும் மேலான அனுபவங்களை விழைந்து நிற்கும் அருளே வடிவான ஆன்மா அருட்பெருஞ்ஜோதிப் பெருமானை ஏத்திப் பரவி, கண்டுகளித்து, அணைந்து இன்புறும். அப்போது முழுமுதற் கடவுளாகிய ஆனந்தத் தெய்வம் அனைத்து வகையாலும் அருள்சுரந்து ஆன்மாவில் கலக்கும். இப்புணர்ச்சியை விதந்து கூறும் பாடல்களும் பல உள்ளன.

தூங்காதே விழித்திருக்குஞ் சூதறிவித் தெனையாண்ட
துரையே யென்னை
நீங்காதே யென்னுயிரிற் கலந்துகொண்ட பதியே

—திரு 6: 113: 4

அன்பே என்னரசே திரு அம்பலத் தாரமுதே
என்பே யுள்ளுருகக் கலந் தென்னுள் இருந்தவனே

—திரு 6 : 57 : 3

கருவிற் கலந்த துணையேயென் கனிவிற் கலந்த
வமுதேயென்
கண்ணிற் கலந்த வொளியேயென் கருத்திற் கலந்த
களிப்பேயென்
உருவிற் கலந்த வழகேயென் உயிரிற் கலந்த
உறவேயென்
உணர்விற் கலந்த சுகமேயென் னுடைய வொருமைப்
பெருமானே —திரு. 6 : 58 : 2

சித்தே வயங்க வுனையுட் கலந்து கொண்டேன்
—திரு. 6 : 58 : 3

நாடல்செய் கின்றேன் அருட்பெருஞ் ஜோதி நாதனை
என்னுளே கண்டு
கூடல்செய் கின்றேன் எண்ணிய வெல்லாங் கூடியே
குலவியின் புருவாய்
ஆடல்செய் கின்றேன் சித்தெலாம் வல்லா னம்பலந்
தன்னையே குறித்துப்
பாடல்செய் கின்றேன் எனக்கிது போதும் பண்ணிய
தவம்பலித் ததுவே
—திரு. 6 : 72 : 6

சும்மா விருப்பதுவே துணிவெனக்கொண்
டிருக்கின்றோரை
விதுவென்ற தண்ணளியாற் கலந்து கொண்டு
விளங்குகின்ற பெருவெளியே விமலத் தேவே
—திரு 1: 5: 66

தேவியுற் றொளிர்தரு திருவுரு வுடன்என
தாவியிற் கலந்தொளிர் அருட்பெருஞ் ஜோதி
—திரு. 6 : 1 : 199

உள்ளகத் தமர்ந்தெனது உயிரிற் கலந்தருள்
வள்ளல்சிற் றம்பலம் வளர்சிவ பதியே
—திரு. 6 : 1 : 1019

எனக் கூறுவதை உற்றுநோக்கினுல் அருட்பெருஞ் ஜோதியாகிய ஆண்டவன், அருளுருவ நிலையில் உயிரிற்கலந்து ஒன்ருகி இன்பந்தருவான் என்பது பெறப்படும். எனினும், திருவருட்பேறு பெற்ற அடிகள், "சிற்றம்பலவா! உனைப் பாடியாடும் வண்ணம் சாற்றுக" என்று வேண்டிக் கொள்கின்ருர். மேலும்,

ஆரா வமுத மளித்தருளி யன்பா லின்ப நிலைக்கேற்றிச்
சீரார் சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை யாக்கினையே
ஏரா ரின்ப வனுபவங்க ளெல்லாம் பொருந்தியிருக்
கின்றேன்
தீரா வுலகி லடிச்சிறியேன் செய்யும் பணியைத்
தெரித்தருளே —திரு. 6 : 63 : 9

என்றும் வேண்டி அருளின் திறம் போற்றிப் பாடிப் பரவுகின்ருர்.

## ஞானதேகம் எனப்படும் இன்புருவம்

'அருளே தந்தனையே யருளாரமுதந் தனையே' என்று பாடி உயிர்களுக்கு உற்ற இடையூறுகளைத் தவிர்த்துப் பணிசெய்யும் அடிகள் சிறிதுகாலம் அருளுருவில் எல்லாருங் காண வாழ்ந்திருக்க வேண்டும். அருளுருவம் இன்புருவமாவதற்கு இரண்டரை நாழிகை வேண்டும்போலும். இதனை வான்வடிவம் என்றும், ஞானதேகம் என்றும், சிவவடிவம் என்றுங் கூறுநிற்பர். ஆண்டவனிடம்

புறப்புணர்ச்சி, அகப்புணர்ச்சியெல்லாம் அனுபவித்த ஆன்மா அருட்பெருஞ்ஜோதி இறைவனைக் கலந்து பிரிவற்றுச் சிவத்தில் திளைக்கும். இதற்குச் சிவானுபவம் என்று பெயர். ஞானதேகத்து இறைவனை ஒன்றிநின்று சிவமாகி, என்றும் இன்பந் தழைக்க இருத்தல் இன்புருவத்தின் இயல்பாகும். இதன் இலக்கணம் இறைவனோடிறைவனாக, ஒன்றும் தோற்றாத வானம்போல, கட்புலனாகாது மறைந்து நிலைத்தல் என்பர். "அருளாம் மங்கைதனை இரண்டரைக் கடிகையில் மணம் புரிவிப்பாம் மங்கலக் கோலம் புனைக" என்று ஆண்டவன் உணர்த்துகின்றான்.

என்சாமி யெனதுதுரை என்னுயிர் நாயகமே
 இன்றுவந்து நானிருக்கு மிடத்திலமர் கின்றார்
பின்சாரும் இரண்டரைநா ழிகைக்குள்ளே யெனது
 பேருடம்பிற் கலந்துளத்தே பிரியாம லிருப்பார்
தன்சாதி யுடைப்பெரிய தவத்தாலே நான்றான்
 சாற்றுகின்றேன் அறிந்ததிது சத்தியம் சத்தியமே
மின்சாரு மிடைமடவாய் என்மொழிநின் றனக்கே
 வெளியாகும் இரண்டரைநா ழிகைகடந்த போதே

"இங்ஙனம் எல்லாம் வல்லவர் ஓதுக என்றபடி உரைத்துளேன்"

—திரு. 6:134:4

ஏதுமறி யாச்சிறிய பயல்களினுஞ் சிறியேன்
 இப்பெரிய வார்த்தைதனக் கியானார்என் னிறைவன்
ஓதுகநீ யென்றபடி யோதுகின்றேன் மனனே
 உள்ளபடி சத்தியமீ துணர்ந்திடுக நமது

தீதுமுழு துந்தவிர்த்தே சித்தியெலா மளிக்கத்
திருவருளாம் பெருஞ்ஜோதி யப்பன்வரு தருணம்
ஈதிதுவே யென்றுலக மறியவிரைந் துரைப்பாய்
எல்லாருங் களிப்படைந்துள் ளிசைந்தேத்தி யிடவே

—திரு. 6: 105:9

அன்புடை மகனே மெய்யருட் டிருவை
யண்டர்கள் வியப்புற நினக்கே
இன்புடை யுரிமை மணம்புரி விப்பாம்
இரண்டரைக் கடிகையில் விரைந்தே
துன்புடை யவைகள் முழுவதுந் தவிர்த்தே
தூய்மைசேர் நன்மணக் கோலம்
பொன்புடை விளங்கப் புனைந்துகொள் என்றார்
பொதுநடம் புரிகின்றார் தாமே

—திரு. 6: 103:3

ஞான உருவடைந்த பெற்றியையும் அடிகள் விளக்கியுள்ளார்.

"மெய்ஞ்ஞான உருவடைந்தேன்"

—திரு. 6: 132:79

நானே தவம்புரிந்தேன் நம்பெருமான் நல்லருளால்
நானே அருட்சத்தி நாடடைந்தேன்—நானே
அழியா வடிவ மவைமூன்றும் பெற்றேன்
இழியாம லாடுகின்றே னிங்கு

—திரு. 6: 109:27

நாடல்செய் கின்றேன் அருட்பெருஞ் ஜோதி நாதனை
யென்னுளே கண்டு
கூடல்செய் கின்றேன் எண்ணிய எல்லாங் கூடியே
குலவியின் புருவாய்
ஆடல்செய் கின்றேன்

—திரு. 6: 72:6

அமரரும் முனிவரும் அதிசயித் திடவே
அருட்பெருஞ் ஜோதியை யன்புட னளித்தே
கமமுறு சிவநெறிக் கேற்றியென் றனையே
காத்தென துளத்தினிற் கலந்தமெய்ப் பதியே
--திரு. 6: 101:18

தந்தேக மெனக்களித்தார் தம்மருளும் பொருளும்
தம்மையுமிங் கெனக்களித்தார் எம்மையினும் பிரியார்
எந்தேக மதிற்புகுந்தார் என்னுளத்தே யிருந்தார்
என்னுயிரிற் கலந்தநடத் திறையவர்
--திரு. 6: 106:1

எல்லாம் வல்ல இறைவன் தன்னையும் தன்னருட் சத்தியின் வடிவையும் அடிகளையும் ஒன்றென வைத்தான்.

தன்னையும் தன்னருட் சத்தியின் வடிவையும்
என்னையு மொன்றென இயற்றிய தந்தையே
—திரு. 6: 1:1145

அருட்பெருஞ் ஜோதியென் னுருயி ரிற்கலந் தாடுகின்ற
அருட்பெருஞ் ஜோதியென் அன்பிற் கலந்தறி
வாய்விளங்கும்
அருட்பெருஞ் ஜோதித்தெள் ளாரமு தாகியுள்
ளண்ணி நிற்கும்
அருட்பெருஞ் ஜோதிநின் னுசையொன் றேயென்னு
ளார்கின்றதே
—திரு. 6: 85:1


இங்ஙனம் அருட்பெருஞ்ஜோதியைப் பாடிப் பாடி அதனை அப்படியே விழுங்கிநின்ற அடிகள் ஞானவடிவில் அவனது அருளுக்கு ஒரு வாழ்த்துரை நவில்கின்றார்.

வாழியென் றேயெனை மாலய னாதியர் வந்தருட்பேர்
ஆழியென் றேதுதித் தேத்தப் புரிந்தனை அற்புதநீ
டூழியன் றேயென்றுஞ் சாகா வரமு முவந்தளித்தாய்
வாழிமன் றோங்கும் அருட்பெருஞ் ஜோதிநின் மன்னருளே


—திரு. 6: 85: 12

பகுதிவான் வெளியிற் படர்ந்தமா பூத
அகல்வெளி வகுத்த அருட்பெருஞ் ஜோதி
உயிர்வெளி யிடையே உரைக்கரும் பகுதி
அயல்வெளி வகுத்த அருட்பெருஞ் ஜோதி
உயிர்வெளி யதனை யுணர்கலை வெளியில்
அயலற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
கலைவெளி யதனைக் கலப்பறு சுத்த
அலர்வெளி வகுத்த அருட்பெருஞ் ஜோதி
சுத்தநல் வெளியைத் துரிசறு பரவெளி
அத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி
பரவெளி யதனைப் பரம்பர வெளியில்
அரசுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
பரம்பர வெளியைப் பராபர வெளியில்
அரந்தெற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
பராபர வெளியைப் பகர்பெரு வெளியில்
அராவற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
பெருவெளி யதனைப் பெருஞ்சுக வெளியில்
அருளுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

—திரு. 6: 1: 553–570




இவ்வெளியெல்லாம் இலங்க அண்டங்கள்
அவ்வயின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி



சத்திய ஞான சபை

# 4. அநுபவ நிலைகள்

உயிரனுபவம், அருளனுபவம், சிவானுபவம் எனப்படும் பெரும் பேரனுபவங்கள் பெறுதற்கு அருமையானவை. இவற்றை அனுபவித்தவர்கள் சுத்தஞானிகளாவர். உயிரனுபவம் பெற்றவர்கள் சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர் என்றால் சுத்த சன்மார்க்கத்தின் பெற்றியை என்னென்று கூறுவது! இவ்வனுபவங்கள் ஒருசில பெரியோர்களுக்குமட்டும் கைகூடுகின்றன. அதற்குக் காரணம் எல்லோரும் இதனை விரும்புவதில்லை. "ஆசையுண்டேல் வம்மின்" என்றும், "சன்மார்க்க நன்னிலை மேவுறுர் தங்களை விடுக நெஞ்சமே" என்றும் அடிகள் வருந்தியழைத்து விட்டுவிடுகின்றார். இவ்வருமையான அனுபவங்களைத் தாம் நுகர்ந்தவண்ணம் அடிகள் அன்புடன் உரைத்துள்ளார்கள். இவற்றை உண்மையாக அறிந்துகொள்வதற்கு இதில் படிப்படியாக உள்ள அனுபவநிலைகளைத் தெரிந்துகொள்ளவேண்டும். இதனை வள்ளற்பெருமான் கருணையால் இயன்ற மட்டில் தொகுத்துவிளக்கத் தொடங்குவோம்.

இவ்வுலக வாழ்வில் உள்ள மக்கள் இம்மை இன்பங்குறித்தே வாழ்கின்றனர். வாழ்க்கை நிலையற்றது என்றும், அல்லல்கள் நிரம்பியதென்றும் அதில் சுகத்தைக் காணுவது அரிது என்றும், சில சமயங்களில் கிடைக்கும் சிறிய இன்பமும் நிலைத்து நிற்பதில்லை என்றும் எண்ணுவது என்றைக்கும்

இல்லை. கண்டதே காட்சி, கொண்டதே கோலம், ஏதோ பிறந்தோம், வாழ்கிறோம்; ஒருநாள் இறந்தொழிவோம், இதுவே உலகியல் வாழ்க்கை என்று சாமாறே விரைகின்றது உலகம். பொன்னும், பொருளும், புகழும், போகமும் விரும்பி ஓயாது உழன்று, அவற்றில் கண்ணுங் கருத்துமாக இருக்கின்ற மக்களைத்தான் நாம் காண்கின்றோம். எனினும், ஒன்று என்று இரு; தெய்வம் உண்டு என்று இரு; பசித்தோர் முகம் பார் என்ற உபதேசத்தையுட்கொண்டு வாழ்பவர்களும் உலகத்தியல்பையும் உயிர்களின் இயல்பையும், உயிர்கள் உலகில் இன்புற்று வாழ்வதற்குப் படும் துன்பத்தையும் ஒருவாறு உணர்ந்து பசி, பிணி, பகைகளினாலே உயிர்களுக்கு வரும் இடையூறுகளைத் தம்மால் இயன்றமட்டில் விலக்கித் தெய்வநினைவுடன் வாழும் நல்லவர்களும் இருக்கின்றனர்.

இவர்கள் நிலையில்லாத பொருள்களுக்கும் நிலைத்த பொருள்களுக்கும் வேறுபாடு விளங்கிய அறிவுடையவர்கள். பதி, பசு, பாச இயல்புகளை உண்மையில் உணர்ந்து எதையும் பற்றற நுகர்ந்திருப்பர். இவர்களது சாதாரண விழிப்புணர்வு **சீவசாக்கிரம்** எனப்படும். இந்நிலையில் நின்று திருவருள் துணையால் மேல்நிலையை விரும்பிநிற்கும் சாதகனுக்கு அருளலாது எதுவும் பொருளாகத் தோன்றாது. உலகமெல்லாம் தன்கீழ் வருவதாயினும், போகமெல்லாம் அவனுக்குக் காத்துக் கிடப்பினும், பொற்குவியலும் பொருள் வைப்பும் அவன்வயமாயினும் இவையனைத்தையும் பொருட்

படுத்தமாட்டான். நித்தியமாக உள்ள இறைவனை யும், உயிரையும்பற்றி எண்ணுவான். உயிரைத் தொடர்ந்துநின்று இறைவனை அறியவொட்டாது மறைக்கும் பாசங்களைத் தவிர்க்கும் வழி என்ன என்று சிந்திப்பான். எந்த நேரமும் அவனுக்கு உலகியலில் மனம் பற்ருது. அநித்திய விவேகமும், எல்லாம் சிவன்செயல் என்ற நினைவும் முதிரும். மனம் புருவமத்தியில் சஞ்சரிக்கும். இவனுடைய கனவுநிலைக்குச் **சீவசொர்ப்பனம்** என்று பெயர். அப்போது அவன் மனம் கண்டத்திற்கு வரும். தன்னைப் பிரித்து அறிதலும், இறைவனது தயவினுல் தான் வாழ்வதாக நினைப்பதும் மாருமல் கனவு காண்பான். கனவில் தன்மேல் புலிபாய்வதாயினும் அஞ்சாது கனவு காண்கின்ருேம் என்ற நினைப் பிற்கு வந்து இறைவன் நினைவுடன் திரும்பிப் படுப் பான். இவனுக்குக் கனவிலும் பெண்ணுசையிராது. துயிலும்போது அறிவொடு துயில்வான். தூங்கி எழும்போது மறதியின்றி எழுவான். இந்நிலைக்குச் **சீவசுழுத்தி** என்றுபெயர். இந்நிலையில் அவனுக்கு சிறிதும் பொன்ணுசையிருக்காது. சுவாமிகள் சுழுத்தியிலும் பொன்ணுசை கூடாதென்றனர். சுழுத்தியில் அவன் மனம் இதயத்தில் இருக்கும். இதற்கு அடுத்த மேல்நிலை **சீவதுரியம்** எனப்படும். இந்நிலையில் தனது சிறுமையும் இறைவனது பெருமையும் விளங்கும். மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்கின்ற நான்கு கரணங்களும் பொறி, புலன்களின்வழி ஓடாமல் அவற்றையெல் லாம் தம்முள் அடக்கி நிறுத்தும் ஆற்றலைப் பெறும். உள்ளம் இறையருளில் ஒடுங்கிநிற்கும். அதனுல்

வினை மேலும் விளைய வழியில்லை. தன் முனைப்பில்லாது மனமடங்கியபோது ஆணவமல வீக்கமும், ஆகாமிய கர்மமும் இல்லாதுபோகும். பலப்பல பிறவிகள் தோறும் தொடர்ந்துவந்த அசுத்தமாயை இந்நிலையில் விலகுவதால் அருள்ஒளி ஏகதேசமாக வெளிப்படும். தெய்வநினைவில் திளைத்து ஆண்டவன்பால் அன்பு பெருகும். அருளறிவு வளரும். அருள் ஒளியின் ஏகதேசத்தைக் காண்பான். ஏதோ என்றுமில்லாத புத்துணர்வு தோன்ற அதை அனுபவித்து மகிழ்வான். இதற்குச் சீவ துரியம் என்று பெயர். இந்நிலையில் மனம் நாபியில் நிற்கும்.

இவை நான்கும் கீழாலவத்தை எனவும் கூறப்படும். இந்த அவத்தைகளுக்கு உட்பட்டவர்கள் ஏனைய மக்களைக்காட்டிலும் அறிவு விளங்கியவர்கள். எதையும் ஊன்றி விசாரித்து உண்மை காணுபவர்கள். எல்லாப் பொருள்களுக்கும், எல்லாச் செயல்களுக்கும், எல்லாப் பண்புகளுக்கும் மற்றெல்லாவற்றிற்கும் முதற் காரணமாக உள்ள இறைவனை எப்போதும் நெஞ்சில் வைத்தவர்கள். இவர்களைத் தத்துவத்துரிசு நீங்கிய, தத்துவவிளக்கம் பெற்ற சத்துவகுணப் பெரியோர்கள் என்று கூறலாம். கல்வி, கேள்வி அறிவு சிறந்து அன்பு, அடக்கம், சால்பு எல்லாம் பெருகித் தூய்மை, வாய்மை, நல்லொழுக்கம் விளங்க, உயிர்க்கெல்லாம் உதவிசெய்து நல்வாழ்வு வாழ்ந்து வரும் சாதுக்களாய் இருப்பர்.

இதற்கும் மேல்நிலை **சுத்தசாக்கிரம்** எனப்படும். இங்கு மாயா மலமும், சஞ்சித கன்மமும் அகலும்.

முன்னரே ஆணவ மலத்தின் அதிகரிப்பு அடங்குமென்றும் கன்ம மலத்தில் ஒரு கூறுகிய ஆகாமியம் துளிர்விடாது என்றும் கண்டோம். ஆதலால் சாதகனுக்கு மலங்கள் ஒருவாறு நீங்கிய அனுபவம் கைகூடும். யான் எனது என்னும் செறுக்கற்று எல்லாம் சிவன் செயல் என்ற எண்ணம் இடையருது நிலைக்கும். என் செயலால் ஆவதொன்றுமில்லை என்றபோது கன்மம் வேலை செய்யாது. ஒருகால் நேர்ந்தபோது அருட்டுணையால் நீக்கிக் கொள்ளுவான். இம்மையுலகத்தியலில் நாட்டமில்லாதொழியும். ஆகவே, அசுத்தமாயா மலத்திரைகள் படலம் படலமாகக் கழலும். ஞான சபையில் காட்டியருளியபடி இகலோக லட்சியமுள்ள முதல் மூன்று திரைகள் நீங்கும். இவற்றை நாம் நன்முற்சியால் நீக்கிக்கொள்ளவேண்டும் என்று அடிகள் விளக்குகின்றனர். இந்த நிலையைச் சுத்தசாக்கிரம் என்று கூறுப.

சாதகன் மனத்தைப் புருவமத்தியில் நிறுத்தி அருள் ஒளியை நாடி நிற்பான். அவனுக்குப் பித்த நாடி துடித்துப்பேசும். முன்னர்க் கூறிய இந்திரிய ஒழுக்கமும், கரண ஒழுக்கமும், சீவ ஒழுக்கமும் கைகூடிய இவனுக்குக் கனவும் தெய்வம் பற்றியதாக இருக்கும். பற்றற்ற நிலையில் உயிர்களுக்கு உண்மையான தொண்டு செய்யும் கனவு காண்பான். வாதநாடி அடிக்கும் இந்நிலை சுத்த சொர்ப்பனம் ஆகும். உயிர்களிடத்து இரக்கமும் ஆண்டவன்பால் அயரா அன்பும் கொண்ட இவனுக்குத் தூக்கம் வராது; சற்றுத் தூங்கினுல்

அருள் நினைவுடன் தூங்குவான். அறிவற்றநிலை வராது. இதற்குச் **சுத்தசுழுத்தி** என்று பெயர். இந்நிலையிலிருந்தவண்ணம் தன்னைச் சுற்றிலும் ஒரே வெளிச்சம் இருப்பதாக உணரும் அடுத்த நிலைக்கு வருவான். இதற்குச் **சுத்ததுரியம்** என்று பெயர். அவனுக்குச் சிலேத்தும நாடி இளைழந்து ஓடும். உடம்பெல்லாம் வியர்க்கும். கண்களில் நீர் பெருகும். கண்டறியாத இன்ப உணர்ச்சி உண்டாகும். அகமகிழ விழித்தெழுவான். மீண்டும் அந்நிலைக்குப் போக ஆசைப்படுவான். அடுத்த படிக்கு எடுத்தடிவைப்பான்.

இந்நிலைக்குப் **பரசாக்கிரம்** என்று பெயர். இந்த நிலையையும், இதன்மேலுள்ள ஒருசில நிலைகளையும் கண்டறிந்ததாகவும் அவற்றிற்கு மேலுமுள்ள கடவுளைக் காண இயலவில்லை என்றும் உபநிடதங்கள் ஓலமிடுவதாகச் சுவாமிகள் கூறுகின்றனர். இதன் உண்மையைச் சிறிது காண்பாம்.

தோன்றுபர சாக்கிரமுங் கண்டோ மந்தச்
சொர்ப்பனுமுங் கண்டோமேற் சுழுத்தி கண்டோம்
ஆன்றபர துரியநிலை கண்டோ மப்பால்
அதுகண்டோ மப்பாலா மதுவுங் கண்டோம்
ஏன்றஉப சாந்தநிலை கண்டோ மப்பால்
இருந்தநினைக் [illegible]ரகிலோ மென்னே யென்று
சான்றஉப நிடங்களெலாம் வழுத்த நின்ற
தன்மயமே சின்மயமே சகசத் தேவே.

—திரு. 1 : 5 : 63

என்று உபநிடதங்களின் இயலாமை கூறப்படும்.

வேதாந்தக் களஞ்சியங்களாக விளங்கும் இவற்றுள் **மாண்டூக்கிய உபநிடதம்** முதல்முதலாக சாக்கிரம், சொர்ப்பனம், சுழுத்தி, துரியம் ஆகிய அனுபவ நிலைகளைச் சிறப்பித்துக் கூறுகின்றது. (1–12) இந்நிலைகளைத் தவத்திருவாளர் **சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்** அவர்கள் தமது மெய்ப் பொருள் நூலில் நன்கு விளக்கியுள்ளனர். "ஜாக்கிரதை என்பது முதல் அவத்தை. இதில் உயிர் உலகத்துப் பொருள்களைப்பற்றிய அறிவு உடையதாக இருக்கும்; எல்லாவற்றையும் நுகர்ந் திருக்கும். உடலில் அழுந்திய பற்று உடையதாக இருக்கும்; உடலின் உதவி இந்நிலைக்கு மிக அவசியமானது. இரண்டாவதுநிலை சொர்ப்பனம். இங்கு உயிர் நுணுக்கமான பொருள்களை புலன்வழி நுகரும். சாக்கிரத்தில் அனுபவித்ததை யொட்டி உயிர் தனக்கென்ற ஒரு புது உலகத்தையே அமைத்துக்கொண்டு உடம்பின் உதவியின்றித் தங்குதடையில்லாமல் எங்கும் திரியும். மூன்ருவது நிலைக்குச் சுழுத்தி (சுழுப்தி) என்று பெயர். இந்நிலையில் கனவோ, ஆசையோ இருப்பதில்லை. உயிர் பிரம்மத்துடன் ஏகதேசமாக ஒன்றி ஆனந்தத்தை அனுபவிக்கும். நல்ல தூக்கத்தில் உள்ள இந்நிலை விருப்புகளினுலோ உயிருக்கு உண்டாகும் தொல்லைகளினுலோ தடைபடுவ தில்லை. எதை எப்படி அனுபவிக்கிருேம் என்று தெரியாத அறிவு நிலைதான் இது. இதனைத் தூங்கும்போதுள்ள அறிவற்ற நிலையென்று சொல்ல முடியாது.

இதற்கும் மேலான நிலை ஒன்றுண்டு. இந்நிலையில் அகத்திலும் புறத்திலும் எப்பொருளும் தோன்றாது. சுய அறிவு விளங்கும். இதற்குத் துரியமென்று பெயர். தூக்கமின்மையால் பெறப்படும் ஊக்க உணர்வு இந்நிலையில் தொழில்படும். இதனைத் தூக்கமின்மையென்றாவது ஊக்க உணர்வு என்றாவது இவ்விரண்டுமென்றாவது (இந்நிலையனுபவத்தை) கூறமுடியாது. காணப்படாதது; அனுமானிக்க இயலாதது; நினைவிற்கெட்டாதது; அறிய வொண்ணாதது; விவரிக்க முடியாதது; புலன்களுக்கு அப்பாற்பட்டது; அறிவாற்றலின் பூரணம்; நிலைத்த சாந்தியுடையது; ஒன்றானது; பூரண இன்பமானது; உயிர் பிரம்மத்தின் இடமாக ஐக்கியமுற்றவிடம்; இதுவே பிரம்மத்தின் சுகம்; இதுவே ஆத்ம நிலைக்களம்'' என்று விளக்கந் தந்துள்ளார்.

இவ்வாறாக மாண்டூக்கிய உபநிடதம் சாக்கிரம் முதலான அனுபவநிலைகளைக் கூறும். துரிய முடிவில் அனுபவிக்கப்படுவதாகிய ஆன்ம தரிசனத்தில் விளங்குவதுதான் பிரம்மம் என்றும், அகம்பிர்ம்மாசி என்ற மகாவாக்கியத்தின் நுட்பம் துரியத்தில் அனுபவமாகும் என்றும் கூறுப. இந்த துரியத்தைத்தான் சுவாமிகள் பரதுரியமாகக் கொண்டனர். இப்பரதுரிய நிலையைத்தான் மாண்டூக்கிய உபநிடதம் தொடர்ந்துசென்று ஒன்றும் முடிவு தோன்றாமையின் மயங்கி 'ஆண்டவனே நின்னைக் காண்கிலேன்' என்று ஓலமிட்டது போலும்.

இனி, வேதாந்தம் அவத்தைகளைப் பற்றிக் கூறுவதையும் பார்ப்போம். அதனுள் அவத்தைகள் ஐந்தும் தத்துவங்களில் அடங்கும். தத்துவங்கள் முதல் தத்துவம், இரண்டாந் தத்துவம், மூன்றுந் தத்துவம் எனப்படும்.

**முதல் தத்துவம் 30.** அவையாவன: பூதம் 5, பொறி 5, புலன் 5, கன்மேந்திரியம் 5, கன்ம விஷயம் 5, கரணம் 4, அறிவு 1.

**இரண்டாந்தத்துவம் 30.** அவையாவன: நாடி 10, வாயு 10, ஆசயம் 5, கோசம் 5.

**மூன்றுந்தத்துவம் 36.** அவையாவன: ஆதாரம் 6, மண்டலம் 3, மலம் 3, தோஷம் 3, ஏடணை 3, குணம் 3, இராகம் 8, வினை 2.

**அவத்தை 5.** அவையாவன: சாக்கிரம், சொர்ப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம். ஆகவே, வேதாந்தம் கூறும் துரியம், துரியாதீத நிலைகளைத்தான் சுவாமிகள் பரதுரியம், பரதுரியாதீதமாகக் கொண்டனர். சுத்ததுரியம், சுத்ததுரியாதீதமென இவற்றைக் கூறுவாருமுளர்.

இனி, திருமந்திரம் அவத்தைகளை விரித்துரைக்குமாறும் காண்பாம். திருமூலர் திருமந்திரத் திருமுறையால் மெய்ம்மொழிப் பொருளை உணர்த்தியருளியதாகச் சுவாமிகள் கூறுகின்றார். அவத்தைகள் ஐந்தும் அனுபவமாகுமிடங்களையும் ஆங்காங்கு ஆன்மாவுடன் கூடிக் காரியப்படும் கருவி

களையும் திருமூலர் விரித்துரைக்கின்றார். முதலி லுள்ள சாக்கிரத்தில் பதினான்கு கருவிகளுடன் மனம் புருவமத்தியில் நிற்கும். கருவிகள் பதினான் காவன :

சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம் ஆகிய புலன் 5;

வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் ஆகிய கன்மவிடயம் 5;

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய கரணங்கள் 4.

கண்டன வைந்தும் கலந்தன ஓரைந்தும்
உண்டன நான்கு மோதி வுணர்ந்தபின்
பண்டை யனாதி பகர்ந்தவிச் சாக்கிரம்
அண்டம தாக வமர்ந்திருந் தானே

—திருமந்திரம் 2153.

இப்பதினான்கு கருவிகளிலே பத்துமொடுங்கி நான்கு கரணங்களுடன் உயிர் கண்டத்தில் நின்று கனவு கண்டு மறந்துவிடுதல் சொர்ப்பனம் ஆகும்.

பண்டு மொழிந்த பதினாலுந் தன்னிலே
கண்ட மதனிற் கரணங் கலந் ததுதான்
மண்டி வளைந்த மனைவாழ்க்கை தன்னிலே
கண்டு மறந்துங் கனவது வாமே

—திருமந்திரம் 2154.

சுழுத்தியாவது கரணம் நான்கில் சித்தம் அகங்காரம் ஒடுங்கி ஏனைய விரண்டுடன் உயிர் இதயத்தில் நிற்பது.

ஆன மனமு மறிகின்ற புத்தியு
மூனே யிழந்துநின் றுள்ளே யுயிர்ப்பெய்தித்
தான மிழந்து தங்கிய வாறுபோல்
ஞான மிழந்து சுழுத்திய தாமே

—திருமந்திரம் 2155

துரியம், துரியாதீதத்தை விளக்குவனவாகக் காணப்படும் மந்திரங்கள் முறையே:

கானத் தெழுந்து திரியுந் துரியந்தான்
வானத் தெழுந்துபோய் வையம் பிறகிட்டுக்
கானத் தெழுந்த கருத்தின் தலையிலே
ஊனைத் தவிர்ந்துமங் கோங்கிநின் ருனே

—திருமந்திரம் 2157

துரிய மிருப்பதுஞ் சாக்கிரத் துள்ளே
நரிகள் பதினலு நஞ்சுண்டு செத்தன
பரிய புரவியும் பாறிப் பறந்தது
துரிய மிறந்திடஞ் சொல்லவொண் ணுதே

—திருமந்திரம் 2159

இத் திருமந்திரப் பாடல்களில் பாடபேதம் மிகுந் துள்ளது. எனினும், அவத்தைகள் நன்கு விளக்கப் பட்டுள்ளன. இவை சீவசாக்கிரம் முதலான ஐந்தவத்தைகளேயாகும் என்பர். இவையன்றி பரசாக்கிரம் முதலான ஐந்தவத்தைகளும், சிவ சாக்கிரம் முதலான ஐந்தவத்தைகளும் பேசப்படு கின்றன. மேலும் மூலர் சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் என்ற மூன்று துரியங்களைக் கூறித் தத்துவமசி மகாவாக்கியத்தின் உண்மையை விளக்குகின்ருர். சீவதுரியத்தில் ஆன்மா தொம்பத

நிலையையும், பரதுரியத்தில் தற்பத நிலையையும், சிவதுரியத்தில் அசிபதநிலையையும் கூடுமென்பர்.

சீவ துரியத்துத் தொம்பதம் சீவனர்
தாவு பரதுரி யத்தினிற் தற்பதம்
மேவு சிவதுரி யத்தசி மெய்ப்பத
மோவி விடுந்தத் துவமசி உண்மையே

—திருமந்திரம் 2568

மற்று, அவத்தைகளைப்பற்றிச் சித்தாந்தம் கூறுமாறுங் காண்பாம். சிவஞானபோத நான்காஞ் சூத்திரம் ஐந்தவத்தைகளைச் சொல்லும். இவற்றைச் சிவஞானசித்தியார் விரித்துரைக்கும். சாக்கிரம் 35 கருவிகளுடன் புருவமத்தியிலும், சொர்ப்பனம் 25 கருவிகளுடன் கண்டத்திலும், சுழுத்தி மூன்று கருவிகளுடன் இதயத்திலும், துரியம் இரண்டு கருவிகளுடன் நாபியிலும், துரியாதீதம் ஒரு கருவியுடன் மூலாதாரத்திலும் நிகழுமென்று கூறும். இதனுள் கூறப்படும் கருவிகள் மேற்குறிப்பிட்ட கருவிகளுடன் சிறிது வேறுபடும்.

சாக்கிரம் முப்பத் தைந்து நுதலினிற் கனவு தன்னில்
ஆக்கிய இருபத் தைந்து களத்தினிற் சுழுனை மூன்று
நீக்கிய இதயந் தன்னில் துரியத்தி லிரண்டு நாபி
நோக்கிய துரியா தீதம் நுவலின் மூலத்தி னென்றே.

--சிவஞானசித்தியார் 4: 33.

மேலும், சகல கேவல சுத்தங்கட்கு ஏற்பக் கீழாலவத்தை, மத்தியாலவத்தை, நின்மலாவத்தை எனக் காரியாவத்தை 15 ஆகவும், இவையன்றிக் காரணாவத்தை மூன்றும் கூறப்பட்டுள்ளன.

இவற்றுள் நின்மல துரியாதீதத்தே ஆன்மா பணியற நின்று சிவத்தைத் தரிசித்து ஆனந்தத்தில் அழுந்திநிற்குமென்பர். நின்மல துரியாதீதந்தான் சுவாமிகள் கூறும் சிவதுரியாதீதமாக இருத்தல் கூடும்.

இவையன்றி வீரசைவசாத்திரமாகிய **சுத்த சாதகத்துள்** குமாரதேவர் தொம்பத நிலையில் ஆகாமிய கன்மமும் ஆணவமும் நீங்குமென்று கூறுகின்றார் (இது சீவதுரியநிலை). தற்பத நிலையில் சஞ்சிதமும் மாயையும் அகலுமென்பர் (இது பரதுரிய நிலை). அசிபத நிலையில் பிராரத்தங் கழலுமென்பர் (இது சிவதுரிய நிலை). இவரது அனுபவ நிலைகள் திருமந்திரத்தை ஒத்துள்ளன. குமாரதேவர் அனுபவங்கள் சுவாமிகள் கூறும் அனுபவ நிலைகளில் சிவதுரியம் வரை ஒத்துள்ளன. ஆகவே, சீவதுரியம் முதலான மூன்று துரியங்கள் வரை மலங்கள் தொடர்ந்துவந்து சிவதுரியத்தில் முற்றிலுமகலுமென்பதாயிற்று. மேற்குறிப்பிட்ட நின்மலாவத்தைகள் அடிகள் கூறும் சிவசாக்கிரம் முதலான அவத்தைகளை ஒக்கும்போலும் என எண்ணவேண்டியிருக்கிறது.

இஃதிங்ஙனமாக, சுவாமிகள் கூறும் பரசாக்கிரம் முதலான நிலையனுபவங்களை நோக்குவாம். பரசாக்கிரம் புகுந்த சாதகனுக்குச் சுத்தமாயா திரைகள் நீங்கத்தொடங்கும்.

சுத்தமா மாயைத் தொடர்பறுத் தருளை
அத்தகை காட்டும் அருட்பெருஞ் ஜோதி

—திரு. 6:1:835

என்றதனுல் அருள் ஒளியைக் காணும் பேறு பெறு வான். அவ்வொளி அவனை உயிர்தளிர்ப்பச் செய் யும். இந்நிலையை மனம் போகும் நிலை என்பர்.

"அருளொளி அகலாதோங்கு மருட்பர சாக்கிரந்தான்
இருள்மனப் பகுதிபோன விடம்அதற் கப்பாலான"

"மனமற்ற பரிசுத்த நிலையை யருள்வாய்"

என்று தாயுமான அடிகள் விழைந்ததுமிதுவே.

அடுத்தது பரசொர்ப்பனம். சுத்தமாயை அற நீங்குதலின் ஒளிநலமுற்று ஆனந்தந் தோன்றும். இதில் ஆன்மா அழுந்திக்கிடப்பதைப் பரசுழுத்தி என்பர். இதன்மேல் விளைவது பரதுரியம். இந்நிலை யில் சஞ்சிதகன்மம் அகலுமென்றும் இதனைத் தற்பதநிலையனுபவம் என்றும் கூறுப. ஆணவம், கன்மம், மாயாமலங்கள் நீங்குவதால் ஆன்மா அருள் ஒளியில் அருள்வல்லபங் கண்டு போற்றி அலகிலா அருளின்மேல் ஆசைபொங்க ஆண்ட வனை வழுத்தி அருளுருவங்கண்டு இன்புற்றிருக் கும். 'பரதுரிய அனுபவம்' என்று ஆண்டவனருளை திருவடிப்புகழ்ச்சியில் கூறுமாறுங் காண்க. கரணமெல்லாங் கரைந்து தன்னைக் கண்டு தெளித லும் இங்குதான். பரதுரிய அனுபவத்தில் சாதகன் ஆன்மதரிசனம் பெறுவான். சன்மார்க்கத்தில் முதல்முதலாகக் கிடைக்கப்பெறும் பெரிய இலாபம் இது. தன்னைக் கண்டபோதுதான் தலை வனைக் காணமுடியும்.

ஆன்மா அணுமாத்திரையானது; கோடி சூரியப் பிரகாசம் உள்ளது. இதன் பெருமையை

உணரமுடியாதவண்ணம் மாயா திரைகள் மறைத்துவந்தன. அவை விலகியபோது ஆன்ம ஒளி காணப்படும். தன்னை அறிந்து இன்பமுறு வதும் இந்நிலையில்தான். தன்னையறியாதார் இறை வனை அறிதலில்லை என்பதை,

> அருளறி யார்தமை யறியார் எம்மையும்
> பொருளறி யார்எனப் புகன்றமெய்ச் சிவமே
>
> —திரு. 6 : 1 : 993

என வரும் அடிகளில் அறியலாம். உலக நடையில் எழுவதும், விழுவதும், இறங்குவதும், ஏறுவதும், வீணாக எண்ணுவதும், நண்ணுவதும், புவனபோகங் கள் யாவினுஞ் சென்று சென்று சுற்றுவதும், சுழலுவதுமாக இருந்த மனம் அடங்கி ஒடுங்கிப் போவது இந்நிலையிலேயே. இவ்விடத்தில் சாதக னுக்கு எல்லாம் ஒளிமயமாகத் தோன்றும். இதற்கு அருட்ஜோதி என்று பெயர். அருட்ஜோதி பெற்ற பரிசுகொண்டு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனது பெருமையை அறிய முனைவான். 'அருள்ஜோதி அளித்தனையேல் நின்னைக் கண்டுகொள்வேன்' என்று கூறி திருவருட் பூரணத்திற்கிரங்கி நிற்கும் சாதகனுக்குப் பிராரத்த கன்மமும் போயகலும். மலபரிபாகம் பெற்ற ஆன்மா திருவருளாகிய திருவடியைக் காணும் பேறு பெறும் இந்நிலைக்குப் **பரதுரியாதீதம்** என்று பெயர். சிலர் இதை மனம் போனவிடம் என்பர். ஆனல் மனம் ஆன்ம சிற் சத்தியாக மாறி மூலாதாரத்திற் சென்று அருள் நலந்துய்த்துக் கிடக்கும். இந்நிலையில் தத்துவநிலை களை மறைத்துநிற்கும் திரைகள் எல்லாம் நீங்கும்.

அதனால் சாதகன் தத்துவாதீத மேல்நிலையை அடைவான். இவனுக்குச் சித்திகள் எல்லாம் கைகூடும். சித்திகளையெல்லாந் தெரிந்துகொண்டு மேல்நிலைக்கேறுதல் சன்மார்க்கநெறி. இவ்விடத்தில் கைவரப்பெறுஞ் சித்திகளைக் கண்டு இதனைச் சிவநிலையாகக் கருதி ஏமாந்த சாதுக்கள் பலர் என்ப. சுத்த சன்மார்க்க சாதகன் ஜீவகாருண்ய ஒழுக்கம் கைவரப்பெற்று ஆன்மானுபவம் விளங்கி சத்விசாரத்தில் அழுந்திநிற்பான். புருவமத்தியில் நிலைத்து வரும் அருள்ஒளியின் துணைகொண்டு மிகச்சிறந்த மேற்படிக்கு ஏறுவான்.

இந்த அனுபவ நிலைக்குச் **சிவசாக்கிரம்** என்று பெயர். ஆண்டவனைக் காண ஆசைபொங்கித் துடிப்பான். அன்பே உருவாய், இரக்கமே நினைவாய், அருளே அறிவாய், அருட்பெருஞ் ஜோதியே நாட்டமாக உயிர்கள் உவப்ப உதவி மகிழ்வான். இறைவனது தனிப்பெருங் கருணையை உள்ளவாறு அறிந்து அழுவான். பல பெரியோர்கள் பரதுரியத்திலும், பலர் பரதுரியாதீதத்திலும், மேலும் பலர் சிவசாக்கிரத்திலும் ஆன்ம ஒளியைக் கண்டு இன்புற்று அருள்ஒளி கண்டு ஆற்ருது அதையே முடிந்த நிலையாகக் கருதி அவ்வளவில் நின்றனர் என்ப. இவர் இந்நிலையனுபவங்களைப் பெறுதற்குரிய திருவருள் வல்லபந்தான் பெற்றனர்போலும்.

சிவசாக்கிர நன்னிலைக்கேறிய சாதகன் தானும் தன்னுணர்வும் ஒருங்குறக் கரைந்து அருளம்மைபால் தவழ்ந்து நிற்பான். அவளருளாலே அருட்பெருஞ்ஜோதி அப்பனைக் காணும்

சித்தி பெறுவான். பெறுவதோடன்றி அவனருளாலே அருள்மயமாவான். இந்நிலையில் ஆண்டவனைத் தோள் தழுவும் பெரும்பேறு கிடைக்கும். இவ்வனுபவ நிலையைத்தான் சிவசாக்கிரம் என்பர். இதைக் குருசாக்கிரம் என்றுங் கூறுவர்.

என்னுடைய தனித்தோழி இதுகேள்நீ மயங்கேல்
எல்லாம்செய் வல்லவரென் னின்னுயிர்நா யகனார்
தன்னுடைய திருத்தோளை நான்தழுவுந் தருணம்
தனித்தசிவ சாக்கிரமென் றினித்தநிலை கண்டாய்
பன்னுமிந்த நிலைபரசாக் கிரமாக உணரேல்
பகர்பரசாக் கிரமடங்கும் பதியாகும் புணர்ந்து
மன்னுநிலை மற்றிரண்டுங் கடந்தகுரு துரிய
மாநிலையென் றுணர்கவொளிர் மேனிலையி லிருந்தே

—திரு. 6: 82:74

இறைவனது தோள் தழுவும் இந்த நிலையை மணிவாசகப்பெருமான் பெற்றதாக ஒரு குறிப்பு காணப்படுகின்றது.

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்று
ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்கா ணம்மானாய்

—திருவாசகம்.

என்பது காண்க.

சுவாமிகள் இதனை இனித்தநிலை யென்பர். இஃது அருள்வெளியில் நிகழ்வது. இவ்வெளியில் ஆனந்த அனுபவம் உண்டாகும். சாதகன் தனக்குப் புருவமத்தியில் ஓங்கும் ஒளியருளிய ஒளியை, குருசிவபதியை, ஜோதியுட் ஜோதியின் சொரூபத்தை, அருட்பெருஞ் ஜோதியை அவனருளால் கண்டு இன்புறுவான்.

கண்டேன் அருட்பெருஞ் ஜோதியைக் கண்டுகளி
கொண்டேன் சிவானந்தக் கூத்தாடிக் கொண்டிக்
குவலயத்தே
தொண்டே திருவம்ப லந்தனக் காற்றிச் சுகவமுதம்
உண்டேன் உயிர்தழைத்து ஓங்குகின் றேன்உள்
ளுவப்புறவே

—திரு. 6: 85:5

என்பதால் அறிக. அளவைகளனைத்துங் கடந்து நின்றோங்கும் அருட்பெருஞ்ஜோதியைக் கண்ட அவனுக்குத் திருவருட் சுதந்தரம் கிடைக்க வேண்டும். இதுவும் அவனருளாலேதான் கிடைக்கும். திருவருளைச் சுதந்தரமாகப் பெற்றாலன்றிச் சாதகனுடைய பூதவுடல் சுத்ததேகமாக மாட்டாது. மரணப் பெரும்பிணி வந்தேதீரும். ஆகவே, அருளொளியால் அழியாதோங்கும் வடிவத்தைப் பெறவேண்டும். இதனை யுட்கொண்டு இறைவனது அருள்நடங் காண, அருட்பேறு பெற விரைவான். ஆண்டவனைக் காட்டிக்கொடுத்த திருவருளை நினைந்து அதில் அழுந்திய பற்றுடைய வனாகி அருட்சோதியை இற்றைப்பொழுதே, இக்

கணத்தே தரவேண்டும் என்று அலறுவான். உயிர் போகுமுன் உன்னருள் வேண்டும் என்று துடிப்பான். அரைக்கணமுந் தரியேன் என்று அலமருவான்.

மதிமுடியெம் பெருமான்நின் வாழ்த்தன்றி மற்றோர்
செயலறியேன் எனக்கருளத் திருவுளஞ்செய் திடுவாய்
திருவெழுத்தைந் தாணையொரு துணைசிறிதிங் கிலனே
—திரு. 6 : 116 : 4.

என்று ஐந்தெழுத்தின்மேல் ஆணையிடுவான்.

வரையற்ற சீர்பெரு வாழ்வுதந் தென்மன மன்னியென்றும்
புரையற்ற மெய்ந்நிலை யேற்றிமெய்ஞ் ஞானப்
பொதுவினிடைத்
திரையற்ற காட்சி யளித்தின் னமுதத் தெளிவருளி
நரையற்று மூப்பற் றிறப்பற் றிருக்கவு நண்ணினனே.
—திரு. 6 : 75 : 4.

நான்மறந்தே னெனினுமெனைத் தான்ம[illegible] னெனது
நாயகனென் றுடுகின்றேன் எனி[illegible]து வரையும்
வான்மறந்தேன் வானவரை மறந்தேன்மா லயனை
மறந்தேனம் முருத்திரரை மறந்தேனென் னுடைய
ஊன்மறந்தே னுயிர்மறந்தே னுண[illegible]ர்ச்சியெலா மறந்தேன்
உலகமெலா மறந்தேனிங் குன்னைமறந் தறியேன்
பான்மறந்த குழவியைப்போல் பாரேலிங் கெனையே
பரிந்துநின தருட்ஜோதி புரிந்துமகிழ்ந் தருளே.
—திரு. 6 : 31 : 8.

உரியவரு ளமுதளித்தே நினைத்துதிப்பித் தருள்வாய்
உலகமெலாங் களித்தோங்க வோங்குநடத் தரசே
—திரு. 6 : 31 : 10.

சுந்தர வடிவச் ஜோதியாய் விளங்குஞ்
    சுத்தசன் மார்க்கசற் குருவே
தந்தருள் புரிக வரமெலாம் வல்ல
    தனியருட் ஜோதியை யெனது
சிந்தையிற் புணர்ப்பித் தென்னொடுங் கலந்தே
    செய்துவித் தருள்கசெய் வகையே

—திரு. 6 : 14 : 20.

சீரிடம் பெறுமோர் திருச்சிற்றம் பலத்தே
    திகழ்தனித் தந்தையே நின்பாற்
சேரிட மறிந்தே சேர்ந்தனன் கருணை
    செய்தருள் செய்திடத் தாழ்க்கில்
யாரிடம் புகுவேன் யார்துணை யென்பேன்
    யார்க்கெடுத் தென்குறை யிசைப்பேன்
போரிட் முடியா தினித்துய ரொடுநான்
    பொறுக்கலே னருள்கவிப் போதே

—திரு. 6 : 16 : 1.

அருள் ஒளிப் பிழம்பினைக் கண்டவன் அவ்வருளை நினைந்து **சிவசொர்ப்பனம்** சேர்வான். ஆண்டவனைக் கண்ட பெருஞ்சுகத்தைக் கனவில் அனுபவிப்பான்.

கண்ணுறங்கேன் உறங்கினுமென் கணவரொடு கலக்கும்
    கனவேகண் டுளமகிழ்வேன்

—திரு. 6 : 82 : 2.

அருட்பெருமையையும் ஆண்டவனது பெருமையையும் எண்ணி அருளறிவில் நிலைத்துச் **சிவசுழுத்தி** யென்னும் பெருநிலை புகுவான். அருள்

உருவம் வேண்டி அருள்நினைவாய் அருள்ஒளியில் அழுந்திய சாதகன் அருள் நிறையும் உபசாந்த மெய்துவான். உபசாந்தப்பதம் (1 : 1 : 20) என்றும் உபசாந்த வெளியிலுறும் அனுபவம் ஒருங்கநிறை உண்மைவெளியே (6 : 100 : 21) என்றும் சிவ சுழுத்தியனுபவம் கூறப்படும். இதன்மேல் உள்ளது சிவதுரியம். இது மவுனநிலையென்றும், மௌனவெளியில் நிகழ்வதென்றும், மௌன அணை மேற்கொண்டு இருப்பதெனவும் கூறப்படும். சிவ துரிய நன்னிலை மனங்கடந்தது, மதிகடந்தது; தவப்பேரனுபவமாகிய இந்நிலையிலிருந்து சன் மார்க்க நிலை அனுபவங்கள் தொடங்குதலின் திரு வருட் டுணைகொண்டு மேலுள்ள சிவநிலைகளைத் தனித் தலைப்பில் சிந்திப்பாம்.

அருட்பெரு வெளியில் அருட்பெரு உலகத்
　　தருட்பெருந் தலத்துமே னிலையில்
அருட்பெரும் பீடத் தருட்பெரு வடிவில்
　　அருட்பெருந் திருவிலே அமர்ந்த
அருட்பெரும் பதியே யருட்பெரு நிதியே
　　அருட்பெருஞ் சித்தியென் னமுதே
அருட்பெருங் களிப்பே அருட்பெருஞ் சுகமே
　　அருட்பெருஞ் ஜோதியென் னரசே

—திரு. 6 : 4 : 1.

# 5. சிவநிலையனுபவம்

சிவதுரியம் முதலான மேல்நிலைகளில் சிவா னுபவம் பேசப்படும். சுத்த சன்மார்க்கம் இந்நிலையி லிருந்து தொடங்குவதால் இவை சுத்தசன்மார்க்க நிலைகள் என்றுங் கூறப்படும். இவற்றுள் சாதகன் சிவத்தை அனுபவிப்பான். ஆதலின், இவையெல் லாம் சிவநிலையனுபவ மெனப்படும். தத்துவங் களையெல்லாங் கடந்து தத்துவாதீத மேல்நிலையில் சித்திகள் எல்லாம் விளங்கப்பெற்றுச் சிவநிலை தெரிந்திடச் சென்ற தவமுதியோர் தாமும் தம் முணர்வும் ஒருங்குறக் கரைந்துபோயினர் என்று கூறிய அடிகள் அவனருளால் ஒல்லும் வகையெல் லாம் சொல்லுகின்றேன் என்று தமது சுத்த சன்மார்க்கச் சத்திய அனுபவங்களைக் கூறி யுள்ளனர்.

சிவதுரிய நன்னிலையை உற்ற ஆன்மா சுத்த சன்மார்க்கஞ் சார்ந்து நிற்கும். சிவதுரியத்தைக் குருதுரியம் என்றுங் கூறுவர். "தத்துவராயர், முத்துத்தாண்டவர் முதலிய மகான்கள் குருதுரியம் வரையில் சொல்லுவார்கள்" என்று அடிகள் குறிப்பிடுகின்றார். சுத்தசித்தாந்தம், சுத்தவேதாந்தம் முதலான ஆறந்த அனுபவ நிலைகளை அறிந்தனுபவித்த சுத்த ஞானிகள் சிவநிலை தெரிந்திடச் சென்றனர். சிவத்தோடு ஒத்த அந்நிலையில் அவர்கள் சிவமாகிக் கரைந்து போயினர். சிவத்தை விழுங்கிய அவர்களைச்

சிவம் விழுங்கிநின்றது என்றுங் கூறலாம். மெய் யுணர்ந்த வாதவூர்மலேயைச் சுத்த வெளியாக்கிச் சிவம் அதில் கலந்துகொண்டது. இது சிவத் தியல்பு.

சரியையில் சரியை முதலான சரியைநிலே நான்கையும், கிரியையில் சரியை முதலான கிரியைநிலே நான்கையும், யோகத்தில் சரியை முதலான யோகநிலே நான்கையும் அடிகள் தனித் தனி கண்டறிந்தனர். ஞானத்திற் சரியை முதலான சிவஞானநிலேகள் நான்கினையும் அருள் ஒளி கொண்டு அறிந்து அதன்மேல் உண்மைநிலேயைப் பெற்றனர். அதுபோலவே சிவசித்தாந்தம் முதலான ஆறந்த நிலேயனுபவங்களேயும் பெற்ற னர். அதன்பின் ஓங்கும் சிவானுபவத்தால் சமரச சன்மார்க்கம் பெற்று அதனுல் இறவாமையுற்று சுத்த சன்மார்க்க நிலேயனுபவங்களேயும் பெற்று விளங்குகின்றனர். இதனே,

சரியைநிலே நான்கும்ஒரு கிரியைநிலே நான்கும்
தனியோக நிலேநான்கும் தனித்தனிகண் டறிந்தேன்
உரியசிவ ஞானநிலே நான்கும்அருள் ஒளியால்
ஒன்றென்ருய் அறிந்தேன்மேல் உண்மைநிலே பெற்றேன்
அரியசிவ சித்தாந்த வேதாந்த முதலாம்
ஆறந்த நிலேயறிந்தேன் அப்பால்நின் ருேங்கும்
பெரியசிவ அனுபவத்தால் சமரசசன் மார்க்கம்
பெற்றேன்இங் கிறவாமை யுற்றேன்காண் தோழி

—திரு. 6 : 82 : 93

என்றதால் அறியலாம். அன்றியும், "சித்தாந்தம்

வேதாந்தம் முதலான அந்தங்களெல்லாம் தனித் துரைக்கும் பொருளைச் சுத்தசிவ சன்மார்க்க நிலையில் இருந்து அருளாம் பெருஞ்ஜோதி கொண்டு அறிதல் கூடும்'' என்பர். ஆகவே, சிவானுபவத்தால் சமரச சன்மார்க்கம் பெறுதலும் சுத்த சன்மார்க்க நிலைநின்று சிவத்தை அறிந்து அனுபவித்தலும் ஒன்றையொன்று பிணைத்துள்ளது. முதற்கண் சிவதுரிய அனுபவம் சன்மார்க்கத் தொடக்கத்தில் நுகரப்படும். இவ்வுண்மையை

"குருதுரியங் காண்கின்றேன் சமரசசன் மார்க்கம்
கூடினேன்.................... —திரு. 6 : 82 : 95

என்பதாலும், "சிவதுரிய அனுபவமான மெய்ம்மையே சன்மார்க்கமாம்'' என்பதாலும் அறியலாம். சிவதுரியத்தில் நுகரப்படும் மெய்யான அனுபவம் சன்மார்க்கம் எனப்படும். வாய்மை, உண்மை என்ற சொற்கள் இருக்கவும் மெய்ம்மை என்றது ஏன்? சன்மார்க்க நெறியில் சிவமாதற்கு முனைந்து நிற்கும் ஆன்மா மலமெலாம் நீங்கிய பூதவுடலில் நின்றுதான் சிவதுரியம் அனுபவிக்கும் என்பதை உணர்த்தும்.

சன்மார்க்கத்தைச் சுவாமிகள் என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந்தானே என்றும், மலங்களுக்கும், பிணிகளுக்கும், புழுக்களுக்கும் இருப்பிடமாகிய நம்முடல் சுத்தசன்மார்க்கத்தைச் சேர்ந்தால் நித்தியமான சுத்த தேகமாகுமென்றும் கூறுவர். இது சிவதுரிய அனுபவம். இந்நிலையில் ஆன்மா சிற்சத்தி நிலையிலிருந்து அருட்சத்தியாகும். அருட் கூத்தாடும் ஆண்டவன் மருவிடப்

பெறுவான். இதனைப் புறப்புணர்ச்சி யென்பர். இது புத்தமுதம் உண்டு சாதகன் பூரிக்குந் தருணம்; எங்கணும் பேரொளி மயமாக இருக்கும். தூய ஒளியை நிரந்தரமாகப் பெறுவான். ஊன் உடம்பு பொன்னுடம்பாக மாறிப் பொலியும். இச்சிவதுரிய சுக அனுபவத்தை ஆண்டவன் அன்பருக்கே தருவான். ஆதலின் அன்புருவாகி அருளை நாடி நிற்கும் சாதகன் சிவானந்த மயமாகி நிறைவான்.

குருதுரியங் காண்கின்றேன் சமரசசன் மார்க்கம்
கூடினேன் பொதுவிலருட் கூத்தாடும் கணவர்
மருவிடப்பெற்று அவர்வடிவ நான்ஆனேன் களித்து
வாழ்கின்றேன் எதிரற்ற வாழ்க்கையிலென் தோழி
—திரு. 6 : 82 : 95

அகம்புணர்ந்தார் புறம்புணர்ந்தார் புறப்புணர்ச்சித்
தருணம்
தூயவொளி பெற்றுஅழியா தோங்குவடி வானேன்
—திரு. 6 : 82 : 99

அருட்ஜோதித் தலைவர்எனக் கன்புடைய கணவர்
அழகியபொன் மேனியைநான் தழுவிநின்ற தருணம்
இருட்சாதி தத்துவங்க ளெல்லாம்போ யினவால்
எங்கணும்பே ரொளிமயமா யிருந்தனவாங்
கவர்தாம்
—திரு. 6 : 82 : 97

துன்பறுத் தொருசிவ துரிய சுகந்தனை
அன்பருக் கேதரும் அருட்பெருஞ் ஜோதி
—திரு. 6 : 1 : 183

வான்பதிக்குங் கிடைப்பரியார் சிற்சபையில் நடிக்கும்
மணவாளர் எனைப்புணர்ந்த புறப்புணர்ச்சித்
தருணம்
தான்பதித்த பொன்வடிவந் தனையடைந்து களித்தேன்
—திரு. 6 : 82 : 94

புறப்புணர்ச்சி என்கணவர் புரிந்ததரு ணந்தான்
புத்தமுத நானுண்டு பூரித்த தருணம்
—திரு. 6 : 82 : 98

ஆகவே, சிவதுரிய அனுபவமான மெய்ம்மையே சன்மார்க்கத் தொடக்கமென்றும், என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் என்றும், பெரிய சிவவனுபவத்தால் சன்மார்க்கம் பெற்றேனென்றும், சன்மார்க்கஞ் சார்ந்த பரிசதனால் சிவதுரியங் கூடினேன் என்றும், சிவதுரியத்தில் ஆண்டவனைப் புறத்தில் கூடுதல் நிகழுமென்றும், அதனால் சுத்ததேகம் பெற்று இறவாமை உற்றேனென்றும், புறப்புணர்ச்சித் தருணம்தான் புத்தமுதம் தாம் உண்டு பூரித்த தருணமென்றும், அந்நிலையில் எங்கணும் பேரொளிமயமாய் இருந்ததென்றும், அப்போது சிவானந்தமயமாகி நிறைவுற்றேனென்றும் சிவதுரியப் பெற்றியினை உரைத்தருளுகின்றார்.

அடுத்தது சிவதுரியாதீதம். இந்தச் சிவானுபவ நிலையில் திருவருள் பூரணமாகக் கிடைக்கும்; அருள்ஒளி நிறையும். சாதகன் அருள் வடிவம் பெறுவான்; ஆனந்த அனுபவமுறுவான். சுத்த சன்மார்க்கநிலையனுபவங் கைகூடும். ஆண்ட

வனை மீண்டும் புறத்திற் கலந்து களிப்பான். திருக் கணவருடன் சன்மார்க்க சபைக்கேகவுஞ்செய் வான். திருவருட் சுதந்தரம் கிடைக்கும். எல்லாம் அருட்செயல் என்று செம்மாப்பான். ஆண்டவனைக் கலந்து கலந்து இன்புறுவான். புணருந்தொறும் பெறும் போகம் பின்னும் புதிதாய் இருப்பதுகண்டு இறும்பூதெய்துவான். அகப்புணர்ச்சியின் ஏற்றம் எத்தகைத்தோ என ஏங்குவான்.

இந்த நல்ல சுகநிலையில் ஆண்டவனை இன்புற்ற பரம்பொருள் திருமால். இதனை அடிகள் அகத்துறையில் கூறுகின்றார்கள். ஆண்டவன் தலைவனாகவும், அடிகள் தலைவியாகவும், மனம் உயிர்த்தோழியாகவும் கொண்டு எழுந்தது அனுபவமாலை. அதில் தன்னை இடித்துரைத்த தோழிக்குத் தலைவி உரிமைகிளத்தல் என்னும் துறையில் அமைந்துள்ளது இத்திருப்பாட்டு. தலைவியை நோக்கித் தோழி கேட்கின்றாள், "தாழ் குழலி! நீ ஆண்மகன்போல் நாணமச்சம் விடுத்துச் சபைக்கேறுகின்றேன் என்றனை! ஈதென்ன?" என்று. அதற்குத் தலைவி கூறுகின்றாள், "என் வாழ்விற்கமைந்த கணவரைப் புறத்தணைந்தாள் ஒருத்தி; அவளுக்கு மால் என்று பெயர்; ஓர் வளையாழிப் படையாள்; ஆழ்கடலில் துயில் கின்றாள்; மாமணி மண்டபத்தே ஆனந்த வல்லி யாக ஆள்கின்றாள்; அவளை ஆண்மகனாய் அறிந்திலையோ? நான் ஆண்மகனாகின்றது அதிசயமோ?" என்று.

தாழ்குழல்நீ ஆண்மகன்போல் நாணமச்சம் விடுத்தே
சபைக்கேறு கின்ருய்என் றுரைக்கின்ருய் தோழி
வாழ்வகையென் கணவர்தமைப் புறத்தணைந்தா ளொருத்தி
மாலெனும்பே ருடையாளோர் வளையாழிப் படையாள்
ஆழ்கடலிற் றுயில்கின்ருள் மாமணிமண் டபத்தே
ஆள்கின்ருள் ஆண்மகனுய் அறிந்திலேயோ அவரைக்
கேழ்வகையில் அகம்புணர்ந்தேன் அவர்கருணை அமுதம்
கிடைத்ததுநா ணுண்மகனு கின்றததி சயமோ

—திரு. 6 : 82 : 52

இவ்வாறு சிவதுரியாதீதத்தே அருள்நிலை பெற்ற சாதகன் இப்பெற்றியை நினைந்து,

மருள்வடிவே யெஞ்ஞான்று மெவ்விடத்தும்
ஏதனுலு மாய்வி லாத
அருள்வடிவா யிம்மையிலே யடைந்திடப்பெற்
ருடுகின்றேன் அந்தோ அந்தோ

—திரு. 6 : 73 : 10

என்றுகூறி அதிசயிக்கின்ருன். மேலும், இந்நிலையில்தான் அருளனுபவங் கிடைக்கும். இப்பெரும் பேரனுபவம் பரநாதத்தின்மேல் நிகழ்வது. பரநாதம் என்பது சிவந்திகழும் நவநிலைகளுள் முடிவானது. பரநாதநிலையதன்மேலிருப்பது திருவடி நிலை. சுயஞ் சுடரிற்றுலங்குகின்ற திருவடிகள் "பற்பூத நிலைகடந்து நாதநிலைக்கப்பால், பரநாதநிலையதன் மேல்விளங்கு" மென்றும், இவை நான்முகனும் திருமாலும் அறிதற்கரிதாயின என்றும் கூறுவர். திருச்சிற்றம்பலத்தே இன்பத் திருவுருக்கொண்டு அருளாம் திருநடஞ்செய்யும் திருவடிகள் தம்மை

வழிபடுவார் அறிவின் கண் அறிவாய், அவ்வறிவில் விளைந்த சிவானந்த அமுதாகி இனிக்கும். இவ் வுண்மைகளை,

அறிவாலே அறிவினை அறிகின்ற பொழுதங்
கனுபவ மாகின்ற தென்னடி தாயே
செறிவாலே பிறிவாலே தெரியாது தெரியும்
திருவருள் உருவமென்று அறியாயோ மகளே
—திரு. 6 : 132 : 53

அருளாலே அருளிறை அருள்கின்ற பொழுதங்
கனுபவ மாகின்ற தென்னடி தாயே
தெருளாலே மருளாலே தெரியாது தெரியும்
திருநட வின்பமென் றறியாயோ மகளே
—திரு. 6 : 132 : 52

என்பதனாலும்,

திருச்சிற்றம் பலத்தின்பத் திருவுருக்கொண் டருளாந்
திருநடஞ்செய் தருளுகின்ற திருவடிக ளிரண்டும்
அருச்சிக்கும் பேரன்பர் அறிவின்கண் ணறிவாய்
அவ்வறிவில் விளைந்தசிவா னந்தஅமு தாகி
உருச்சிக்கும் பரநாதத் தலங்கடந்துஅப் பாற்சித்
துருவுகடந் திருக்குமென உணர்ந்தோர்சொல் வாரேல்
—திரு. 6 : 83 : 7

என்பதனாலும் அறியலாம்.

பரிக்கிரக நிலைமுழுதுந் தொடர்ந்தோ மேலைப்
பரவிந்து நிலையனைத்தும் பார்த்தோம் பாசம்
எரிக்குமியல் பரநாத நிலைக்கண் மெல்ல
எய்தினேம் அப்பாலு மெட்டிப் போனேந்
தெரிக்கரிய வெளிமூன்றுந் தெரிந்தோம் எங்குஞ்
சிவமேநின் சின்மயம்ஓர் சிறிதுந் தேறேம்
—திரு. 1: 5: 64

எற்பூத நிலையவர்தம் திருவடித்தா மரைக்கீழ்
இருப்பதடிக் கீழிருப்ப தென்றுநினை யேல்காண்
பற்பூத நிலைகடந்து நாதநிலைக் கப்பால்
பரநாத நிலையதன்மேல் விளங்குகின்ற தறிநீ

—திரு. 6: 82: 15

தனிப்பர நாத வெளியின்மேல் நினது
தன்மயம் தன்மய மாக்கிப்
பனிப்பிலா தென்றும் உள்ளதாய் விளங்கிப்
பரம்பரத் துட்புற மாகி
இனிப்புற வொன்று மியம்புறு இயல்பாய்
இருந்ததே அருளனு பவம்

—திரு. 4: 9: 4

துரியவெளி தனிற்பரம நாதவணை நடுவே
சுயஞ்சுடரிற் றுலங்குகின்ற துணையடிகள்

—திரு. 4: 2: 19

உருவமொரு நான்காகி யருவமும்அவ் வளவாய்
உருவருவொன் றுகியிவை ஒன்பானுங் கடந்து
துருவமுடி யாப்பரம துரியநடு விருந்த
சொருபஅனு பவமயமாந் துணையடிகள்

—திரு. 4: 2: 80

உலகமெலாம் உதிக்கின்ற வொளிநிலைமெய் யின்பம்
உறுகின்ற வெளிநிலைஎன் றுபயநிலை யாகி
இலகியநின் சேவடிகள்..............

—திரு. 4: 2: 1

மீதானத் தொளிர்கின்ற விளக்கமாகி

—திரு. 1: 5: 2

மீதானத் தருள்ஒளியாய் விளங்கியநின் னடிகள்

—திரு. 4: 2: 31

என்றெல்லாம் விளக்கியபடியால் திருவடிகள் விளங்குவது பரநாதத்தின்மேலே; அத்துணையடிகள் ஒளியனுபவத்தையும், வெளியனுபவத்தையும் விளக்குவன; அவை இன்பத் திருவுருக்கொண்டு அருளாம் திருநடம் செய்வதும் பரநாதங் கடந்தே; அருளனுபவம் விளங்குவதும் பரநாதத்திற்கப்பால்; பரநாதத்தில் பாசங்கள் எரிக்கப்பட்டுத் தனித்த சாதகன் அருள்ஒளியில் ஆழ்ந்து அருள் வடிவுற்றுத் திளைப்பது சிவதுரியாதீதமாகிய பரநாதத் தலத்தின்மேலே என்பது போதரும். எனவே, சிவ துரியாதீதமென்னும் சிவானுபவநிலையும் அருள் நிலை விளங்கு சிற்றம்பலமென்னும் சிவசுகாதீத வெளியும், மகாமௌன நிலையும், மீதானம் என்ற திருவடிப்படியும், நவநிலைகளுக்குள் மேலான பரநாதத்தலத்தின் மேலிடமும் ஒன்று என்பது விளங்கும்.

சாதகனுக்கு இப்பெரிய அனுபவத்தைத் தந்து அருள்நெறியில் ஏறச்செய்துவருவது அருட்செயல். திருவருள் நிரந்தரமாக நிலைத்துள்ளவிடத்தைத் திருச்சிற்றம்பலம் என்பர். இங்குத் திருவடிகள் விளங்குதலின் அருள்நடம் புலனாகும். திருவருள் இயக்கம் திருநடம் எனப்படும். அது சாதகனுக்குப் புருவமத்தியில் அருள்ஒளியாய் அனுபவமாகும். 'என்புருவ நடுவிருந்தான்' என்று அடிகள் கூறுவர். சிவதுரியாதீத மேல்நிலையில் இவ்வருள் ஒளி அகலாதோங்கி நிரந்தரமாக நிலைக்கும்.

தனித்தபர நாதமுடித் தலத்தின்மிசைத் தலத்தே
தலைவரெலாம் வணங்கநின்ற தலைவன் நட ராஜன்
இனித்தசுக மறிந்துகொளா இளம்பருவந் தனிலே
என்புருவ நடுவிருந்தான் பின்புகண்டே னில்லை
—திரு. 2: 88; 10

என்பது காண்க.

புருவமத்தியில் இரண்டு எலும்புகள் இணைகின்றன. மண்டை ஓட்டில் நெற்றி எலும்பும் மூக்கெலும்பும் இணைகின்ற இடத்தைப் புருவமத்தி என்று கூறுகிறோம். நெற்றியெலும்பின் அடியில் முக்கோணவடிவான ஒரு கூடு உள்ளது. அதற்கு Ethmoid Air Sinus என்று பெயர். அதற்குமேல் நெற்றி எலும்பில் மற்றுமொரு நீண்ட கூடு உண்டு. இதுவும் சற்று நீண்ட முக்கோண வடிவானது. இதற்கு Frontal Air Sinus என்று பெயர். இவையிரண்டும் நெற்றியெலும்பில் குழியாக உள்ளன. மண்டை ஓட்டை புருவமத்திக்கு நேரே அறுத்துப் பார்த்தால் இவை காணப்படும்.

அடியில் உள்ள கூட்டிற்குச் சன்மார்க்கத்தில் சிற்சபை என்று பெயர். இதனை விந்து, முச்சுடர், அறிவு, முச்சந்தி, முப்பாழ், நெற்றிக்கண் கபாடம், சபாத்துவாரம், மகமேரு, மூலம், சாகாத்தலை என்றெல்லாங் கூறுவர். சாதகனுக்குச் சிற்சபையிலும் பொற்சபையிலும் பேர்ஒளி புலனுகும். அவ்வொளியைக் காணப்பெறுவது மிகச்சிறந்த பேறு ஆகும். தவப்பெரும் புண்ணியர்கள் அருள் ஒளியைக் காணுகின்றனர். இவ்வொளியைக்

காணப்பெற்ருல் மனித்தப்பிறவியும் நமக்கு நிச்சயமாக வேண்டும். இதைக் கண்டவர் இறப்ப தில்லை; சுத்தமாதி தேகங்கள் கிடைக்கப்பெறுவர். மேலும், சிற்சபையைக் கண்டவர்கள் சித்திகளை யெல்லாம் செய்வார்கள். பொற்சபையுட் புகுந்த வர்கள் புந்திமகிழ்வார்கள். மேலும் பொற்சபையை ஆன்ம ஆகாசம் என்றும் சிற்சபையைச் சீவாகாசம் என்றும் கூறுவர். மேலும், சுத்தசன்மார்க்கத் திற்குப் படிகள் மூன்று என்றும் அவை சிற்சபை, பொற்சபை, ஞானசபை என்றும் கூறுப. இம்மூன்று சபைகளிலும் பொதுவாக அருள் ஒளி நிறைந்துள்ளது. இம்மூன்று சபைகளிலும் அருள் ஒளியைச் சுதந்தரமாகப் பெற்று அவற்றிலுறும் ஆனந்த நடங்கண்டு அனுபவித்து, ஒளிநெறியில் தனிச்செங்கோல் நடத்திவருபவர்கள் அருட் பெருஞ்ஜோதி ஆண்டவனேயாகிய அடிகள். இவற்றுள் பொற்சபையில் அருளொளிக் காட்சி யனுபவமும், சிற்சபையில் அருளமுதுண்டு தேக்கும் அனுபவமும் சிறப்பாக உண்டாகும். ஒளியின் ஒளியிலே, ஒளியொளியின் ஒளிநடுவிலே ஒன்ருகி, நன்ருகி, நின்ருடுகின்ற அருள்ஒளி என்று ஒளிநலம் பேசப்படுகின்றது இவற்றைப் பின்வரும் அடிகளிற் காண்க.

பண்புறு சிதம்பரப் பொற்சபையு மாயதன்
பாங்கோங்கு சிற்சபையு மாய்த்
தெற்றியலு மச்சபையி னடுவினட மிடுகின்ற
சிவமாய் விளங்கு பொருளே

—திரு. 6 : 100 : 15

சிற்சபை யப்பனைக் கண்டுகொண் டேன்அருட்
தெள்ளமுதஞ்
சற்சபை யுள்ளந் தழைக்கவுண் டேனுண்மை தானறிந்த
நற்சபை சித்திக ளெல்லாமென் கைவச நண்ணப்
பெற்றேன்
பொற்சபை யோங்கப் புரிந்தாடு தற்குப் புகுந்தனனே
—திரு. 6 : 75 : 3

பெரியபொற் சபையில் நடம்புரி கின்ற பேரருட் ஜோதியே
—திரு. 6 : 20 : 26

சிற்சபை நடமும் பொற்சபை நடமும் தினந்தொறும்
பாடிநின் ருடி
—திரு. 6 : 20 : 16

சிற்சபை யின்பத் திருநடங் காட்டித்
தெள்ளமு தூட்டியென் சிந்தையைத் தேற்றிப்
பொற்சபை தன்னிற் பொருத்தியெல் லாஞ்செய்
பூரண சித்திமெய்ப் போகமுந் தந்தே
— திரு 6 : 33 : 4

சிற்சபையிடத்தும் பொற்சபையி னிடத்தும்
ஓங்குநடத் தரசே
—திரு. 6 : 38 : 86

சிற்சபையும் பொற்சபையுஞ் சேர்வித்தானை
—திரு. 6 : 42 : 4

கள்ளுண்டா ளெனப்புகன்ருர் கனகசபை நடுவே
கண்டதுண்டு சிற்சபையில் உண்டதுமுண் டடிநான்
—திரு. 6 : 82 : 12

சிற்சபைபொற் சபையோங்கித் திகழ்பெரிய துரையே
—திரு. 6 : 78 : 10

என்றெல்லாங் கூறிய அடிகள்,

சிற்சபையும் பொற்சபையுஞ் சொந்தமென தாச்சு
தேவர்களும் மூவர்களும் பேசுவதென் பேச்சு
—திரு. 6 : 168 : 2

சிற்சபையைக் கண்டோமென்று சின்னம்பிடி
சித்திகள்செய் கின்றேமென்று சின்னம்பிடி
பொற்சபை புகுந்தோமென்று சின்னம்பிடி
புந்திமகிழ் கின்றேமென்று சின்னம்பிடி
—திரு. 6 : 167 : 2

என்று சிற்சபைப் பெற்றியையும், பொற்சபைப் பெற்றியையுங் கூறுவர். அடுத்தபடியாக மேலே யுள்ள "சிற்பொதுவும், பொற்பொதுவும் நானறிய லாச்சு, சித்தர்களும் முத்தர்களும் பேசுவதென் பேச்சு" (திரு. 6 : 168 : 8) என்றும் கூறுவார். இப்பொதுவில் பூரண சிற்சிவம் நடம்புரியா நிற்கும்; சிவம் விளக்க விளங்கும்; சிவம் விளங்க ஓங்கும். இவ்வுண்மையை,

பொதுவென்றும் பொதுவினடம் புரியா நின்ற
பூரணசிற் சிவமென்றும்
— திரு. 1: 5: 66

வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே
—திரு. 6: 2: 1

என்றமையால் அறியலாம். மேலும், சிற்சபையும் பொற்சபையும் சொந்தமானபோது தம்மைப் பற்றித் தேவர்களும் மூவர்களும் பேசிக்கொண் டார்கள் என்றும், சிற்பொதுவும் பொற்பொதுவும் தாம் அறிந்தபோது சித்தர்களும் முத்தர்களும் தம் பேச்சுபேசினர் என்ற அடிகள் தமக்கு ஆண்டவன்

முடிந்தமுடிவில் தேவரும், மூவரும்,சித்தரும், முத்தரும் யாவரும் பெற்றிடா இயல்பளித்தான் என்றுங் குறிப்பிடுகின்றார்.

சன்மார்க்கத்தில் பல அமுதங்கள் சொல்லப் படுகின்றன. அவை இருவகைப்படும். வெளி உலகாகிய அண்டத்தில் கிடைக்கும் அமுதங்கள் ஒரு சில; நமதுடலாகிய பிண்டத்தில் கிடைப்பன ஒரு சில. அண்டத்தில் அகஅமுதம், புறஅமுதம், அகப்புற அமுதம், புறப்புற அமுதம் என நான்கு கூறப்படும். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன் அகஅமுதால் சத்திசத்தர்களை அருளினிற் காப்பன் என்றும், அகப்புற அமுதளித்து ஐவராதிகளைக் காப்பனென்றும், புறஅமுதளித்துத் தேவரையெல்லாங் காப்பன் என்றும், புறப்புற அமுதம்பொழிந்து உயிர்களையெல்லாங் காப்பன் என்றுங் கூறுவர். பிண்டத்தில் அருளமுதே முதல் ஐவகையமுதும், இயலமுதே முதல் எழுவகையமுதும், எண்வகை, நவவகை அமுதும் மற்றுள அமுதவகையெலாம் எனக்கே உற்றுணவளித்தருள் ஓங்கு நற்றாயே என்பார். இவற்றிற்கெல்லாம் தலையாயது அருளமுதம். இதனை,

இன்னருளமுதளித்து இறவாத்திறல் புரிந்து
என்னை வளர்த்திடும்என் இன்புடைத் தாயே

என்று கூறி இதன் சிறப்புகளையும் கூறுகின்றார்.

கரும்புறு சாறுங் கனிந்தமுக் கனியில்
விரும்புறு மிரதமு மிக்கதீம் பாலும்
குணங்கொள் கோற்றேனும் கூட்டியொன் றாக்கி
மணங்கொளப் பதஞ்செய் வகையுற வியற்றிய

உணவெனப் பலகால் உரைக்கினும் நிகரா
வணமுறு மின்ப மயமே யதுவாய்க்
கலந்தறி வுருவாய்க் கருதுதற் கரிதாய்
நலந்தரு விளக்கமு நவிலருந் தண்மையும்
உள்ளதா யென்று முள்ளதா யென்னுள்
உள்ளதா யென்றன் உயிருள முடம்புடன்
எல்லா மினிப்ப இயலுறு சுவையளித்
தெல்லாம் வல்லசித் தியற்கைய தாகிச்
சாகா வரமுந் தனித்தபே ரறிவும்
மாகா தலிற்சிவ வல்லப சத்தியும்
செயற்கரு மனந்த சித்தியு மின்பமும்
மயக்கறத் தருந்திறல் வண்மைய தாகிப்
பூரண வடிவாய்ப் பொங்கிமேற் றதும்பி
ஆரண முடியுட னாகம முடியுங்
கடந்தென தறிவாங் கனன்மேற் சபைநடு
நடந்திகழ் கின்றமெய்ஞ் ஞானவா ரமுதே

—திரு. 6: 1: 1256—1274

இந்த அருளமுதம் சிற்சபை எனப்படும் புருவ மத்தியில் உண்டாகும். இதனைச் சாதகன் உண்டு, தேக்கி இன்புறுவான். இந்த அமுதங்களை மனித தேகம் பெற்ற எல்லா ஆன்மாக்களும் பெற்று அனுபவிக்கலாம். புருவமத்தியில் புண்ணியன் நடமாட வேண்டிநின்றால் அருளமுதஞ் சுரக்கும். இதனை அடிகள்,

தம்மைமறந்து அருளமுதம் உண்டு தேக்கும்
தகையுடையார் திருக்கூட்டம் சார்ந்து நாயேன்
வெம்மையெலாந் தவிர்ந்துமனங் குளிரக் கேள்வி
விருந்தருந்தி மெய்யறிவாம் வீட்டில் என்றும்

செம்மையெலாம் தரும்மௌன அணைமேற் கொண்டு
செறிஇரவு பகலொன்றும் தெரியா வண்ணம்
இம்மையிலே எம்மையினுங் காணுச் சுத்த
இன்பநிலை யடைவேனே ஏழை யேனே
—திரு. 1: 5: 93

எனக் கூறி ஏங்குகின்றனர். சிவதுரியாதீதம் மகா மௌன நிலையாக அனுபவிக்கப்படும் என்று முன்னர்க் கூறினேம். மேலும் இந்நிலையில் இராப் பகல் இல்லாத அனுபவமும் கைகூடும். சுவாமிகள் வெண்ணிலவை நோக்கி இராப் பகலில்லா விடத்தே தாம் இருக்க விழைகின்றார். அவ்விடத் தில்தான் அருளமுதங் கிடைக்குமென்றும் அடிகள் விளக்குகின்றனர்.

கண்டேன் களிக்கின்றேன் கங்குல்பக லற்றவிடத்
துண்டே னமுத முவந்து.
—திரு. 6: 109: 19

எல்லாவகையான அமுதங்களையுந் துய்த்து உடம்பெல்லாம் அமுதம் ஊற்றெடுத்து ஓடி நிரம்பிநிற்கும் சாதகன் அருளமுதம் உண்டு சுத்த தேகம், பிரணவதேகம் பெற்று ஞானதேகம் விழைந்து ஆண்டவனை “எழில் பொதுவில் வாழ் ஞானதேகா கதவைத்திற” என்று இறைஞ்சுவான். வான்வடிவன் என்றும் இன்புருவினன் என்றும் ஏத்தித் துதிக்கப்பெறும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன் பிரணவதேகத்திலுள்ள சாதகனை ஞானதேகியாக்கிக் கலந்து நிற்பான். இவ்வனு பவம், அருட்சத்தியாகி அருளனுபவத்தில் திளைத்து விளையாடும் சாதகனுக்குச் சிவதுரியா

தீதத்தில் அகப்புணர்ச்சித் தருணம் கிடைக்கும். அதற்கு மேலுமுள்ள சிவநிலைகளுங் கைகூடும். இம்மேல்நிலைகள் சுத்த சன்மார்க்கத்தில் கூறப் படுகின்றன.

தத்துவமசி, அகம்பிர்ம்மாஸ்மி, சிவோகம் முதலான மகா வாக்கியங்களின் முற்றமுடிந்த அனுபவங்களும் சிவாத்வைதம், சுத்தாத்வைதம், விசிட்டாத்வைதம் முதலான நிலைகளின் அனுப வங்களும் சிவதுரியாதீதத்திற் பெறப்படும். சிவா னுபவம், சிவபோகம் எனுமிவற்றுள் ஆன்மா சிவமாகிச் சிவத்துடன் கலக்கும். சிவானுபூதி யில் ஆன்மா கெட்டுக் கூடுமா, கெடாது கூடுமா, கூடிக் கெடுமா என்ற ஐயங்கள் நிகழ்வதற்குச் சன்மார்க்கத்தில் இடமில்லை. ஏனெனில், பூத வுடல் அருட்டுணையால் அன்புருவாகி அதன்பின் ஆண்டவனருளால் அருளுருவாகி அப்புறம் ஆண்டவன் துணையால் இன்புருவம் எனப்படும் ஞானதேகமாக மாறிவரும்போது ஆன்மா அருட் சத்தியாகி சுத்தசிவபரம்பொருளை சிவவெளியில் புறத்தும், அகத்தும் புணர்ந்து பெரும்பேரின்ப வெள்ளத்தில் திளைத்து நிற்கும். ஏனையோர் “உலகவர்போல் சடலம் ஓய உயிர்முத்தி இலகும்” என்று கொண்டனர். அதனால், “மலமெலாங் கழிந்தவழியும் சிவானுபூதி ஒன்றிற்கே உரிய தாகிய ஆன்மா அரன்கழற் செலுமேயாயினும் உயிரைச் சேர்ந்த இறைவனும் தமக்குரிய எண் குணங்களையும் அவ்வுயிரின்கண் பதிப்பித்துத் தன்னோடொப்பச்செய்து நிற்பான் ஆயினும்,

ஐந்தொழில் முதலியவைகளைப் பெறமாட்டாது" என்றனர். சீவன்முத்தி, பதமுத்தி, பரமுத்தி, அருவச் சித்தி, அருவுருவச் சித்தி முதலான சித்தி யனுபவங்களிலும் ஆன்மா சிவத்துடன் அநந்நிய மாய், அத்துவிதமாய்க் கலந்தின்புறும் என்றும் கூறுவர். சுத்த சன்மார்க்கத்தில்,

அருள்பெறில் துரும்புமோர் ஐந்தொழில் புரியும்
தெருளிது எனவே செப்பிய சிவமே

—திரு. 6 : 1 : 983

என்றும்,

தங்கோ ளளவது தந்துஅருட் ஜோதிச்
செங்கோல் செலுத்தெனச் செப்பிய தந்தையே

—திரு. 6 : 1 : 1133

என்றும்,

தன்பொரு ளனைத்தையுந் தன்னர சாட்சியில்
என்பொரு ளாக்கிய வென்றனித் தந்தையே

—திரு. 6 : 1 : 1135

என்றும்,

உலகுயிர்த் திரளெலாம் ஒளிநெறி பெற்றிட
இலகுமைந் தொழிலையும் யான்செயத் தந்தனை

—திரு. 6 : 1 : 1577

என்றும்,

வானே மதிக்கச் சாகாத வாழு யெல்லாம் வல்லசித்தே
வயங்க வுனையுட் கலந்துகொண்டேன் வகுக்குந்
தொழிலே முதலைந்தும்
நானே புரிகின் றேன்புரிதல் நானோ நீயோ நானறியேன்
நான்நீ யென்னும் பேதமிலா நடஞ்செய் கருணை
நாயகனே

—திரு. 6 : 58 : 3

என்றுங் கூறியவதனுல் ஆன்மா சிவகுணங்களைப் பெறுதல் மட்டுமின்றி சிவவடிவுற்று சிவமேயாகி எல்லாம் சிவமயமாய் பேதமற்று நிலைக்கும். சன்மார்க்கம் விளக்கும் சிவானுபவ மேல்நிலைகளை வேதாந்தம் சித்தாந்தம் முதலிய அந்தங்கள் புறங் கவியச் சொல்லவில்லை என்பர். இவ்வுண்மையை அடிகள்,

வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின்
மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாகி
—திரு. 1 : 5 : 4

என்றும்,

சுத்தவே தாந்த மவுனமோ வலது
சுத்தசித் தாந்தரா சியமோ
நித்தநா தாந்த நிலையனு பவமோ
நிகழ்பிற முடிபின்மேல் முடிபோ
புத்தமு தனைய சமரசத் ததுவோ
—திரு. 6 : 4 : 5

என்றும் விளக்கியவாறு கண்டுகொள்க.

இனி, சிவதுரியாதீதத்தில் அகப்புணர்ச்சியுங் கூறப்படும். இத்தருணத்தில் பிறப்புணர்ச்சி விடயமில்லை ; மறப்பு உணர்ச்சியுமில்லை ; எங்குஞ் சிவபோகப் பெருஞ்சுகந்தான் பெருகிநிறையும். "நானதுவாய் அதுஎன்மயமாய்ச் சின்மயமாய்த் தன்மயமான நிலை" என்று கூறியருளுகின்ருர்.

புறப்புணர்ச்சி யென்கணவர் புரிந்ததரு ணந்தான்
புத்தமுத நானுண்டு பூரித்த தருணம்
சிறப்புணர்ச்சி மயமாகி அகப்புணர்ச்சி யவர்தாஞ்
செய்ததரு ணச்சுகத்தைச் செப்புவதெப் படியோ

பிறப்புணர்ச்சி விடயமிலே சுத்தசிவா னந்தப்
பெரும்போகப் பெருங்சுகந்தான் பெருகியெங்கும்
நிறைந்தே
மறப்புணர்ச்சி யில்லாதே நானதுவாய் அதுவென்
மயமாய்ச்சின் மயமாய்த்தன் மயமான நிலையே
—திரு. 6 : 82 : 98

அருளுருவில் உள்ள சாதகன் சிற்றம்பலத்து நடங்கண்டு களித்து அவனைக்கூடி யமுதுண்டு இன்புருவடைந்து இன்புருவாகிய இறைவனைக் கலந்தின்புறுவான்.

கண்டேன் சிற்றம்பலத் தானந்த நாடகங் கண்டுகளி
கொண்டேன் எல்லாம் வல்லசித்தனைக் கூடிக் குலவியமு
துண்டேன் மெய்ஞ்ஞான வுருவடைந் தேன்பொய்
யுலகொழுக்கம்
விண்டேன் சமரச சன்மார்க்கம் பெற்ற வியப்பிதுவே
—திரு. 6 : 132 : 79

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனைத் தம்முள்ளே கண்டு கூடிக்குலவி யின்புற்று இன்புருவாய் ஆடல்செய்வதாகவும் கூறியருளுகின்றார்.

நாடல்செய் கின்றேன் அருட்பெருஞ் ஜோதி நாதனை
என்னுளே கண்டு
கூடல்செய் கின்றேன் எண்ணிய வெல்லாங் கூடியே
குலவியின் புருவாய்
ஆடல்செய் கின்றேன் சித்தெலாம் வல்லா னம்பலந்
தன்னையே குறித்துப்
பாடல்செய் கின்றே னெனக்கிது போதும் பண்ணிய
தவம்பலித் ததுவே
—திரு. 6 : 72 : 6

அன்றியும், தான் நான் என்னும் பேதந் தவிர்த்த ஆண்டவன் நான்ஆனேன் என்பர். (6: 109: 16) "அது நானய், நானதுவாய் அத்துவித மாகி நின்றேன்" என்று தமது சுத்தந்தோய்ந்த சமரசாத்துவித நிலையையுங் கூறுகின்றார். தாம் பெற்ற அனுபவத்தைத் தேனென இனிக்கும் தெள்ளுதமிழ்ப் பாக்களில் மேலுங் கூறுவார்.

நானுனேன் தானுனேன் நானுந்தா னும்மானேன்
தேனுனேன் தெள்ளமுதாய்த் தித்தித்து நிற்கின்றான்
வானுனேன் ஞான மணிமன்றி லாடுகின்றான்
கோனுனேன் என்னுட் குலாவுகின்ற கோமானே
—திரு. 6: 124: 1

தானே யருளானுன் தானே பொருளானுன்
தானேயெல் லாம்வல்ல தானுனேன்—தானேதான்
நானுனேன் என்னுடைய நாயகனு னுன்ஞான
வானுனேன் அம்பலத்தெம் மான்
—திரு. 6: 86: 5

அடுத்த மேல்நிலை **சுத்த சிவசாக்கிரம்** ஆகும். இச்சிவானுபவநிலை தேன்கலந்த சுவையுடைய தாய் நன்மணிகலந்த ஒளியுடையதாய் இயற்கை யின்பமுடையதாய் இருக்கும் என்றும் இந்நிலையில் தாம் தனித்திருந்து இறைவனைத் தழுவிக் கலந்து நின்றதாகவுங் கூறுகின்றார்.

அடுத்த மேல்நிலை **சுத்த சிவசொர்ப்பனம்**. இது அருளமுதம் வாயார உண்டு மகிழ்கின்ற நிலை. 'சுத்தசிவ சொர்ப்பனத்தே சார்ந்தேன்' என்று அடிகள் கூறினும் சுத்த சிவசாக்கிர அனுபவமே நிலைத்திருக்கும்.

அடுத்த மேல்நிலை **சுத்த சிவசுழுத்தி** இதுவுஞ் சிவங்கலந்த நிலையேயாகும் "சுத்த சிவசுழுத்தி யிலே களித்தேன்" என்றனர்.

அடுத்த மேல்நிலை **சுத்த சிவதுரியம்.** இச் சிவானுபவ நிலையில் "அதுவாய்க் கலந்து கொண் டேன்" என்பர்.

அடுத்த மேல் நிலை **சுத்த சிவதுரியாதீதம்.** இதுவே முற்றமுடிந்த நிலை. இச்சிவானுபவநிலை செனிப்பிலதாய், எல்லாமாய், அல்லதுவாய் விளங்குவது. 'சுத்தசிவ துரியாதீதத்தே சிவமய மாய் நிறைந்தேன்' என்றும், 'இத்தனையும் பெற்று இங்கே இருக்கின்றேன்' என்றுங் கூறியருளு கின்றார். இதுவே கடவுள்நிலையறிந்து அம்மய மாதல் என்னும் சன்மார்க்க நிலையனுபவம்.

நான்புகலு மொழியிதுகேள் என்னுடைய தோழி
நாயகனார் தனியுருவ நான்தழுவுந் தருணம்
வான்புகழுஞ் சுத்தசிவ சாக்கிரமென் றுணர்ந்தோர்
வழுத்துநிலை யாகுமுருச் சுவைகலந்தே யதுவாய்
தேன்கலந்த சுவையொடுநன் மணிகலந்த வொளியாய்த்
திரிபின்றி யியற்கையின்பச் சிவங்கலந்த நிலையே
தான்புகல்மற் றையமூன்றுங் கடந்தப்பா லிருந்த
சாக்கிரா தீதமெனத் தனித்துணர்ந்து கொள்ளே

—திரு. 6: 82: 75

தனிப்படுமோர் சுத்தசிவ சாக்கிர நன் னிலையில்
தனித்திருந்தேன் சுத்தசிவ சொர்ப்பனத்தே சார்ந்தேன்
கனிப்படுமெய்ச் சுத்தசிவ சுழுத்தியிலே களித்தேன்
கலந்துகொண்டேன் சுத்தசிவ துரியநிலை யதுவாய்ச்

செனிப்பிலதாய் எல்லாமாய் அல்லதுவாஞ் சுத்த
சிவதுரியா தீதத்தே சிவமயமாய் நிறைந்தேன்
இனிப்புறுசிற் சபையிறையைப் பெற்றபரி சதனல்
இத்தனையும் பெற்றிங்கே யிருக்கின்றேன் தோழி
—திரு. 6: 82: 96

என்றமை காண்க.

சுத்த சிவதுரியாதீத மேல்நிலையில் அடிகள் தமது அனுபவத்தை சி வ ம ய ம ா கி நிறைதல் என்பார். சிவமயமாகி நிறைதலைப் பலப்பல வகை யால் விளக்கியருளுகின்றார். "என்றும் நிலைத்துள்ள நித்தியமான பொன்வடிவும், மந்திரவடிவும், வான் வடிவுங் கொடுத்து எனக்கு மணிமுடி சூட்டினான். ஐந்தொழிலும் செய்திடப் பணித்தான். அகம் புறமும் நீக்கமற நிறைந்து விளங்குகின்றான். உன்னுந்தோறும் உள்ளமெலாம் தெள்ளமுதாய்த் தித்தித்துப் பேரொளிப் பிழம்பாய் நிற்கின்றான்" என்பார்.

அவனது புறவண்ணத்தை, "செம்பவளத் திருமலையோ! மாணிக்க விளக்கோ! தெய்வ மரகதத் திரளோ! செழுநீலப் பொருப்போ! பம்பு மணி ஒளியோ! நல்ல பசும்பொன்னின் சுடரோ! படிகவண்ணப் பெருங்காட்சிதானோ" என்று விளக்குவார். "பரநாதத்தே பெருஞ்ஜோதிமலை தோன்றிற்று. அதுதான் மாற்றறியாத பொன் னொளியோ! அவ்வொளிக்குள் ஆடும் வள்ளல் அருள்ஒளியோ! இஃது அதிசயிக்கும் வகை" என்பார். அவர் மேனி விளக்கம் எண்கடந்த மதி,

கதிர், செங்கனல் இவையெல்லாம் ஒன்ருகி நின்ருற்போல் விளங்கும் எனினும் போதாது. இவ்வொளியை அண்டமெலாங் கண்ணுகக்கொண்டு காணினும் காண்பதற்கு அணுத்துணையுங் கூடாதவாறு மோனவெளிக்குள் வெளியாய் விளங்கும். ஆன்மாக்களுக்கு இன்ப அனுபவந் தருவதற்காக வெருவெளியென்னும் திருவுருக்கொண்டு இன்ப நடம் புரிவான். இவ்வெளி பூதவெளி, பகுதிவெளி முதலான வெளிகள் எல்லாம் வயங்கும் வெளியாகி விசுவமுண்ட வெளி, உபசாந்தவெளி, மவுனவெளி, மாமௌனவெளி ஆகி, அதன்மேல் பரவெளியாகி சிற்பரவெளியாய், தற்பரவெளியாய் அமர்ந்த பெருவெளியாகி, அருள் இன்பவெளியாய், தனியியற்கையுண்மை வெளியாய் விளங்கும். இவ்வெளியனுபவத்தை, "இரண்டுருவு மொன்ருேம் ஆங்கே உறைந்த வனுபவந் தோழி நிறைந்த பெருவெளியோ" என்பர்.

வாய்திறவா மவுனமதே ஆகுமெனில் தோழி
  மவுனசத்தி வெளியேழும் பரத்தபரத் தொழியும்
தூயபரா பரமதுவே யென்ருலங்கு அதுதான்
  துலங்குநடு வெளிதனிலே கலந்துகரை வதுகாண்
மேயநடு வெளியென்ருல் தற்பரமாம் வெளியில்
  விரவியிடுந் தற்பரமாம் வெளியென்ருல் அதுவும்
ஆயபெரு வெளிதனிலே அடங்குமிது மட்டே
  அளப்பதொரு வாறதன்மேல் அளப்பரிது அரிதே

—திரு. 6: 84: 13

"என்னையு நின்னையும் ஒருருவாக்கி யுயிர்த் திறம்பெற அழியா அருளமுதளித்து, அருள்நிலை

அளித்து, சித்திகளெல்லாந் தெளிவித்து, எனக்கே சத்தியநிலைதனைத் தயவினில் தந்தனை, நின் பேரருள் போற்றி, நின் பெருஞ்சீர் போற்றி'' என்பார். "உலகினில் உயிர்களுக்குறு மிடையூறெலாம் விலக, நீயடைந்து விலக்குக; மகிழ்க; சுத்தசன்மார்க்கச் சுகநிலைபெறுக; உத்தமனுகுக; ஓங்குக; சுத்த சன்மார்க்கநிலையனுபவம் நினக்கே சுதந்தரமாயிற்று; அருட்ஜோதியாம் ஆட்சி தந்தோம்; நினைக் கைவிடோம்; கைவிடோம்; ஆணை நம்மாணை என்று திருவாக்களித்து என்னுள்ளே கலந்து இசைவுடன் இருந்த குருவே'' என்பார்.

"அருட்பெருஞ் ஜோதியப்பனை கண்களிற் கண்டு களிகொண்டேன் சிவானந்தக் கூத்தாடிக் கொண்டு, திருவம்பலந் தனக்குத் தொண்டாற்றிக் கொண்டு சுகவமுதம் உண்டு உயிர்தழைத்து உள்ளுவப்புற ஓங்குகின்றேன்'' என்பார்.

இறுதியாகத் தமது சிவானந்த அனுபவத்தையுங் கூறுவர்.

நிலைசா ரிறைமை அளித்தனை நான் பொதுவில் ஞான
நீதியெனும்
நிருத்தம் புரிகின் றேன்புரிதல் நீயோ நானோ
நிகழ்த்தாயே
—திரு. 6: 58: 4

தவநேய முஞ்சுத்த சன்மார்க்க நேயமுஞ் சத்தியமாஞ்
சிவநேய முந்தந்தென் னுள்ளந் தெளியத் தெளித்தனையே
நவநேய மன்றில் அருட்பெருஞ் ஜோதியை நாடிநின்ற
இவனே அவனெனக் கொள்வாருன் அன்பர் இருநிலத்தே
—திரு. 6: 85: 9

மேலும், தாமடைந்த பேற்றினை,

நோவாது நோன்பெனைப்போல் நோற்றவரு
மெஞ்ஞான்றும்
சாவா வரமெனைப்போற் சார்ந்தவரும்—தேவாநின்
பேரருளை யென்போலப் பெற்றவரும் எவ்வுலகில்
யாருளர்நீ சற்றே அறை

—திரு. 6: 74: 11

பேராலு மறிவாலும் பெரியரெனச் சிறப்பாகப் பேச நின்றோர்
ஆராலும் பெறலரிய தியாதுஅதனைப் பெறுவித்தான்

—திரு. 6: 73: 7

என்றும் கூறுவர்.

வாழி யெனைத்தூக்கி வைத்த கரதலங்கள்
வாழியெலாம் வல்ல மணிமன்றம்—வாழிநடம்
வாழி அருட்ஜோதி வாழிநட ராஜன்
வாழி சிவஞான வழி

—திரு. 6: 89: 10

# 6. சன்மார்க்கத் தெய்வம்

சன்மார்க்க மெய்ப்பொருள் நெறியில் இராமலிங்க அடிகள் கூறும் தெய்வம் ஒன்றே. இதனை அருட்பெருஞ்ஜோதி என்றும் சுத்தசிவம் என்றும் கூறுவர். இத்தெய்வம், "இயற்கை விளக்கம் என்கின்ற சத்தியஞானசபைக்கண்ணே இயற்கை உண்மை என்கின்ற சத்தியத்திருநடஞ் செய்தருளும்" என்பார். மேலும், இதனை "இயற்கையுண்மைத் தனிப்பெரும் பொருள் என்றும், இயற்கை விளக்கத் தனிப்பெரும் பதமென்றும், இயற்கையின்பத் தனிப்பெருஞ் சுகமென்றும்" கூறுவர். பெருவிண்ணப்பத்தில், "இயற்கை உண்மை நிறைவாகியுள்ள ஓர் சுத்த சிவானுபவ வெளியில் இயற்கை விளக்க நிறைவாகி விளங்கிய அருட்பெருஞ்ஜோதி சொரூபராய், இயற்கையின்ப நிறைவாகி ஓங்கிய சிவானந்த ஒருமைத்திருநடச் செய்கையை எல்லா உயிர்களுமின்பமடைதற் பொருட்டுத் திருவுளக் கருணையால் செய்தருளுகின்ற சர்வவல்லபராகிய தனித்தலைமைக்கடவுள்" என்றும் குறிப்பிடுகின்றார்.

இம் மூன்று விளக்கங்களில் ஒப்புயர்வின்றி விளங்குகின்ற ஒருவரே ஆகிய கடவுளின் இடமும், உருவமும், செயலும் கூறிய அடிகள் கடவுளின் இயல்புகளையுங் கூறுகின்றார். சிறு விண்ணப்பத்தில் இவை காணப்படும்.

"தனித்தலைமைப் பெரும்பதியாகிய பெருங் கருணைக்கடவுள் இயற்கையுண்மையர்; இயற்கை அறிவினர்; இயற்கை யன்பினர்; நிற்குணர்; சிற் குணர்; நித்தியர்; சத்தியர்; ஏகர்; அநேகர்; ஆதியர்; அநாதியர்; அமலர்; அருட்பெருஞ் ஜோதியர்; அற்புதர்; நிரதிசயர்; எல்லாம்வல்லவர்" என்று விளக்கித் தமது அனுபவம் ஒன்றையும் வெளியிடுகின்றார். "குறிக்கப்படுதல் முதலிய அளவு கடந்த திருக்குறிப்புத் திருவார்த்தைகளால் சுத்த சன்மார்க்க ஞானிகள் துதித்தும், நினைத்தும், உணர்ந்தும், புணர்ந்தும் அனுபவிக்க விளங்கு கின்ற கடவுள்" என்று சுத்த சன்மார்க்க ஞானி யாகிய அடிகள், தாம் ஆண்டவனிடம் பெற்ற திருக்குறிப்புத் திருவார்த்தைகளை நினைவுபடுத்திக் கூறுகின்றார்.

'குறிக்கப்படுதல்' என்பது ஒரு திருக்குறிப்பு போலும். வள்ளற்பெருமான் திருக்காப்பிட்டுக் கொண்ட அந்நாள் வெளியிட்ட அற்புதப் பத்திரிகையில், ஆண்டவன் அடிகளுக்கு வெளிப் படுத்திய திருக்குறிப்பு ஒன்று பேசப்படுகின்றது. "இக்காலந் தொடங்கி, அளவு குறிக்கப்படாத நெடுங்காலம், அளவு குறிக்கப்படாத அற்புத சித்திகளெல்லாம் விளங்க யாமே அமர்ந்து விளையாடுகின்றோம் என்னும் திருக்குறிப்பை வெளிப்படுத்தி" என்று எழுதியுள்ளார்.

மேலும், பதிவிளக்கத்தில் அடிகள்,

அகரநிலை விளங்குசத்த ரனைவருக்கு மவர்பால்
அமர்ந்தசத்தி மாரவர்க ளனைவருக்கு மவராற்

பகரவரு மண்டவகை யனைத்தினுக்கும் பிண்டப்
பகுதிகளங் கனைத்தினுக்கும் பதங்களனைத்
தினுக்கும்
இகரமுறு முயிரெவைக்குங் கருவிகளங் கெவைக்கும்
எப்பொருட்கு மனுபவங்க ளெவைக்குமுத்தி
யெவைக்கும்
சிகரமுதல் சித்திவகை யெவைக்குமொளி வழங்குந்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே
கண்டீர்

—திரு. 6 : 3: 1

என்று திருச்சிற்றம்பலந்தனிலே தெய்வ மொன்றுண்டு காண்மின் என்பர். இப்பாட்டிற்கு விளக்கம்போல ஞானவிண்ணப்பத்தில், "எல்லா சத்திகளுக்கும், எல்லாச் சத்தர்களுக்கும், எல்லா மூர்த்திகளுக்கும், எல்லா மூர்த்தர்களுக்கும், எல்லாத்தேவிகளுக்கும், எல்லாத்தேவர்களுக்கும், எல்லாச் சாதனர்களுக்கும், எல்லாத் தத்துவங்களுக்கும், எல்லாப் பொருள்களுக்கும், எல்லாக் குணங்களுக்கும், எல்லாச் செயல்களுக்கும், எல்லா அனுபவங்களுக்கும், மற்றெல்லாவற்றிற்கும் முதற் காரணமாயும், நிமித்தகாரணமாயும், இவையல்லவாயும் விளங்குவது திருவருட்சமூகம் என்றும், இவையனைத்திற்கும் ஒளி வழங்குவது திருச்சிற்றம் பலமென்றும் விளக்குகின்றனர்.

இங்ஙனஞ் சிறப்பிக்கப்படும் திருச்சிற்றம்பலத்தைத் தனி இயற்கை யுண்மை வெளியென்றும், எல்லாம் பெற்ற விளக்கமதாய் விளங்குகின்ற இயற்கை விளக்கமென்றும், இயற்கைத்தனி யின்பமயம் என்றும், எல்லாந்தாமாகி ஓங்குவது என்றும்

கூறுவர். திருச்சிற்றம்பலத்தே ஓங்குகின்ற தனிக் கடவுள் சமரச ஆனந்த சபைதனிலும், சுத்த சிவானந்த சபைதனிலும், எங்குமாய் விளங்குஞ் சிற்சபையிடத்திலும் இது அது என உரைப் பரிதாய்த் தங்கும் ஓர் இயற்கைத்தனி அனுபவம் என்று குறிப்பிடுகின்றார். மேலும், "எச்சபை பொதுவென இயம்பினர் அறிஞர்கள் அச்சபை யிடங்கொளும் அருட்பெருஞ்ஜோதி" என்றதுங் காண்க. இவ்வுரைகளால் ஆண்டவனது இருப் பிடம் கூறியவாறாயிற்று.

இவற்றுள், எல்லா உயிர்களும் இயற்கை விளக்கச் சபைகளே ஆதலின் நமக்கு எளிதிற் புலனாகும் உயிர்கள் ஆண்டவன் தங்கியுள்ள கோயில்கள் என்பதும் ஒன்று.

> உயிருள்யாம் எம்முள் உயிர்இவை உணர்ந்தே
> உயிர்நலம் பரவுகஎன்று உரைத்தமெய்ச் சிவமே
>
> —திரு. 6: 1: 973

என்றமை காண்க. ஆன்ம வொழுக்கம் பற்றி விளக்கவந்த அடிகள், "யானைமுதல் எறும்பு ஈறாகத் தோன்றிய சரீரங்களிலுள்ள ஜீவான்மாவே திருச்சபையாகவும், அதனுள் பரமான்மாவே பதி யாகவுங் கொண்டு யாதும் நீக்கமற எவ்விடத்தும் பேதமற்று எல்லாந்தானாக நிற்றல்" என்றதும் இதனை வலியுறுத்தும்.

மேலும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன் அருள்வெளி, சிவவெளி எனப்படும் உயர்தனிப் பொதுவெளிகளில் அனுபவிக்கப்படுவதுமுண்டு.

அனுபவநிலைகட்கு ஏற்ப அருள்வெளி நான்கு வகைப்படும். அவை பரவெளி, பரம்பரவெளி, பராபரவெளி, பெருவெளி எனப்படும். இவ்வெளிகளைத் தம்முள் அடக்கியது பெருஞ்சுகவெளி. இது சுகப்பெருவெளி என்றும் சிவவெளியென்றும் கூறப்படும். இவ்வெளிகளில்தான் சிவம் விளங்குகின்றது என்பது பொருந்தாது.

> அருள்நிலை விளங்குசிற் றம்பல மெனும்சிவ
> சுகாதீத வெளி நடுவிலே
>
> —திரு. 6: 100: 1

> திருநிலைத் தனிவெளி சிவவெளி யெனுமோர்
> அருள்வெளிப் பதிவளர் அருட்பெருஞ் ஜோதி
>
> —திரு. 6: 1: 27

என்பன காண்க. மற்று, சிவம் விளங்கும் இடத்திற்குச் சிவவெளி என்றும் அருள் விளங்கும் இடத்திற்கு அருள்வெளி என்றும் சொல்லுதல் பொருந்தும்.

ஒப்பற்ற ஒருபெருங்கடவுள் அவனாய், அவளாய், அதுவாய், இவை அலவாய், நவநிலைகளிலும் நண்ணி இருக்கின்றார். அவர் யாவுமிலார்; யாவுமுளார்; யாவுமலார்; யாவும் ஒன்றுறுதாமாகி நிற்பார்; சுத்தசிவ துரியாதீத மேல்நிலையில் சுத்தப்பிரணவ ஞான தேகத்தில், சிவவெளியில் அனுபவம் ஆவார். அவர் ஒருவரே உருவராகியும்; அருவினராகியும், உருவருவினராகியும் இருக்கின்றார். அவர் தம் மலரடி (திருவருள்)களைப் புகழ்ந்து பாடுமுகத்தான் சுவாமிகள் ஆண்ட

வனது இயல்புகளை மிகச் சிறப்பாகத் திருவடிப் புகழ்ச்சியில் பாடியுள்ளனர்.

நூற்றிருபத்தெட்டு அடியால் மிகுத்துவந்த கழிநெடிலடி ஆசிரியவிருத்தமாக அமைந்துள்ள அத்திருப்பாடலைப்போல தமிழ் இலக்கியத்தில் வேறொரு பாட்டில்லை. வடமொழிச் சொற்களாலான இந்த விருத்தப்பாவின் முதல் அடி தமிழ் எழுத்துக்களால் யாக்கப்பெற்றுள்ளது. இதில் ஆண்டவனது சிறப்பும், இயல்பும் விதந்து கூறப்படுகின்றன.

இங்ஙனங் கூறிய ஒருவரான கடவுளை இருவரென்றும், மூவரென்றும், ஐவரென்றும் உரைத்து உழல்வது ஏன்? உடலுக்கு உயிர் ஒன்றுதானே! இரண்டு மூன்று என்று கூறமுடியுமா? என்று அடிகள் வினவுகின்றார்.

உருவ ராகியு மருவின ராகியு முருவரு வினராயும்
ஒருவ ரேயுளார் கடவுள்கண் டறிமினோ வுலகுளீர் உணர்வின்றி
இருவ ராமென்று மூவரே யாமென்று மியலுமை வர்களென்றும்
எருவ ராயுரைத் துழல்வதென் உடற்குயி ரிரண்டுமூன் றெனலாமே

—திரு. 6: 128: 1

அவனோ டவளாய் அதுவாய் அலவாய்
நயமா நிலைமிசை நண்ணிய சிவமே

—திரு. 6: 1: 943

என்பன காண்க.

நவநிலைகள் யாவை? பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசன், சதாசிவன், விந்து, நாதம், பரவிந்து, பரநாதம் என ஒன்பது. இந்நிலைகளில் எல்லாம் திருவருள் பூரணமாகக் காரியப்பட்டுள்ளது. இங்குக் குறிப்பிட்ட பிரமன் வேறு வேதாந்தங்கள் கூறும் பிரம்மம் வேறு. பிர(ம்)மத்திற்கும் சிவத்திற்கும் வேறுபாடு உண்டா என்று வினவி அடிகள் விடை தருகின்றனர்.

பிரமமென்றுஞ் சிவமென்றும் பேசுகின்ற நிலைதான்
பெருநிலையே யிந்நிலையிற் பேதமுண்டோ வெனவே
தரமறிய வினவுகின்ருய் தோழியிது கேள்நீ
சமரசசன் மார்க்கநிலை சார்தியெனி லறிவாய்
திரமுறவா யினுமெல்லா மாகியல்லா தாகுந்
திருவருளாம் வெளிவிளங்க விளங்குதனிப் பொருளாஞ்
சிரமுறுமோர் பொதுவுண்மைச் சிவம்பிரம முடியே
திகழ்மறையா கமம்புகலுந் திறனிதுகண் டறியே

—திரு. 6: 84: 11

என்றமையின் பிரமமுடி சிவமென்பதாயிற்று.

பிரமாதியர் மலத்தடையால் தடையுறுபவரும் தடையுருதவரும் என இருவகைப்படுவர். இவ்வியல்பு அணுபட்ச, சம்புபட்சங்களுக்கேற்ப வேறுபடும்.

அடர்மலத் தடையாற் றடையுறு மயன்மா
லரன்மயேச் சுரன்சதா சிவன்வான்
படர்தரு விந்து பிரணவப் பிரமம் பரைபரம்
பரனெனும் இவர்கள்

—திரு. 6: 46: 3

தடையுருப் பிரமன் விண்டுருத் திரன்மா யேச்சுரன்
சதாசிவன் விந்து
நடையுருப் பிரமன் முயர்பரா சத்தி நவில்பர
சிவமெனு மிவர்கள்
—திரு. 6 : 46 : 2

தெய்வநிலைசார்ந்த இவர்களை அடிகள் படிப்படியாகக் கூறுகின்றனர்.

நான்முகர்கள் மிகப்பெரியர் ஆங்கவரிற் பெரியர்
நாரணர்கள் மற்றவர்க ளூடின்மிகப் பெரியர்
வான்முகத்த உருத்திரர்கள் மற்றவரிற் பெரியர்
மயேச்சுரர்கள் சதாசிவர்கள் மற்றவரிற் பெரியர்
மீன்முகத்த விந்ததனிற் பெரிததனில் நாதம்
மிகப்பெரிது பரையதனில் மிகப்பெரிய ளவளின்
ஆன்முகத்திற் பரம்பரந்தான் பெரிததனிற் பெரிதாய்
ஆடுகின்ற சேவடியா ரறிவார்காண் தோழி
—திரு. 6 : 83 : 21

பரையிருந்த வெளிமுழுதும் பரவியப்பாற் பரையின்
பரமாகி அப்பரத்திற் பரம்பரமாய் விளங்கித்
திரைகடந்த திருவெளியில் ஆனந்தா தீதத்
திருநடஞ்செய் யாதுசெயுந் திருவடிகள் என்றே
—திரு. 6 : 83 : 9

இத்தெய்வ நிலைகளில் பிரமத்தை விந்துநிலைக்கப்பாலும், பரையாம் பெருநிலைக்கு முன்னும் அடிகள் அமைத்துக் காட்டுகின்றனர்.

ஆகவே, பிரமன் முதலாகப் பேசப்படுகின்ற பலகடவுளர் எல்லாம் மிகப்பெரிய தெய்வ நிலைகள் என்பதும், அந்நிலைகளின் சித்தி வல்லப தரங்

களுக்கு ஏற்ப அமைத்துக்கொண்ட பெயர்களே என்பதும், இவையனைத்திற்கும் மேலாக உள்ள கடவுள் ஒருவரே என்பதும், சுத்த சன்மார்க்கத்தில் அருட்பெருஞ்ஜோதி, சுத்த சிவம் என வழங்கும் பெயர்கள் முழுமுதற்றெய்வமாகிய ஒப்பற்ற கடவுளைக் குறிப்பன என்பதும் போதரும்.

திருவருட்பா திருமுறைகளில் அருளாம் பெருஞ்ஜோதி, அரும்பெருஞ்ஜோதி, அருட்ஜோதி என்ற பெயர்களுடன் அருட்பெருஞ்ஜோதியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஆறந்த நிலைகளில் எல்லாம் சிறப்பித்து ஓதப்பெறும் பெரும்பொருளை அருளாம் பெருஞ்ஜோதி கொண்டறிதல் கூடு மென்றும், "அருட்ஜோதி அளித்தனையேல், பெரியசிவபதியே! நின் திறத்தை அறிந்துகொள் வேன்" என்றும் அடிகள் குறிப்பிடுகின்றனர். ஆதலின், அருட்ஜோதியால் அறியப்படுகின்ற பெரும்பொருள் பெரியசிவபதி என்று அறிய வேண்டும்.

அருட்ஜோதி, அருளாம் பெருஞ்ஜோதி என்ற பெயர்கள் திருவருளைக் குறிப்பன. பூரண திருவருளைக்கொண்டு, அஃதாவது அருட்ஜோதி கொண்டு அறிந்து அனுபவிக்கப்படுவது அருட் பெருஞ்ஜோதி. அருட்பெருஞ்ஜோதியே ஒன்றான முழுமுதற்றெய்வம். ஆண்டவன் என்றும், கடவுள் என்றும், சுத்த சிவமென்றும் அருட்பெருஞ்ஜோதி குறிப்பிடப்படுகின்றது.

தவருத வேதாந்த சித்தாந்த முதலாச்
சாற்றுகின்ற அந்தமெலாந் தனித்துரைக்கும் பொருளே
இவருத சுத்தசிவ சன்மார்க்க நிலையில்
இருந்தருளாம் பெருஞ்ஜோதி கொண்டறிதல் கூடும்
—திரு. 6 : 38 : 90

பெரியசிவ பதியேநின் பெருமையறிந் திடவே
பேராசைப் படுகின்றேன் பித்தர்களிற் பெரியேன்
கரியமணித் திறத்தினையுங் காணவல்லே னல்லேன்
கண்மணியே நின்றிறத்தைக் காணுதல்வல் லேனே
அரியபெரும் பொருளாமுன் னருட்ஜோதி யெனக்கே
அளித்தனையே லறிந்துகொள்வே னளித்திடுக
விரைந்தே
—திரு. 6 : 24 : 3

உன்கணவர் திறம்புகலென் றுரைக்கின்ருய் நீதான்
உத்தமனர் அருட்ஜோதி பெற்றிடமுன் விரும்பே
—திரு. 6 : 82 : 29

என்பன காண்க.

திருவருளாகிய பேரொளிகொண்டு எல்லாம் சிவமயம் எனவும், எல்லாம் தாமெனவும் உணர்வது சன்மார்க்கநெறி ஆகும். இவ்வுணர்ச்சி பரதுரிய அனுபவநிலையில் உண்டாகும். "சிவதுரிய அனுபவமான மெய்ம்மையே சன்மார்க்கமாம்" என்றபடியால் அருள்ஒளியின் துணைகொண்டு இந்நிலையை அடையவேண்டும். இந்நிலைக்குச் சென்று சன்மார்க்க நெறியில் நிற்பதற்கு ஆண்டவன் அடிகளுக்கு அருட்ஜோதி வழங்கினுன். எல்லாப் பேறுகளிலும் அரியதும் பெரியதுமான பேறு அருட்

ஜோதியைப் பெறுதலேயாம். இவ்வுண்மையை அடிகள் ஆணையிட்டு அறிவிக்கின்றனர்.

தரமிகுபே ரருளொளியாற் சிவமயமே யெல்லாந்
தாமெனவே யுணர்வதுசன் மார்க்கநெறி பிடியே
—திரு. 6: 84 : 10

அன்பனே யப்பா அம்மையே அரசே அருட்பெருஞ்
ஜோதியே அடியேன்
துன்பெலாந் தொலைத்த துணைவனே ஞான
சுகத்திலே தோற்றிய சுகமே
இன்பனே எல்லாம் வல்ல சித்தாகி யென்னுளே
யிலங்கிய பொருளே
வன்பனேன் பிழைகள் பொறுத்தருட் ஜோதி
வழங்கினை வாழிநின் மாண்பே
—திரு. 6: 55 : 1

துரிய மேற்பர வெளியிலே சுகநடம் புரியும்
பெரிய தோரருட் ஜோதியை பெறுதலே எவைக்கும்
அரிய பேறுமற் றவையெலா மெளியவே யறிமின்
உரிய விம்மொழி மறைமொழி சத்திய முலகீர்
—திரு. 6: 104: 5

என்பனவற்ருல் அறியலாம்.

அருட்ஜோதியாகிய திருவருள் நிறைவைப் பெற்ற அடிகள் அருட்பெருஞ்ஜோதியைக் கண்டனர்; களித்தனர்; சிவானந்தக் கூத்தாடினர்; சுக அமுதம் உண்டனர்; " திருவம்பலந்தனக்குத் தொண்டாற்றிக்கொண்டு, உள் உவப்புற உயிர் தழைந்து ஓங்குகின்றனன் " என்று கூருநிற்பர்.

ஆண்டவனைக் கண்ட அடிகளுக்கு ஆண்டவன் தன்னையே தந்தருளினான். சிவ பதியை, சிவகதியை, சிவபோகத்தை, அருட் பெருஞ்ஜோதி அப்பனை அப்படியே பெற்று உவந்து அடிகள் பாடுகின்றனர்.

எப்பொருளு மெவ்வுயிரு மெவ்வுலகும்
விளங்கவிளக் கிடுவான் றன்னைச்
செப்பரிய பெரியவொரு சிவபதியைச்
சிவகதியைச் சிவபோ கத்தைத்
துப்புரவு பெறவெனக்கே யருளமுதந்
துணிந்தளித்த துணையை யென்றன்
அப்பனைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்
ஜோதியைப்பெற்றே னச்சோ வச்சோ

—திரு. 6: 47: 3

என்றும்,

தன்னையே எனக்குத் தந்துஅரு ளொளியால்
என்னை வேதித்த என்தனி அன்பே

—திரு. 6: 1: 1479–80

என்றும் பாடிய அடிகள் சிவநெறியில் மேலுஞ் சென்று திளைத்தின்புறத் தலைப்படுவாராயினர்.

அமரரு முனிவரு மதிசயித் திடவே
அருட்பெருஞ் ஜோதியை யன்புட னளித்தே
கமமுறு சிவநெறிக் கேற்றியென் றனையே
காத்தென துளத்தினிற் கலந்தமெய்ப் பதியே

—திரு. 6: 101: 18

எல்லாந்தாமாகி நிலைக்குஞ் சிவானுபவத்தில் முடிந்த முடிபாக உள்ள தெய்வம் சிவமெனப்படும்,

ஆறுகோடி சமயங்களிலும், ஆறு அந்தங்களிலும் நிலைத்த தெய்வம் சிவபரம்பொருள் ஆகும். "விந்து பரவிந்து இரண்டையும் மறுக்கச் சுத்தவிந்து வந்ததுபோலும், சன்மார்க்கம் சிவசன்மார்க்கம் இரண்டையும் மறுத்தது சுத்த சன்மார்க்கம் போலும், சிவம் பரசிவம் இரண்டையும் மறுத்தது சுத்த சிவம்." பெரும்பேரருள் உடையவராய் அம்பலத்தே நடிக்கும் ஓர் தனிக்கடவுளுக்குக் கூறும் பலப்பல பெயர்களும் சித்து விளையாட்டாக வந்தன என்றும் எந்த ஓர் உயிரின் பெயரும் அவர் பெயரே என்றும், இப்பொதுமையின் உண்மை சிற்சபையில் ஆண்டவனது ஞானக்கூத்தினைக் கண்டபோது தெளிவாகும் என்றும் கூறுவர்.

பெருகியபே ரருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகையின் கணவர்திருப் பேர்புகலென் கின்றாய்
அருகர்புத்த ராதியென்பேன் அயனென்பேன் நாரா
யணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவ னென்பேன்
பருகுசதா சிவமென்பேன் சத்திசிவ மென்பேன்
பரமமென்பேன் பிரமமென்பேன் பரப்பிரம மென்பேன்
துருவுசுத்த பிரமமென்பேன் துரியநிறை வென்பேன்
சுத்தசிவ மென்பனிவை சித்துவிளை யாட்டே
—திரு. 6: 82: 88

எனினும், துரியநிலை கடந்து அதன்மேல் **சுத்தசிவநிலையாய்** உயர்வுறு சிற்றம்பலத்தே எல்லாந்தாமாகி ஓங்குகின்ற ஒருதனிக்கடவுளை,

(6: 3: 6) மெய்ப்பொருளாம் சோதிநடத்து அரசை, **சுத்தசிவநிறைவைத்** தம்முள்ளே பெற்று மகிழ்ந்த தாகவும் வெளியிடுகின்றூர் (6: 82: 92). மேலும், சுத்த சிவதுரியாதீதத்தே விளங்கும் துவாதசாந்த மும் திரியோதச நிலேயும் பேசப்படுகின்றன. நவ நிலேக்குமேலே திக்கிராந்தம், அதிக்கிராந்தம், துவாதசாந்தம் உள்ளன; அதீதத்தில் உள்ளது சுத்தசிவம். ஆதலின், அருட்சிவபதியாம் அருட் பெருஞ்ஜோதியென்றே கூறுவதும் சுத்தசிவமே அருட்பெருஞ்ஜோதியாக அதீதத்தில் விளங்குவ தென்பதுங் காண்க.

அருட்சிவ நெறிசார் அருட்பெரு நிலேவாழ்
அருட்சிவ பதியாம் அருட்பெருஞ் ஜோதி

—திரு. 6: 1: 1

துய்யஅருட் பெருஞ்ஜோதி சுத்தசிவ வெளியே
சுகமயமே யெல்லாஞ்செய் வல்லதனிப் பதியே

—திரு. 6: 38: 91

.........தனிச் சுயஞ்ஜோதிப் பொருளேச்
சுத்தசிவ மயமான சுகாதீதப் பொருளேக்
.........கண்டுகொண்டேன்

—திரு. 6: 43: 6

என்றமையால் சுத்தசிவமும் அருட்பெருஞ்ஜோதி யும் ஒன்றே என்பது விளங்கும்.

சுத்த சன்மார்க்கத்தை விளக்குதற்பொருட்டு தம்மை உருவாக்கிய ஆண்டவன் "இருநிலத்து இயல்அருள் ஒளியால் பூதநல் வடிவொடு"

ஞான சற்குருவாய் எழுந்தருளி சிவரகசியமெலாம் உணர்த்தியருளினுன் என்பர். எல்லா உயிர் களுக்கும் இன்ப அனுபவம் தருவதற்கு ஓர் திருவுருக் கொண்டு பொற்பொதுவில் இன்பநடம் புரிகின்ற அருட்ஜோதித் தெய்வம் பொது உணர்வால் உணரப்படுவதன்றி பிரித்து அது வெனிற்றேன்ருது என்றும் உளவினுல்தான் அறிய லாம் என்றும் அறிவிக்கின்ருர்.

பொதுஉணர் உணரும் போதலால் பிரித்தே
அதுவெனிற் ருேன்ரு அருட்பெருஞ் ஜோதி
—திரு. 6: 1: 121

உளவினில் அறிந்தா லொழியமற் றளக்கின்
அளவினில் அளவா அருட்பெருஞ் ஜோதி
—திரு. 6: 1: 122

இன்னும் இந்த அளவினில் அளக்கமுடியாத சிவரகசியத்தையும் வெளியிடுமாறு காண்க.

நானளக்குந் தோறுமதற் குற்றதுபோற் காட்டி
நாட்டியபின் ஓருசிறிது மளவிலுரு தாகித்
தானளக்கு மளவதிலே முடிவதெனத் தோற்றித்
தன்னளவுங் கடந்தப்பால் மன்னுகின்ற பொருளே
—திரு. 6: 38: 58

அவ்விடத்தே உவ்விடத்தே அமர்ந்ததுபோற் காட்டி
அங்குமிங்கு மப்புறமு மெங்குநிறை பொருளே
—திரு. 6: 38: 86

மேலும், "நின்னியலே நானுரைக்க நானுரோ நானுரோ நவிலேன் நான்எனவே நாணுகின் றேன்" என்ற அடிகள் ஆண்டவன் இயலே அவன் உணர்த்தியவாறு கூறியருளுவார்.

ஆய்ந்தபர சிவவெளியில் வெளியுருவாய் எல்லாம்
ஆகியதன் னியல்விளக்கி அலர்ந்திடும்பேர் ஒளியே
—திரு 6 : 38 : 38

ஒளியாகி யுள்ளொளியா யுள்ளொளிக்குள் ஒளியாய்
ஒளியொளியி னொளியாயவ் வொளிக்குளுமோரொளியாய்
வெளியாகி வெளிவெளியாய் வெளியிடைமேல் வெளியாய்
மேல்வெளிமேற் பெருவெளியாய்ப் பெருவெளிக்கோர் வெளியாய்
அளியாகி யதுவாகி யதுவுமல்லா தாகி
அப்பாலா யப்பாலு மல்லதுவாய் நிறைவாந்
தளியாகி யெல்லாமாய் விளங்குகின்ற ஞான
சபைத்தலைவா நின்னியலைச் சாற்றுவதெவ் வணமே
—திரு. 6 : 95 : 8

என்று கூறுவாரெனினும் தாம் அருட்பெருஞ்ஜோதியப்பனைப் பெற்ற பேற்றினைக் கூறி அதிசயிப்பார்.

இங்ஙனம் நினைத்தற்கும் அரிய பெரும்பேறு பெற்று அருட்பெருஞ்ஜோதியை விளக்கியுரைக்க எண்ணி அருட்பெருஞ்ஜோதிதான் அருட்பெருஞ்ஜோதி என்று முடிக்குந்திறம் போற்றுதற்குரியது.

அருட்பெருஞ் ஜோதியென் னம்மையி னோடெறி வானந்தமாம்
அருட்பெருஞ் ஜோதியென் னப்பனென் னுள்ளத் தமர்ந்தன்பினால்
அருட்பெருஞ் ஜோதித்தெள் ளாரமு தந்தந் தழிவற்றதோர்
அருட்பெருஞ்ஜோதிச் செங்கோலுங் கொடுத்தனனற்புதமே
—திரு. 6 : 118 : 4

# 7. வள்ளற்பெருமான் வரலாறு

நந்தமிழ் நாட்டின் நலமெலாந் திகழும் தில்லையம்பதி சிதம்பரம். "திருவளர் திருச்சிற்றம்பலம் ஓங்கும் சிதம்பரம்" என்று வள்ளற்பெருமானால் இவ்வூர் வாழ்த்தப்படுகின்றது. அடிகள் கையெழுத்திடும்போதெல்லாம் சிதம்பரம் இராமலிங்கம் என்றே எழுதியுள்ளனர். கோயில் என்று கூறப்படும் இப்பதியில் எல்லாம்வல்ல இறைவனது திருச்சிற்றம்பல நடனம் வெளிப்பட்டது. ஆடல் செய்யும் அம்பலவனை அமைத்துக்காட்டும் அழகு இவ்வூர்ச் சிறப்பாகும்.

சிதம்பரத்திற்கு வடக்கே சற்றேறக்குறைய பத்துமைல் தொலைவில் மருதூர் என்னும் சிற்றூர் உள்ளது. இங்கே பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இராமையாப் பிள்ளை என்ற கணக்கர் ஒருவர் இருந்தார். அவர் நற்குண நற்செய்கை உடையவர். அவர் ஆறுமுறை மணக்க நேரிட்டது மனைவியர் ஐவரும் ஒருவர்பின் ஒருவராய் மகப்பேறின்றி இறந்தனர். ஆறும்முறையாக சின்னம்மை என்ற தெய்வத்திருமகளை மணந்தார். அந்த அம்மையார் சென்னைக்கு அடுத்த பொன்னேரி என்னும் சிற்றூரைச் சேர்ந்தவர். அவர்கட்குச் சபாபதிப்பிள்ளை, பரசுராமப்பிள்ளை, சுந்தரம்பாள், உண்ணுமுலையம்மாள் என்ற நால்வருந் தோன்றி வளர்ந்துவந்தனர். இந்நாளில் ஒரு தவமுதிய சிவயோகியார் இவர்கள் வீட்டிற்கு உணவு

வேண்டி எழுந்தருளினர். அவ்வடியவருக்கு அமுதருத்தி விருந்துபுரந்து மகிழ்ந்தார் சின்னம்மையார். அகங்குளிர்ந்து மகிழ்ந்த சிவயோகியார் அவ்வம்மைக்குத் திருநீறுநல்கித் தம்போல் ஒரு மகன் பிறப்பான் என்று வாழ்த்தினர். அவர் வாழ்த்திய வண்ணம் அம்மைக்கு ஐந்தாவது பிள்ளையாக நமது வள்ளலாகிய பிள்ளைப்பெருமான் தோன்றினர்.

சிவயோகியார் வரவு காரணப்பட்டு தவத்திருவாளர் கந்தசாமிப்பிள்ளையவர்களாலும் பிறராலும் கூறப்படுகின்றது. தோற்றத்திற்கு முதற்காரணம் எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளே என்று அடிகள் குறிப்பிடுகின்றனர். மக்களது அகங்கறுத்து அன்பு குறைந்து அறியாமை பெருகிவந்த நாளில் அன்பு காட்டி அறிவு கொளுத்தி அனைவரையும் சன்மார்க்கத்தில் அடைவித்திடும்பொருட்டு ஆண்டவன் அடிகளைத் தோற்றுவித்தான். எல்லோரும் இகத்தே பரத்தைப்பெற்று மகிழ்வதற்கு இறைவனால் வருவிக்கப்பெற்றேன் என்று அடிகள் தம் வரவு குறித்துப் பாடுகின்றார்.

அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்
திருந்த உலகர் அனைவரையுஞ்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திட அவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுதற் கென்றே யெனையிந்த
யுகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே

—திரு. 6: 93: 9

சுத்தசிவ சன்மார்க்கந் துலங்க வென்னை ஈன்றுனே
—திரு. 6: 42: 8

ஆன்றசன் மார்க்கம் அணிபெற எனைத்தான்
ஈன்றமு தளித்த இனியநற் றுயே
—திரு. 6: 1: 1075

என்றமையின் சுத்தசன்மார்க்கத்தைப் பரப்புதற் பொருட்டு ஆண்டவன் இச்சையினுல் அடிகளைத் தோற்றுவித்தான் என்பது பெறப்படும்.

கலியுகம் 4925, இருபத்துநான்காம் பரிவட்டம் சுபானு வருடம் புரட்டாசி மாதம் இருபத்தோராம் நாளுக்குச் சரியான 1823 அக்டோபர் 5ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை சுக்கிலபட்சத் துதியை, சித்திரை நாலாங்கால் கூடிய துலா நல்லோரையில் நம்மையெல்லாம் உய்விக்கச் சுவாமிகள் தோன்றினர்.

இராமலிங்க அடிகளின் அவதார நோக்கத்தைத் தொழுவூர் வேலாயுத முதலியார்,

மறைவிளங்க ஆகமவாய் மைகள் விளங்கச் சைவநெறித்
துறைவிளங்க வடகலையும் தென்தமிழும் துணிபொருளின்
திறைவிளங்க நீடுயிர்கள் நெறிவிளங்க நிலைவிளங்கப்
பொறைவிளங்கப் பொய்புகுதா தேழையோம் புலம்விளங்க

என்று சிறப்பித்துப் பாடியுள்ளார்.

இராமலிங்கம் என்று பிள்ளைத் திருநாமம் சூட்டினர். அருட்குழவியின் ஐந்தாம் திங்களில் பெற்றோர் இருவரும் தில்லையம்பலவனை வழிபடுவதற்குத் தம் மகவுடன் வந்தனர். அப்பைய தீட்சதர் என்னும் அந்தணர் கோயிலில் இவர்கள்

கூத்தப்பெருமானைத் தரிசிக்கும்பொருட்டுத் திரை நீக்கினர். ஆண்டவனது ஆடல்கண்டு நம்பெருமானாகிய சிறுகுழவி தளதளவென்று இளநகையாடியது. ஆண்டவன் சிற்றம்பலத்து நடமாடுவதையும், அதைத் தந்தையின் தோள்மேலிருந்து கண்டுகளித்துக் குழவி நகையாடுவதையுங் கண்ட அந்தணர் இராமையாப் பிள்ளையிடம் ஓடிவந்து, இது கூத்தன் அருட் குழவி என்றுகூறி அவர்களைத் தம்மனைக்கு அழைத்துச்சென்று உபசரித்து அனுப்பிவைத்தனர். இவ்வுண்மை நிகழ்ச்சியைக் காரணப்பட்டு கந்தசாமிப் பிள்ளையவர்களும், M. கந்தசாமி முதலியார் அவர்களும், பிறரும் கூறுப. சுவாமிகளே இந்நிகழ்ச்சியைப் பின்னர் நினைவுபடுத்திக் கூறுகின்றனர். தாய்முதலாரொடு சிறிய பருவத்தில் தில்லைத் தலத்தில் திரைதூக்கத் தரிசித்தபோது மேலோட்டமாகக் காட்டாமல் எல்லாம் வெட்டவெளியாக முற்றுங்காட்டிய என் மெய்யுருவாம் தெய்வமே என்பார்.

தாய்முதலோ ரோடுசிறு பருவத்தில் தில்லைத்
 தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது
வேய்வகைமேற் காட்டாதே யென்றனக்கே யெல்லாம்
 வெளியாகக் காட்டியவென் மெய்யுருவாம் பொருளே
—திரு. 6: 38: 44

எனலால் அறியலாம்.

தெய்வக் குழந்தையின் ஆறும் மாதத்தில் இராமையாப் பிள்ளையவர்கள் சிவனடி சேர்ந்தார். எட்டாம் மாதத்தில் குடும்பத்தில் மூத்த பிள்ளையாகிய சபாபதிப் பிள்ளையவர்கள் தன் தாயார்

உடன்பிறந்தார்களுடன் மருதூரைவிட்டு நீங்கிப், பொன்னேரியில் உள்ள தங்கள் தாய் பிறந்த பாட்டியார் வீட்டிற்கு வந்து சிலநாள் தங்கிப் பின் சென்னையம்பதியை அடைந்தனர். அந்நாளில் சென்னையில் மிகப்பெரிய உரையாசிரியராக விளங்கிய மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடம் சபாபதிப் பிள்ளையும், பரசுராமப் பிள்ளையும் கல்வி பயின்றனர். சிலநாள் செல்ல, சபாபதிப் பிள்ளை புராணப் பிரசங்கஞ் செய்து பொருளீட்டிக் குடும்பத்தைப் புரந்துவந்தார். இளைய பிள்ளையாகிய இராமலிங்கத்திற்கு ஐந்தாம் ஆண்டு தொடங்கவும் முன்னவர் எழுத்தறிவித்து அன்புடன் வளர்த்துவந்தார். சிலநாள் சென்றபின் இளவலைத் தமது ஆசிரியராகிய சபாபதி முதலியாரிடம் விடுத்துக் கல்விபுகட்டும்படி வேண்டினர். நாலைந்துநாள் பாடங்கேட்டுவரும்போதே பிள்ளைப் பெருமான் மாலையில் சென்னைக் கந்தசாமிக் கோயிலுக்குச் சென்று அருமையான பாடல்களைப் பாடி வருவாராயினர்.

கல்வியெலாங் கற்பித்தாய் நின்பால் நேயம்
　　காணவைத்தா யிவ்வுலகங் கான லென்றே
ஒல்லும்வகை யறிவித்தாய் உள்ளே நின்றென்
　　உடையானே நின்னருளும் உதவு கின்றாய்
இல்லையெனப் பிறர்பாற்சென் றிரவா வண்ணம்
　　ஏற்றமளித் தாயிரக்க மென்னே யென்னே
செல்வவருட் குருவாகி நாயி னேனைச்
　　சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே

—திரு. 5: 40:4

என்று பாடுவதுங் காண்க. ஏதோ இவ்வாறு பாடு வதைக் கேள்வியுற்ற ஆசிரியர் சபாபதி முதலியார் பிள்ளைப்பெருமானது அதிதீவிரப் பக்குவத்தை ஆராய்ந்து உணர்ந்து சாக்குப்போக்குச் சொல்லிப் பாடஞ் சொல்லாமலே காலம்போக்கினார். இவரும் கல்வி பயிலச் சரியாகச் செல்வதில்லை. தம்பியின் தரமும் மனப்போக்கும் அறியாத சபாபதிப் பிள்ளை வீணாள் கழித்துத்திரியும் தம்பி வீட்டிற்குள் நுழையக்கூடாதென்றும், உணவு கொடுக்கக் கூடாது என்றும் தனது மனைவியாகிய பாப்பம்மா ளிடம் கடுமையாக எச்சரித்தார். பசிக்குந்தோறும் இளம் பிள்ளைப்பெருமான் யாருக்குந் தெரியாமல் பின்புறமாக வீட்டிற்குள் வந்து தமது அண்ணி யார் அன்பினால் உணவுண்டு வெளியேறுவார்.

## ஓதாமல் உணர்ந்தார்

இங்ஙனமாக நாள்பல செல்லவும் தந்தை யாரின் திதி வந்தது. சபாபதிப் பிள்ளை உற்றார் உறவினரையெல்லாம் அழைத்து அறுசுவை உண்டி கொடுத்து அனுப்பினார். பாப்பம்மையார் சிறிய பிள்ளையார்மட்டும் உணவு அருந்த வில்லையே என்று வருந்தி அவரது வரவெதிர் நோக்கியிருந்தார். பொழுது சாய்ந்தது; நள்ளிரவு மாயிற்று. இளையபெருமான் வழக்கம்போலப் பின் புறமாக உட்புகுந்தார். எல்லாரும் உண்டு எஞ்சிய ஆறிப்போன உணவை அண்ணியார் அவருக்குப் படைத்து மனம் உடைந்து அழுதார். கண்ணீர் விட்ட அண்ணியாரைக் கண்ணுற்ற இளைய

பெருமான் காரணமென்னவென்று வினவினர். "அண்ணன் விருப்பத்திற்கு ஏற்பக் கல்விகற்று வீட்டிலேயே தங்கியிருந்தால் எல்லோருடன் நுமக் குரிய பங்கை உரிய காலத்தில் சுவையுடன் உண்ணலாமே; இப்போது ஆறியசோற்றை அச்சத்துடன் புசிக்கக் கண்டு மனம் புழுங்கு கின்றேன்" என்றனர். அண்ணனுடைய அதி காரத்திற்குக் கட்டுப்படாத இளையபிள்ளையார் அண்ணியின் அன்பிற்கு உட்பட்டுத் "தங்கள் விருப்பமென்ன ?" என்று கேட்டார். "நுமது அண்ணன் சொற்படி வீட்டிலிருந்து ஒழுங்காகக் கல்வி பயிலவேண்டும்" என்றனர். ஆண்டவன் "அருள் தந்து இருக்கும்" நேரம் வந்துவிட்டது. அண்ணியார் அன்று சிந்திய புறவமுதக் கண்ணீர்த் துளிகள் ஒவ்வொன்றும் செம்பொன் கோடிபெறும். அண்ணியார் உகுத்த கண்ணீர் அவரது நெஞ்சைச் சுட்டது. அக்கண்ணீருக்கு ஈடுகட்டி நம்பெருமான் "கார்பூத்த கனமழை போற் கண்களின்நீர் சொரிந்து கனிந்து மிகப்பாடு கின்ற" காலந்தொடங்கிவிட்டது. அதனல் இணங்கிய இளையபிள்ளையார் தமக்குக் தனியிட மும், திருவிளக்கும், கண்ணுடியும் தருமாறு வேண்டினர். அண்ணியார் தமது கணவரிடம் நிகழ்ந்தனவற்றைக் கூற அவரும் தம்பியின் மன மாற்றங்கண்டு மகிழ்ந்து வீட்டின் மாடியில் ஓர் அறையை ஒழித்துக்கொடுத்து அவர் வேண்டிய வண்ணம் திருவிளக்கும், கண்ணுடியுங் கொடுத்து உதவினர். இளையபெருமானுக்கு அப்போது ஒன்பது வயதாயிற்று. சென்னையில் ஏழு கிணற்

றுக்கு அடுத்த வீராசாமிப்பிள்ளைத் தெருவில் 39 எண்ணுள்ள தம் வீட்டுமாடியில் உள்ள அறைக்குட் சென்றனர். நம் பெருமான் திருவிளக்கை ஏற்றிக் கண்ணுடியில் கண்கொட்டாமல் ஆண்டவனை வேண்டி நின்ருர். கட்டவிழ்ந்த கமலம் போலக் கருத்தலர்ந்து வழிபட்ட அவர் கருத்தினூடே உய்யுநெறி ஒளிகாட்டி வெளியும் உள்ளும் ஓங்கிநின்ருன் ஆண்டவன்.

*சீர்கொண்ட தெய்வ வதனங்கள்*
*ஆறும் திகழ்கடப்பந்*
*தார்கொண்ட பன்னிரு தோள்களும்*
*தாமரைத் தாள்களுமோர்*
*கூர்கொண்ட வேலும் மயிலும்நற்*
*கோழிக் கொடியுமருள்*
*கார்கொண்ட வண்மைத் தணிகா*
*சலமும்என் கண்ணுற்றதே*

—திரு. 5 : 1 : பிரார்த்தனை மாலை-1.

என்று தாம் கண்களிக்கக் கண்டதைக் கூறுகின்ருர். "கண்ணுல் யானுங்கண்டேன் காண்க" என்று மணிவாசகர் கூறியதுபோல நமது பிள்ளைப் பெருமான் தணிகை முருகப்பொருமானைக் கண்களாற் கண்டார். முருகப்பெருமான் வடிவில் எழுந்தருளிய எல்லாம்வல்ல தெய்வம் எல்லாக் கல்வியையும் எல்லாக் கலைகளையும் நம் பெருமானுக்கு விளக்கி அருளிச்செய்தது. இந் நிகழ்ச்சிக்கு முன்னும் பிள்ளைப்பெருமான் தாமே ஆண்டவனைப் பாடும் பேறுபெற்று விளங்கினுர். ஆதலின், இவர் ஓதாதுணர்ந்தார் என்று சொல்லுவதில் யாதும்

வியப்பில்லை என்றும், அவர் நம்மையெல்லாம் ஓதாமே உணர்த்தும் உருவெளி என்றும் மீதானம் என்னும் மேல் அனுபவநிலைக் களத்தில் நம்மைத் தூக்கி வைக்கும் பேராற்றல் உள்ள மேதா என்றும் வேலாயுத முதலியார் புகழ்ந்து பாடியுள்ளார்.

நம் பெருமானாகிய அடிகள் இந் நிகழ்ச்சியின் உண்மையைக் குறிப்பிடுகின்றார். "என்னை ஒன்பதாம் ஆண்டிலே ஆண்டுகொண்ட அருட் கடலே" என்றும், "ஓதாது உணர்ந்திட ஒளியளித் தாய்" என்றும், "ஏட்டில் எழுதிய மறைகளையும் எழுதாத மறைகளையும் என் உள்ளத்தே எழுது வித்தாய்" என்றும், "ஓதியுணர்ந்தவரெல்லாம் எனைக்கேட்க எனைத்தான் ஓதாமே உணர்ந்து உணர்வாம் உருவமுறச் செய்தாய்" என்றும் பாடி யுள்ளனர்.

> ஆண்டாறு மூன்றாண்டில் ஆண்டு கொண்ட
> அருட்கடலே
> —திரு. 2: 87: 3

என்றும்,

> ஆறெடுமூன் றாண்டா வதிலே முன்என்னை
> ஆண்டாய்
> —திரு. 6: 25: 7

என்றும்,

> ஓதா துணர்ந்திட ஒளியளித் தெனக்கே
> ஆதார மாகிய அருட்பெருஞ் ஜோதி
> —திரு. 6: 1: 23–24

என்றும்,

ஏடகத்தே எழுதாத மறைகளெல்லாம் களித்தே
என்னுளத்தே எழுதுவித்த என்னுரிமைப் பதியே

—திரு. 6: 53:8

என்றும்,

ஓதிஉணர்ந் தவரெல்லாம் எனைக்கேட்க
எனைத்தான் ஓதாமே உணர்ந்து
உணர்வா முருவுறச் செய்யுறவே

என்றும் கூறுமாறு காண்க. மற்று,

படித்தேன்பொய் உலகியல்நூல் எந்தாய் நீயே
படிப்பித்தா யன்றியுமப் படிப்பி லிச்சை
ஒடித்தேன் நான் ஒடித்தேனே ஒடிப்பித்தாய்

—திரு. 2: 5: 73

என்றும்,

படித்தனன் உலகப் படிப்பெலாம் மெய்ந்நூல்
படித்தவர் தங்களைப் பார்த்து
நொடித்தனன் கடிந்து நோக்கினேன்

— திரு. 6: 29: 12

என்றும்,

படிப்படக்கிக் கேள்வியெலாம் பற்றறவிட் டடக்கி

—திரு. 6: 52: 8

என்றும்,

படித்தவென் படிப்புங் கேள்வியு மிவற்றின்
பயனதா முணர்ச்சியு மடியேன்

—திரு. 6: 132: 10

என்றும் கூறியவாற்றுல் பிள்ளைப்பெருமான் உலகியல் நூல்களைப்புரட்டிப்பார்த்திருக்கக்கூடும்.

அதுவும் ஆண்டவன் படிப்பித்தான். அப்படிப்பில் இச்சையின்றி அவனிடம் படிக்க ஆசைப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இவையனைத்தும் ஒன்பதாம் ஆண்டிற்குள்ளே நிகழ்ந்தவை. அறுமுகப்பெருமானைக் கண்டபோது எல்லாக்கலைகளும் அவருடைமையாயின. படித்தும் கேட்டும் அறிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆதலின், கல்வியனைத்தையும் பெருமான் ஓதாதுணர்ந்தார் என்பதற்கிழுக்கில்லை. அவரது அண்ணியார் உகுத்த கண்ணீருக்கு ஆற்ருத பெருமானுக்குக் கண்ணுடியில் கடவுள் காட்சி கொடுத்தது அவர் படிப்புக்குத்தானே! அன்றி வடமொழிப் புலமை எங்கிருந்து வந்தது?

நம்பெருமானுக்குக் கண்ணுடியில் முருகப்பெருமான் தமது இளநலங்காட்டி அருளியதாலும், ஐந்தாந் திருமுறைப் பெரும்பகுதி முழுதும் ஆறுமுகக்கடவுளைப்பற்றியதாக இருப்பதனுலும் ஒருசிலர் கந்தப்பெருமானே அடிகளுக்குக் குருவென்பர். மற்றுஞ்சிலர், "ஞானசம்பந்தன் என்னுமென் சற்குருமணியே" என்றும், "திருநெறித் தமிழ் கொண்டு ஐயநீக்கியருளிய அரசே" என்றும் கூறுவது கொண்டு ஞானசம்பந்தப் பெருமான் தான் அடிகளுக்கு உற்ற குரு என்பர். வேறுசிலர் அன்புருவம், அருளுருவம், இன்புருவம் ஆகிய முத்திறல் வடிவங்களையும் மணிவாசகப்பெருமான் பெற்றவண்ணமே அடிகளும் பெற்றனராதலின் மணிவாசகரைத்தான் அடிகள் குருவெனக் கொண்டனர் என்ப.

ஆனல் அடிகள்,

சுற்றதுமற் றவ்வழிமா சூததுவென் றெண்ணுத்
தொண்டரெலாங் கற்கின்ருர் பண்டுமின்றுங்
காணர்
எற்றதும்பு மணிமன்றி லின்பநடம் புரியும்
என்னுடைய துரையேநான் நின்னுடைய வருளால்
கற்றதுநின் னிடத்தேபின் கேட்டதுநின் னிடத்தே
கண்டதுநின் னிடத்தேஉட் கொண்டதுநின்
னிடத்தே
பெற்றதுநின் னிடத்தேயின் புற்றதுநின் னிடத்தே
பெரியதவம் புரிந்தேனென் பெற்றியதி சயமே
—திரு. 4: 1: 16

என்று எல்லாம்வல்ல முழுமுதற்றெய்வமே தமக்கு எல்லாம் அறிவித்தது என்று கூறியுள்ளார். மேலும், 'எத்தேவரையும் நின்சாயலால் பார்த்ததன்றி வேறெண்ணியதுண்டோ' என்று கூறுவதுங் காண்க.

## பெரியபுராண விரிவுரை

தமக்கு ஓர் அறையைப் பெற்று தனித்துறைந்த இளையபிள்ளையார் வழக்கம்போல மாலையில் கந்தசாமிக் கோயிலுக்குச் சென்று தெய்வமணிமாலை பாடியருளினர் என்ப. இந்நாளில் அண்ணன் சபாபதிப்பிள்ளை முத்தியால்பேட்டையிலிருந்த சோமு செட்டியார் வீட்டில் சனிக்கிழமை தோறும் பெரியபுராணப் பிரசங்கம் செய்துவந்தார். அவருக்குக் கையேடு படித்துவந்த ஒருவரால் அடிக்கடி தடைநேர்ந்ததற்கு வருந்தித் தமது தம்பியார் அப்பணிக்கு உதவியாக இருந்தால்

நல்லதென்று தம் மனைவியிடங் கூற, அவ்வம்மையார் இராமலிங்கப் பெருமானைக் கணவருடன் அனுப்பிவைத்தனர். பிரசங்கம் முடிந்தபின் கேட்டிருந்தோரெல்லாம் கொடுக்கும் பொருளைக் கொண்டு சபாபதிப் பிள்ளை தமது பெரிய குடும்பத்தை நடத்திவந்தார்.

ஒருநாள் சபாபதிப் பிள்ளைக்கு உடல் நலமில்லை. ஆதலால் அவர் தம்பியை அழைத்து, " நீ வழக்கம்போல சோமு செட்டியார் வீட்டிற்குச் சென்று வந்திருப்பவர்களிடம் எனது நலமின்மையைக் கூறி ஆண்டவனை வழிபட்டு, பின்னர் வருவதாகச் சொல்லிவா " என்றனர். அண்ணன் கட்டளைப்படி இளையபெருமான் ஆண்டுச் சென்று வழிபாடு செய்துவிட்டு அண்ணன் அடுத்தவாரம் வருவாரென்றனர். கூடியிருந்த அன்பர்கள் "தம்பி, நாங்கள் பல இடங்களிலிருந்து வந்துவிட்டோம். சிறிது நேரமாயினும் நிம்மதியாக இருந்து செல்வோம். தாங்கள் கையேடு வாசிப்பதே எங்கட்கு மெய்யுணர்வூட்டுவதாக இருப்பதால் தெரிந்த வரையில் சொல்லுங்கள் " என்று வற்புறுத்தினர்.

அன்று விரிவுரை செய்யவேண்டிய பகுதி திருஞானசம்பந்தர் புராணம். இறைவன் திருவருட் செயல்களைக் கேட்கவந்தவர்கள் இளையவரின் பிரசங்கத்திற்கு ஆசைப்பட்டனர். தாம் வந்த வேலையைத் தொடங்குவதற்கு அன்று வேலை கிடைத்ததும் ஆண்டவன் செயல் என்று எண்ணி நம் பிள்ளைப்பெருமான் அண்ணன் விட்ட பாடலைத் தொடர்ந்து நெடுநேரம் விரிவுரை செய்தார். நன்

ளிரவாகியும் ஒரு பாடலேனும் முடிந்திலது. செவி மடுத்த அன்பரெல்லாம் இளையபிள்ளையே புராணம் முழுவதையும் சொல்லவேண்டுமென்று வேண்டி னர். இவ்வாறுகச் சொற்பொழிவு நிகழுங்கால், சபா பதிப் பிள்ளையிடம் அவரது நண்பர் ஒருவர், "உன் தம்பி கல்விபயிலாது திரிகின்றுன் என்று ஒதுக்கி வைத்தாயே, வந்து உண்மை கண்டு அறிவாய்" என்றுகூறி அவரை அழைத்துவந்து ஒருபுற மிருக்கச்செய்து உண்மை அறியச் செய்தார். தம்பி யின் நாவன்மையையும், அறிவின் ஆழத்தையும் உரையினூடே கலந்து இனிக்கும் அருட்டன்மை யையும் நேரில் கண்டறிந்த அண்ணன், "என்ன தவறு செய்தோம்" என்று மனம் வருந்தி மனைவி யிடம் போய் "இதுவரையில் தம்பி என்றிருந்தேன்: இனித் தம்பியல்ல; அம் முருகக்கடவுளே தான்! நாம் பெற்ற பேறு என்னே!" என்று தம்பியின் அருமையைக் கூறி அன்றுமுதல் பேரன்புடன் அவரைப் பாராட்டிவருவாராயினுர். சனிக்கிழமை தோறும் கூட்டம் பெருகிவந்தது. சோமு செட்டி யார் பிள்ளைப்பெருமானிடம் பொருள் கொடுத் தனுப்பிவைத்தார்.

பணத்திலே சிறிதும் ஆசையொன் றிலைநான்
படைத்தவப் பணங்களைப் பலகால்
கிணற்றிலே எறிந்தேன் குளத்திலு மெறிந்தேன்
கேணியி லெறிந்தன னெந்தாய்

—திரு. 6 : 20 : 11

என்றபடி இவர் அப்பணத்தை மேட்டிலும், குளத் திலும், கேணியிலும் எறிந்துவிடுவார். இதை

அறிந்த செட்டியார் பின்னர் அப்பணத்தைச் சபாபதிப் பிள்ளை வீட்டிலே சேர்ப்பித்துவந்தார்.

தம்பியின் பெருமையுணர்ந்த அண்ணனும் அண்ணியாரும் பெரிதும் மதிக்கத் தலைப்பட்டனர். இவர்களது உபசரிப்பு இளையவருக்குப் பிடிக்க வில்லை. குடும்பத் தொடர்பை நாளுக்கு நாள் குறைத்துவந்தார். திருவொற்றியூருக்குச் சென்று ஆண்டவனை வழிபடும் பழக்கம் நிறைந்துவந்தது. இந்நாளில் எழுத்தறியும் பெருமான் மாலை, வடிவுடை மாணிக்கமாலை முதலியவற்றைப் பாடினார் என்ப.

இராமலிங்கப் பெருமானுடைய ஒன்பதாம் (1832) ஆண்டிற்குப்பின் இருபத்தாரும் ஆண்டு வரை (1849) அவருடைய வரலாறு நன்கு விளங்க வில்லை. "பன்னிரண்டு ஆண்டு தொடங்கி இற்றைப் பகலின்வரையில் யான் பட்டபாட்டை நினைத்தால் மலையுங் கரையுமே இரும்பும் கரை யுமே" என்றும், "என்னை நாலிடத்திலும் சூழ்ந்து நிற்கும் நினக்கு அது தெரியுமே" என்றும் கூறு கின்றனர்.

பனிரண் டாண்டு தொடங்கி இற்றைப் பகலின் வரையுமே
படியிற் பட்ட பாட்டை நினைக்கின் மலையுங் கரையுமே
—திரு. 6: 139: 78

ஈரா ருண்டு தொடங்கி யிற்றைப் பகலின் வரையுமே
எளியேன் பட்ட பாட்டை நினைக்கி லிரும்புங் கரையுமே
—திரு. 6 : 139 : 79

பன்னிரண் டாண்டு தொடங்கிநா னிற்றைப்
 பகல்வரை யடைந்தவை யெல்லாம்
உன்னிநின் றுரைத்தா லுலப்புறா ததனால்
 ஒருசில வுரைத்தன னெனினும்
என்னுளத் தகத்தும் புறத்துமுட் புறத்தும்
 இயல்புறப் புறத்தினும் விளங்கி
மன்னிய ஜோதி யாவுநீ யறிந்த
 வண்ணமே வகுப்பதென் நினக்கே

—திரு. 6 : 21 : 122

என்பனவற்றை உற்றுநோக்கினால் "பன்னிரண் டாவது வயதுமுதல் இன்றுவரை 'நான் படாத பாடுபட்டேன்' எனக் கூறினார்" என்று கொள்ள லாம். எனினும் இன்றுவரை என்பது எந்த நாளைக் குறிக்கும் என்று அறிவதற்கில்லை. அன்றி, "சென்ற பன்னிரண்டு ஆண்டுகளாக நான்பட்ட பாட்டை என்னென்று கூறுவேன்" என்று ஏதோ ஒரு காலத்தில் கூறினார் என்றுங் கூறுவர். ஆனால், "பன்னிரண்டு ஆண்டுதொடங்கி" என்று மூவிடத் திலும் தொடக்கத்தைக் கூறுகின்றமையால், பன் னிரண்டாவது வயதுமுதல் என்று கொள்ளுவது ஏற்புடையதாகும். 'ஒருசில வுரைத்தனன்' என்றது கொண்டு பிள்ளைப்பெருவிண்ணப்பத்தில் கூறப் படும் நிகழ்ச்சிகள் பெரிதும் அக்காலத்தில் நடந் தனபோலும் என்று எண்ணவேண்டியிருக்கிறது.

இந்நாளில் நம் பெருமான் உலகியலில் சிறிதும் மனம்படியாமல் திருவருளை வழுத்துவதே தொழி லாகக் கொண்டிருந்தார். சினங் காமம் சிறிது மில்லாதவர். கருணையும் சிவமும் பொருளெனக்

கொண்டவர். தன்னை மதியாதிருத்தல் என்னும் கரணவொழுக்க நெறிநின்றவர். தம்மை எவ்வளவு தாழ்த்திக் கூறிக்கொள்ளமுடியுமோ அவ்வளவுங்கடந்து தாழ்த்திக் கூறிக்கொண்டார். வெள்ளிய ஆடை முழங்காலுக்குமேல் தரித்திருந் தார். "மெய்யுறக் காட்ட வெருவி வெண்துகிலால் மெய்யெலாம் ஐயகோ மறைத்தேன்" என்பதற் கேற்ப ஞானதேகம் ஒத்திலங்கிய தமது தேகம் தெரியாமல் முக்காடிட்டு மறைத்துக்கொண்டார். வீதிகளில் ஓரமாகச் செல்வார். கைகளைக் கட்டியே நடந்தார். திண்ணையிலாவது உயர்ந்த ஆசனத்தி லாவது, காலின்மேல் கால்போட்டாவது உட் கார்ந்து வீண்பேச்சுப்பேச ஒருவருடனும் ஒருப் படார். உலகியல் உணர்ச்சியுற்ற நாள்தொட்டு சிலசமயங்களில் உற்றவர், நண்பர், பெற்ற தாய் முதலியோர் தம் வாட்டம் பார்ப்பதற்கு அஞ்சிப் பேருணவு உண்டனன் என்று கூறியுள்ளார். எனினும், "நண்பகல் பலவுடன்கழிந்தஉண்டியர்"; இரண்டு அல்லது மூன்றுநாளைக்கு ஒருமுறை உண்பார். அப்போதும் சிலகவளத்தோடு திருப்தி யடைவார். இரண்டு மூன்று மாதம் உபவாசம் எடுப்பார். அப்போது கொஞ்சம் சர்க்கரை கலந்த நீரையன்றி வேறொன்றுங் கொள்ளமாட்டார். இவர் இளைப்பாறினதாக எவரும் அறியமாட்டார். இவர் உருவத்தில் சாதாரண உயரமுள்ளவர்; மெலிந்த சரீரமுடையவர்; எலும்புகள் தெரியும்; ஆயினும் வீரியபலமுள்ளவர்; நிமிர்ந்த தேகம்; தெளிந்த மாநிற மேனியர்; நீண்ட மெல்லிய நாசி யுடையவர்; பரந்த ஒளிபரக்கும் கண்களை

உடையவர். இவருடைய முகத்தில் சதா சற்று விசனக்குறி காணப்பட்டிருக்கும். வடலூர், கருங்குழி என்ற இடங்களுக்குச் சென்று அங்கு நீண்ட காலமிருந்தனர். அங்கிருக்கும்போது இவர் அடிக்கடி தம் சீடர்கள் அறியாவண்ணம் மறைந்திருப்பதுண்டு. இவர் எங்குச் சென்ருர் என்பதை அறிவோர் எவருமிலர். இப்படி வெகுநாள் மறைந்திருப்பார். இவர் இறுதிக்காலத்தில் முடியை நீளமாய் வளரவிட்டிருந்தார். இவர் யோகிகளுக்கு அடுக்காத வழக்கமாகிய ஆர்க்காடு சோடு தரித்திருந்தார்" என்று பிள்ளைப்பெருமான் தோற்றத்தைத் தொழுவூர் வேலாயுத முதலியார் கூறியுள்ளார். மற்று, இவர் உயிர் இரக்கமும், ஆன்ம உருக்கமும், உருவெடுத்தாற்போலக் காணப்பட்டார். இந்நாளில் சிவநேச வெண்பா, நெஞ்சறிவுறுத்தல், மகாதேவமாலை, இங்கிதமாலை முதலியவற்றையும், இரண்டாந் திருமுறையையும் பாடினுர் என்ப.

## தொழுவூர் வேலாயுத முதலியார்

வேலாயுத முதலியார் என்னும் ஒரு தமிழ் வித்துவான் சென்னையிலிருந்தார். அவர் 1849ஆம் ஆண்டில் கடுமையான நடையில் நூறு செய்யுள்களைப் பாடி அவற்றைக் கொண்டுபோய் பிள்ளைப் பெருமானிடம் சங்கச் செய்யுளென்றும், பழைய ஏட்டில் காணப்பட்டதென்றும் சொல்லிக் கொடுத்தார். சிறிதுநேரம் அவற்றைப் பார்த்துவிட்டு பிள்ளைப்பெருமான், "இவை கற்றுக்குட்டிப் பாடல்

கள், சங்கப் பாடலாக இருந்தால் இவ்வளவு குற்ற மிராது'' என்று கூறினர். முதலியார் உண்மையைக் கூறித் தம்மை ஆட்கொள்ள வேண்டினர். கருணைக் கடலாகிய பிள்ளைப்பெருமான் அவரது நிலையுணர்ந்து "புதியவனல்லன்; நம் பிள்ளை நமக்குக் கிடைத்தான்'' என்று கைப்பிடித்து ஏற்றுக்கொண்டார். தாம் அன்று பெற்ற தானற்ற பெருமகிழ்ச்சியைப் பின்னர் தாமியற்றிய திருவருட் பிரகாசஞர் அருள்நாம மந்திராமிர்தம் ஐந்தாம் பாடலில் தொழுவூரார்,

காணுவாரிரு திருவருளினல் மனமுங்கரைந்து தங்களைக்
காணிலராக .
மாணுலாந் திருவருளினல் விழுங்கிவைத்து மாசறக்கழுவி
யின்பூட்டும்
தாணுவாகிய சரணவாரிச மென்றலைக்கு மாமுடியாக்கிய
வமல
வேணியேஞ் சிவஷண்முக சிவவோம் இராமலிங்கவோம்
சிவாய சற்குருவோம்

என்று பாடியுள்ளார். நம்பெருமான் இவருக்கு முருகஉபாசனை சித்திக்கச்செய்து 'உபயகலாநிதிப் பெரும்புலவர்' என்ற பட்டஞ் சூட்டினர். இவர் சங்கர விஜயம், பெரியபுராண வசனம், வேளாண் மரபியல் முதலான பத்து உரைநடை நூல்களையும் துவாதச நாமசங்கீர்த்தனம், திருத்தணிகை நான் மணிமாலை, அம்பலக்குறம், திருவருட்பிரகாசஞர் சந்நிதிமுறை முதலான ஏறக்குறைய நாற்பத் தைந்து செய்யுள் நூல்களையும் ஆக்கியுள்ளார். இவர் 1832-ஆம் ஆண்டில் பிறந்தவராதலின்

சுவாமிகளிடம் மாணவரானபோது இவருக்குப் பதினேழு வயது. சுவாமிகளுக்கு ஒன்பது ஆண்டு இளையவர். பெங்களூரைச் சேர்ந்த சீரங்கம்மாள் என்பவரை மணந்து அங்கேயே சிலகாலம் வசித்து வந்தார். அடுத்தடுத்து சென்னைக்கு வந்து தமது ஆசிரியரை வழிபடுவார். சுவாமிகள் கருங்குழி யிலும் வடலூரிலும் தங்கிய நாளில் இவர் தன் மனைவியும் மகன் திருநாகேசுவரனுமாகச் சுவாமி களுடன் உறைந்துவந்தார் என்ப. சுவாமிகள் தாம் மறைவதற்கு ஓராண்டிற்கு முன்னரே இவரை அழைத்து, "இங்கிருந்தால் நுமக்குப் பெரும்புகழ் உண்டாகும்; சென்னைக்குச் செல்வீ ராக" என்று பணித்தார் என்றும், அதனால் சுவாமிகள் சிவானுபவம் பெற்று மறையும்போது உடனில்லை என்றும் அவரது இரண்டாம் மனைவி யின் வயிற்றுதித்த மகனார் தவத்திருவாளர் செங்கல்வராய முதலியார் 1944-ஆம் ஆண்டில் வடலூரில் கூறினார்.

## திருவொற்றியூர்

நம்பெருமான் திருஒற்றியூருக்குச் செல்லும் போதெல்லாம் தேரடித் தெருவழியாகச் செல்லாது நெல்லிக்காய்ப் பண்டாரச் சந்துவழியாகச் செல்வது வழக்கம். காரணம் அச்சந்தில் நெல்லிக் காய் பண்டாரம் என்ற அன்பர் குடியிருந்தார். அவர் வீட்டில் சுவாமிகள் அன்பர்களுடன் உண்பதுமுண்டு. ஒருநாள் பெருமான் தேரடி வீதியாய்ச் சென்றனர். அங்கு நெடுநாளாகத் திண்ணைமீதிருந்த நிர்வாண சந்நியாசி ஒருவர்

அவ்வழியே போகிறவர்களை "கழுதை போகிறது; மாடு போகிறது; நாய் போகிறது; பேய் போகிறது" என்று இகழ்ந்துகொண்டிருந்தார். நம் பெருமான் அன்று தம் எதிரே வருவதைக் கண்ட சந்நியாசி "இதோ உத்தம மனிதன் வருகிறான்" என்று கூறிக்கொண்டே தமது கையால் உடம்பை மறைத்துக்கொண்டனர். சுவாமிகள் அவரிடம் போய் ஏதோ சொல்ல, நிர்வாண சந்நியாசி அன்றிரவே அவ்விடம் விட்டுச் சென்றனர். இந்நிகழ்ச்சியைக் காரணப்பட்டு கந்தசாமிப் பிள்ளையும் (சரி. கீர். 46-47) பிறரும் கூறுவர். இக்கதைக்கு வேறு அகச்சான்றில்லை.

நம் பிள்ளைப்பெருமான் ஒருநாள் திருவொற்றி யூர்ப் பெருமானை வழிபட்டுத் திரும்ப நள்ளிரவுக்கு மேலாயிற்று. வீட்டிற்கு வரும்போது தமது தமக்கையார் தூங்கிவிடவே, கதவைத் தட்டாமல் ஒட்டுத்திண்ணையில் பசியுடன் கண்ணயர்ந்தார். அருள் உதவும் பெருந்தாயாகிய வடிவுடையம்மை வீட்டிலிருந்த அவரது தமக்கைபோல் வந்து சுவாமிகளுக்குத் தாமரையிலையில் வெண்பொங்கல் கொடுத்துச் சென்றனள். சிறிது நேரங்கழித்துத் தமக்கையார் விழித்தெழுந்து வந்து தம்பியை எழுப்பி உணவருந்த அழைத்தனர். "சற்று நேரத் திற்குமுன் பொங்கல் கொடுத்தாயே" என்று கூறி அங்குக் கிடந்த தாமரையிலையையுங் காட்டினர். தமக்கையார், "யான் உனக்கு ஒன்றுங் கொடுக்க வில்லையே, இப்பொழுதுதானே எழுந்துவந்து கதவைத் திறந்தேன்" என்றதிசயித்தார்.

உண்மை விளங்கிய அடிகள் உலக அன்னையின் கருணையை எண்ணி ஆனந்தப் பரவசம் அடைந்தனர். இவ்வற்புத நிகழ்ச்சியை,

அன்றொருநாள் நம்பசிகண் டந்தோ தரியாது
நன்றிரவிற் சோறளித்த நற்றாய்காண்
—திரு. 1 : 3 : 176

எனவும்,

தெற்றியிலே நான்பசித்துப் படுத்திளைத்த தருணம்
திருவமுதோர் திருக்கரத்தே திகழ்வள்ளத் தெடுத்தே
ஒற்றியிற்போய்ப் பசித்தனையோ வென்றெனையங் கெழுப்பி
உவந்துகொடுத் தருளியவென் னுயிர்க்கினிதாந் தாயே
பற்றியவென் பற்றனைத்தும் தன்னடிப்பற் றாகப்
பரிந்தருளி யெனையீன்ற பண்புடையெந் தாயே
பெற்றியுளார் சுற்றிநின்று போற்றமணிப் பொதுவில்
பெருநடஞ்செய் யரசேயென் பிதற்றுமுவந் தருளே
—திரு. 6 : 38 : 43

எனவும் கூறுவன காண்க.

“இத்திருப்பாட்டில் உலகப் பேரன்னை சுவாமிகளின் பசிக்காற்றாது திருக்கரத்தில் திகழ்வள்ளத்தில் திருவமுதம் ஏந்தி வந்தாள் என்றுதானே குறிப்பிடப்படுகின்றது; தாமரையிலையில் என்று கூறுவது எங்ஙனம்?” என்று சிலர் வினவுவர். தாமரையிலையில் வெண்பொங்கல் கொடுத்ததாகவே M. கந்தசாமி முதலியாரும், பிறையாறு சிதம்பர சுவாமிகளும் பிறரும் கூறியுள்ளனர்.

ஒருவேளை வள்ளமென்பது கிண்ணம்போன்று குவிந்த தாமரை இலையைக் குறித்ததுபோலும்.

இராமலிங்கப் பெருமான் தம்மை அருட்சத்தி யாகிய வடிவுடையம்மை திருவொற்றியூரிடமாகப் ...ற்ற மகவு என்று குறிப்பிடுகின்றார்.

மிகவே துயர்க்கடல் வீழ்ந்தேனை நீகை விடுதலருள்
தகவே எனக்குநற் றாயே யகில சராசரமுஞ்
சுகவேலை மூழ்கத் திருவொற்றி யூரிடந் துன்னிப்பெற்ற
மகவே யெனப்புரக் கின்றோய் வடிவுடை மாணிக்கமே

—திரு. 1 : 7 : 73

ஆதலின், மகவே என வளர்க்கும்போது பிள்ளையின் பசியறிந்த பெற்றவள், பால்நினைந்தூட்டிய சின்னம்மையைக் காட்டிலும் பரிந்து சோறு சுமந்து ஓடினாள்போலும்!

## திருமணம்

உலகபோகங்களில் மனஞ்சுழலாது திருவருளிலேயே திளைத்துக்கொண்டிருக்கும் பிள்ளைப் பெருமானுக்குத் திருமணம் செய்ய விரும்பினர் தாயரும், தமயன்மார்களும், தமக்கையரும். சுவாமிகள் ஒருப்படவேயில்லை. சிவயோகியார் ஒருவரைக் கொண்டு மீண்டும் மீண்டும் வற்புறுத்தவே ஒருவாறு சம்மதித்தனர். தமக்கையாகிய உண்ணுமுலையம்மையின் மகள் தனம்மாள் என்னும் தனக்கோட்டியம்மையைப் பிள்ளைப்பெருமானுக்கு 1850-ஆம் ஆண்டில் திருமணம் செய்வித்தனர். சுவாமிகளது தெய்வக் காதலையும்,

இச்சையின்றி நுகருமியல்பையும் அறியமுடியாத குடும்பத்தினர் ஒருநாள் மணமக்களை மணவறை யுட்படுத்தினர். நம்பெருமான் திருவாசகம் கையில் கொண்டு சென்று அவ்வம்மையை நோக்கித் திருவிளக்கைத் தம்பால் எடுத்துவர வேண்டினர். அம்மையார் ஒன்றும் செய்யாமல் மௌனமாய் நிற்கவும், சுவாமிகள் தாமே திருவிளக்கை எடுத்து வைத்துக்கொண்டு விடியவிடியவும் திருவாசகத் தேன் நுகர்ந்து இன்புற்றிருந்தார். இங்ஙனமாகச் சிலநாள் கழியவே குடும்பத்தினர் தம்முயற்சி பயனற்றதேயென்று வருந்தினர். பேரறிவு வண்ணமாய்க் காலங்கடந்தவர்களாய் தாம் வந்த வேலையைப் பார்ப்பதே பொருளாய் நிலைத்து நிற்கும் மேதாவிகளைச் சிற்றின ஆன்மாக்கள் தம் அறிவாற்றல் கொண்டு அளக்க முனைவது எள்ளளவும் முடியாத காரியமென்று சுவாமிகளின் இந்நிலையை M. கந்தசாமி முதலியார் கூறுவது பொருந்தும்.

## தமிழாசிரியரானது

ஒழிவிலொடுக்கம் என்னும் சிறந்த மெய்ப் பொருள் நூல் கண்ணுடைய வள்ளலால் இயற்றப் பட்டது. இதற்குத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் 1851-ஆம் ஆண்டில் அந்நூலின் சிறப்புப் பாயிர வெண்பாவிற்கு விருத்தியுரையும், சிதம்பர சுவாமிகளின் உரைக்குறிப்பும் எழுதியருளினர். இந்நூல் வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் பொது நூலாகும். சுவாமிகள் எழுதிய விருத்தியுரை கற்றவர் காமுறும் கவின்மலர்ச் சோலையாக

உள்ளது. இதனுடன் தொழுவூர் வேலாயுத முதலியார் எழுதிய தெளிசொற்பொருள் விளக்கம் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து வந்த நரசிங்கபுரம் வீராசாமி முதலியார், பொன்னேரி சுந்தரம்பிள்ளை முதலியோர் சுவாமிகளிடம் அடிமை பூண்டு கல்வி, கேள்வியில் தெளிந்தவரானார்கள். கிரியாயோக சாதகரான பண்டார ஆறுமுகவையா என்பவர் சுவாமிகளிடம் விநாயக புராணம் முழுவதும் பாடங்கேட்டனர். சுவாமிகளின் திறமறிந்த மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் சிறுவர்க்குப் பயன்படுவண்ணம் ஒரு வசனநூல் இயற்றும்படி விரும்பவும், சுவாமிகள் 'மனுமுறை கண்ட வாசகம்' என்னும் நூலைச் செந்தமிழ்ச்சுவை விஞ்சும்படி எழுதித்தந்தனர்.

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத்
தான் தன் அரும்பெறற் புதல்வனை
ஆழியில் மடித்த"

மனுநீதிச் சோழன் கதையை இந்நூல் விரித்துரைக்கும்.

சென்னையில் அக்காலத்தில் விளங்கிய புலவர் கூட்டத்தில் தொண்ட மண்டலமா? தொண்டை மண்டலமா? என்ற ஐயம் நிகழ்ந்தது. கொண்ணூர் ஐயாசாமி முதலியார் கேட்டுக் கொண்டதற்கிணங்கி சுவாமிகள் 1854-ஆம் ஆண்டில் தொண்ட மண்டல சதகம் என்ற

நூற்பெயர் இலக்கணம் எழுதித் தெளிவுபடுத்தினர். இதனுடன் வழிபடு கடவுள் வணக்கப் பாட்டுரையையும் எழுதியுள்ளனர். செந்தமிழ் நடையில் அமைந்த இவ்விளக்கம் வினு விடைகளைக் கொண்டதாய் இலக்கண நுட்பஞ் செறிந்ததாய்க் கற்றவர் போற்றும் நயனுடையதாய் உள்ளது.

## சிதம்பரத்திற்குச் சென்றது

பிள்ளைப்பெருமான் தமது முப்பத்திரண்டாம் ஆண்டில் (1855) சிதம்பரத்திற்குப் புறப்பட்டார். அக்காலத்தில் இரயில் இல்லாமையால் வண்டிப் பாதையாக சிதம்பர சுவாமிகள், சடைச் சுவாமிகள், வீராசாமி நாயக்கர், தொழூவூர் வேலாயுத முதலியார் முதலிய அன்பர்களுடன் புறப்பட்டனர். புதுச்சேரிக்கு வந்து அங்கிருந்த விசுவநாத அய்யர் முதலான அன்பர்கள் வேண்டுகோட்கிணங்கிச் சிலநாள் புதுவையில் தங்கினர். கேட்டறியாத அரிய பெரிய உண்மைகளை விளக்கிவந்தபடியால் கூட்டம் வலுத்துவந்தது. ஒருநாள் சீனிவாசவரதாச்சாரியார் என்பவர் தருமலிங்கச் செட்டியாருக்குப் பாடஞ்சொல்லிக்கொண்டிருந்தபோது அவர்கள் விரும்பியவண்ணம் பிள்ளைப்பெருமான் பல பெரிய நுண்பொருள்களை விளக்கினர். சிலநாள் சென்றபின் சிதம்பரம் வந்தடைந்து திருவம்பல முடையார் திருவாயிலை அடைந்து அஞ்சலி செய்தார். எவ்வுயிர்க்கும் நிலைக்களமாகிய சிவபதியைக் கண்டார்; விழுந்தார்; எழுந்தார்; விம்மினர்; கனிந்தார்; கலந்தார்; தனிப்பெருங்கருணைத்

தலைவனது தனிப்பெருங் கூத்தினைக் கண்டு, தத்துவங்கள் குழையத் தழைந்து தெள்ளாரமுத சாரமாகிய அருள்நெறி விளங்க, மதுரவாக்கால் நடராஜபதிமாலை, அம்மை திருப்பதிகம் பாடினார். இந்நாளில் நான்காம் திருமுறை பாடிமுடிந்தது என்பர்.

பின்னர், சீர்காழிக்குச் சென்று அம்மன் கோயிற் பந்தலில் பிரசங்கஞ் செய்தனர். வேளூர் என்னும் வைத்தீஸ்வரன் கோவிலுக்குச் சென்று வைத்தியநாதப் பெருமானை வழிபடும்போது, கோயில் அறங்காப்பாளர் உலகநாதத் தம்பிரான் வேண்டுகோளுக்கு இணங்கி அவர் பெயரை அமைத்துப் பதிகம் பாடினர். பாடல்கள் "தவசிகாமணி உலகநாத வள்ளல் மகிழவரு வேளூரில் அன்பர் பவரோகமற வளர்வயித்திய நாதனே" என முடியும். இப்பதிகத்தில் "நல்லோரை நிந்தை செய்வோர் வாய்மதமற மருந்து அருள்வாயாக" என்று வயித்தியநாதப் பெருமானை பிள்ளைப்பெருமான் வேண்டுகின்றார். இதன்பிறகு மதுரைக்குச் சென்று ஆலவாய் அப்பனைப் பாடினரென்ப. இதற்கு ஆதாரமில்லை.

மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் சிதம்பரசுவாமிகள், "வான நாடரு" மென்று தொடங்குங் காப்புச் செய்யுளுடைய சிதம்பர புராணத்தை (1856-57) இராட்சச ஆண்டில் முதல் முதலாக அச்சிட்டார். அதற்கு

இராமலிங்கப் பெருமான் சாற்றுக்கவியாக ஒரு அகவற்பாவும், ஐந்து விருத்தப்பாக்களும் பாடியுதவினர்.

## தண்ணீர் விளக்கு எரிந்தது

1858 ஆம் ஆண்டில் சுவாமிகள் கருங்குழி என்னும் சிற்றூருக்கு வந்துசேர்ந்தனர். இவ்வூர் வடலூருக்குத் தென்கிழக்கில் மூன்று மைல் தொலைவில் உள்ளது. இங்கிருந்தபோது பரசுராமப் பிள்ளை என்னும் அண்ணன் இறந்தார், இக்கிராமத்திலிருந்த வேங்கட ரெட்டியாரும் அவர் மனைவியார் முத்தியாலம்மாளும் அடிகளிடம் மிகுந்த அன்பு பாராட்டி அங்கேயே தங்கவேண்டுமென்று வேண்டினர். அதற்கிணங்கிச் சுவாமிகள் நெடுநாள் தங்கினர். தம்மை வளர்த்த சபாபதிப் பிள்ளையும் சென்னையில் இறந்துபோன செய்திகேட்டு வருந்தினர். வேங்கட ரெட்டியார் வீட்டில் உணவுண்டு இரவெல்லாம் பதிகம்பாடி எழுதுவது வழக்கம். அதற்காக முத்தியாலம்மாள் அடிகள் தங்கியிருந்த அறையில் ஒரு விளக்கும் அதற்கு வேண்டிய எண்ணெயும் ஒரு மாடத்தில் நாள்தோறும் வைப்பார்கள். ஒருநாள் அந்த அம்மையார் பக்கத்து ஊருக்குச் செல்லநேர்ந்தது. வழக்கமாக எண்ணெய் வைக்கும் மண்கலயம் உடைந்துபோனபடியால் புதுக்கலயம் ஒன்று வாங்கி அதைப் பழகுவதற்கு நீர்வார்த்து அம்மாடத்திலேயே வைத்திருந்தனர். புறப்படும் அவசரத்தில் விளக்கேற்றினர்களேயன்றி வேறு பாத்திரத்தில்

எண்ணெய் வைக்க மறந்து சென்ருர்கள். நம்பெருமான் விளக்கில் எண்ணெய் குறையுந் தோறும் பக்கத்தில் நீர்விட்டு வைத்திருந்த கலயத்தில் எண்ணெய் இருப்பதாகவே கருதி, இரவு முழுவதும் அந்த நீரையே விளக்கில் ஊற்றிக்கொண்டு பதிகம் எழுதும் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். மறுநாள் அம்மையார் திரும்பி வந்து கவனிக்கும்போது மகிமை வெளியாயிற்று. இதனைப் பிள்ளைப்பெருமான்,

> மெய்விளக்கே விளக்கல்லால் வேறுவிளக்
> கில்லையென்ருர் மேலோர் நானும்
> பொய்விளக்கே விளக்கெனவுட் பொங்கிவழி
> கின்றேனோர் புதுமை யன்றே
> செய்விளக்கும் புகழுடைய சென்னநகர்
> நண்பர்களே செப்பக் கேளீர்
> நெய்விளக்கே போன்றொருதண் ணீர்விளக்கு
> மெரிந்ததுசந் நிதியின் முன்னே
>
> —திரு. 2: 101

என்று எழுதிவிட உடனிருந்த அன்பர்கள் சென்னைக்குத் தபால்மூலமாய் இதைத் தெரிவித்தனர். "தண்ணீர் விளக்கும் எரிந்தது சந்நிதியின் முன்னே" என்று கூறுவதில் வியத்தகு நிகழ்ச்சியுடன் ஓர் உண்மையும் விளங்குகின்றது. நம் பிள்ளைப்பெருமான் பதிகம் பாடி எழுதும்போதெல்லாம் ஆண்டவன் உடனிருந்தான் என்பது புலனுகும். அன்றி பிள்ளைப்பெருமான் சந்நிதியின் முன் எனினுமாம். இதன் அருமை உணர்ந்த ஆதீனகர்த்தர் சிதம்பரசுவாமிகள் இதனைப் போற்றிப் பாடியுள்ளனர். சிதம்பரசுவாமிகள்

வேதாகம சுத்த சைவ சித்தாந்த சமயாசாரிய பீட மான மதுரை திருஞானசம்பந்தமூர்த்திகள் ஆதீன கர்த்தராக விளங்கினுர்கள். அவர்கள் திருவருட்பா திருமுறைகளுக்குச் சிறப்புப்பாயிரம் செய் தருளினர்.

" தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோல் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும்—கண்மணியாம்
நங்கள் இராமலிங்க னல்லருட் பாமுறையைத்
துங்கமுற மாணு தொழு"

இவ்வெண்பாவில் இராமலிங்கப் பெருமான் தண்ணீர்கொண்டு விளக்கெரித்ததுபோல மக்களின் உள்நீர் (அன்பு) கொண்டு அவர்களை யெல்லாம் சிவம்விளங்க ஓங்குவிக்கும் வல்லபம் உடையது அருட்பா திருமுறை என்றும், அடிகளை நமது கண்மணியாகிய இராமலிங்கன் என்றும், கண்போல இன்றியமையாதவர் என்றும், கண்ணின் மணிபோல அணித்தானவர் என்றும், அவருடைய அருட்பா திருமுறைகளைத் தொழுவா யாக என்றும் சிதம்பரசுவாமிகள் மாணவனை நோக்கிப் பாராட்டிக் கூறுகின்றுர். உண்ணீர் என்பது போகாப்புனல் என்பாருமுளர்.

இந்த அற்புத நிகழ்ச்சியைத் தாம் செய்ய வேண்டுமென்று அடிகள் நினைக்கவில்லை. அற்புதம் தானே நிகழ்ந்தது. சுவாமிகளிடம் பல பேர் வந்தார்கள்; மாணவராவதற்கன்று. இவர் அற்புதம் செய்கின்றுர் என்று கேள்விப்பட்டு பலரும் வேடிக்கைபார்க்க வந்தார்கள். அவர் களுக்கெல்லாம், "எவ்வுயிரும் தம்முயிர்போல்

எண்ணுக'' என்று உபதேசம் செய்தனுப்பினர் அடிகள். அவர்களையும் மீறி அற்புதங்கள் நிகழ்ந்து வந்தன. அவற்றுள் இதுவுமொன்று. திருவருட்பா வரலாற்றில் தொழுவூராரும் இதைக் குறிப்பிடு கின்றார். எப்படி தண்ணீர் விட்டு விளக்கெரியும்? இஃது உண்மையாக நடந்த நிகழ்ச்சி. பகுத்தறிவு வேலை செய்யவில்லை. விஞ்ஞானம் விழிக்கிறது. இஃது அருட்செயல்; இதற்கு விளக்கங்கூற அரு ளறிவு வேண்டும். சுவாமிகள் தமது அருளறிவால் ''சந்நிதியின் முன்னே எரிந்ததுகாண்'' என்றனர். LIMITATIONS OF SCIENCE என்ற நூலாசிரியர் ஓரளவிற்குமேல் விஞ்ஞானம் வேலைசெய்யாது என்பார்.

## சமரச சுத்தசன்மார்க்க சத்திய தருமச்சாலை

இந்த நாளில் சுவாமிகள் தாம் வந்தவேலை யைச் செய்து நம்மையெல்லாம் உய்விக்க உளங் கொண்டார். மனிததேகத்தைப் பெற்றுக்கொண்ட நாம் இவ்வுலகில் காலமுள்ளபோதே பெறவேண் டியது ஒப்பற்ற பேரின்பசித்திப் பெருவாழ்வு. அவ்வாழ்வைப் பெறுவதற்குக் கடவுளின் அருள் விளக்கம் வேண்டும். அவ்வருள் விளக்கம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமையாகிய சீவகாருண்ய ஒழுக்கத்தால் உண்டாகும். இரக்கமே தன்னுயிர் என்றும், இரக்கம் ஒருவுமென்னில் தன்னுயிரும் ஒருவுமென்றும் அடிகள் கூறுவர். இரக்கமும் கருணையும் வளரும்போது அருள் விளங்கும். அருள் விளங்கும்போது சிவம் விளங்கி வயப்படும். அதற்குக் கருணையுஞ் சிவமுமே பொருளெனக்

காணுங் காட்சியைப் பெறவேண்டுமென்பர். சீவ காருண்யம் வளர்ந்து பெருகித் தனிப்பெருங் கருணை ஓங்கும்போது அருட்பெருஞ்சோதியாகிய சிவத்திற் கலந்து பேரின்ப சித்திப் பெருவாழ்வு பெறலாகும். இவ்வாழ்விற்கு ஆன்மலாபம் என்று பெயர். இதை இந்தநாள் இவ்வுலகில் முறை திறம்பலராய் உயிர்க்கு இதம் செய்பவர்கள் அந்த நாள் மகிழ்வர் என்று அடிகள் அறிவிக்கின்றார்.

இதற்கு அடிப்படையாக உள்ளது சீவ காருண்ய ஒழுக்கம். இதை ஆன்மநேயத்தால் பெறலாம். இது சன்மார்க்க நெறி. இதற்குச் சீவதயவு விளங்கிப் பெருகவேண்டும். இதற்காகவே சுவாமிகள் சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை ஒன்று நிறுவத் திருவுளங் கொண்டனர். இஃது ஆண்டவனது ஆணை என்றும், கருணை அளித்துத் தருமச்சாலையிலே வாவென்றான் என்றும் கூறுவர்.

—முன்பாட்டுக்

காலையிலே வந்து கருணையளித் தேதருமச்
சாலையிலே வாவென்றான் தான்

—திரு 6: 91:5

இதற்கு இடம்தேடி அலைந்தார். "ஏழைகள்வளைத்த நிலமெலாங் கவரும் எண்ணமே பெரிதுடையேன்" என்று ஏங்கினார். பலரும் பலவிடங்களைக் காட்டினர். முக்கோணவடிவில் உள்ள சிதம்பரமாகிய திருத்தில்லை, விருத்தாசலமாகிய திருமுதுகுன்றம், கடலூராகிய திருப்பாதிரிப்புலியூர் முதலான

திருக்கோயில்களுக்கு நடுவே உள்ள பெருவெளியில் நின்று வடலூரில் தருமச்சாலையை அமைக்க விரும்பினுர். மேலும், அங்கு நின்று தென்கிழக்கு மூலையில் பார்த்தால் சிதம்பரத்தின் நான்கு கோபுரங்களும் தெரியும்.

நடிப்பார் வதிதில்லை நற்கோ புரத்தின்
அடிப்பார்வை யும்வடக்கே யார்ந்து-கொடிப்பாய
நின்று வளர்மலைபோ னெஞ்சேபார்த் தாற்றெரியும்
இன்றெவ் விடத்தெனிலிப் பாட்டு

—திரு 6: 89:8

அன்றியும், தென்கிழக்கே அம்பலமுடைய பூர்வ ஞான சிதம்பரம் உள்ளது. அங்கே பொதுவாக ஐந்து சபைகள் உள்ளன. அவை ஐம்பூதங்களை ஆதாரமாகக் கொண்டவை. அவை,

1. பொற்சபை (நிலம்)
2. ரஜித சபை (நீர்) (இராஜசபை)
3. தெய்வ சபை (நெருப்பு) (தேவசபை)
4. நிருத்த சபை (காற்று)
5. சிற்சபை (வான்)

எனப்படும். எனினும் சிற்சபை விளக்கமே சிறப்பாக உள்ளது சிதம்பரம். கருமசித்திகள் யோக சித்திகள் எல்லாம் விளங்கும். சன்மார்க்க அடைவிற்கு பொற்சபை, சிற்சபை, ஞானசபை என்னும் மூன்றுபடிகள் பேசப்படும். இவற்றுள் ஞானசபை எங்கும் இதுகாறும் எழவில்லை. இது ஞானசித்திகள் விளங்கவேண்டிய ஞானகாலம். அருட்பெருஞ்சோதி ஆண்டவன் அருள் வழங்கி நிலவி நிற்கும் ஞானசபை காணுவதற்கு உற்ற

இடமாகவும் இருந்தது இவ்வெளி. அதனுல் வடலூர் என்றும், பார்வதிபுரம் என்றும் உலகியற் பெயருடையதும், உத்தரஞான சிதம்பரம் என்றும், உத்தரஞான சித்திபுரம் என்றும் திருவருளால் ஆக்கப்பட்ட ஆக்கச் சிறப்புப் பெயர்களை உடையதுமான இவ்விடம் தருமச்சாலையை அமைக்கும் இடமாக இருந்தது.

சுவாமிகள் விரும்பியபடி வடலூர் மக்கள் சுவாமிகள்பேரில் எண்பது காணி நிலத்தை இனுமாகப் பட்டாசெய்து கொடுத்தனர். பனை மரங்களை நிறுத்தி விழல்வேய்ந்த பெருங் கொட்டகை அமைத்துப் பிரபவ ஆண்டு வைகாசித் திங்கள் பதினேராம் நாள் (1867-மே 23) வியாழக் கிழமை அன்பு விளக்கேற்றிச் சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை தொடங்கப்பட்டது. சுவாமிகள் சீவகாருண்ய ஒழுக்கம் முதல்பாகத்தை எழுதி சிதம்பரம் வெங்கடசுப்பு தீட்சதரைக் கொண்டு வழிபாடு செய்து வாசிக்கச்செய்தார். தருமச்சாலைச் செங்கல் கட்டிடத்திற்குக் கால் கோள், சமரச வேத பாடசாலை, வைத்தியசாலை, உபகாரச்சாலை, உபாசனுசாலை, விவகாரசாலை முதலியவற்றை அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தொடங்கினுர். அன்று முதல் மூன்று நாளைக்கு நாள் ஒன்றுக்கு பதினுயிரம் பேர்களுக்கு மேல் அன்னதானம் செய்வித்து மகிழ்ந்தனர். எப்போதும் சாலையில் அடுப்பு புகைந்துகொண்டே இருக்கவேண்டும் என்று பெருமான் கட்டளையிட்டனர்.

காலையிலே யென்றனக்கே கிடைத்தபெரும் பொருளே
　　களிப்பேயென் கருத்தகத்தே கனிந்தநறுங் கனியே
மேலையிலே யிம்மையிலே வொருமையிலே தவத்தால்
　　மேவுகின்ற பெரும்பயனும் விளைவையெலாந் தருமச்
சாலையிலே ஒருபகலிற் றந்ததனிப் பதியே
　　சமரசசன் மார்க்கசங்கத் தலையமர்ந்த நிதியே
மாலையிலே சிறந்தமொழி மாலையணிந் தாடும்
　　மாநடத்தென் னரசேயென் மாலையணிந் தருளே

—திரு 6: 38:92

என்றபடி இம்மையிலே, ஒருமையிலே பெருந் தவமியற்றிப் பெறக்கூடியதாகிய பெரும்பயனும் விளைவுகளெல்லாவற்றையும் தருமச்சாலையிலே பின்பாட்டுக் காலையிலே, ஒரு பகலில் எல்லாம் வல்ல தனித்தலைவன் தந்தருளினுன் என்பர்.

## சமரச சுத்தசன்மார்க்க சத்திய சங்கம்

இச்சங்கம் எப்பொழுது தொடங்கப்பெற்றது என்று அறியமுடியவில்லை. முதலில் இது சமரச வேத சன்மார்க்க சங்கம் எனப்பட்டது.

வேலையப் பாபடை வேலையப்
　　பாபவ வெய்யிலுக்கோர்
சோலையப் பாபரஞ் ஜோதியப்
　　பாசடைத் துன்றுகொன்றை
மாலையப் பாநற் சமரச
　　வேதசன் மார்க்கசங்கச்
சாலையப் பாவெனைத் தந்தவப்
　　பாவந்து தாங்கிக்கொள்ளே

—திரு. 6 : 114 : 3

என்ற இப்பாடலை நோக்கினுல் சங்கத்தைச்

சார்ந்ததாகவே சாலை உண்டாயிற்று என்று எண்ணலாம். தொழுவூர் வேலாயுத முதலியாரும் தமது திருவருட்பா வரலாற்றில் (32) "சமரச வேத சன்மார்க்க சங்கம்" என்றே குறிப்பிடுகின்றார், திருவருட்பா முதலில் வெளியிட்டபோது (1872) அதிலும் சமரச வேத சன்மார்க்க சங்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திருவருட்பாவில் சங்கத்தைப்பற்றிய பாடல்கள் சில உள்ளன. அவற்றுள் சங்கத்தார் பெருமை சிறப்பித்துப் பேசப்படுகின்றது. "சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் காண...என் உடல் ஆதிய எல்லாவற்றையும் உமக்கே தந்தனன்" என்று ஆண்டவனிடம் சத்தியஞ் செய்கின்றார் (6 : 68 : 8). "சுத்தசன்மார்க்க சங்கத்தவரெல்லாம் மாலை மாலையாக வந்து சூழ்கின்றனர்; அருட்பெருஞ் ஜோதித் தெய்வமே! பள்ளி எழுந்தருள்வாய்" என்று பாடுகின்றார் (6 : 65 : 2). மரணமெனும் பெரும்பாவியைச் சமரச சன்மார்க்க சங்கத்தவர்களால் அல்லாது, எற்றிநின்று தடுக்கவல்லவர் எவ்வுலகிலும் யாருமில்லை என்று எச்சரிக்கை செய்கின்றார் (6 : 110 : 24). அருள்ஒளி நெறியில் நின்று அதில் பேரனுபவங்களைப் பெற்று, "சுத்த சிவ சன்மார்க்க சங்கம் தலைப்பட்டேன்" என்று கூறி மகிழ்கின்றார். இன்னும் மேல்நிலை அனுபவமான புறப்புணர்ச்சியில் பொன்வடிவந்தாங்கிய அடிகள் "என் திருக்கணவருடன் சமரச சன்மார்க்கத் திருச்சபைக் கண்ணுற்றேன்" என்றுங் கூறுகின்றார் (6 : 82 : 97)

சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியே னுமது
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினெடுங் கேட்பீர்
என்மார்க்கத் தெனை நுமக்கு ளொருவனெனக் கொள்வீர்
எல்லாம்செய் வல்லநம திறைவனையே தொழுவீர்
—திரு. 6 : 132 : 63.

என்றவதனுல் அடிகள் தமது தாழ்மையைக் கூறிச் சங்கத்தின் ஏற்றத்தை உணர்த்துவது காணலாம்.

18—7—1872-இல் வெளியிட்ட ஞானசபை விளக்கப் பத்திரிகையில் அடிகள், " சங்கத்திற்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கமென்று பெயர் வழங்குதல் வேண்டும் " என்றனர்.

தங்கமே யனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவுஞ் சங்கஞ்
சார்திருக் கோயில் கண்டிடவும்
துங்கமே பெறுஞ்சற் சங்கநீ டூழி
துலங்கவுஞ் சங்கத்தி லடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
யாடவு மிச்சைகா ணெந்தாய்
—திரு. 6 : 20 : 21.

என்றவதனுல், எத்தகைய பெரியோர்களைக் கொண்ட சங்கத்தைத் தோற்றுவிக்க அடிகள் விரும்பினுர் என்பதும், சங்கஞ் சார்ந்த சாலையைத் தோற்றுவித்த அடிகள் சங்கஞ்சார் கோயிலாகிய ஞானசபையைக் கட்டிக் காண விழைந்தனர் என்பதும் புலனுகும்.

**கல்பட்டு ஐயா**

திருநறுங்குன்றத்தில் கல்பட்டு ஐயா என்னும் ஒரு யோகியார் இருந்தார். அவர் தமது யோக வல்லபத்தினுல் தம்மை ஒரு பெரிய ஞானுசிரியர் இன்ன மாதம், இன்ன கிழமை, இன்ன நேரத்தில் வலிய வந்து ஆட்கொள்வார் என்று அறிந்தார். தாமுணர்ந்தபடி பலருக்கும் உரைத்துத் தமக்கு வரக்கடவ ஞானதேசிகரது வரவெதிர் நோக்கி இருந்தார். அவர் குறிப்பிட்ட அதே நேரத்தில் அடிகள் அவர்முன் தோன்றி ஆட்கொண்டருளி ஞர். கல்பட்டு ஐயா அவர்கள் மரணமிலாதிருக்க வேண்டி யோகபாதையில் நின்று காயகல்பம் உண்டு தம்முடம்பைப் பக்குவப்படுத்தி வந்தார். அதையறிந்த சுவாமிகள் அவரது உயிர் தளிர்ப்பத் தடவிப்பார்த்து, "உடம்பைக் கல்லாக்கிக்கொண் டால் ஞானம் வராதே, ஆல் ,அரசுபோல ஆயிரம் ஆண்டுகள் அறிவற்று உயிருடன் இருப்பதால் பயனில்லை" என்று இரங்கினர். சுவாமிகள் ஆணைப்படி கல்பட்டு ஐயா வடலூர் சேர்ந்து தமக்கென அமைக்கப்பட்ட சிறுகுடிலில் அமர்ந்து தருமச்சாலையில் கஞ்சியூற்றும் பணி செய்து வந்தார். நம் வள்ளற்பெருமான் தருமச்சாலையில் பிரசங்கம் செய்யுங்கால் அவருக்குப் பயன்படக் கூடிய பகுதி வரும்போது சந்நிதிக்கு அழைப்பது வழக்கமாம்.

தேவ

கூடலூர் வேதநாயகம்பிள்ளை சுவாமிகளிடம் பேரன்பு பூண்டவர். அவரது மகன் ஐயாசாமிப் பிள்ளை நோய்வாய்ப்பட்டு உயிர்நீங்கும் நிலையாகி

விட்டது. தந்தையார் மிகவும் வருந்தி அடிகளை அழுந்தி நினைந்து அழுதுகொண்டிருக்கும் அத் தருணத்தில் வடலூரில் பிரசங்கம் செய்துகொண் டிருந்த நம்பெருமான் அவர் வீட்டருகில் தோன்றிக் கதவைத் தட்டினர். வேதநாயகம்பிள்ளை கதவைத் திறந்து சுவாமிகளைக் கண்டு வணங்கினர். நம் பெருமான் உள்ளே சென்று அவர் மகனுக்கு திருநீறு தடவிக் கண்விழிக்கச் செய்து, சிறிது நேரத்திற்குள் உட்காரவுஞ் செய்துவிட்டுப் புறப் பட்டார். மறுநாட் காலையில் வேதநாயகம்பிள்ளை மகனை வண்டியிலழைத்துக்கொண்டு வடலூருக்கு வந்தார். அப்போது தருமச்சாலையில் பிரசங்கம் செய்துகொண்டிருந்த இராமலிங்கப் பெருமான் வெளியில் வந்து இருவருக்கும் திருநீறு அளித்து, "நேற்று நிகழ்ந்தது ஆண்டவன் திருவிளையாட்டே ஆதலால் அதை வெளியிடவேண்டாம்" என்று கூறித் தருமச்சாலைக்குள் சென்றார். முதல்நாள் இரவு முழுவதும் சுவாமிகள் தருமச்சாலையிலேயே பிரசங்கம்செய்துகொண்டிருந்த செய்தியை அறிந்து இருவரும் அடிகளின் சிவானுபவப் பேற்றையுணர்ந்து வியந்து துதித்தனர். இவ் வுண்மை நிகழ்ச்சிக்கு அருட்பாவில் மேற்கோள் இல்லை.

இவ்வாறாக இராமலிங்கப் பெருமான் வடலூரில் தருமச்சாலையில் தங்கியிருந்துகொண்டு அற்றார் அழிபசி தீர்த்தும், நோயுற்றுத் தம்மை அண்டி வருபவர்க்கெல்லாம் நோய் நீக்கியும், வேண்டு வார்க்கு வேண்டுவனவற்றை அவரவர் தகுதிக்

கேற்பச் செய்தும், ஆண்டவன் புகழைப் பாடியும் பரவியும், விரித்துரைத்தும் திருவருளைக் கொள்ளை கொண்டு அன்பே உருவாய் அருளே உரையாய் அற்புதப் பெருஞ்செயல் பல செய்துவந்தார். அவற்றுள் தக்க சான்றுகள் கிடைத்தனமட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. தருமச்சாலையில் வீற்றிருந்த அந்நாளில் சுவாமிகள் தமது தேகத்தை ஆண்டவன் அருளால் சுத்ததேகம் எனப்படும் அன்புருவமாக மாற்றிக்கொண்டனர். பொன்னுருவில் எப்பொழுதும் உயிரனுபவமும், எண்ணுந்தோறும் அருளனுபவம் (~~சிவானுபவம்~~) பெற்றுத் திளைத்தார். ஆனால் அற்புதம் செய்ய நேர்ந்தது அற்புதம் செய்வதற்கன்று; அன்பு குறித்தும் இரக்கம்பற்றியும் அவரைப் பிழைக்கவைத்தார். வடலூரில் பேசிக்கொண்டிருக்கும்போதே கூடலூருக்கு எப்படிப் போனார்? எப்படித் திரும்பினார்? யார் அறிவித்துப் போனார்? வெளியிடவேண்டாமென்று ஏன் மறுத்தார்? இது சுத்ததேகியின் இயல்பு. வேதநாயகம்பிள்ளை ஆன்மநேய ஒருமையால் அடிகளைப் பற்றினார். அவரது நினைவு திண்ணியதாயிற்று. அடிகளின் அறிவைப் பற்றியிழுத்தார். அவ்வறிவு அருளறிவாக இருந்தபடியால் ஐயாசாமிப்பிள்ளை கணந்தோறும் இறந்து வருவதை அறிந்தார்; இரக்கமும் அன்பும் அக்கணத்தே கூடலூரில் அவர் வீட்டிற்குப்போய் சுத்தபூத காரிய அணுக்களை இணைத்து அடிகளின் சுத்ததேகத்தை அங்குத் தோற்றுவித்தன. அடிகளும் அவர்க்குத் திருநீறு நல்கி நோயகற்றி அவனருளால் எழச்செய்தார்.

அருளுருவம் தாங்கினூர். அனுபவநிலைகளை எல்லாம் விளக்கியருளினூர். அருட்சுதந்தரம் பெற்றூர். பஞ்சகிருத்திய சுத்த கர்த்தத்துவம் முதலான எல்லா வல்லபங்களையும் பெற்றூர். பதினைந்து வகையான பிண்ட சித்திகளையும், அந்தரங்க பகிரங்க சித்திகளையும், தத்துவ தாத்துவித சித்திகள் அனைத்தையும் திருக்கடைக்கணிப் பாற் செய்யவல்லவராயினூர். சித்திகள் எல்லாம் தமது ஏவல் கேட்கும் சமரச சுத்த சன்மார்க்க சுதந்தர ஞானியின் செயல்கள் எல்லாம் அற்புதமாகவே இருந்தன. தமது வல்லபத்தை வெளியில் காட்டாமல் மறைத்துவந்தார்.

சுவாமிகள் திருவருள்வலத்தால் பொறி, புலன், கரணம் முதலிய தத்துவங்கள் அனைத்தையும் வென்று, நின்மலராகித் தத்துவாந்தத்தில் நின்று, தம்முண்மை உணர்ந்து, இயற்கையுணர்ச்சியைப் பெற்று, இயற்கையுண்மைக்கண் இயற்கை இன்பானுபவம் செய்பவரானூர்.

## நிழற்படம்

இந்நிலையில் சுவாமிகளது திருவுருவத்தைப் படமெடுக்கக் கருதிய அன்பர்கள் சென்னை மாசிலாமணி முதலியார் அவர்களைத் தருவித்தனர். அக்காலத்தில் அவர் பேர்பெற்ற நிழற்பட நிபுணர். அவரைக்கொண்டு அடிகளைப் படமெடுத்தனர். அன்பரும் திருவருள் எவ்வாருகுமோ என அஞ்சியவராய் எட்டுமுறை படம்பிடித்தார். சென்னை சென்று விளக்கிப் பார்த்தபோது சுவாமிகளின்

உடையைத்தவிர முகமோ, கைகளோ, கால்களோ படத்தில் விழவில்லை. சுற்றிப் பிணித்த முக்காட்டு உடைமட்டும் விழுந்திருந்தபடியால் போட்டோ பிளேட்டுகள் (Photographic Plates) குற்ற மற்றவை என்பது புலனாகின்றது. இவ்வுண்மையை காரணப்பட்டு கந்தசாமிப்பிள்ளை சுவாமிகளின் சரித்திரக் கீர்த்தனையில்,

செப்பும் பிரணவ தேக இலக்கணம்
    தெரித்திட வுருவருவத்
தேகத்தைக் காட்டிட வடிச்சுவடது
    தெரிந்திடா வகை மருவ
சென்னை மாசிலாமணி படங் கொள்ளத்
    தேராமலெண் தரமேமாறச் செய்துள்ள
சித்தியை அறிந்த மெய்யன்பர் புகன்ற
    செய்தியு மறிந்த வெம்வினை யகன்ற
கதிபெற்றுய்யக் கடைக்கண்பாரையா ஸ்ரீராமலிங்கையா
    கருணை செய்ய வெமக்கிங் காரையா
கண்ணி - 252

என்று பாடியுள்ளார்.

இவ்வுண்மை மேலும் சில அன்பர்களாலும் கூறப்படுகின்றது. ஏன், சுவாமிகளாலும் கூறப் படுகின்றது காண்மின்.

ஊன உடம்பே ஒளியுடம்பாய் ஓங்கிநிற்க
ஞான அமுதெனக்கு நல்கியதே—வானப்
பொருட் பெருஞ்ஜோதிப் பொதுவில் விளங்கும்
அருட்பெருஞ் ஜோதி யது —திரு. 6: 99: 6

ஆதலின், ஒளியினால் ஆகிய சுவாமிகளின் உடம்பில் ஒளி ஊடுருவிப் பாய்ந்து அப்பாற்

போகும்; நிழல் விழாது; அதனால் நிழற்படமெடுக்க இயலவில்லை. இது சுத்ததேகத்தின் இலக்கணம். ஒளியுடல் தாங்கிய அடிகள் தாம் பொன்வடிவுற்ற செய்தியைச் சத்தியமிட்டு உரைத்தருளுகின்றனர்.

தூக்கங் கெடுத்துச் சுகங்கொடுத்தான் என்தனக்கே
ஆக்கமென வோங்கும்பொன் னம்பலத்தான்—ஏக்கமெலாம்
நீங்கினேன் எண்ண நிரம்பினேன் பொன்வடிவந்
தாங்கினேன் சத்தியமாத் தான்

—திரு. 6: 99: 15

துன்பங் கெடுத்துச் சுகங்கொடுத்தான் என்தனக்கே,
அன்பகத்தில் வாழும்சிற் றம்பலத்தான்—இன்புருவம்
தாங்கினேன் சாகாத் தனிவடிவம் பெற்றொளியால்
ஓங்கினேன் உண்மை யுரை

—திரு. 6: 99: 16

என்பதுங் காண்க.

## திருவருட்பா வெளியீடு

சுவாமிகள் பலவிடங்களில் தங்கியிருந்த காலங்களில் பாடிய பதிகங்களையும், எழுதிய உரை நூல்களையும் சிலர் தனித்தனிச் சிறு புத்தகங்களாகப் பிழையுடன் அச்சிட்டு வழங்கினர். இதனைக் கண்ட புதுவை வேலு முதலியார், சிவானந்தபுரம் செல்வராய முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார் முதலிய அன்பர்கள் சுவாமிகளை அணுகி, "தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய அருட்பாக்களை அச்சிட உத்தரவாக வேண்டும்" என்று விண்ணப்பித்தனர். பெருமான் அதற்கு

இசையவில்லை. மீண்டும் அன்பர்கள் வற்புறுத்தி வேண்டிக்கொள்ள ஒருவாறு இணங்கினர். உபய கலாநிதிப் பெரும்புலவராகிய தொழுவூர் வேலாயுத முதலியாரைக் கொண்டு அதுவரை பாடியிருந்த பாக்களில் சில பதிகங்களை விடுத்து முதல் நான்கு திருமுறைகளாக வகுக்கச்செய்தனர். தொழுவூர் வேலாயுத முதலியார் திருவருட்பா வரலாறு பாடினுர். அதில் காப்புச்செய்யுள் ஒன்றும் அறுபத்துமூன்று வரலாற்றுச் செய்யுள் களும் உள்ளன.

இதனைச் சுவாமிகளிடம் காட்டியபோது அவர், "ஏன்காணும்! ஒவ்வொரு பாட்டிலும் அறுபத்து மூன்று பாடல்கள்?" என்றனர். இங்ஙனம் அடி களின் ஒப்புதல் பெற்றனர். பெரும்பாலான இப் பாக்களில் ஒற்றுநீக்கி எண்ணினுல் அறுபத்து மூன்று எழுத்துக்கள் காணப்படும். முதலிரண்டு பாக்களும் குரு தோத்திரமாக அமைந்தன.

பராபரம் கோதகலும் அநாமயம் போதநிலை
 பகாநலம் வாதமறு சுகோதயம் பாதிதமில்
நிராமயங் காரகம திலாதசஞ் சீவிதநல்
 நிராசைகொண் டாருடைய நிகேதநஞ் சூதமுறல்
வராதஇன் பாரவெனை முனுளில்வந் தேயருளி
 மகாபலஞ் சேரவருள் விராவுசெம் பாதநம
இராமலிந் தார்மனதின் இராதசந் தோடநம
 இராமலிங் காயநம இராமலிங் காயநம.

ஈற்றிலுள்ள இராமலிங்காய நம என்ற சொற் றொடர்களில் ஒன்று இராமலிங்கப் பெருமானே போற்றி என்ற பொருளது. மற்றது இராமல்+இங்கு

+ஆய+நம என்று பிரிக்கப்படும். நமது கண்ணுக்குப்புலப்படாது (அங்கு) இராமல், இங்கு நமக்கு ஆனகுருவே போற்றி என்றும், நம்மையெல்லாம் ஈடேற்றத் தோன்ருதிராமல் இங்குற்றவா போற்றி என்றும் பொருள்படும்.

இராமலிந்த யாவரையுமீ டேற்றத் தோன்ரு
திராமலிங்கு வந்த விராமலிங்க சற்குருவே

என்று சற்குரு புலம்பற் கண்ணியில் காரணப்பட்டு கந்தசாமிப் பிள்ளை கூறுவதும் காண்க.

இராமலிங்கப்பெருமானை அருட்பிரகாச வள்ளல் என்று முதன்முதலில் அழைத்தது தொழுவூர் வேலாயுத முதலியார். திருவருட்பா வரலாறு 28–ஆம் பாடலில் அதைக் காணலாம். அதுவும் அநித்தமற்ற சில அறவோர் அருட்பிரகாச வள்ளலென இனிதேத்தினர் என்பார்.

தனித்துரைத்த இராமலிங்கத் தனிமறையா
தரித்துய்ந்தார்
இனித்தஅருட் பிரகாச வள்ளலென இனிதேத்தி
அனித்தமற்ருர் சிலவறவர் அந்தோஎன்போல் மறந்து
மனித்தரெனக் கொண்டொழிந்தார் மலவாழ்விற்
சிலமறவர்

அருட்பிரகாச வள்ளலார் என்பது அருள் ஒளியை வரையாது வழங்குபவர் என்று பொருள் தரும்.

உலகுயிர்த் திரளெலாம் ஒளிநெறி பெற்றிட
இலகும்ஐந் தொழிலையும் யான்செயத் தந்தனை
—திரு. 6: 1: 1578

என்றவாறு அடிகள் தாம் பெற்ற ஒளிநெறிச் செம்மையை அனைவருக்கும் வாரி இறைத்தார்.

எவ்வுயிர்த் திரளும் என்னுயி ரெனவே
எண்ணிநல் லின்புறச் செயவும்
அவ்வுயிர் களுக்கு வருமிடை யூற்றை
அகற்றியே அச்சநீக் கிடவும்
செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச்
சிவசிவ என்றுகூத் தாடி
ஓவ்வுறு களிப்பால் அழிவுரு திங்கே
ஓங்கவும் இச்சைகாண் எந்தாய்

—திரு. 6: 20: 18;19

என்ற அவரது இச்சையெலாம் எய்த இசைந்தருளினன் ஆண்டவன். உயிர்க்கெல்லாம் உளத்தாலும், உரையாலும், உடலாலும், உள்ளதையெல்லாம் உதவி நின்ற உத்தமரை 'வள்ளல்' என்றார் கலாநிதிப் புலவர்.

அருட்பிரகாச வள்ளல் வகுத்த பாக்களைத் திரட்டித் திருவருட்பா என்று பெயர் சூட்டினர். அருளாலே உரைத்தவற்றை அருட்பா என்று ஒரு சிலர் பொருள் கொண்டனர் என்றும் ஆண்டவன் அடிமலரோடு இரண்டறுத்து வாழ்விக்கும் உளவு உடையது அருட்பா என்றும் கூறுகின்றார். தம்மைச் சிவமாக்கும் அருள்வல்லபம் உடையது அருட்பா என்று தாம் அருட்பாவின் உரை கொண்டவாறும் கூறுவர். திரு என்பதற்கு "கண்டாரால் விரும்பப்படுகின்ற தன்மை நோக்கம்" என்று திருச்சிற்றம்பலக் கோவை

யாரில் பேராசிரியர் உரை கூறுவர். அந்தத் திரு எனும் அடைசேர்த்து திருவருட்பா என்று பெயர் கொடுத்துத் தாம் பாடிய திருவருட்பா வரலாற்றை யும் முன்னரமைத்து அட்சய ஆண்டு தை மாதம் (1867) வெளியிட்டார்.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் இரமலிங்கம் பிள்ளையவர்கள் இயற்றிய திருவருட்பா என்றதைக் கண்ட அடிகள் தொழுவூர் வேலாயுத முதலியாரைக் கூப்பிட்டு, "பிச், ஏன்காணும்! திருவருட்பிரகாச வள்ளலா ரென்று உம்மை யார் போடச்சொன்னது?" என்று அதட்டிக் கேட்க முதலியார் அச்சத்துடன் பிள்ளைப்பெருமான் திருவடிக்கண் சிந்தைவைத்து நின்றனர். சிறிதுநேரங் கழிந்தபின் "திருவருட் பிரகாச வள்ளல் (பதி) ஆர் என்னும் சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை" என்று பிரித்துக்காட்டி மகிழ்வித்தனர்.

திருவருட்பா வரலாற்றில் 28-ஆம் பாடலில், "திருவருட்பிரகாச வள்ளலென இனிதேத்தி" என்ற அடியிருக்கிறதே அதை அடிகள் கண்டு முதலில் ஒப்புதல் தெரிவித்தது எப்படி? "அருள் ஒளிவழங்கும் ஆண்டவனே என்று இனிமையாகத் துதித்து" என்றும் அவ்வடிக்குப் பொருள் கூற லாம். ஆதலால் முதலில் அப்பாட்டைக்கண்ணுற்ற நம்பெருமான் அச்சொற்றொடர் தம்மைக் குறியாது ஆண்டவனைக் குறித்ததாகவே எண்ணினார் போலும். அதனால் திருவருட்பா வரலாற்றைத் தம் மிடம் காட்டியபோது ஒன்றுஞ் சொல்லாமல்

இருந்துவிட்டு, "திருவருட்பிரகாச வள்ளலா ரென்னும் சிதம்பரம் இராமலிங்கம்" என்று தம்மைச் சுட்டியது கண்டு வேறு பொருள் விரித்தனர் போலும்.

## திருவருட்பா வாதம்

திருவருட்பாவின் முதல் நான்கு திருமுறைகள் வெளிவந்ததும் ஈழநாட்டிலிருந்து வந்திருந்த நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களின் அபிமானிகளுக்கும் சிதம்பரம் இராமலிங்க அடிகளின் அபிமானிகளுக்கும் பத்திரிகை வாயிலாகவும் வேறுவகையாகவும் வாதம் மூண்டது. யாழ்ப் பாணத்திற்கு அணித்தான நல்லூர் என்ற ஊரைச் சேர்ந்த ஆறுமுக நாவலர் தவச்சிறந்த சைவசமய அறிஞர். சைவசித்தாந்த நூலறிவிலும், தமிழ் எழுதும் திறத்திலும் அவர் சிவஞான முனிவருக்கு ஒத்து விளங்கினர். அவர் வடமொழிப் புலமையும் ஆங்கில அறிவும் உடையவர் என்ப. இலங்கைத் தீவில் கிறித்தவ சமயம் பெருகி வளர்ந்து வரு வதைக் கண்ட அவர் ஆற்ருது சைவசமயப் பிரசாரம் செய்துவந்தார். பழமையில் ஊறியவர். சைவமும் தமிழ்த்தொண்டும் அவருக்கு உயிர்நாடி யாக இருந்தன. நல்லபல சமயத் தமிழ் நூல்களை எழுதினர். அவரதுதிருக்குறள், திருக்கோவையார், பெரியபுராணம் முதலிய பதிப்பு நூல்கள் மாசற்றவை. பெரியபுராணத்திற்கு அவர் எழுதி யுள்ள சூசனம் சிறப்புடையது. இவர் புதுமையை வெறுத்தார். சாதி, சமயம், மதம் இவற்றின் ஆசா

ரங்கள் அனைத்தையும் சமரச சன்மார்க்கப் புதுநெறி தகர்த்து எறிவதைக் கண்டு மனம் புழுங்கினர்.

அப்போது தமிழ்நாட்டுச் சைவமடங்களின் தலைவர்கள் அடிகளின் புது நெறியை ஒதுக்கினர். இராமலிங்க அடிகள் திருஞானசம்பந்தர் முதலான சமய குரவர்களை குருவெனக் கூறி வழி படுவதும், சைவசித்தாந்தச் செந்நெறியைப் போற்றுவதும், ஒப்பற்ற ஒரே கடவுளாகிய சிவமும் கருணையுந்தான் பொருள் என்று கூறுவதும், அதேநேரத்தில் சாதி சமய ஆசாரங்களைப் பொய் யெனப் புறக்கணித்துவருவதும் புதிராக இருந்தது. அடிகளின் முதல் நான்கு திருமுறைகள் பெரிதும் சைவசித்தாந்த நெறியில் இருக்கின்றமையின் நேரடியாக அடிகளை மறுக்க முடியவில்லை. எனினும் இராமர், இலக்குமி முதலிய வைணவத் தெய்வங்களை அடிகள் பாடுவது சைவத்திற்குப் புறம்பானது என்று கூறி நாவலருடன் சேர்ந்து கொண்டனர்.

அதனால் மாமண்டூர் தியாகேச முதலியார் இயற்றிய ''போலி அருட்பா மறுப்பு'' என்னும் சுவடி வெளியாயிற்று. நாவலரைச் சார்ந்தவர்கள் இந்நூல் அருட்பா ஆகாது என்றும், ஞானசம்பந்தர் முதலான சமய குரவர்கள் பாடிய தேவாரம் முதலியவைகளைத்தான் அருட்பா எனல்வேண் டும் என்றும் இவர் எழுதியது மருட்பா (மயக்க முள்ள பாடல்) என்றும் வாதம் நிகழ்த்தினர். பிள்ளைப்பெருமானைச் சார்ந்தவர்கள் மனம் பொருது வருந்தித் தொழுவூர் வேலாயுத முதலியா

ரிடம் மறுப்புக்கு மறுப்பு எழுதவேண்டி வற்புறுத்தினர். அவர் "போலி அருட்பா மறுப்பென்னும் குதர்க் காரண்ய நாசமகாபரசு" என்னுமோர் புத்தகம் எழுதி, சமரச வேத சன்மார்க்கத்தினர் இயற்றியதாக வெளியிட்டார். இதில் கண்டனங்களுக்குக் கண்டனம் சற்று வன்மையாகவே இருந்தது. அதற்கு எதிராக நாவலர் கட்சியினர் "குதர்க் காரண்ய நாசமகாபரசு கண்டனம்" எழுதினர். வள்ளலார் கட்சியினர் "திருவருட்பா தூஷணப் பரிகாரம்" என்ற நூலெழுதி வெளியிட்டனர். இதனுல் வெகுண்ட நாவலரும் அவரைச் சார்ந்தவர்களும் அரசாங்க வாயிலாக வழக்கெடுத்தனர் என்பர்.

திருவருட்பா பதிப்பில் இனி அச்சில் பதிப்பிக்கப்படுபவை என்று பல நூல்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சில பின் அச்சாயின என்பர்.

வடலூருக்குத் தெற்கே சுமார் மூன்று மைல் தொலைவில் உள்ளது மேட்டுக்குப்பம் என்ற சிற்றூர். அன்பர்களின் ஒத்துழைப்பால் சுவாமிகள் 1870-ஆம் ஆண்டில் மேட்டுக்குப்பம் சென்று ஊர்ப்பொதுவில் ஒரு குடிசை அமைத்து அச்சிறு குடிலில் தங்கியிருந்தார். அதற்குச் சித்திவளாகம் என்றுபெயர். அங்கிருந்து வடலூருக்கு வருவதும் திரும்பச் செல்வதுமாக இருந்தார். வடலூரிலிருந்து மேட்டுக்குப்பத்திற்கு குறுக்குப் பாதையாகச் சென்ருல் இரண்டு மைல்தான் இருக்கும். குறுக்குப் பாதையில் ஓர் ஓடையிருக்கிறது.

சிறிதுதூரம் சென்றால் ஒரேவெளியாக இருக்கும். கோடைக் காலத்தில் பகலில் அப்பாதையாகப் போனால் வெப்பம் தாங்கமுடியாது. அந்நாளில் இந்நடுவெளியில் ஒரு மாமரம் இருந்தது. அம்மரம் இப்போதில்லை. இப்பாதையில் அடிகள் வடலூருக்குச் சென்று வருவது வழக்கம். கோடையில் ஓடையின் தீஞ்சுவைத் தண்ணீரும், இம்மர நிழலும் அடிகளின் உள்ளத்தைத் கவர்ந்தனபோலும். ஆகவே,

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
—திரு. 6 : 38 : 2

என்ற அருமைத் திருப்பாடலைப் பாடுவது காண்க.

**ஞானசபை**

உத்தரஞான சிதம்பரமாகிய வடலூரிலே தம்முள்ளத்தில் கண்டவண்ணம் ஞானசபை கட்ட வள்ளற்பெருமான் திருவுளங்கொண்டார். சபை நிர்மாணப் படம் ஒன்றைத் தம் கரத்தால் வரைந்து தந்தனர். இப்படம் 1920-ஆம் ஆண்டு வரை வடலூரில் காணப்பட்டதெனவும், பின்னர் அதைக் காணவில்லை எனவும் கந்தசாமி முதலியார் கூறுவர். சபை கட்டும் வேலை பிரசோர்ப்பத்தி ஆண்டு (1871) ஆனி மாதம் தொடங்கப்பட்டது. அதே ஆண்டு தைமாதத்திற்குள் முடிய வேண்டுமென்று அடிகள் தமது அன்பர்களிடம் கூறினர். சபை எண்கோணத்தில் தாமரை மலர் விரித்தாற் போல அமைக்கப்பட்டது.

சபையின் கொடிமரம் வாங்கவேண்டி கண்டிராக்டர் ஆறுமுக முதலியார் தபால் வண்டியில் சென்னைக்குச் சென்றார். மரவாடியில் தாம் வேண்டிய நீளமுள்ள மரமின்மையாலும், அதுவும் விலை அதிகமாக இருந்தபடியாலும் முதலியார் வடலூருக்குத் திரும்பிவந்து வள்ளலாரிடம் விண்ணப்பிக்க, "நீர் போயிரும் நான் வருவேன்" என்று கூறியனுப்பினர். அங்ஙனமே முதலியார் மரவாடிக்குச் சென்றபோது, எம்மரம் சபையின் கொடிமரத்திற்குப் பொருந்துமோ அம்மரத்தின்மீது வள்ளலார் உலவிக்கொண்டிருந்ததைக் கண்டார். மிகவும் வியப்புற்று மரத்தை விலை கேட்க, கடைக்காரர் விலைப்பட்டியலைக் காட்டினர். மரம் வாங்கிய பின் பெருமானைத் தம் வீட்டிற்கு அழைத்தேக எண்ணிய முதலியாரை, "நீர் போய்வாரும்" என்று விடைகொடுத்துத் தாமும் புறப்பட்டார். ஆறுமுக முதலியார் வடலூருக்கு வந்தபின் வள்ளலார் அதே நேரத்தில் வழக்கப்படி வடலூரில் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார் எனக் கேட்டு வியந்து சுவாமிகளிடம் பணிந்து நின்றார். நம் வள்ளல், "இது ஆண்டவன் செயல்; வெளிப்படுத்தவேண்டாம்" என்று கட்டளையிட்டனர்.

இந்த அற்புதச் செயலுக்கும் அருட்பாவில் சான்றில்லை. கொடிமரம் வாங்கவேண்டியது அவசியமாயிற்று. சென்னைக்குப் போய்வருவது அந்நாளில் அத்துணை எளிதன்று. அற்புதம் செய்யவேண்டுமென்று அடிகள் விரும்பவில்லை. வேண்டிய மரத்தைப் பெறவேண்டும். இஃது

அருள் உள்ளத்தில் பதிந்த நினைவு. அம்மரத்தை அதே நேரத்தில் வடலூரில் தோன்றச்செய்தால் அற்புதமாகிவிடும். அதனால் அடிகள் அதே மரத்தின்மேல் சென்னை மரவாடியில் தோன்றினர். இதற்கென்ன விளக்கம்? அடிகளின் நினைவு தூய்மையானது; திண்ணியது; மாசற்ற உளத்தில் எழுந்து பதிந்தது. இதைச் சுத்த சங்கல்பம் என்று கூறுவர். எண்ணியாங்கு எய்தினர். கொடிமரமும் வந்துசேர்ந்தது.

ஞானசபையின் உள்ளே அமைப்பதற்குச் சென்னையிலிருந்து ஐந்தடி உயரமுள்ள சீமைக் கண்ணுடியை (English Glass) வரவழைத்தனர். அதைச் சித்திவளாகம் எனும் தமது சிறுகுடிசையில் வைத்து ஒரு மண்டலம் பூசித்தார் என்ப. அதன்பின் தாம் வரவழைத்து வைத்திருந்த சபாபதி சிவாச்சாரியார் என்னும் அந்தணரைக் கொண்டு அதை ஞானசபையில் வைத்தனர். அதற்கு முன்புறத்தில் திருஅருள் விளக்கு வைத்துப் பூசை செய்யவேண்டிய பொதுவும் சிறப்புமான விதிகளை விளக்கி அவருக்கு உணர்த்தினர். ஞானசபைக்குச் சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை என்று பெயர். இதைச் சுற்றிலும் ஒரு இருப்புச் சங்கிலி அமைத்தார். இதைத் தாங்கி நிற்பதற்கு 52 கட்டைகள்; ஒவ்வொரு கற்கட்டையிலும் வேற்படை போன்ற இருப்புப்பட்டை உள்ளது. கட்டைகளை அமைத்த முறை 53 விரிகோணமாக ஞானசபையைச் சுற்றி வளைத்துள்ளது. மதிற்சுவர்வரை ஒரு பிரகாரம்; மதிற்

சுவருக்கு உட்புறமாக இரண்டாவது பிரகாரம்; சபையைச் சுற்றிப் புறத்திலுள்ள மூன்ருவது பிரகாரம்; ஆக சங்கிலியிலிருந்து மூன்று பிரகாரங்கள் காணப்படும்.

தெற்குப் பார்த்த சபையின் முகப்பில் மூன்று வாயில்கள் உள்ளன. அவற்றை அடுத்து இரு சாளரங்கள் இருக்கின்றன. உள்ளே அகன்றிருப்பது அகவல் மண்டபம்; இதன் இரு பக்கங்களிலும் (கிழக்கு, மேற்கு) இரண்டு வாயில்கள்; அகவல் மண்டபத்தில் நான்கு சாளரங்கள் உள்ளன. அகவல் மண்டபத்தையடுத்த மண்டபத்திற்குத் திருமண்டபம் என்று பெயர். இதில் மேற்புறம் சிற்சபையும் கீழ்ப்புறம் பொற்சபையும் அமைந்துள்ளன. வடபுறத்தில் உள்ளதுதான் ஞானசபை. மூன்ரும் பிரகாரத்தில் பக்கவழிகளில் இரண்டு வளைவுகளும் நீராழிப் பத்தியில் 22 வளைவுகளும் இருக்கின்றன. இதில் உள்ளடங்கிய ஏழு வாயில்களும் 14 சாளரங்களும் காணப்படும். ஞானசபையின் தென்புறத்தில் கண்ணுடிக் கதவுகளுடன் கூடிய 3 வாயில்கள் கறுப்புநிறம் பூசப் பெற்றுள்ளன. மூன்று வாயில்களுக்கும் பொதுவான ஐந்து படிகள் உள்ளன. கிழக்கு, மேற்கு, வடக்கிலும் ஐந்தைந்து படிகள் உள்ளன. ஞானசபையின் உள்ளே இருபக்கங்களிலும் 12 தூண்கள் உள்ளன. ஞானசபையின் நடுவே அதிட்டான பீடம் இருக்கிறது. இதன் தென்புறத்தில் 5 படிகள் உள்ளன. அப்பீடத்திற்குமேல் நாற்கால் மண்டபம் உள்ளது: இது ஜோதி ஞானபீடம் எனப்படும். இதற்கு நான்கு தூண்களும் நான்கு

படிகளும் இருக்கின்றன. ஜோதி ஞானபீடத்திற்கு வடபால் ஓங்காரவளைவு; இதற்கிடையில் உள்ள வெளியை ஞானவெளி என்பர். ஓங்காரவளைவில் ஞானபீடத்தின்மீது ஞானதீபம்; தீபத்திற்குத் [illegible] புறத்தில் கண்ணாடி; அதிட்டானபீடத்தில் ஆறு திரைகள்; ஞானதீபமாகிய அருட்பெருஞ்சோதியை நாடிப் போகும்போது,

1. (கண்ணாடிக் கதவுகளில்) கருப்புத்திரை (மாயாசத்தி)
2. நீலத்திரை — (கிரியாசத்தி)
3. பச்சைத்திரை — (பராசத்தி)
4. சிவப்புத்திரை — (இச்சாசத்தி)
5. பொன்மைத்திரை — (ஞானசத்தி)
6. வெண்மைத்திரை — (ஆதிசத்தி)
7. கலப்புத்திரை — (சிற்சத்தி)

அடிகள் விரும்பியவண்ணம் ஆறுமாதத்தில் ஞானசபை கட்டி முடிக்கப்பட்டது. அன்பர்களிற் சிலர் தஞ்சாவூர் மராட்டியரைக் கொண்டு சபையின் எதிரே மிகுந்த செலவில் அழகிய பந்தல் அமைத்தனர். வீண் செலவு வேண்டாம் என்று அடிகள் கூறினர். அன்பர்கள் கேளாமல் புலாலுண்ணும் மராட்டியர்களாகிய புறவினத்தாரைக் கொண்டு பந்தல் போட்டதற்கு அடிகள் சினங்கொண்டார். குணமெனுங் குன்றேறி நின்றார் வெகுளி திடீரெனப் பெருமழையாகிவிட்டது. பந்தலில் இடி விழுந்து தீப்பிடித்துக் கொண்டது.

ஞானசபைக்கு எவ்விதத் தீங்கும் ஏற்படவில்லை. இந்த நிகழ்ச்சிக்கு ஆதாரம் வேறெதுவும் வேண்டாம்; "போலியருட்பா மறுப்பு" கட்டிடத்தில் இடிவிழுந்ததாகவே கூறும்.

## அருட்பெருஞ்ஜோதி

பிரசோர்ப்பத்தி ஆண்டு தை மாதம் 28 பூச நாளில் (25–1–1872) முதன்முதலாக ஞானசபையில் நம்பெருமான் அன்பர்களுக்கெல்லாம் அருட்பெருஞ்ஜோதி தரிசனம் செய்வித்தார். தைப்பூச நாளில் விடியற்காலம் மேற்கே சந்திரனும், கிழக்கே சூரியனும் காணப்படும். அந்நேரத்தில் ஞானசபையில் அருட்பெருஞ்ஜோதியைக் காட்டியருளினர் அடிகள்.

நம்முள் இருக்கின்ற ஆன்மாவில் அருட்பெருஞ்ஜோதியாக ஆண்டவன் இருக்கின்றான். அப்பெரும் பேரொளிமயமாக வேண்டிய ஆன்மாவை ஏழுதிரைகள் மறைத்துள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு சத்தியைக் குறிக்குமென்பர். அவை ஆன்மாவை அறியமுடியாதபடி மறைத்துள்ளன. அவற்றுள் கருப்பு, நீலம், பச்சைத் திரைகளை நாம் தெய்வ நினைவிலிருந்து நம் முயற்சியால் அகற்றிக்கொள்ளவேண்டும். பச்சைத் திரை இருகூறானது. வெளிப்புறம் கருமையிற் பச்சையாகவும், உட்புறம் பொன்மையிற் பச்சையாகவும் இருக்கின்றபடியால் இகலோக லட்சியமுள்ள வெளிப்புறப் பச்சைத் திரை வரையில் நீக்கிக்கொண்டபோது, பரலோக

சாத்தியமுள்ள பொன்மையிற் பச்சைப்பகுதி முதலான ஏனைய திரைகள் ஆண்டவனருளால் உண்மை ஞானிக்குத் தாமே விலகும். அப்போது ஆன்மப் பிரகாசமாகிய ஞானஒளி மாசற்ற கண்ணாடியாகிய மறுவற்ற உள்ளத்தில் புலப்படும். அவ்வொளிக்குள் ஒளியாக அருட்பெருஞ்ஜோதி தெரியும். இப்பெரும் பேரொளியைத் தம்முட் கண்ட வள்ளற்பெருமான் அருட்பெருஞ்ஜோதியை அனைவரும் கண்டு தாம் பெற்ற பேரின்பங் கொள்ளும்பொருட்டு புறத்தில் ஞானசபையைக் கட்டுவித்து அருட்பெருஞ்ஜோதியையும் காட்டிக் கொடுத்தார்.

மேலும், ஞானசபையைச் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமென்றும், இதனை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன் தனது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்தான் என்றும் கூறினர். கடவுளின் திருக்குறிப்பை, "இக்காலந் தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங்காலம், அளவு குறிக்கப்படாத அற்புதச் சித்திகளெல்லாம் விளங்க யாமே அமர்ந்து விளையாடுகின்றோம்" என்று ஆண்டவன் கூறியதாக அறிவித்தார். "ஆதலின் வந்து வந்து தரிசிக்கப் பெறுவீர்களாயின் கருதியவண்ணம் பெற்றுக் களிப்படைவதுமன்றி, இறந்தவர் உயிர்பெற்றெழுதல், மூப்பினர் இளமையைப் பெற்றுநிற்றல் முதலிய பலவகை அற்புதங்களைக் கண்டு பெருங்களிப்பும் அடைவீர்கள்" என்று ஞானசபையின் உண்மையை விளக்கியருளினர்கள். முதல் தைப்பூசத் தரிச

னத்தை அடிகள் மேட்டுக்குப்பத்தில் இருந்த படியே செய்வித்தார்கள். ஒவ்வொரு திரையை யும் விலக்கும்போது கற்பூரங் கொளுத்திக் காட்டு வதன்றி வேறு எந்த வழிபாட்டுமுறையும் கூடாது என்று விதித்தனர். அப்போது மன நெகிழ்ச்சி யோடு ஆண்டவனுடைய தோத்திரங்களை அமைதியாகவும் அன்போடும் பாடுவதுதான் சன்மார்க்க லட்சியமுள்ள வழிபாடு என்று அறிவுறுத்தினர்.

ஞானசபையில் சன்மார்க்க வழிபாடு மாதப் பூசந்தோறும் முறையாக நிகழ்ந்துவந்தது. எனினும், அடிகள் மேட்டுக்குப்பத்திலேயே இருந்து பதிகம் பாடிவந்தனர். ஞானசபையில் வழிபாடு ஒழுங்காக நடப்பதற்கு வேண்டி அடிகளார் ஆங்கிரச ஆண்டு ஆடி ஐந்தில் (18—7—1872) ஞானசபை விளக்கப் பத்திரிகை எழுதியனுப்பினர்.

உ

சிவமயம்

அருட்பெருஞ்ஜோதி

# ஞானசபை விளக்கப் பத்திரிகை

அருட்பெருஞ்ஜோதி

அன்புடைய நம்மவர்களுக்கு வந்தனம்!

இன்றுதொடங்கி, சபைக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை யென்றும், சாலைக்கு சமரச சுத்தசன்மார்க்க சத்திய தருமச் சாலை யென்றும், சங்கத்திற்கு சமரச சுத்தசன் மார்க்க சத்திய சங்கம் என்றும் பெயர் வழங்குதல் வேண்டும்.

இன்றுதொடங்கி, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரது அருட்பெருஞ்சித்தி வெளிப்படும் வரைக்கும், ஞானசபைக்குள்ளே தகரக்கண்ணாடி விளக்கு வைத்தல் வேண்டும். பித்தளை முதலிய வற்றால் செய்த குத்துவிளக்கு வேண்டாம். மேலேற்றுகிற குளோப்பு முதலிய விளக்குகளும் வேண்டாம். தகரக்கண்ணாடி விளக்கு வைக்குங் காலத்தில் தகுதியுள்ள நம்மவர்கள் தேகசுத்தி, கரணசுத்தி உடையவர்களாய் திருவாயிற் படிப் புறத்தி லிருந்துகொண்டு விளக்கேற்றி பன்னி ரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர் கையில் கொடுத் தாவது, எழுபத்திரண்டு வயதிற்கு மேற்பட்ட பெரியர் கையில் கொடுத்தாவது, உட்புற வாயில் களுக்குச் சமீபங்களில் வைத்துவரச் செய்விக்க வேண்டும்.

நாலு நாளைக்கொருவிசை காலையில், மேற் குறித்த சிறியரைக் கொண்டாயினும், பெரியரைக்

கொண்டாயினும், உள்ளே தூசு துடைப்பிக்க வேண்டும். தூசு துடைப்பிக்கப் புகும்போது நீராடிச் சுத்ததேகத்தோடு கால்களில் வத்திரம் சுற்றிக்கொண்டு புகுந்து முட்டிக்காலிட்டுக் கொண்டு, தூசு துடைக்கச் செய்விக்க வேண்டும். விளக்கு வைக்கின்றபோதும் இங்ஙனமே செய்விக்க வேண்டும்.

விளக்கு வைத்தற்கும் தூசு துடைத்தற்கும் தொடங்குகின்ற பன்னிரண்டு வயத்துக்குட்பட்ட சிறுவரும் எழுபத்திரண்டு வயதுக்கு மேற்பட்ட பெரியரும் பொருள், இடம், போகம் முதலியவற்றில் இச்சை சிறிதும் இல்லாதவர்களாய், தெய்வ நினைப்புள்ளவர்களாய், அன்புடையவர் களாயிருத்தல் வேண்டும். விளக்கு வைக்கும் போதும், தூசு துடைக்கும்போதும் நம்மவர்களில் நேர்ந்தவர்கள், புறத்தில் நின்று பரிசுத்தராய் மெல்லெனத் துதிசெய்தல் வேண்டும். யாரும் யாதொரு காரியங்குறித்தும் தற்காலம் உள்ளே புகுதல் கூடாது. ஞானசபைத் திறவுகோல் ஒருவர் கையிலும் வெளிப்பட இருத்தல் கூடாது. அத்திறவுகோலை வேறொரு பெட்டிக்குள் வைத்து அப்பெட்டியைப் பூட்டி, பொற்சபைக்குள் வைத்து, அப்பெட்டித் திறவுகோலை ஆஸ்தான காவலுத்தரவாதியாயிருக்கின்றவர் கையில் ஒப்பு வித்தல் வேண்டும்.

தொடர்ச்சி, காலம் நேர்ந்த தருணம் எழுது கிறேன்.

ஆங்கிரச-ஸ்ரீ<br>ஆடி-மீ 5வ<br>18—7—1872

இப்படி,<br>சிதம்பரம்<br>இராமலிங்கம்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

அன்பர்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டு அடிகளுக்குத் தொல்லை கொடுத்தனர். இதையறிந்த அடிகளார் இப்படிப் பட்டவர்கள் இங்கிருத்தல் வேண்டாமென்று ஓர் எச்சரிப்புப் பத்திரிகை எழுதினார். சத்திய ஞான விண்ணப்பமென்னும் ஆடகப் பசும்பொன் ஆயிரங்கோடி பெறும் அதனை எழுதிய அந்நேரத்தில் நம்பெருமான் திருவிரல்கள் இதனையும் எழுத நேர்ந்தது.

## திருக்காப்பிட்டுக்கொண்டது

சித்திவளாகத் திருமாளிகையில் சிலநாள் தொடர்ச்சியாகச் சிவானுபவத்தில் திளைத்திருப்பதும் பின்னர் வெளிவந்து பிரசங்கம் செய்வதுமாக இருந்தனர் சுவாமிகள்.

கள்ளவா தனையைக் களைந்தருள் நெறியைக்
காதலித் தொருமையிற் கலந்தே
உள்ளவா றிந்த உலகெலாங் களிப்புற் றோங்குத
லென்றுவந் துறுமோ
வள்ளலே அதுகண் டடியனே னுள்ள
மகிழ்தலென் றோவெனத் துயர்ந்தேன்
ஒள்ளியோய் நினது திருவுள மறிந்த
துரைப்பதென் அடிக்கடி உனக்கே

— திரு. 6 : 23 : 10

என்றவண்ணம் மக்கள் எல்லோரும் சுத்த சன்மார்க்கப் பேறு பெறவேண்டுமென்று ஆண்டவனை வேண்டினர். சமரச சுத்தசன்மார்க்க சங்கச்

சார்பில் இறைவனுக்கு விண்ணப்பம் எழுதினர். அதில் தாம் திருவருட் சுதந்தரத்தைப் பூரணமாகப் பெற்ற பேற்றினை விரித்துரைக்கின்றார். இறுதியில் "எல்லாச் சீவர்கட்கும் எனக்கறிவித்த வண்ணமே அறிவித்து அவரவர்களையும் உரிமையுடையவர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்" என்று வேண்டுகோள் விடுக்கின்றார்.

சித்திவளாகத்தில் பந்தலிட்டு அலங்கரித்து ஞானதீபம் வைத்து சூனிய சிம்மாசனம் அமைத்து ஆண்டவன் அதில் வீற்றிருப்பதாகப் பாவித்து தாமே சன்மார்க்க அன்பர்களுடன் வலம்வந்து பாடிநின்றனர்.

அவருள் காரணப்பட்டு கந்தசாமிப் பிள்ளை என்னும் பெரியார் இருந்தார். அவர் தமிழிலும் இசையிலும் வல்லவர். அவருக்கு ஒரு மயக்கம் இருந்துவந்தது. நம்பெருமானிடம் குறையிரந்து நின்றார். வள்ளற்பெருமான் திருநீறு நல்கிக் குணப்படுத்தித் தம் மாணவருள் ஒருவராகும் பேறளித்துத், "தக்க உத்தியோகம் தருவோம்" என்றனர். அதுதொடங்கி அவர் அடிகளோடு உறைந்துவந்தார். இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் கீர்த்தனை, சற்குருவெண்பா அந்தாதி, குருநேச வெண்பா, ஆனந்தக்கண்ணி முதலான மிகச்சிறந்த இருபத்தாறு நூல்களைப் பாடியுள்ளார். இவற்றுள் சுவாமிகளைப்பற்றிய பலப்பல குறிப்புக்கள் உள்ளன. திருவருட்பாவின் பல நுட்பங்கள் இவரது பிரபந்தங்களில் காணப்படு

கின்றன. திருவருட்பாத் திருமுறைகளைத்தொழூவூர் வேலாயுத முதலியாருக்கு இணையாக ஓதியுணர்ந்தவர் இவரென்று தெரியவருகிறது. இவர் தீ. நா. முத்தையாச் செட்டியாரைக்கொண்டு திருவருட்பா ஆறு திருமுறைகளையும் 1924-ஆம் ஆண்டில் பிழையில்லாமல் அச்சிட்டு இனமாக வழங்கச் செய்தார். அடிகள் இவரைப் பாடப்பணித்த செய்தியைப் பலவிடங்களிற் கூறியுள்ளார். எடுத்துக்காட்டாக இயற்கையுண்மை ஆனந்தக் கண்ணியில்(39) குறிப்பிடுவது காண்க.

என்னைப்பாட என்றுள்ளங் கலந்துறை-என்குருராமலிங்கம்
எல்லைகடந்த வோர்தில்லையின் மருதூர்--இலங்கிய
இராமலிங்கம்

சுவாமிகளுக்கு அணுக்கத் தொண்டராயிருந்த புருஷோத்தம ரெட்டியார் அடிகள் கருங்குழி, மேட்டுக்குப்பம், வடலூர் முதலிய இடங்களில் தங்கியிருக்கும்போதெல்லாம் உடனிருந்துவந்தார். இவர் தண்ணீரை ஐந்தில் மூன்றுபங்கு சுண்டும்படிக் காய்ச்சி, சருக்கரை கலந்து, கொதிக்குமந்நீரைக் கொறடாவினுல் பிடித்துக் கொண்டுபோய்ப் பெருமானிடம் கொடுப்பார். அதைக் கையால்வாங்கிக் குடிப்பது சுவாமிகளுக்கு சித்திவளாகத்தில் வழக்கமாக இருந்தது. அறைக்குட் சென்று தூசு துடைப்பதும், அங்கிருந்த சத்திய ஞானதீபத்தைக் கண்காணிப்பதும் இவரே.

ஒருகால் இவர் உட்செல்லும் தருணமும், சுவாமிகள் சிவானந்த நித்திரையினின்று அருட்

கண்மலர்ந்து எழுவதும் ஒரேநேரத்தில் நிகழ, அடிகளின் ஒப்பற்ற பேரொளிக் கதிர்வீச்சால் இவர் போதமயமாகிக் கிடக்கநேர்ந்தது. இவ்வாறு கிடக்கின்றூரே என்று இராமலிங்கப் பெருமானிடம் அன்பர்கள் முறையிட, "நீவிர் அவரை ஒன்றும் செய்யவேண்டாம், தாமே எழுவார்" என்றனர். அவ்வாறே அவர் நாலைந்து தினங்கள் அசைவற்றிருந்து பின்பு மெல்ல வெளிவந்துலவினர். எனினும் மாதக்கணக்கில் ஒன்றும் பேசாவண்ணம் மோன நிலையில் விளங்கினூர் என்ப. இவரே சுவாமிகளிடம் தமக்குச் சாதனைசெய்யும் வழி காட்டியருள வேண்டினர். அதற்கு நம் வள்ளற் பெருமான், "நீ என்னைப்போல ஏழை; சாதனை செய்தால் சிறிது ஒளி தோன்றும்; சில சித்திகள் நடக்கும்; அதைக்கண்டு பல்லிளித்துக் கெட்டு விடுவாய். ஆதலின் சாதனை ஒன்றும் வேண்டாம், எல்லா உயிரும் உன்னுயிர்போல் நினைக்கும் பழக்கத்தை வருவித்துக்கொள். அப்பழக்கம் வந்தவன் எவனே அவனே எல்லாம் வல்லவனும், கடவுளுமாவான்" என்றருளினூர்கள். அவரும்,

ஒத்தாரை யும்இழிந் தாரையும் நேர்கண் டுவக்கவொரு
மித்தாரை வாழ்விப்ப தேற்றூர்க் கமுதம் விளம்பியிடு
வித்தாரைக் காப்பது.........

—திரு. 6: 87:5

என்றபடி பசித்தவர்க்குக் கஞ்சியூற்றிப் பேரன்பராக வாழ்ந்துவந்தனர். அவரது மகன் வீராசாமி ரெட்டியார் அப்போது ஐந்துவயது சிறுவர்.

சுவாமிகள் எப்பொழுதும் முக்காடிட்டு இருப்ப தோடு பிற்பகுதியில் அந்த முக்காட்டை வலக் கண் மறையும்படியாகவும் மூடியிருந்தார். அன் பர்கள் அதன் உண்மையை அறிந்துகொள்ள எண்ணினரேனும் சுவாமிகளைக் கேட்க அன்பி னல் அஞ்சினர். ஒருநாள் வீராசாமியாகிய சிறு வரை "ஏன் தாத்தா அப்படி மூடிக்கொண்டி ருக்கிறீர்கள்?" என்று கேட்கும்படித் தூண்டி விட்டனர். நம்பெருமான் முக்காட்டை விலக்கிய போது வலக்கண் மூடியவண்ணம் இருந்தது. கண்மலர்தலும் பேரொளிப்பிழம்பு, கதிர்ஒளி யினும் பெரிதாய் வீசிற்று. உடனே பெருமான் வலக்கண்ணை மூடிக்கொண்டு, "நீவிர் இங்கு நெருங்கிப்பழகுவது அசாத்தியமாகும் என்ப தற்கே அப்படி மூடி மறைத்திருந்தோம்" என்று அருளினர். இதன் உண்மையை,

> கதிர்நலம் என்னிரு கண்களிற் கொடுத்தே
> அதிசயம் இயற்றெனும் அருட்பெருஞ் ஜோதி
> —திரு. 6: 1:273

என்பதனல் அறியலாம்.

இந்நிகழ்ச்சிகள் எல்லாம் புருஷோத்தம ரெட்டியார் மகன் வீராசாமி ரெட்டியாரால் கூறி விளக்கப்பட்டவை. காரணப்பட்டு கந்தசாமிப் பிள்ளையிடம் அறிந்தெழுதிய சிதம்பர சுவாமிகளும் இதனைக் கூறுவர்.

ஒருபோது சுவாமிகள் அன்பர்களை நோக்கி, "நம்மோடு கூடிப்பழகி இருந்தவர்களையும் பின் னர் கேள்வியால் விரும்புகின்றவர்களையும் கைவிட

மாட்டோம்; சுத்தசன்மார்க்கத்தில் நிறுவுவோம்" என்று அஞ்சலி செய்தனர்.

உலகறி வெனக்கிங் குற்றநாள் தொடங்கி
யுன்னறி வடையுநாள் வரையில்
இலகியென் னேடு பழகியு மெனைத்தான்
எண்ணியும் நண்ணியும் பின்னர்
விலகிய மாந்தர் அனைவரு மிங்கே
மெய்யுறக் கூடிநின் றுனையே
அலகிற்பே ரன்பில் போற்றிவாழ்ந் திடவும்
அடியனேற் கிச்சைகா ணெந்தாய்
—திரு. 6: 20:19

என்றும்,

எனையடுத்தார் சுகம்வாய்ந்திடல் வேண்டும்

என்றும்,

ஒவ்வுயிரும் இன்படைதல் வேண்டும்

என்றும்,

ஆதியு நடுவு மந்தமுமில்லா அருட்பெருஞ்
ஜோதியென் னுளத்தே
நீதியிற் கலந்து நிறைந்தது நானு நித்திய
னயினே னுலகீர்
சாதியு மதமும் சமயமுந் தவிர்த்தே சத்திய
சுத்தசன் மார்க்க
வீதியி லுமைத்தா னிறுவுவ லுண்மை விளம்பினேன்
வம்மினோ விரைந்தே
—திரு. 6 : 132 : 75

என்றுங் கூறுவன காண்க.

மேலும் அடிகள், "எனக்கருளியதுபோல எல்லாருக்கும் ஏன் அருளவில்லை ஆண்டவனே?" என்று கேட்கிறார்.

எல்லார்க்குங் கடையாகி யிருந்தேனுக் கருள்புரிந்தே
எல்லார்க்குந் துணையாகி யிருக்கவைத்தா யெம்பெருமான்
எல்லார்க்கும் பொதுவில்நட மிடுகின்ற யிவ்வண்ணம்
எல்லார்க்குஞ் செய்யாமை யாதுகுறித் திசையெனக்கே
—திரு. 6: 132: 11

என்பதைக் காண்க.

இவ்வண்ணம் விளங்கிய பெருமான் சீமுக ஆண்டு (1874) ஐப்பசி 7 புதன்கிழமை காலையில் மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையில் முதன்முதலாகக் கொடி கட்டுவித்தார். அக்கொடியின் மேற்புறம் மஞ்சளாகவும், அடிப்புறம் வெண்மையாகவும் இருந்தது. அதன் உண்மையை அடிகள் உபதேசித்தனர். "கேட்டறியாத அற்புதக் கேள்விகளைக் கேட்கும்படியும், கண்டறியாத அற்புதக் காட்சிகளைக் காணும்படியும் ஆண்டவர் செய்தது இத்தருணமே. இதற்குச் சாட்சியாக இப்போதுதான் சன்மார்க்கக் கொடி கட்டிக் கொண்டது. நமது நாபிமுதல் புருவமத்தியீறாக ஒரு நாடியிருக்கிறது. அந்த நாடி நுனியில் புருவ மத்தியின் உட்புறத்தில் (Ethmoid Air Sinus என்ற கூட்டிற்குள்) ஒரு சவ்வு தொங்குகின்றது. அதன் அடிப்புறம் வெள்ளைநிறம்; மேற்புறம் மஞ்சள்நிறம். அச்சவ்வின் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது. இக்கொடி நமது அனுபவத்தின்கண் விளங்கும். இதனால் எல்லார்க்கும் நல்ல

அனுபவம் அறிவின்கண் தோன்றும்'' என்றனர். கொடியேற்று விழாவில் சுவாமிகள் கூறியவற்றை எல்லாம் உபதேசம் என்ற தலைப்பில் அன்பர்கள் தொகுத்துரைத்தனர் என்ப.

சீமுக ஆண்டு கார்த்திகை மாதம் புனர்பூச நாளில் தாம் சித்திவளாகத் திருமாளிகையில் வைத்திருந்த சத்திய ஞானதீபத்தைப் புறத்தில் வைத்து "இத்தீபத்தைத் தடைபடாது ஆராதியுங்கள். இந்தக் கதவு சாத்திவிடப்போகிறோம். இனிக் கொஞ்சகாலம் எல்லோரும் ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகிறபடியால் உங்களுடைய காலத்தை வீணிற்கழிக்காமல்,

*நினைந்து நினைந்து உணர்ந்து......* —*திரு.* 6: 110: 1

என்னும் பாடலிற் கண்டபடி தெய்வபாவனையை இத்தீபத்திற் செய்யுங்கள். நாம் இப்போது இந்த உடம்பில் இருக்கிறோம். இனி எல்லா உடம்புகளிலும் புகுந்துகொள்வோம்'' என்று ஞானதீப விளக்கம் அருளினர்.

சீமுக வருடம் தைமாதம் 19 வெள்ளிக்கிழமை புனர்பூச நாளில் (30—1—1874) வள்ளற்பெருமான் அற்புதப் பத்திரிகை எழுதினர்.

இதில் அடிகள் தாம்பெற்ற இன்பத்தை மக்கள் எல்லாரும் பெறவேண்டுமென அறிவிக்கின்றார்கள்.

"நீவிர்களும் அவ்வாறு பெற்றுப் பெருங் களிப்பு அடைதல் வேண்டுமென்று, எனக்குள்ளே

நின் று நிறைந்து எழுந்து வெளிப்பட்ட எனது சுத்த சன்மார்க்க லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமைப் பேராசைபற்றியே இதனைத் தெரி விக்கின்றேன்'' மேலும், "ஞானசபையை ஆண்ட வன் தனது திருவருட் சம்மதத்தால் தோற்றுவித்து அதில் அருட்பெருஞ்ஜோதியாய் வீற்றிருக் கின்றான்'' என்றும், "அப்பெருமானை வந்துவந்து தரிசிக்கப்பெறுவீர்களாயின் கருதியவண்ணம் எல் லாம் பெற்றுக் களிப்படையலாம்'' என்றும் விளக்கி யுள்ளனர்.

இந்நிலையில் சுத்தப்பிரணவ ஞானதேகங் களைப்பெற்ற பெருமான்,

முத்தியைப் பெற்றேன்அம் முத்தியினால் ஞான
சித்தியை யுற்றேனென்று உந்தீ பற
சித்தனு மானேனென்று உந்தீ பற

—திரு. 6: 36: 10

என்றும்,

அருட்ஜோதி யானேனென்று அறையப்பா முரசு
அருளாட்சி பெற்றேனென்று அறையப்பா முரசு

—திரு. 6: 169: 1

என்றும் எல்லாம் தாமாகிநின்றது கூறுவர்.

மேலும், அருளாட்சியில் தாம் முடிசூட்டப் பெற்றுத் தம்கையில் பொற்கங்கணம் கட்டப் பெற்று அருளொளித் திருவைப் பூரணமாகப் பெற்றுப் பேரின்பஆன்மலாபத்தை முற்றும்பெற்று, உலகம்படைத்தல்முதல் ஐந்தொழிலும், ஞானம் படைத்தல் முதல் ஐந்தொழிலும் வழங்கப்

பெற்று எல்லாந் தாமாய் அதுவதுவாகி நிறைந்தும் அதுவதுவாகி விளங்கியும் அதுவதுவாகி யினித்தும் வயங்கினர். மேலும், ஆங்காங்கு அதீதமாகிக் கலந்தும், இவையனைத்துமாகி ஒருமித்தும் அதீதா தீதமாகித் தனித்தும் நிற்கும் கடவுளைச் சுத்த சிவ துரியாதீதத்தே கலந்து சின்மயமாய், தன்மயமாய், சுத்த சிவமயமாய்ப் பரிபூரண சிவ சுகாதீதத்தில் திளைத்து அழுந்தி நின்றார்.

இவ்வுண்மைகளை யெல்லாம் சத்தியஞான விண்ணப்பத்திலும் பிறண்டுங் கண்டுகொள்க. மேலும், சுத்த சிவதுரியாதீதத்தே சிவமாய் நிறைந் தேன் என அருளியதுங் காண்க.

இந்நிலையை அடைந்தபோது இவ்வுண்மை கள் வெளிப்படாவெனுங் குறிப்பறிவித்தான் ஆண்டவன். ஆகவே, அடிகள் தம் அருள் உள்ளத்தைத் தேற்றுமுறையாக ஆண்டவன் அறிவிக்கச் சொன்னானென்று கூறுவார். அருள் ஒளிக் குன்றேறி இன்பக்கடலில் திளைக்கும் அடிகளின் அன்புவெள்ளங் காண்மின்.

கருநாள்க ளத்தனையுங் கழிந்தனநீ சிறிதுங்
கலக்கமுறே லிதுதொடங்கிக் கருணைநடப் பெருமான்
தருநாளிவ் வுலகமெலாங் களிப்படைய நமது
சார்பினருட் பெருஞ்ஜோதி தழைத்துமிக விளங்குந்
திருநாள்க ளாமிதற்கோ ரையமிலை யிதுதான்
திண்ணமிதை யுலகறியத் தெரித்திடுக மனனே
வருநாளி லுரைத்திடலா மெனநினைத்து மயங்கேல்
வருநாளி லின்பமய மாகிநிறை வாயே

—திரு. 6: 105: 5

என்று விளக்கியவாறு "வருவித்தவண்ணமு நானே இந்தமாநிலத்தே செயும் வண்ணமுந் தானே தெரிவித்தருளிற்று பாரீர்" என்பதற்கேற்ப சொல்லவேண்டியதெல்லாவற்றையும், வையகம் வானக மற்றுள எல்லாம் மணக்கும்படி விளக்கி யுரைத்துப் பேரருள் ஆடல் நிகழ்த்தி வருகின்ருர். இறுதியாக,

பிச்சுலகர் மெச்சப் பிதற்றிநின்ற பேதையனேன்
இச்சையெலாம் எய்த இசைந்தருளிச் செய்தனையே
அச்சமெலாந் தீர்ந்தேன் அருளமுதம் உண்கின்றேன்
நிச்சலும்பே ரானந்த நித்திரைசெய் கின்றேனே

என்று திருவாய்மலர்ந்தனர்.

மேலும், முன்னெச்சரிக்கையாக ஒருசில வெளி யிட்டனர். வள்ளலார் திருக்காப்பிட்டுக்கொள் ளும் தருணம் வெளியிட்டவை :

" நாம் உள்ளே பத்துப்பதினைந்து தினமிருக்கப் போகின்ருேம். பார்த்து அவநம்பிக்கை அடையா தீர்கள். ஒருகால் பார்க்க நேர்ந்து பார்த்தால் யாருக்குந் தோன்ருது வெறுவீடாகத்தானிருக்கும் படி ஆண்டவர் செய்விப்பார். என்னைக் காட்டிக் கொடார். சுத்தப் பிரணவ ஞானதேகத்துடன் வெளிப்படுவோம். நாம் திருக்கதவை மூடியிருக்குங் கால் அதிகாரிகள் திறக்கும்படி ஆக்ஞாபிக்கின் ஆண்டவர் அருள்செய்வார். அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை" இவ்வாறு அறிவித்து மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையில் தாமிருந்த அறையில், அடியில் குறுக்குச் சட்ட

மாத்திரமுடைய பலகையின்மீது கீழ்மேற்றிசை யாக, வடக்கு நோக்கி இடக்கை தலையிற்றாங்க, சீமுக ஆண்டு தை மாதம் 19உ வெள்ளிக்கிழமை இரவு 12 மணிக்கு கடகத்தில் சந்திரனும் மகரத்தில் சூரியனும் பூரணமாக விளங்கும் ஞான நிறைவுள்ள நல்லநாளில் (30—1—1874) அமர்ந்துகொண்டு, கதவை வெளியில் பூட்டித் திருக்காப்பிடும்படி வேண்டினார். அன்பர்கள் கதவைச் சாத்தியபடியே விட்டனர். பின்னர் அடிகளின் கட்டளைக்கு அஞ்சி, நான்குநாள் கழித்து தை 23-ஆம் நாள் (3-2-1874) கதவைப் பூட்டினர்.

## பின்னைய செய்தி

வள்ளற்பெருமான் திருக்காப்பிட்டுக்கொண்ட பின், சிலநாள் கழித்து மஞ்சக்குப்பம் கலெக்டர் ஜே. எச். கார்டின்ஸ் ஐ. சி. எஸ்., இன்னொரு வெள்ளைக்காரர், தாசில்தார் வெங்கடராம ஐயர் ஆகிய மூவரும் மேட்டுக்குப்பத்திற்குக் குதிரை மேலிவர்ந்து வந்து, சுவாமிகளின் மறைவுபற்றி விசாரணை நடத்தினர். வந்தவர்களில் மற்றொரு வெள்ளைக்காரர் அப்பொழுது மஞ்சக்குப்பத்தி லிருந்த பெரிய டாக்டர் என்று கூறுப. ஆனால், T. V. G. செட்டி தமது நூலில் அவர் ஒரு ரெவினியூ போர்டு மெம்பர் என்றும் போலீஸ் அறிவிப்பின் பேரிலேதான் கலெக்டர்முதலானோர் விசாரணைக்கு வந்தனர் என்றும் கூறுகின்றார். வெள்ளையர் இருவரும் சித்திவளாகக் குடிசையைச் சுற்றிவந்து பார்த்து ஆட்சேபத்திற்கு இடமாக யாதும் காணப் படாமையால், "பெரியோர்கள் எம் மதங்களிலும்

உளர் " என்று தேர்ந்தனர். கலெக்டர் அங்கிருந்தவர்களை, "நீங்கள் இங்கே என்ன செய்துகொண்டு இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அன்பர்கள், "குருவாணையின்படி கடவுளைத் துதிசெய்து ஏழைகளுக்கு அன்னதானம் செய்துவருகிறோம்" என்றனர். வெள்ளையர் இருவரும் அன்னதானத்திற்காக இருபது ரூபாய் கொடுத்துச் சென்றனர்.

பின்பு, சென்னை அரசினர் சார்பில் கலெக்டர் ஜே. எச். கார்டின்ஸ் எழுதிய தென்னார்க்காடு மாவட்ட மானுவல் 1878ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதில் சுவாமிகளைப்பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன. "இராமலிங்க அடிகள் 1874ஆம் ஆண்டில் மேட்டுக்குப்பம் கிராமத்தில் உள்ள ஓர் அறைக்குள் நுழைந்துகொண்டு கதவை வெளியில் பூட்டச்சொன்னார். சிலகாலம் வரை அறையைத் திறக்கவேண்டாமென்று தமது சீடர்களுக்குக் கட்டளையிட்டார். அவர் ஆண்டவனோடு கலந்துவிட்டார் என்று அவருடைய அன்பர்கள் நம்புகின்றனர்."

அடிகள் திருக்காப்பிட்டுக்கொண்ட நாளிலிருந்து ஓராண்டு வரை, அதாவது அடுத்த தைப்பூசத்திற்கு மறுநாள் (1875) வரை சித்திவளாகத் திருவறை திறக்கப்படவில்லை என்றும், அடிகள் முன்னெச்சரிக்கையாகக் கூறியவண்ணம் திருவறையைத் திறந்து பார்த்தபோது வெறும் அறையாகத்தான் இருந்ததென்றும் கூறுவர். சுத்தப் பிரணவ வடிவில் உட்புகுந்த அடிகள் ஒரு மணி நேரத்தில் சுத்த ஞான தேகத்துடன் வெளிப்பட்டு,

எல்லா உயிர் உடம்புகளிலும் புகுந்துகொண்டு, எல்லாந்தாமாகி நின்றனராதலின் வெறும் அறையாக இருந்ததில் வியப்பில்லை.

"கடையை விரித்தோம், கொள்வாரில்லை; கடையைக் கட்டிக்கொண்டோம்" என்று அடிகள் நொந்துகொண்டனர். உலகர் அனைவரையும் சாதி, சமய, மத, இன, மொழி, நிற, நாட்டு வேற்றுமைகள் எல்லாம் அற்ற வாழ்வில், ஆன்ம நேய ஒருமைப்பாடு விளங்கி, வாழவைப்பதற்குத் தம்மை ஆண்டவன் தோற்றுவித்தான் என்பது இன்னும் ஈடேறவில்லையே! எல்லோரும் இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்தல் என்று வருமோ? எனினும், சுத்த சன்மார்க்கச் செந்நெறி நிற்கும் புண்ணியர்க்கு வேண்டுவன எல்லாம் அவரது "தனித்துரைத்த தனிமறை"யில் பொதிந்து கிடக்கின்றன. ஆதலின், அடிகள் தம் அருள்நெறியில் நின்று உய்வோமாக.

திருநிலைத்துநல் லருளொடும் அன்பொடுஞ்
சிறப்பொடுஞ் செழித்தோங்க
உருநிலைத்திவண் மகிழ்வொடு வாழ்வுற
வுவந்துநின் னருள்செய்வாய்
இருநி லத்தவ ரின்புறத் திருவருள்
இயல்வடி வொடுமன்றிற்
குருநிலைத்தசற் குருவெனு மிறைவநின்
குரைகழற் பதம்போற்றி.

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை.

# துணையிருந்த நூல்கள்


| | | | |
|---|---|---|---|
| அடிகளார் அருள் வாழ்க்கை | கோ. சீராமன் | வள்ளலார் தயா நிலையம் | 1965 |
| இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் | திரு. வி. கலியாணசுந்தர முதலியார் | சாது அச்சுக்கூடம் சென்னை | 1929 |
| இறப்பில்லா இன்ப வாழ்வு | சி. முத்துக்குமாரசுவாமி (தொகுப்பு) | குமரன் பிரஸ் சிதம்பரம் | 1961 |
| உண்மை முத்திநிலை | தூத்துக்குடி பொ. முத்தையபிள்ளை | தந்தி வெளியீட்டு மன்றத்தார், புதுவை | |
| ஔவைக்குறள் (ப. வடிவேலு செட்டியார் உரையுடன்) | ஔவையார் | B. அரங்கசாமிநாயகர் சென்னை | 1955 |
| கைவல்லியநவநீதம் | தாண்டவராயசுவாமிகள் | சிதம்பரம் முத்தானந்த சுவாமிகள் | 1950 |
| சர்வமதசித்தாந்த விளக்க வினா விடை | ஈசூர் சச்சிதானந்த சுவாமிகள் | ரிப்பன் புத்தகசாலை | |
| சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் சரித்திரச்சுருக்கம் | சிதம்பரசுவாமிகள் | சென்னை வள்ளலார் பதிப்பகம் | 1963 |
| சித்தாந்தசாத்திரம் பதினான்கு | | சைவசித்தாந்த மகாசமாஜம் | 1934 |
| சுத்தசன்மார்க்க சத்திய விளக்கம் | கு. அருணாசலம் பிள்ளை | வசந்தா பிரஸ் | 1932 |
| சிவஞானபோதம் திராவிடமாபாடியம் | மெய்கண்டதேவர் சிவஞானசுவாமிகள் | சுவாமிநாத பண்டிதர் பதிப்பு | பராபவ |
| சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் | உ. வே. சா. பதிப்பு | 1960 |
| சுத்தசாதகம் | குமாரதேவர் | பூவை. கலியாண சுந்தரமுதலியார் பதிப்பு | 1909 |
| தாயுமானசுவாமிகள் பாடல் | திருப்பனந்தாள் | ஸ்ரீ காசி மடம் | 1952 |
| திருக்குறள் | திருவள்ளுவர் (பரிமேலழகர் உரை) | திருநெல்வேலி சை. நூ. கழகம் | 1937 |
| திருக்கோவையார் | மாணிக்கவாசகர் | ஆறுமுகநாவலர் பதிப்பு | |
| திருமந்திரம் | திருமூலர் | திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் | 1951 |
| திருவருட்பா 4 திருமுறைகள் | ... ... | தொ. வேலாயுத முதலியார் பதிப்பு | |
| திருவருட்பா | இராமலிங்கம் பிள்ளை | கூடலிங்கம் பிள்ளை | 1924 |

| | | | |
|---|---|---|---|
| திருவருட்பா ஆறு திருமுறைகள் | இராமலிங்க அடிகள் | ச. மு. கந்தசாமிப் பிள்ளை பதிப்பு | |
| திருவருட்பா 1, 2 புத்தகம் | ... ... | சென்னை ச. சு. சங்கப்பதிப்பு | 1942 |
| திருவருட்பிரகாசனார் சந்நிதிமுறைப் பிரபந்தங்கள் | தொ. வேலாயுதமுதலியார் | தொ. வே. செங்கல்வராய முதலியார் | 1912 |
| திருவாசக உண்மை | (ஆசிரியர் பெயர் காணப்படவில்லை) | | |
| திருவாசகம் | மாணிக்கவாசகர் | சை. சி. நூ. ப. கழகம் | |
| தேவாரம் | திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் | ஸ்ரீ காசிமடம் | |
| பிரபந்தத்திரட்டு | ச. மு. கந்தசாமி பிள்ளை | நல்லாத்தூர் புதுச்சேரி | 1923 |
| பெரியபுராணம் | சேக்கிழார் | சை. சி. சமாஜம் | 1973 |
| மெய்கண்டசாத்திரம் | மூலமும் உரையும் | காஞ்சி நாகலிங்க முதலியார் பதிப்பு | 1897 |
| வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு | ம. பொ. சிவஞானம் | இன்பநிலையம் | 1963 |
| Chidambaram Ramalinga Swami His life, mission & studies | T. V. G. Chetty | Banglore Cantt. | 193[illegible] |
| Eight Upanishads | Text with Sri Aurobindo Commentary | Ashram Pondicherry | 1953 |
| Hymns from Thiruvarutpa | P. Mutharasu | S. S. Sangam Tirunelveli | 1964 |
| Indian Philosophy Vols. I&II. | Dr. S. Radhakrishnan President of India | | |
| Life Divine | Sri. Arobindo | Ashram, Pondicherry | |
| Saint Ramalinga & His revelations | Suddananda Barathi | The Madras S. S. Sangam | 1957 |
| Teachings of Saint Ramalinga | A. Nagaswami Ayyar | S. S. S. Sangam Tirunelveli | 1961 |
| The Spiritual Light in Arutpa | T. Sambasivam | Ramalinga Samajam Thiruvottiyur | 1925 |

# பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 5 | ஆங்காங்குகூற | ஆங்காங்குக்கூற |
| 11 | 18 | வேற்ருலெ | வேற்ருலே |
| 14 | 13 | ஏமாப்ப | ஏமாக்க |
| 24 | 15 | அருளுறின் | அருள்பெறின் |
| 35 | 2 | லன்றி விளங் | லன்றி நலியாதால்...... ......விளங்காதால் |
| 47 | 6 | செயிரினலநு | செயிரினல்லநு |
| 51 | 2 | மலந்திட | மலர்ந்திட |
| 56 | 3 | ஆன்ம | ஆன்மா |
| 66 | 3 | சமரசசாத்துவிதம் | சமரசாத்துவிதம் |
| 72 | 10 | சுடர்க்கண்டு | சுடர்கண்டு |
| 100 | 4 | திரம்பெற | திறம்பெற |
| 161 | 13 | அகம் | அகமும் |
| 161 | 27 | எண்கடந்த மதி | எண்கடந்த கோடிமதி |
| 165 | 24 | சிறுவிண்ணப்பத்தில் | சத்தியவிண்ணப்பத்தில் |
| 168 | 1 | இருச்சிற்றம்பலம் | திருச்சிற்றம்பலம் |
| 193 | 8 | ஆதலுல் | அதலுல் |
| 199 | 11 | திருவருளிலுல் | கண்களும் |